282.

# தமிழக சட்டப் பேரவை

## நடவடிக்கைகள்

பணித் துறை வெளியீடு

1967 - ஜூலை,

தொகுதி - 4, எண் - 6

D
V211,31'N67
N67.4.6;1
65022

F.30 (B)

வெளியீடு—25—5—1968]
Issued—25—5—1968]

MADRAS ... EGMORE, MADRAS

# தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

282

செவ்வாய்க்கிழமை, 1967 ஜூலை 11

**Tuesday, 11th July 1967**

தொகுதி IV—எண். 6

**Volume IV—No. 6**

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

D
V211, 31 N67
N67.4.631
65022

N211,31 N67
N67-4.681
65022

## உள்ளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள் .. .. .. .. .. | 641-680 |
| 2. உரிமைப் பிரச்சினைகள்— | |
| (அ) எதிர்க்கட்சித் தலைவர் 'நவசக்தி' நாளிதழுக்கு அளித்த அறிக்கை .. .. .. | 680 |
| (இ) 'நவசக்தி' நாளிதழில் பேரவையைக் குறித்த சில குறிப்புகள் .. .. .. .. .. | 681–682 |
| (உ) சென்னை நகர போலீஸ் கமிஷனர் தீ விபத்துக்கள் பற்றி விடுத்த அறிக்கை .. .. .. | 682 |
| 3. ஒற்றிவைப்புத் தீர்மானம்— | |
| சென்னை நகர தீ விபத்துக்கள் குறித்து திரு. எம். பக்தவத்சலம் அவர்களின் அறிக்கை .. .. | 683–689 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| வட ஆற்காடு மாவட்டத்தில் சர்க்கரை, கோதுமை தட்டுப்பாடு .. .. .. .. .. .. | 689–691 |
| 5. அரசினர் மசோதாக்கள்— | |
| (அ) 1967-ஆம் ஆண்டு தமிழ்நாடு (மாற்றலாகியுள்ள பகுதி) ஜென்மீக்கரம் செலுத்தல் நீக்க (திருத்த) மசோதா .. .. .. .. .. .. | 691 |
| (இ) 1967-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதா .. .. .. | 692 |
| 6. அறிவிப்புகள்— | |
| (அ) 1967-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதா .. .. .. | 691 |
| (இ) மதுரை பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கான தேர்தல் .. .. .. .. .. .. | 750 |
| 7. 1967–68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி. | |
| கோரிக்கை எண் XLVI—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு .. .. | 692–744 |
| கோரிக்கை எண் XLVII—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் .. .. .. | 745–750 |
| கோரிக்கை எண் XXIV—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் .. .. .. .. | 751–819 |
| 8. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. | 819 |

# தமிழக சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1967 ஜூலை 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனுர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினுக்கள்--விடைகள்.

உடுக்குறியிட்ட வினுக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் வினுக்கள்-விடைகள். உறுப்பினர்கள் கேட்கின்ற வினுக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பார்கள். வினு எண் 229 தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

தீப்பெட்டித் தொழிற்சாலை

*164 வினு.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்காரால் நடத்தப்பட்டுவந்த சுடர் தீப்பெட்டித் தொழிற்சாலை எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது ?

எந்த ஆண்டில் மூடப்பட்டது?

(உ) அதனுல் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு?.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) அரசினர் குடிசைத் தொழில் தீப்பெட்டித் தொழிற்சாலை 1956-ம் ஆண்டில் துவக்கப்பட்டது.

(இ) எந்த ஆண்டில் மூடப்பட்டது ?

(உ) ரூபாய் 3,53,916.12.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்த சுடர் தீப்பெட்டித் தொழிற்சாலை நடைபெற்று வருகிறதா? ஆம் என்ருல் அது எந்த அடிப்படையில் நடைபெறுகிறது ? இன்றைக்காவது அது லாப கரமாக நடைபெறுகிறதா ? அல்லது நஷ்டத்தில் நடைபெறு கிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலை பெரம்பூரிலே 1956-இல் அரசாங்கத்தின் சார்பிலே ஆரம்பிக்கப்பட்டு 1961 வரை நடைபெற்றது. எதிர்பார்த்த அளவிற்கு இதில் லாபம் வராததினுல், அதனுடைய நோக்கம் நிறை வேற்றப்படாமல் இருந்த காரணத்திஞல் அது காஞ்சீபுரத்திற்கு மாற்றப்பட்டது. 1962-ல் மீண்டும் காஞ்சீபுரத்திலே கூட்டுறவு முறையிலே துவக்கப்பட்டது. இதுவரையில் அது நஷ்டத்தில் தான் இருந்தது. இனி லாபம் தரக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கூட்டுறவு முறையில் நடைபெறும் இந்தச் சுடர் தீப்பெட்டித் தொழிற்சாலை இன்றைய தினம் நஷ்டத்தில் ஓடுவதன் காரணமாக மீண்டும் அதை மூடக்கூடிய நிலைமை ஏற்படும் என்று சொல்லப்படுவது உண்மையா? அப்படியென்றால், ஒரேயடியாக அதை மூடுவதற்கு உத்தேசம் உண்டா? அல்லது மீண்டும் நல்ல முறையில் நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதுவரையில் நஷ்டத்தில்தான் இருக்கிறது. இந்த ஆண்டுக்கு மேல் லாபம் வரும் என்று சொல்லப்படுகிறது. எதிர்பார்க்கிறபடி நடைபெறுகிறதா என்று பார்த்த பிறகுதான் அது திறந்து வைக்கப்படுமா அல்லது மூடிவிடப்படுமா என்பது முடிவு செய்யப்படும்.

*165 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் எத்தனை அரசாங்கத் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் உள்ளன ?

(இ) அவை ஒவ்வொன்றிலும் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை என்ன ?

(உ) அவை ஒவ்வொன்றிலும் எத்தனை நபர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளார்கள் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) அரசாங்கத் தீப்பெட்டித் தொழிற்சாலை எதுவும் இப்போது இல்லை.

(இ) & (உ) வினா எழாது.

**திரு. கே. விநாயகம் :** இந்த அரசாங்கத்தால் நடத்தப்படுகிற தீப்பெட்டித் தொழிற்சாலை நஷ்டத்திற்கு வந்ததற்கு யார் பொறுப்பு?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பெரம்பூரில் தொழிற்சாலையை வைப்பதற்கு முடிவு எடுத்ததுதான் ஏற்பட்ட தவறாகும். அங்கு இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதற்காக அதை வைத்தார்கள். ஆனால், அங்கே எதிர்பார்த்த அளவிற்கு கூலி வேலை செய்வதற்கு யாரும் முன்வரவில்லை. இந்தத் தொழிற்சாலையின் மூலம் தரப்படுகின்ற கூலியைவிட அங்கேயுள்ள வேறு பல தொழிற்சாலைகளிலே அதிகமாகக் கூலி கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதால் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. அங்கேயுள்ள காவல் துறையினர் வீட்டுப் பெண்களுக்காக இந்தத் தொழிற்சாலை பயன்படும் என்று கருதி அங்கே ஏற்படுத்தப்பட்டது. ஆனால், அங்கேயுள்ளவர்கள் அதைவிட வேறு வகையில் அதிகமாகக் கூலி பெறுவதற்குச் சந்தர்ப்பம் இருந்தது. அங்கே சரியான சூழ்நிலை இல்லாத காரணத்தினால் அதை மூடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதற்குப், பிறகுதான் காஞ்சீபுரத்தில் கூட்டுறவு முறையில் மீண்டும் அது ஏற்பட்டது.





**திரு. பெ. மலைச்சாமி :** தீப்பெட்டித் தொழிற்சாலைகளை நாட்டுடைமையாக்கும் திட்டம் இந்த அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** பெரம்பூரில் நடத்தப்பட்ட நேரத்தில் வேலை வாய்ப்பு இல்லாதவர்கள் அங்கு இல்லாத காரணத்தினால் இதிலே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக வேலையில்லாமல் இருக்கக்கூடிய காஞ்சீபுரத்தில் அது கூட்டுறவு முறையில் இப்போது நடக்கும்போது நஷ்டம் ஏற்படுவதற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அங்கு வேலையில்லாது இருக்கும் கைத்தறி நெசவாளர்களுக்குப் பயன்படும் என்றுதான் அங்கு ஏற்படுத்தப்பட்டது. இப்போது நஷ்டத்தில்தான் அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு லாபம் வரக்கூடும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் தனியார் நடத்துகின்ற தீப்பெட்டித் தொழிற்சாலைகளெல்லாம் லாபகரமாக நடத்தப்படுகின்றன. ஆகவே, தென் மாவட்டங்களில் தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகளை அரசினர் சார்பில் நடத்துவதற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் இல்லை. தனியார் நடத்துகின்ற தொழிற்சாலைகளில் அடிக்கடி ஆபத்துகளுக்கு இரையாகும் நிலைமை இருக்கிறது.

## கைக்கடிகார இயந்திரங்கள்

*166 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் கைக்கடிகார உதிரிப் பாகங்களை இணைக்கும் பிரிவுகள் எத்தனை, எங்கெங்கு இயங்கி வருகின்றன ?

(இ) 1967-68-ல் மேலும் எத்தனை பிரிவுகள் எங்கெங்கு துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ)** இம் மாநிலத்தில் கைக்கடிகாரங்கள், கடிகாரங்கள் முதலியவைகளை உற்பத்தி செய்யும் தொழிலில் அல்லது அவைகளின் உதிரிப் பாகங்களை இணைத்துக் கடிகாரம் அமைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள, தொழில்துறையுடன் சிறு அளவுத் தொழில்களாகப் பதிவு செய்து கொண்டுள்ள நிறுவனங்களின் பட்டியல் ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனங்களால் உற்பத்தி

a 820--822ம் பக்கங்களில் I இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

செய்யப்படும் அல்லது இணைக்கப்படும் பொருள்களின் விவரமும் அப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கைக்கடிகாரங்களின் உதிரிப் பாகங்களை இணைக்கும் பிரிவு எதும் அரசாங்கத் துறையில் இல்லை.

(இ) 1967-68-ல் அத்தகைய பிரிவு எதையும் அரசாங்கத் துறையில் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை. தனியார் துறையில் உள்ள அத்தகைய பிரிவுகள் குறித்துத் தகவல் ஏதுமில்லை.

## Tidal Power Project

*167 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether there is any proposal to establish a Tidal Power Project in the State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை, அது நிறைவேறத் தக்கதாய் இன்மையின்.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

THIRU T. MARTIN: May I know from the Hon. Minister whether this Government made an independent study or whether it has accepted the investigation done by the previous Government? Further, if high tide is essential for this scheme, will the Government come forward to undertake fresh investigation in places like Periathalai, Manapadi and Uvari where there are high tides which can be taken advantage of for this scheme?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இது 1964-வது ஆண்டிலே, பிரான்ஸ் நாட்டிலே கையாளப்படுகிற முறையில் இங்கு கொண்டுவரக்கூடிய முறையில் இதற்காக ஆராய்ச்சி நடத்தப்பட்டது. தமிழக மின்சாரக் கழகத்தினர் இந்த ஆராய்ச்சியைப் பரீட்சார்த்தமாகச் செய்தார்கள். அலையின் மூலம் மின்சார உற்பத்தி செய்யவேண்டுமென்றால் 25 அடி அளவிற்கு அலை எழும்பினால்தான் அதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இங்கே 3 அடி, 4 அடி அல்லது அதிகப்படியாகப் போனால் 5 அடி அளவிற்குத்தான் அலைகள் எழும்புகின்றன. அதற்கு மேலும் அலைகள் எழும்பவேண்டுமென்றால் அதற்காக மின்சாரத்தைக் கொண்டுவந்து அதன்மூலம் எழும்ப வைக்க முடியும். அப்படி அதிகமாக அலைகள் எழும்ப வைப்பதற்குத் தேவைப்படும் மின்சாரத்தின் அலை அளவைவிட அந்த அலைகள் எழும்புவதன் மூலம் கிடைக்கக்கூடிய மின்சாரத்தின் அளவு குறைவாக இருப்பதால் அது சாத்தியம் இல்லை என்று தெரிகிறது. கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகிறபடி அந்தப் பகுதிகள் எல்லாம் 25 அடிக்கு அலைகள் எழும்பக்கூடிய நிலைமை இருக்குமானால் அதுபற்றி அங்கே ஆராயப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அட்டவணையின் தலைப்பிலே இருக்கும் 229 எண்ணுள்ள வினாவுக்கு நேற்று விடையளிக்கப்பட்டது. அதன் மேல் கேட்கவேண்டிய துணை வினாக்கள் இன்றைக்குத் தள்ளி வைக்கப்பட்டன. அவை இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்.

THIRU K. VINAYAKAM: Sir, it is a long-term scheme. What is the result of having experimented with this scheme?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்தத் திட்டத்தின்படி நான்காவது திட்டத்தில் இரண்டு கோடி ரூபாய்க்கு ஏறக்குறைய 250 பால் சப்ளை கூட்டுறவு யூனியன்களுக்கும், மற்றவைகளுக்கும் கால்நடைகள் வாங்கி வழங்குவதற்கும், தரமான கால்நடைகள் மூலம் பால் உற்பத்தியை அதிகமாக்கவும் திட்டம் இருக்கிறது. மாதவரம் பால் பண்ணைக்கும் ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதுபற்றி மூலக் கேள்விக்கு விடையளிக்கையிலேயே சொல்லியிருக்கிறேன். மேற்கொண்டு விஸ்தரிக்கவும் வாய்ப்புகள் இருக்கின்றன.

DR. H. V. HANDE: Sir, with regard to the Madhavaram Milk Supply Scheme, a number of complaints were referred to both in this House and in the other House and a number of strictures were passed with regard to the working of the Scheme. So, will this new Ministry come forward with any concrete proposal to rectify the number of errors that have crept into the working of the scheme. On account of them, there is a very heavy loss sustained under this scheme.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உறுப்பினர் இன்றையதினம் வரவிருக்கும் மானியக் கோரிக்கையில் மாதவரம் பால் பண்ணையும் இணைந்திருக்கிறது. என்னுடைய முன்னுரையிலும் சொல்ல இருக்கிறேன். அதைத் தொடர்ந்து வருகிற விவாதத்தில் இப்படிப்பட்ட தாறுமாறுகளைச் சரிப்படுத்தவும், லாபம் பெறமுடியாவிட்டாலும், ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தைப் பெருமளவு குறைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

**திரு. பெ. மலைச்சாமி:** தலைவர் அவர்களே, மதுரைப் பால் பண்ணையில் காந்தியார் பிறந்த நாளான அக்டோபர் 2-ம் தேதி முதல் பாலின் விலையைக் குறைக்கப்போவதாக ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அவைபற்றி, இன்றைக்கு வரவிருக்கும் மானியக் கோரிக்கையை எடுத்துக் கொள்ளும்போது விவரம் வெளியிடப் போகிறேன்.

THIRU K. VINAYAKAM: Sir, whereas the Aarey Milk Supply Scheme in Bombay is working on a very profitable basis, and whereas it has been decided that the Madhavaram Milk Supply

[1967 ஜூலை 11

Scheme also should be worked on such lines, is there any programme with the Government of Madras to take away all the milking cows from the City of Madras, house them in Madhavaram and then distribute milk to the residents of the Madras City? What exactly is the difficulty which the Government feel in removing all the cattle from the City of Madras?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உறுப்பினர் அவர்கள் வழக்கம் போல பல கேள்விகளை ஒரு கேள்வியாக இணைத்திருக்கிறார்கள். மானியத்தின் மீது நடக்கும் விவாதத்தில் கலந்து கொண்டு இப்படிப்பட்ட கருத்துக்களை எடுத்துரைக்க வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** சார், ஒரு பால் பண்ணையை கோவையில் ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்குமா? ஏற்கனவே கூட்டுறவுத் துறையில் இருந்தாலும், போதுமான சப்ளை கோவை மக்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே, அரசாங்கத் துறையில் பால் பண்ணை வைக்க உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கோவை நகரம் மட்டுமல்லாமல், பல்வேறு நகரங்களிலும் விஸ்தரிக்க வேண்டும் என்பது தான் விருப்பம். ஆனால் நிதி ஆதாரங்களின் வரம்பிற்கு உட்பட்டு செயல்படவேண்டியிருப்பதால், திட்டமிட்ட பால்பண்ணையாகத் தான் இருக்க வேண்டியிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** சார், மாதவரம் பால் பண்ணையைப் பொருத்தவரையில் பொதுக்கணக்குக் குழு அறிக்கை கொடுத்ததே, அதன் பேரில் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I want notice.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார், மாதவரம் பால் பண்ணையை அபிவிருத்தி செய்வதைப்பற்றிக் கேள்விகள் கேட்கும்போது, தீ வைத்ததாலும், பாட்டில்கள் வெடித்ததாலும், விபத்து ஏற்பட்டதாகச் செய்தி வந்திருக்கிறதே. அப்படிப் பட்டவை தடை செய்யப்படுமா என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உறுப்பினர் அவர்கள், அங்கே ஸ்டோர் ரூமில் ஏற்பட்ட சிறு விபத்து பற்றி இவ்வளவு பெரிய விவகாரத்தோடு இணைத்துப் பேசுகிறார்கள்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** பொதுவாக சென்னை நகர டெப்போக்களில் சப்ளை செய்யப்படும் பால், அதுவும் குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் சப்ளை செய்யும் பால் ஒரு துர்வாடை அடிக்கிறதே. அதைப் போக்க முயற்சி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உறுப்பினர் அவர்கள் கருத்து முற்றிலும் தவறானது. அவர்கள் வேண்டுமென்றே அந்தத் தவறான கருத்தைச் சொல்லுகிறார்கள் அல்லது அப்படிப்பட்ட சிந்தனை உள்ளவர்களிடமிருந்து அந்தக் கருத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன்.



**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** சார், நானே அந்தப் பாலை குடித்திருக்கிறேன், இரண்டு மூன்று நாட்களாக. பாலைப் பற்றிய அனுபவம் எனக்கு உண்டு. குடிக்க முடியாத அளவிற்கு நாற்றம் வந்தது.

(பதில் இல்லை.)

### மண் எண்ணெய்

* 247 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960 முதல் 1966 வரை நமது ராஜ்யத்தில் மண் எண்ணெய் எங்கெங்கே எடுக்கப்படுகிறது?

(இ) எந்தத் துறையில்?

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN :

(a) No mineral oil has so far been exploited in this State.

(b) Does not arise.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இதற்கான ஆராய்ச்சி செய்யப் பட்டு வந்ததே. இனிமேலாவது எந்த அளவுக்கு கிடைக்கும் என்று பார்க்க ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தின் கடற்கரையோரப் பகுதிகளில் எண்ணெய் கிடைக்கும் என்று சொல்லப்பட்டதன் காரணமாக 1958-59-லிருந்து ஆராய்ச்சி தொடர்ந்து நடக்கிறது. இதுவரையில் காரைக்கால், கொள்ளிடப் பகுதி, பாம்பன் முதலிய இடங்களில் துளைகள் போடப்பட்டிருக்கின்றன. ரஷ்ய வல்லுநர்களுடைய உதவியுடன் பட்டுக்கோட்டைப் பகுதியில் இரண்டு துளைகள், 259 மீட்டருக்கு ஒன்றும், 988 மீட்டருக்கு ஒன்றும் போடப்பட்டன. அதே போன்று கந்தர்வகோட்டை முதலிய இடங்களிலும் துளைகள் போட திட்டம் உண்டு. ஆனால் எண்ணெய் இருக்கக் கூடும் என்பதற்கு அறிகுறிகள் இருந்தாலும், வாணிகம் செய்யும் அளவிற்கு குறிப்புகள் இன்னும் கிடைக்கவில்லை. ஆராய்ச்சி தொடர்ந்து நடக்கிறது.

### விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம்

* 248 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வயது முதிர்ந்த விளையாட்டு வீரர்களுக்குப் பென்ஷன் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** இனிமேலாவது அப்படிப்பட்ட திட்டத்தை நிறைவேற்ற சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவர்களுக்கு சாதாரண மாவட்ட வளர்ச்சிக் கழகங்கள் இருக்கின்றன. அதன் மூலமாக ஏற்பாடு செய்யலாம். மற்றவர்களுக்கும் பயிற்சி கொடுக்க வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையில் அவர்களைப் பயன் படுத்தும் நிலை பற்றி சுற்றறிக்கை விடப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். விஜய ரகுநாத தொண்டமான் :** சபாநாயகர் அவர்களே, இனிமேலாவது அரசாங்கம் மெட்ராஸ் ஸ்டேட், இந்தியா இவற்றை ரெப்ரசென்ட் செய்த பெரிய விளையாட்டுக்காரர்களுக்கு பென்ஷன் கொடுக்க யோசனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபோன்ற உத்தேசம் இதுவரையில் இல்லை. அவர்களைக் கொண்டு பயிற்சி கொடுக்கச் செய்து அந்த வகையில் ஊதியம் தேடி அவர்களுக்கு வருவாய் கிடைக்க வழி இருக்கிறது. பென்ஷன் கொடுக்கும் திட்டம் ஆலோசிக்கப்படவில்லை. இனிமேல்தான் அவசியமானால் ஆலோசிக்கப்படவேண்டும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, இது விளையாட்டுக்காரர்களுக்கு பென்ஷன் அளிக்கும் கேள்வியாக இருந்தாலும், விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள வெளி நாடுகளுக்கு அனுப்ப சர்க்காருக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவேண்டும். இந்தக் கேள்வி பென்ஷன் பற்றியது.

### நூல் விலைகள்

* 249 வினா—**திரு. எஸ். ஜே ராமசாமி :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து 36, 40, 60, 80 ஆகிய நம்பர் நூல் விலையில் ரூ. 7-லிருந்து 10 ரூபாய் வரை ஏறிவிட்டதை தடுக்க அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

(இ) மேற்படி நூல் விலை ஏற்றத்தால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டு வேலையில்லாமல் இருப்பதை நீக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவை?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) நூல் விலையின் ஏற்றத்தைத் தடுக்க மத்திய அரசு தகுந்த நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

(இ) நூல் விலையின் ஏற்றத்தினால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டு வேலையிழந்ததாக இதுவரை யாதொரு தகவலும் கிடையாது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, ஒரு கட்டுக்கு ரூ. 10-க்கு மேல் ஆகிவிட்டது. அதற்கு மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறார்கள். மாநில சர்க்கார் வற்புறுத்தி, பழைய விலைக்குக் கொண்டு வர முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முயற்சிக்குமா என்பதல்ல பிரச்சினை. இதற்கு முன்னாலேயே தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அந்த கட்டத்தில் அதுபற்றி அதிகாரிகளுக்கும் தெரிவிக்கிறது. பஞ்சு விலை ஏறியிருப்பதால், கூலிகள் ஏறியிருப்பதால், எக்ஸைஸ் வரிகள் ஆண்டுக்காண்டு வளர்ந்து கொண்டே போவதால், நூல் விலை ஏறுகிறது. அதைத் தடுத்து நிறுத்த, மத்திய சர்க்கார்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த முறைகளில் மத்திய சர்க்கார் முயற்சிக்கும்போது ஒரு நாள் நிறுத்தி வைப்பதன் மூலம் நூல் விலை குறைந்துவிடாது. பஞ்சின் உற்பத்தி பெருக வேண்டும். இறக்குமதி அதிகமாக வேண்டும். அந்த வகைகளில் நூல் விலையைக் குறைக்கலாமா என்று யோசிக்கிறது.

DR. H. V. HANDE : Will the Hon. Minister tell us the exact steps taken by the Central Government to reduce the price of yarn and whether the Central Government have succeeded in controlling the price?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது :—

(*a*) All the mills have been directed by the Textile Commissioner to observe an extra holiday in alternate week so as to conserve as much cotton as possible so that the scramble for the available cotton can be avoided.

(*b*) No mill should work more shifts than it used to during the period from July to September 1966.

(*c*) The Government of India requisition cotton at the producing centres and make it available to the needy mills at the appropriate ceiling prices. Allocation of cotton from surplus to deficit units was also resorted to.

(*d*) The Government of India have also decided to import larger quantities of cotton from foreign countries.

(*e*) The Reserve Bank of India have imposed restrictions on the grant of loans on cotton stocks.

(*f*) The Textile Commissioner has constituted an *ad hoc* committee to determine the fair prices for various counts of cotton yarn. The committee had a few sittings, but no decision has been

taken so far. It is presumed that the committee may hold further deliberations once again in view of the prevailing situation and take necessary action for fixing fair prices for various counts of yarn.

இந்த நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொண்டிருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவரவர்களே, மில் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஊதியத்தைப்போல் கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்கும் மாஸ்டர் வீவேர்ஸ் தொழில் வைத்து நடத்துபவர்களுக்கும் போனஸ் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** சார், நூல் விலையை நிர்ணயிப்பது மத்திய சர்க்கார். மாநில சர்க்காருக்கு அதிகாரம் கிடையாது. தமிழகத்திலே அதிகமான கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். இந்தத் தேசத்தை எடுத்துக் கொண்டால் தமிழகத்தில் தான் அதிகமான நூல் உற்பத்தி ஆலைகள் இருக்கின்றன. நூல் உற்பத்தி ஆலைகள் அதிகம் இருந்தபோதிலும்கூட இவர்கள் மில் ஆலைக்குத் தகுந்த நூலைத்தான் தயார் செய்கிறார்கள், கோன் என்ற நூலை. கைத்தறி நெசவாளர்களுக்குச் சிட்டம் போட்ட நூலைத் தயார் செய்ய வேண்டும். ஆனால், தமிழகத்திலே கோன் என்ற நூலைத்தான் தயார் செய்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சொற்பொழிவா ? கேள்வியா ?

**திரு. வி. எஸ். எஸ். மணி :** இப்பொழுது மத்திய சர்க்கார் கைத்தறி நெசவாளர்களிடம் மாற்றாந்தாய் மனப்பான்மையில் தான் நடந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, நூல் நிர்ணயம் செய்யக்கூடிய அதிகாரத்தை தமிழகத்தைப் பொறுத்தவரையில் நாம் ஏற்றுக்கொண்டால் என்ன? அதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இது மத்திய சர்க்கார் கையிலேதான் இருக்கிறது. மத்திய அரசாங்கம்தான் இதை ஒழுங்குபடுத்த வேண்டும். ஒழுங்குபடுத்திக்கொண்டும் வருகிறது. கைத்தறி நெசவாளருக்கு தேவைப்படுகிற நூல்களை அதிகமாகத் தருவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று இந்திய அரசிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பி. வேலுசாமி :** ஐயா, ஏற்கெனவே நூல் விலை ஏறி இருக்கின்ற இந்த நேரத்தில் 60-ஆம் நம்பர் நூல் மேலே இருக்கும் சென்ட்ரல் எக்ஸைஸ் டியூட்டி ஒரு ரூபாயிலிருந்து ஐந்து ரூபாயாக அதிகப்பட்டிருக்கிற காரணத்தால் ஏற்கனவே ஓடிக் கொண்டிருக்கும் பல மில்களை நிறுத்துகின்ற கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைத் தடுக்க சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, $1\frac{1}{4}$ ரூபாயிலிருந்து $6\frac{1}{4}$ ரூபாய் அளவுக்கு ஏறியிருக்கிறது. இதைக் குறைக்க வேண்டுமென்றும், ஏற்கனவே அல்லல்களுக்கு ஆளாகியிருக்கிற ஆலைகள் எல்லாம் தொடர்ந்து ஆட்படுகின்ற நிலை ஏற்பட்டால் நூலின் விலை ஏறும், அதனால் பல கஷ்டங்கள் ஏற்படும் என்பதை அண்மையில் டெல்லிக்குச் சென்றிருந்தபொழுது இந்தப் பிரச்சினையைப்பற்றி இந்திய அரசாங்கத்தினுடைய நிதி அமைச்சரிடம் தெரிவித்ததோடு, ஏற்கனவே பல தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிற தென்னக பகுதி மில்களுக்கு விதிக்கப்படும் அதிக வரிமூலம் மேலும் தாக்கப்படுவதால் பல மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. இப்பொழுது 8 மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. மேலும் 10, 15 மில்கள் இந்த அதிக வரியால் அவதியுறும் நிலையை எடுத்துத் தெரிவித்த பிறகு அவர்கள் இது பற்றி யோசிப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அதுபற்றி ஏதாவது நிவாரணம் கிடைக்குமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதுபற்றிப் பொதுவாக இந்திய அரசாங்கத்திடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** ஐயா, இந்த அரசு நூல் விலையைக் கட்டுப்படுத்துவது குறித்து மே மாத இறுதியில் எல்லா ஆலை உரிமையாளர்களுடனும் நடத்திய பேச்சுவார்த்தை எந்த அளவில் பலன் அளித்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நூல் விலையைக் குறைப்பதற்கான முறையில் அல்ல அந்தப் பேச்சுவார்த்தைகள். மூடிக்கிடக்கும் மில்களைத் திறப்பதற்கான முயற்சிகள் பற்றி அவர்களோடு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

**திரு. எம். பூபதி :** ஐயா, ஏற்கனவே கைத்தறி நெசவாளர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருந்தும் நமது மாநில சர்க்கார் அந்த விலை உயர்வைக் கட்டுப்படுத்த இயலாத நிலையில் இருப்பதாகக் கூறுவது முறையா ? நமக்கு அந்தப் பொறுப்பு இருக்கிறதா ? இல்லையா? என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** குறைப்பதற்கான முயற்சியைத் தான் இந்த அரசாங்கம் மேற்கொள்ளுகிறது. ஆனால் குறைப்பதற்கான அதிகாரம் இந்திய சர்க்காரிடம் இருக்கிறது. அந்த வகையில் இந்திய அரசாங்கத்திடம் இந்த அரசு எடுத்து தெரிவித்துக்கொண்டு வருகிறது. கைத்தறி நெசவாளர்களுக்கு நூல்கள் கிடைப்பதற்கு கூட்டுறவு நூல் ஆலைகள் மூலம் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஹாஜி ம. மு. பீர்முஹம்மது :** கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூல்களை இடைத்தரகர்கள் இன்றி கூட்டுறவு நெசவாளர் சங்கத்திற்குப் போவதற்கு ஏதாவது புது வழிவகைகளைக் காண நம் அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கூட்டுறவு நெசவாலைகளில் உற்பத்தியாகும் 75 சதவிகித நூல்கள் தமிழ்நாடு கூட்டுறவு நெசவாளர் சங்கத்திற்குத்தான் நேரடியாக அனுப்பப்படுகிறது. மீதி 25 பகுதிதான் ஓப்பன் மார்க்கெட்டில் விற்க

ஏற்பாடு செய்யப்படுகிறது. நேரடியாகக் கொடுக்க வேண்டுமென்ற தால் அண்மையில் ஒரு சேல்ஸ் டெப்போ, விற்பனை நிலையம், காஞ்சீபுரத்தில் திறக்கப்பட்டது. அது நல்ல பலன் தருமானால் அதையொட்டி வேறு பல இடங்களில் அப்படிப்பட்ட விற்பனை நிலையங்களை அரசு திறக்கலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறது.

Thiru K. S. KOTHANDARAMIAH : In fixing the price of yarn, does the Government of India consult the State Government or does it fix it without consulting the State Government?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு அது செய்வது இல்லை. இந்த அரசாங்கத்தின் சிபார்சுகளை மனத்தில் வைத்துக்கொண்டு அந்த அரசு முடிவு செய்யும்.

**திரு. எஸ். முருகையன் :** நான்கு, ஐந்து மாதங்களாக கூட்டுறவுச் சங்கத்திலே நெசவாளர்களுக்குக் கடன் கிடைக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டு இன்றையதினம் வடார்க்காடு மாவட்டத்தில் ஏறத்தாழ 2,000 கைத்தறி நெசவாளர்கள் வேலையில்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். உடனடியாக இந்தக் கூட்டுறவுச்சங்கத்தின் மூலம் கிடைக்கக்கூடிய கடனைக் கொடுத்து அவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு அளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அந்த இரண்டு திங்கள் இந்தக் கஷ்டம் இருந்தது. பின் ரிசர்வ் பேங்கிடம் எடுத்துத் தெரிவித்த பிறகு அதைக் கொஞ்சம் தளர்த்தியிருக்கிறார்கள். இப்பொழுது கடன் வாங்குவதில் தொல்லைகள் இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கக்கூடிய இந்த சர்க்கார், நூல் விலை உயர மத்திய சர்க்கார் குறுக்கிட முடியாத நிலையில் கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படக்கூடிய நூலையாவது குறைந்த விலையிலே கொடுப்பதற்காக வேண்டி விரைவில் ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நூல் விலை நிர்ணயம் செய்வது இந்திய சர்க்காரிடம் இருக்கிறது. அந்த வகையில் குறைந்த விலையில் நெசவாளர்களுக்கு கொடுக்க அரசு முயற்சி எடுக்க முடியுமானால் அதை அரசு எடுக்கும்.

*Holidays for textile workers*

* 250 *Q*.— Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have decided to order observance of compulsory holidays by textile mills in our State; and

**(*b*)** if so, the number of such compulsory holidays in a week?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) மத்திய அரசு இந்தியாவிலுள்ள நூற்பு ஆலை, நெசவு ஆலைகளில் கட்டாய விடுமுறை திட்டத்தை அனுசரிக்க வேண்டுமென்று ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது.

(இ) மத்திய அரசு பஞ்சு பற்றாக்குறையை முன்னிட்டு நாட்டிலுள்ள எல்லா நூற்பு-நெசவு ஆலைகள் சாதாரண வார விடுமுறை நாட்கள் தவிர கட்டாய விடுமுறை ஒருநாள் கொடுக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது. பிறகு மேற்படி கட்டாய விடுமுறை இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை கொடுத்தால் போதும் என்று ஆணை பிறப்பித்துள்ளது.

Thiru K. VINAYAKAM : After the declaration of these compulsory holidays for these textile mills, has the position improved and is cotton available now so that the compulsory holidays need not be enforced again?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முதலிலே வாரத்திற்கு ஒரு நாள் கட்டாய விடுமுறை தர வேண்டுமென்று இருந்தது. கொஞ்சம் நிலை சீரான பிறகு இரண்டு வாரத்திற்கு ஒருமுறை கட்டாய விடுமுறை தர வேண்டுமென்ற காரணத்தால் அதையும் தளர்த்த வேண்டுமென்று இந்த அரசு தெரிவித்துக் கொண்டிருக்கிறது. இறக்குமதி பஞ்சின் அளவு உயருமானால் அதைப் பரிசீலிக்கலாம் என்று மத்திய சர்க்கார் சொல்லி இருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இம்மாதிரியான கட்டாய விடுமுறை நாட்களில் வேலை செய்யும் தொழிலாளர் **முற்பகல்**
களுக்கு முழுச் சம்பளம் கொடுக்கப்படுகிறதா? அல்லது, **9-30**
சம்பளத்தில் ஏதேனும் குறைத்துக் கொடுக்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடலாம்.

**திரு. பி. வேலுசாமி :** ஐயா, இந்தக் கட்டாய 'லே-அப்' கொடுப்பதன் மூலமாக, தொழிலாளிகள் ஏற்கனவே வாங்கிக் கொண்டிருக்கிற சம்பளங்களில் குறைவாகக் கிடைப்பதற்கான சாத்தியக்கூறு வளர்ந்து கொண்டிருக்கின்றதே, அதைத் தடுக்க அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய நிலைமைகளை ஆராய்ந்து, அதில் இருக்கும் கஷ்டங்களை எல்லோருமே பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற அடிப்படையில்தான், அது கருதப்படுகிறது. எந்த வகையில் அந்தக் கஷ்டங்களை நீக்க முடியும் என்பதையும் ஆராய்ந்து, தக்க முடிவுகள் எடுக்கப்படும்.

Thiru T. MARTIN : Sir, scarcity of cotton being the reason for this closure, may I request the Hon. Minister to consider the issue of incentive bonus to cotton producers in the State?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய உத்தேசம் இப்பொழுது இல்லை. இனிமேல்தான் ஆராயப்பட வேண்டும்.

## ஊர்தி நூல் நிலையங்கள்

* 251 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஊர்தி நூல் நிலையங்கள் (Mobile Libraries) நமது ராஜ்யத்தில் எத்தனை உள்ளன, மாவட்டவாரியாக?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நமது மாநிலத்தில் 10 ஊர்தி நூல் நிலையங்கள் செயல்படுகின்றன. அவற்றில் 9 கோயம்பத்தூர் மாவட்டத்திலும், ஒன்று மதுரை மாவட்டத்திலும் உள்ளன.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஊர்தி நூல் நிலையங்கள் இல்லாத மற்ற மாவட்டங்களிலும் இதுபோன்ற ஊர்தி நூல் நிலையங்களை ஏற்படுத்துவதற்கான உத்தேசம் அரசினருக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எல்லா மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட இயங்கும் நூல் நிலையங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தைத்தான் அரசு கொண்டிருக்கிறது. கோயமுத்தூரில் இருக்கும் நூலகக் குழு மிகவும் முயற்சி செய்து ஒன்பது இயங்கும் நூலகங்களை அங்கே அமைத்திருக்கிறார்கள். மதுரையில் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் இரண்டு வான்கள், பள்ளிக்கூடங்களுக்குச் சென்று புத்தகங்களைக் கொடுக்கும் அளவிற்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சாவூருக்கு ஒரு வான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் வேலை இனிமேல்தான் தொடங்கும். எல்லா நூலகக் குழுத் தலைவர்களையும் அழைத்து, எல்லா மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட இயங்கும் நூலகங்களை வைக்க வேண்டும் என்ற முறையில் அரசு வற்புறுத்துவதாக இருக்கிறது.

## *Institute of Mathematical Sciences*

* 252 Q.—THIRU A.M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :

(*a*) whether the State Government gives any grant to the Institute of Mathematical Research at Guindy: and

(*b*) if so, the amount of the grant per annum?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) சென்னை, அடையாற்றில் கணித விஞ்ஞான நிறுவனம் இருந்து வருகிறது.

(இ) 1962-63-லிருந்து 1966-67-வரை கணித விஞ்ஞான நிறுவனத்திற்குப் பின் வரும் மானியங்களை அரசு வழங்கியுள்ளது.

| ஆண்டு. | தொகை. ரூ. |
|---|---|
| 1962–63 | 2,45,000 |
| 1963–64 | 2,27,900 |
| 1964–65 | 2,99,342 |
| 1965–66 | 3,08,662 |
| 1966–67 | 3,56,383 |





**திரு. ஏ. எம். ராஜா :** இதுவரை இந்தக் கணக்கு இயல் ஆராய்ச்சி நிலையம் செய்த சாதனைகள் என்ன என்பதை அரசாங்கம் அறிவிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இது மிக முக்கியமானதொரு கணித ஆராய்ச்சி நிலையமாக இருந்து வருகிறது. இதன் மூலம் கண்டுபிடிக்கப்படுகிற பல நிலைமைகள் அணுசக்தி ஆராய்ச்சி நிலையத்திற்கு மிகவும் பயன்படுவனவாக இருக்கின்றன. கணித ஆராய்ச்சி நிலையம் டாட்டா இன்ஸ்டிட்யூட்டில் மட்டும்தான் இருக்கிறது. அதற்கு அடுத்தாற்போல் சென்னையில் இது அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு நிலையங்கள்தான் ஆசியாவிலேயே சிறந்த நிலையங்கள் என்று கூறப்படும் அளவிற்கு இருக்கின்றன. சென்னையில் அமைந்துள்ள இந்தக் கணித ஆராய்ச்சி நிலையத்தின் பணிகளைப்பற்றி பரிசீலனை செய்து அறிக்கை தயாரிக்கும்படியாக, டாட்டா இன்ஸ்டிட்யூட்டில் பணி புரிந்து வருகிற ப்ரொஃபெஸர் எம்.ஜி.கே. மேனன் அவர்களை இந்த அரசு கேட்டுக்கொண்டு அவர்களும் பரிசீலனை செய்து இதனால் உருவான பலன்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் நல்ல பல முடிவுகள் வந்திருக்கின்றன என்றும், இந்த நிலையம் எடுத்த முடிவுகளை உலகத்திலேயிருக்கும் வேறு பல நாடுகளில் உள்ள நிலையங்கள்கூட ஏற்று பாராட்டுரை தெரிவித்திருக்கின்றன என்றும், இந்த நிலையத்ினுடைய முயற்சிகள் மேலும் பயன்படும் என்றும் அந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர் குறிப்பிட்டிருக்கிற அறிக்கையிலுள்ளவற்றைக் குறித்து மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** கணித இயல் ஆராய்ச்சி நிலையத்தில் எத்தனை பேர் படிக்கிறார்கள்? அவர்களுக்குப் பட்டம் ஏதாவது வழங்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தக் கணித ஆராய்ச்சி நிலையத்தில் பட்டம் வழங்கப்படுவதில்லை. ஆனால், டாக்டர் பட்டம் போன்றவற்றைப் பெறுவதற்காகப் பயிற்றுவிக்கின்ற அத்தகைய முயற்சிகள் நடைபெறுகின்றன. இதிலே படித்தவர்களில் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். இப்பொழுது எத்தனை பேர் அங்கே பயிற்சி பெறுகிறார்கள் என்பதற்கான குறிப்பு இல்லை.

## *Manufactue of diesel Engines.*

* 253 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether it is a fact that a 5 crore project at Ennore near Madras for the manufacture of diesel engines for the high speed fishing boats is to be taken up for implementation soon; and

(*b*) if so, what is the contribution of the Central Government for this project?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இந்திய அரசு நிறுவனமாகிய மத்திய மீனளக் கார்ப்பரேஷன் மீன்பிடி படகுகளுக்குத் தேவையான மரீன் டீசல் எஞ்சின்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றினை எண்ணூரில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

(இ) இத்திட்டத்திற்கு ஏறக்குறைய மூன்று கோடி ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேற்சொன்ன கார்ப்பரேஷன் இந்த மூலதனத்தில் 90 சதவிகிதம் அளிக்கும்.

THIRU K. VINAYAKAM : Sir, when was it started and whether the diesel engines that are produced by this Corporation are any better than those we are already importing? Also have they been tried with the high speed fishing boats?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஜப்பான் கம்பெனியாக இருக்கின்ற யான்மர் டீசல் இன்ஜின் கம்பெனி (ஒஸாகா) யினுடைய கூட்டுறவோடு இந்தத் தொழிற்சாலை ஆரம்பிப்பதாக, வங்காளத்தைச் சேர்ந்த இந்துஸ்தான் யான்மர் லிமிடெட் என்னும் கம்பெனியார் முன்வந்திருக்கிறார்கள். சென்ட்ரல் ஃபிஷரீஸ் கார்ப்பரேஷன் நூற்றுக்கு 90 பங்கு தரும், பாக்கி பத்து பங்கை ஜப்பான் கம்பெனி ஏற்றுக்கொள்ளுகிறது. யான்மர் இன்ஜின்கள்தான் இப்பொழுது மீனவர்களால் விரும்பப்படுகின்றன. அத்தகைய இன்ஜின்களை உற்பத்தி செய்வதன் மூலம் அதற்கு நல்ல கிராக்கி ஏற்படக்கூடும் என்று கருதப்படுகிறது.

### தமிழகச் சிறு இனாம்கள் ஒழிப்புச் சட்டம்

*254 வினா—திரு. ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு இனாம் ரயத்துவாரி சட்டத்தை தீவிரமாக அமல் நடத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

(இ) இதுவரையில் எத்தனை கிராமங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளன?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (a) In order to speed up the work under the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963) and the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963), Annual programme of settlement work under the various stages in respect of the inam estate areas and the minor inams has been drawn up in advance with reference to the availability of the Settlement staff and approved by the Board of Revenue (SE). It is proposed to complete the Settlement work under the two Acts in the year 1971. The target for each stage of Settlement work has also been fixed so as to adhere to the approved programme. The work turned out under each stage is also reviewed monthly by the Settlement Officers and the Director of Settlements. The Director is also inspecting the





Branch Settlement Offices periodically to see whether the work is proceeding on right lines and he guides the staff on the proper procedure to be followed.

(b) Minor inams covered by 1,55,894 title deeds comprised in 13,999 villages and occupying an area of 1,576.98 sq. miles have been taken over and pattas in 35,920 cases have so far been issued.

One thousand eight hundred and thirty-three estates have been taken over by the Government under the Madras Inam Etates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. Patta enquiry has not yet been taken up in these villages since the survey work has not yet been completed.

**திரு. ஆ. கு. சுப்பையா :** மொத்தம் எடுத்துள்ள நிலங்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தச் சட்டம் கொண்டுவந்து நான்கு ஆண்டுகளுக்குமேல் ஆகிறது. ஏன் இவ்வளவு தாமதமாக எடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தாமதமாக இருக்கிறது என்பதை இந்த சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறது. அதைத் துரிதப்படுத்துவதற்காக என்ன என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் மூலக் கேள்விக்கு பதில் அளிக்கும்போதே கூறினேன்.

**திரு. க. ர. நல்லசிவன் :** மைனர் இனாம் அபாலிஷன் ஆக்டின்கீழ் கோயில் பூசாரிகள், கோயில் ஊழியர்கள் இவர்களுக்கு அந்த நிலத்திலிருந்து தற்போதுள்ள சட்டத்தின் பிரகாரம் கிடைப்பது கிடையாது. அவர்களுக்குக் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு சர்க்காரிடம் அவர்கள் விண்ணப்பம் கொடுத்தார்களா? அந்த விண்ணப்பத்தைக் கவனித்து சர்க்கார் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** விண்ணப்பங்கள் வந்து இருக்கின்றன. அதைப்பற்றிய விவரங்கள் பரிசிலனையில் இருக்கின்றன.

THIRU K. VINAYAKAM : Sir, whereas the extended area of the Madras City comprises many minor inams and whereas the survey is not yet over in spite of so many requests made by those concerned, will the Government order the formation of a new survey party for the extended area in the Madras City and then survey the lands and grant pattas in time to the owners of the lands?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** Sir, I think Madras City is included in the Madras State. கனம் உறுப்பினர் அவர்கள், சென்னை நகரத்திற்குத் தனியாக பிரத்தியேகமாக செய்யப்படுமா? என்று கேட்கிறார்கள். சென்னை நகரம் என்பதும் இந்த சென்னை இராஜ்யத்திற்கு உட்பட்டதுதான். புதிதாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அந்த வேலைகள் துரிதப்படுத்தப்பட்டிருக்கின்றன என்று நான் ஏற்கனவே சொன்னேன்.

## நெல் கொள்முதல்

*255 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குரிய உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நடப்பு ஆண்டில் (1967-68) சர்க்கார் கொள்முதல் செய்ய உத்தேசித்திருக்கும் நெல்லின் அளவு என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** 1967-ம் ஆண்டிச் சம்பாப் பயிரிலிருந்தும் இடைக்காலப் பயிரிலிருந்தும் 5.5 லட்சம் டன் அரிசியும் குறுவைப் பயிரிலிருந்து 2.5 லட்சம் டன் அரிசியும் கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இக் கொள்முதல் இலக்குகள் ஓர் ஆண்டிற்கென வரையறுக்கப்படுகின்றன. இவை இம்மாநிலத்தில் தற்போதைய பயிர் விளைச்சல் முறையின் அடிப்படையில் அமைந்துள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொள்முதலைப்பற்றி நான்கு வினாக்கள் இருக்கின்றன. நான்குக்கும் விடையளிக்கப்பட்ட பின்னர், துணை வினாக்களைக் கேட்கலாமா என்பதைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், தம் இசைவைத் தெரிவித்தால் நல்லதாக இருக்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சரி, நான் ஒப்புக்கொள்கிறேன்.

*256 Q.—Thiru K. Vinayakam. Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is the policy of the Government to exempt small land owners from the operation of compulsory procurement of paddy; and

(b) if so, what is the limit of land one should possess for exemption?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) ஆம்.

(இ) ஒரு ஏக்கர் பரப்பும் அதற்குக் குறைந்த அளவும் உள்ள நிலங்களுக்குக் கொள்முதல் திட்டத்திலிருந்து விலக்களிக்குமாறு மாவட்டக் கலெக்டர்கள் அனைவருக்கும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

*257 வினா—திரு. நா. வீராசாமி: மதிப்பிற்குரிய உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தனிப்பட்ட ஏஜெண்டுகள் நெல் கொள்முதல் செய்வதைவிட, அரசாங்க அதிகாரிகளே நெல் கொள்முதல் செய்வதற்கான உத்திரவு பிறப்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** சூழ்நிலைகள் காரணமாகவோ, சிறப்பான காரணங்களுக்காகவோ திருநெல்வேலி மாவட்டத்தில் கலெக்டர் செயல் படுத்தியதுபோல அரசாங்கச் சார்பில் ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கொள்முதல் செய்தாலும், தனியார் மூலம் கொள்முதல் செய்யும் ஏற்பாடு பொதுவாகப்



பின்பற்றப்படுகிறது. இந்த ஏற்பாட்டிற்குப் பதிலாக, அரசாங்க அதிகாரிகள் கொள்முதல் செய்யும் முறையையே செயல் படுத்தும் செயற்குறிப்பு அரசாங்கத்திற்கு இல்லை.

*258 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உணவு கார்ப்பரேஷன், கூட்டுறவு சங்கங்கள் ஆகியவைகளின் உணவுப் பொருள் கொள்முதல் விலைகளிலும், விற்பனை விலைகளிலும் முறையே வித்தியாசமுண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, இப்போது இருக்கும்படியான கொள்முதல் திட்டத்திலே எந்தவகையிலே கொள்முதல் செய்வது என்ற தீர்மானமான முடிவு சர்க்காருக்கு இருக்கிறது?

Is it intensive procurement or levy system of procurement?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். கடந்த சம்பா பருவத்தில் ஒரு ஏக்கரும், ஒரு ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கும் உடைமையாளர்களுக்கும் கொள்முதலிலிருந்து விதிவிலக்கு அளித்திருக்கிறோம்கள். ஒரு ஏக்கரிலிருந்து 10 ஏக்கர் வரை வைத்திருப்பவர்களுக்கு இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று வரையறை செய்திருக்கிறோம். பத்து ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களுக்கு, மார்க்கெட்டபிள் சர்பிளஸ் என்ற அளவில் கொள்முதல் செய்கிறோம். பல வேறு மாவட்டங்களில் இது முழுமையாக அனுசரிக்கப்படவில்லை. இந்த முறையை வருகிற குறுவை அறுவடையின்போது அனுசரிக்கப்படும் முறைகளைக் குறித்து, கலெக்டர்கள் மகாநாட்டில் விவாதித்து இறுதியான முடிவு எடுக்கப்படும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, ஒரு ஏக்கரும், ஒரு ஏக்கருக்குக் குறைவாகவும் பூமி நிலம் வைத்திருப்பவர்களைக் கொள்முதலிலிருந்து விலக்கு அளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கும் உபரி நெல்லை தங்கள் இஷ்டம்போல் விற்றுக்கொள்ளலாம். பாக்கியிருக்கும் ஒரு ஏக்கராவுக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களும் தங்களுடைய உபரி நெல்லை தங்கள் இஷ்டம்போல் விற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்க சர்க்கார் முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நம்முடைய விதிமுறைகளுக்கும், நாம் நிர்ணயிக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டு வெளிச் சந்தையிலே விற்க அவர்களுக்கு உரிமை உண்டு.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நான் கேட்கும்படியான கேள்வி வேறு. ஒரு ஏக்கரும், ஒரு ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்களுக்கும் வெளிச்சந்தையிலே தங்கள் உபரி நெல்லை

விற்கலாம் என்று உத்தரவாதம் இருக்கும்போது பாக்கியிருக்கும் குடியானவர்களுக்கும் அந்த மாதிரி உத்தரவாதம் அளிக்கப்பட்டு இஷ்டமான விலைக்கு விற்றுக்கொள்ள அரசாங்கம் அனுமதி அளிக்குமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்களுக்கு பதில் சொல்வதற்கும், பதில் சொல்லாமல் இருப்பதற்கும் உரிமை உண்டு.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் பதில் சொல்கிறேன். இஷ்டமான விலை என்றால் என்ன விலை? இவ்வளவுதான் விலை விற்க வேண்டுமென்று ஒவ்வொரு மாவட்டத்திலும் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அதைக் கலெக்டர்கள் கண்காணித்து வருகிறார்கள். மாவட்டக் கலெக்டர்கள் அவ்வப்போதைய நிலைமைகளைக் கண்காணித்து விலைகளை நிர்ணயித்து வருகிறார்கள்.

THIRU K. VINAYAKAM : May I know what the target for procurement in our State is? If the target has not been reached, what is the deficiency? If the target has been reached, will the Government be pleased to remove all the checkposts in the entire State and allow free movement of foodgrains inside the State?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மூலக் கேள்வியிலே நான் சொன்னேன். பருவத்திற்கு 55 லட்சம் டன் கொள்முதல் செய்வது என்று டார்ஜெட்டாக வைக்கப்பட்டது. அவைகளில் 6—7—1967-ம் தேதியுள்ள கணக்குப்படி 5,32,450 டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னொன்றையும் கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நெல் நடமாட்டக் கட்டுப்பாட்டையெல்லாம் நீக்கிவிட முடியுமா என்றார்கள். நடமாட்டக் கட்டுபாட்டிற்கும், கொள்முதல் திட்டத்திற்கும் சம்பந்தம் உண்டு. கொள்முதல் அளவு பூர்த்தியானவுடனே கட்டுப்பாடு நீங்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. அப்படி எடுத்துவிட்டால் கள்ளச் சந்தைக்காரர்களுக்கும், பதுக்கல்காரர்களுக்கும் இடம் ஏற்பட்டுவிடும். ஆகவே மாவட்டத்திற்கு மாவட்டம் இருக்கிற அந்த நடமாட்டக் கட்டுப்பாடு தேவைப்படுகிறது.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know the quantity of stock with the Government on 8th March 1967?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The stock on 8th March 1967 was 1,05,597 tonnes in the whole State.

DR. H. V. HANDE : Arising out of the answer given by the Hon. Minister to a supplementary question, I wish to put a supplementary question. Are the Government aware that with regard to storage of rice they have not been able to get over the great difficulty which the previous Government also was experiencing, namely want of proper storage places on account of which large quantities of rice are thoroughly spoiled? I have got a sample of rice sold in Coimbatore, the condition of which is so bad that it is impossible to describe it in this House. Instead of brushing this



aside as unimportant, will the Minister sincerely come forward and tell us what steps the Government are taking to prevent such deterioration of rice which is a very very serious offence according to me?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தரமான அரிசியை வினியோகிக்கவும், அரிசியைப் பாதுகாப்பதற்கும் சிவில் கண்ட்ரோல் சம்பந்தமான அதிகாரிகள் செயல்படுகிறார்கள். இன்னும் அதிகமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, கொள்முதல் செய்கிற நெல்லைச் சுத்தம் செய்து, காய்ச்சல் போட்டு, தரவாரியாகப் பிரித்து, ஸ்டாக் செய்ய அந்தத்துறையில் அனுபவம் வாய்ந்த வியாபாரிகளை ஊதியத்திற்கு நியமிக்கும் உத்தேசம் அரசினருக்கு உண்டா ?

தனிப்பட்டவர்களை நெல் கொள்முதல் செய்ய ஏஜெண்டுகளாக நியமித்த காரணத்தால், மேற்படி ஏஜெண்டுகள் அந்த உரிமையை வைத்துக்கொண்டு பல ஊழல்கள் புரிந்துவருவது அவர்களுக்கு தெரியுமா? அவர்கள் திடம் கிச்சிடி நெல் கொள்முதல் செய்து வெளி மார்க்கட்டில் கூடுதல் விலைக்கு விற்றுவிட்டு, இரண்டாம் ரகம் நெல் குறைந்த விலைக்கு கொள்முதல் செய்து, சர்க்காருக்குக் கொடுத்துவிடுகிறார்கள். அதை நீக்க தனிப்பட்டவர்களுக்கு ஏஜெண்டு உரிமை கொடுக்காமல் சர்க்காரே நேரடியாக அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கொள்முதல் செய்யும் நடவடிக்கையாக மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அனுபவம் வாய்ந்தவர்கள் என்றால், யாரைக் கனம் உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. தனிப்பட்டவர்கள் அரசாங்கத்தின் ஏஜெண்டுகளாகச் செயல்படுகிறார்களே தவிர, அவர்களாகவே ஒரு இடத்தில் வாங்கி, இன்னொரு இடத்தில் விற்பதற்காக அவர்களை நியமிக்கவில்லை. ஃபுட் கார்ப்பொரேஷன், அரசாங்க அதிகாரிகள் எல்லாம் அரசாங்கத்தின் ஒவ்வொரு ஏஜெண்டுகளாகவே செயல்படுகிறார்கள். நல்லரக நெல்லை வெளி மார்க்கெட்டில் விற்றுவிட்டு, இரண்டாம் ரக நெல்லை அரசாங்கத்திற்குக் கொள்முதல் செய்து தருகிறார்கள் என்று கனம் உறுப்பினர் குறிப்பிட்டது எங்கே நடைபெற்றது என்று தெரியவில்லை. அவர் சொல்வது சரியாக இருக்குமானால், அதுபற்றி அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஒரு ஏக்கருக்கு விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், அந்த விதிவிலக்கு அடிப்படையில் கிடைக்கக்கூடிய உணவுப்பொருள் அவர்களுக்கே காணவும் காணாது. வெளியில் கள்ள மார்க்கெட்டில் விற்கவும் முடியாது. ஆகவே, ஒரு ஏக்கர் என்பதற்குப் பதிலாக 3 ஏக்கர் வரையில் விதிவிலக்குக் கொடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

[1967 ஜூலை 11

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒரு ஏக்கர், ஒரு ஏக்கருக்குக் குறைவாக உள்ளவர்களுக்கு விதிவிலக்குக் கொடுக்கிறபோதே 13 லட்சம் பேர்கள் விதிவிலக்குப் பெறுகிறார்கள். 3 ஏக்கர் வரையில் விதிவிலக்குக் கொடுப்பது என்றால் நம் ராஜ்யத்தில் உள்ள 75 சத விகிதம் பட்டாதார்கள் விதிவிலக்குப் பெற்று விடுவார்கள். நம் கொள்முதல் திட்டமே நடைபெறாது. அதற்குப் பதிலாக சுதந்திராக் கட்சித் தலைவர் சொல்வதுபோல கொள்முதலே வேண்டாம் என்ற கருத்தை மறைமுகமாக கனம் அங்கத்தினர் ஆதரிக்கிறாரோ என்று நான் ஐயப்பட வேண்டியிருக்கிறது.

**திரு. அ. ஆறுமுகம் :** நெல் கொள்முதல் செய்கிறபோது நிலத்தில் எவ்வளவு விளைந்தது என்கிற கணக்கை அடிப்படையாகக் கொண்டு கொள்முதல் செய்ய உத்தேசம் உண்டா ?

(பதில் இல்லை.)

**திரு. ஆ. கு. சுப்பையா :** அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது ஒரு ஏக்காராவுக்குக் குறைவான நிலக்காரர்கள் அதிகம் இருப்பதாகச் சொன்னார்கள். 3 ஏக்கரா வரையில் விதிவிலக்கு அளித்து அதற்கு மேல் பத்து ஏக்கரா வரை லெவி சிஸ்டம் முறையில் கொள்முதல் செய்வது என்றால் நமக்குத் தேவையான உணவு பூர்த்தியாகாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் அதுபற்றிதான் முன்பு சொன்னேன். பத்து ஏக்காராவுக்குமேல் 50 ஆயிரம் பேர்கள் இருக்கமாட்டார்கள். நிலம் பல பல துண்டுகளாக இருப்பதனால், 3 ஏக்காராவுக்கு உட்பட்டவர்கள்தான் மிக அதிகம். கொள்முதல் திட்டம் வெற்றிகரமாக நடைபெறவேண்டும், நாம் பொறுப்பேற்று இருக்கிறவர்களுக்கு சரியான முறையில் உணவு தானியம் அளிக்கவேண்டும் என்றால், இத்தகைய விதிவிலக்கை அளிக்க முடியாது. கேரளத்தில் கம்யூனிஸ்ட் சர்க்கார்கூட 2 ஏக்கரா வரையில் விலக்குக்கொடுத்துவிட்டு இப்போது சிரமப்படுகிறார்கள். அவர்களுடைய அனுபவத்தையும் நாம் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

**திரு. இல. பலராமன் :** வடஆற்காடு மாவட்டத்திற்கு விதிக்கப்பட்ட கொள்முதல் இலக்கை அவர்கள் பூர்த்தி செய்த பிறகும், அங்கே அதற்கு மேலும் கொள்முதலை நடத்தி வருவது அங்குள்ள மக்கள் ஏமாந்தவர்கள் என்ற எண்ணமா ? அல்லது வேறு காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வடாற்காடு மாவட்டத்தவர்கள் கொள்முதல் திட்டத்திற்கு இந்த அளவு ஒத்துழைப்புத் தந்திருப்பதன் காரணத்தினால், அவர்களை ஏமாந்தவர்கள் என்று கருதமாட்டார்கள். தமிழர்களுடைய பண்பாட்டின் நிலைக்களமாக பாராட்டைப் பெற்றிருக்கிறார்கள்.



1967 ஜூலை 11]

**ஹாஜி ம. மு. பீர்முஹம்மது :** தலைவர் அவர்களே, பிரிக்கப்படாத பட்டா, அதே நேரத்தில் 3 குடும்பங்கள் அந்த நிலத்தை நம்பி தனித்தனியாக இருக்கின்றன. அந்த மூன்று குடும்பத்திலும் மொத்தம் 21 பேர்கள் இருக்கிறார்கள், மொத்தம் இருப்பதே 2 ஏக்கரா நிலம்தான். ஒரு ஏக்காராவுக்குமேல் கொள்முதல் செய்யப்படும் என்கிறபோது இதுபோன்றவர்களின் விஷயத்தை மனதில் கொண்டு பிரிக்கப்படாத பட்டாதார்களுக்கு ஒரு ஏக்கர் என்பதில் இருந்து கொள்முதலில் விதிவிலக்கு அளிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்த அந்த இடத்தை அனுசரித்துத்தான் கொள்முதல் செய்யப்படுகிறது. பிரிக்கப்படாத பட்டாக்களை தனித்தனியாகப் பிரிப்பதற்கான முயற்சி இருக்கிறது.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** இப்போதிருக்கிற கொள்முதல் விதிப்படி மார்க்கெட்டபிள் சர்பளஸ் என்று கொள்முதல் செய்கிறார்கள். விவசாயச் செலவுக்கு தனியாக விலக்கு அளிக்கப்படவில்லை. தென் மாவட்டங்களில் நெல்லாகவே கூலியைக் கொடுக்கும் படியான நிலைமை இருக்கிறது. ஆகவே, பண்ணைச் செலவுக்கான நெல்லை விலக்கு அளித்துவிட்டு பாக்கியைக் கொள்முதல் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மார்க்கெடபிள் சர்ப்ளஸ் என்பதாக அந்த அந்த மாவட்ட கலெக்டர்கள் எல்லாச் செலவும் போக பாக்கியைத்தான் நிர்ணயித்து வருகிறார்கள்.

**திரு. தோ. மு. நல்லசாமி :** சாகுபடிக்கு ஆகக்கூடிய செலவுகளை உத்தேசம் பண்ணிப் பார்க்கிறபோது கொள்முதலுக்காக நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலை மிகக் குறைவாக இருப்பதனால் விவசாயிகளுடைய உற்சாகம் குறைந்துவிடுகிறது. ஆகவே, நெல்லுக்கு கட்டுபடியாகக்கூடிய விலையை நிர்ணயித்து கொள்முதல் செய்கிற திட்டத்தை நமது அரசு மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாக இருக்கும் முன்னோடித் திட்டமாக அமைக்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நாம் இப்போது ஏற்றுக் கொண்டிருக்கும் திட்டம் தோல்வியுறுமானால், கனம் உறுப்பினர் சொல்கிற யோசனைக்குத்தான் இந்த அரசாங்கம் போய்த் தீர வேண்டியிருக்கும்.

**திரு. எஸ். முருகையன் :** வடஆற்காடு மாவட்டத்தில் கொள்முதலுக்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 30 ஆயிரம் டன். இப்போது 47 ஆயிரம் டன் கொள்முதல் ஆகியிருக்கிறது. ஒரு ஏக்கரிலிருந்து ஐந்து ஏக்கரா வரை கொள்முதல் செய்திருக்கிறார்கள். இன்னும் பெரிய பெரிய விவசாயிகள் நெல்லைப் பதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே மாவட்டத்திற்குள் நெல், அரிசி போக்குவரத்துத்தடை விதிக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக அந்தத் தடையை எடுத்து மற்ற தானியங்களும் வெளிவர ஏற்பாடு செய்வார்களா ?

[1967 ஜூலை 11

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒரு ஏக்கர், ஒரு ஏக்கருக்குக் குறைவாக உள்ளவர்களுக்கு விதிவிலக்குக் கொடுக்கிறபோதே 13 லட்சம் பேர்கள் விதிவிலக்குப் பெறுகிறார்கள். 3 ஏக்கர் வரையில் விதிவிலக்குக் கொடுப்பது என்றால் நம் ராஜ்யத்தில் உள்ள 75 சத விகிதம் பட்டாதார்கள் விதிவிலக்குப் பெற்று விடுவார்கள். நம் கொள்முதல் திட்டமே நடைபெறாது. அதற்குப் பதிலாக சுதந்திராக் கட்சித் தலைவர் சொல்வதுபோல கொள்முதலே வேண்டாம் என்ற கருத்தை மறைமுகமாக கனம் அங்கத்தினர் ஆதரிக்கிறாரோ என்று நான் ஐயப்பட வேண்டியிருக்கிறது.

**திரு. அ. ஆறுமுகம் :** நெல் கொள்முதல் செய்கிறபோது நிலத்தில் எவ்வளவு விளைந்தது என்கிற கணக்கை அடிப்படையாகக் கொண்டு கொள்முதல் செய்ய உத்தேசம் உண்டா ?

(பதில் இல்லை.)

**திரு. ஆ. கு. சுப்பையா :** அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது ஒரு ஏக்காராவுக்குக் குறைவான நிலக்காரர்கள் அதிகம் இருப்பதாகச் சொன்னார்கள். 3 ஏக்கரா வரையில் விதிவிலக்கு அளித்து அதற்கு மேல் பத்து ஏக்கரா வரை லெவி சிஸ்ட முறையில் கொள்முதல் செய்வது என்றால் நமக்குத் தேவையான உணவு பூர்த்தியாகாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் அதுபற்றிதான் முன்பு சொன்னேன். பத்து ஏக்காராவுக்குமேல் 50 ஆயிரம் பேர்கள் இருக்கமாட்டார்கள். நிலம் பல பல துண்டுகளாக இருப்பதனால், 3 ஏக்காராவுக்கு உட்பட்டவர்கள்தான் மிக அதிகம். கொள்முதல் திட்டம் வெற்றிகரமாக நடைபெறவேண்டும், நாம் பொறுப்பேற்று இருக்கிறவர்ளுக்கு சரியான முறையில் உணவு தானியம் அளிக்கவேண்டும் என்றால், இத்தகைய விதிவிலக்கை அளிக்க முடியாது. கேரளத்தில் கம்யூனிஸ்ட் சர்க்கார்கூட 2 ஏக்கரா வரையில் விலக்குக்கொடுத்துவிட்டு இப்போது சிரமப்படுகிறார்கள். அவர்களுடைய அனுபவத்தையும் நாம் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

**திரு. இல. பலராமன் :** வடஆற்காடு மாவட்டத்திற்கு விதிக்கப்பட்ட கொள்முதல் இலக்கை அவர்கள் பூர்த்தி செய்த பிறகும், அங்கே அதற்கு மேலும் கொள்முதலை நடத்தி வருவது அங்குள்ள மக்கள் ஏமாந்தவர்கள் என்ற எண்ணமா ? அல்லது வேறு காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வடாற்காடு மாவட்டத்தவர்கள் கொள்முதல் திட்டத்திற்கு இந்த அளவு ஒத்துழைப்புத் தந்திருப்பதன் காரணத்தினால், அவர்களை ஏமாந்தவர்கள் என்று கருதமாட்டார்கள். தமிழர்களுடைய பண்பாட்டின் நிலைக்களமாக பாராட்டைப் பெற்றிருக்கிறார்கள்.



1967 ஜூலை 11]

**ஹாஜி ம. மு. பீர்முஹம்மது :** தலைவர் அவர்களே, பிரிக்கப்படாத பட்டா, அதே நேரத்தில் 3 குடும்பங்கள் அந்த நிலத்தை நம்பி தனித்தனியாக இருக்கின்றன. அந்த மூன்று குடும்பத்திலும் மொத்தம் 21 பேர்கள் இருக்கிறார்கள், மொத்தம் இருப்பதே 2 ஏக்கரா நிலம்தான். ஒரு ஏக்காராவுக்குமேல் கொள்முதல் செய்யப்படும் என்கிறபோது இதுபோன்றவர்களின் விஷயத்தை மனதில் கொண்டு பிரிக்கப்படாத பட்டாதார்களுக்கு ஒரு ஏக்கர் என்பதில் இருந்து கொள்முதலில் விதிவிலக்கு அளிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்த அந்த இடத்தை அனுசரித்துத்தான் கொள்முதல் செய்யப்படுகிறது. பிரிக்கப்படாத பட்டாக்களை தனித்தனியாகப் பிரிப்பதற்கான முயற்சி இருக்கிறது.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** இப்போதிருக்கிற கொள்முதல் விதிப்படி மார்க்கெட்டபிள் சர்பளஸ் என்று கொள்முதல் செய்கிறார்கள். விவசாயச் செலவுக்கு தனியாக விலக்கு அளிக்கப்படவில்லை. தென் மாவட்டங்களில் நெல்லாகவே கூலியைக் கொடுக்கும்படியான நிலைமை இருக்கிறது. ஆகவே, பண்ணைச் செலவுக்கான நெல்லை விலக்கு அளித்துவிட்டு பாக்கியைக் கொள்முதல் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மார்க்கெடபிள் சர்ப்ளஸ் என்பதாக அந்த அந்த மாவட்ட கலெக்டர்கள் எல்லாச் செலவும் போக பாக்கியைத்தான் நிர்ணயித்து வருகிறார்கள்.

**திரு. தோ. மு. நல்லசாமி :** சாகுபடிக்கு ஆகக்கூடிய செலவுகளை உத்தேசம் பண்ணிப் பார்க்கிறபோது கொள்முதலுக்காக நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலை மிகக் குறைவாக இருப்பதனால் விவசாயிகளுடைய உற்சாகம் குறைந்துவிடுகிறது. ஆகவே, நெல்லுக்கு கட்டுபடியாகக்கூடிய விலையை நிர்ணயித்து கொள்முதல் செய்கிற திட்டத்தை நமது அரசு மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாக இருக்கும் முன்னோடித் திட்டமாக அமைக்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நாம் இப்போது ஏற்றுக் கொண்டிருக்கும் திட்டம் தோல்வியுறுமானால், கனம் உறுப்பினர் சொல்கிற யோசனைக்குத்தான் இந்த அரசாங்கம் போய்த் தீர வேண்டியிருக்கும்.

**திரு. எஸ். முருகையன் :** வடஆற்காடு மாவட்டத்தில் கொள்முதலுக்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 30 ஆயிரம் டன். இப்போது 47 ஆயிரம் டன் கொள்முதல் ஆகியிருக்கிறது. ஒரு ஏக்கரிலிருந்து ஐந்து ஏக்கரா வரை கொள்முதல் செய்திருக்கிறார்கள். இன்னும் பெரிய பெரிய விவசாயிகள் நெல்லைப் பதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே மாவட்டத்திற்குள் நெல், அரிசி போக்குவரத்துத்தடை விதிக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக அந்தத் தடையை எடுத்து மற்ற தானியங்களும் வெளிவர ஏற்பாடு செய்வார்களா ?

[1967 ஜூலை 11

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** செங்கல்பட்டில் தடையை நீக்கிவிட்டிருப்பதுபோல, வட ஆற்காடு மாவட்டத்திலும் நீக்க தீவிரமான பரிசீலனை இருக்கிறது. ஆனால், சில நன்மைகளை உத்தேசித்து தடை எடுக்கப்படவில்லை. விரைவில் அதை எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எனது பக்கத்தில் இருந்து திரு. நல்லசாமி அவர்கள் போட்ட கேள்விக்கு கனம் அமைச்சர் அவர்கள் நேரிடையாகப் பதில் அளிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** அருள்கூர்ந்து உட்காருங்கள். நான் இதுபற்றி ஏற்கெனவே தீர்ப்பு கொடுத்திருக்கிறேன். எந்த ஒரு வினாவுக்கும் விடை அளிப்பதற்கோ, அளிக்காமல் இருப்பதற்கோ, அமைச்சர் அவர்களுக்கு உரிமை உண்டு. ஆகவே, கனம் அமைச்சர் அவர்கள் பதிலளிக்கவில்லை என்று கூறிக்கொண்டு இருக்கவேண்டாம் என்று தங்களைப் பணிவோடு, அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சர் அவர்கள் எந்தக் கேள்விக்கும் பதில் அளிக்காமல் இருக்கலாம் என்று நீங்கள் ஆலோசனை சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அவருக்கு பதில் அளிக்காதிருக்க உரிமை உண்டு என்றால், அதைப்பற்றி மீண்டும் விளக்கம்கேட்க எங்களுக்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைப்பற்றி வினாவாகக் கேளுங்கள். அவர் பதில் சொல்லவில்லை என்று சொல்வது முறையாகாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்போது கொடுக்கும்படியான விலை கட்டுப்படியாகாதிருப்பதனால், கட்டுப்படியாகக்கூடிய விலை என்ன என்பதை விவசாய அமைச்சர் மூலமாகவாவது இந்த அமைச்சர் தெரிந்துகொள்வார்களா ?

(பதில் இல்லை)

**திரு. கே. வினாயகம் :** அமைச்சர் அவர்கள் இதற்கு முன்னே இருந்து 8-ஆம் தேதி மார்ச் மாதம் ஒரு நாளைக்குப் போதுமான உணவுப்பொருள்கள்தான் இருந்ததாகச் சொன்னார்கள். மார்ச் மாதம் 8-ஆம் தேதி ஒரு நாளைக்குப் போதுமான 500 டன்தான் இருந்ததாகச் சொல்வது சரியான பதிலா ? அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதில் ஒன்றும் ஒளிமறைவு இல்லை. இன்றைக்கு விவாதத்திற்கு வர இருக்கிற மானியக் கோரிக்கை சம்பந்தமாக நான் கொடுக்க இருக்கிற குறிப்பிலேயே "இந்த அமைச்சரவை பதவியேற்றபோது சென்னை மாநகரின் இரண்டு நாள் தேவைக்கான அரிசிகூட இருப்பில் இல்லை" என்றுதான் துவக்கியிருக்கிறேன். இதில் ஒன்றும் தவறு இல்லை.



1967 ஜூலை 11]

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, ஜனவரி, பிப்ரவரி, டிசம்பர் மாதங்களில் மட்டும் எவ்வளவு கொள்முதல் செய்தார்கள்? இருபது லட்சத்திற்கும் மேற்பட்ட ஜனத்தொகை கொண்ட சென்னை நகரத்தில் மட்டும் ஒருநாளைக்குத் தேவையான 500 டன்னை வைத்திருந்ததற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதற்கு உள்நோக்கம் கற்பிப்பது நல்ல அரசியல் மரபு அல்ல. இப்போது கோபமாகக் கேட்கிறார்களே தவிர, உண்மையில் மார்ச் 8-ஆம் தேதி அன்று 500 டன்களேதான் வைத்திருந்தார்கள். அதற்கு முந்திய ஆண்டு அதே தேதியில் 15 ஆயிரம் டன் வைத்திருந்தார்கள். அதற்கு முந்திய ஆண்டும் அதே அளவு இருந்திருக்கிறது. நாம் பதவியேற்கிறபோது துரதிருஷ்டவசமாக 500 டன்களே வைத்திருந்தார்கள். இதற்கான காரணத்தை ஆராயத் தேவையில்லை.

DR. H. V. HANDE : The Minister in his reply to my supplementary question did not clearly specify the steps he is taking to see that the rice is not spoiled. I want to impress upon this House and the Hon. Minister that the spoiling of rice is a serious offence which started with the previous Government. I want this Government to tell categorically whether they consider spoiling of rice as a national crime or not. I have received a letter from Coimbatore to the effect that rotten rice is being sold there at 86 paise per kilo. I want the Minister to give his serious attention and tell us categorically whether this is a serious crime or not.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : May I point out to the hon. Member that he must point out specific instances? He spoke vaguely. He says it is a national waste and a heinous crime. No specific instances are brought to the notice of the Ministers or the Government. Of course he has got every right to express his ideas eloquently. So far he has not taken any steps to bring his grievances to the notice of the Minister or the Civil Supplies Commissioner or the Local Authorities. It is quite strange to me. Anyhow I will look into the matter. On behalf of the Government I can assure this House that the Government is very serious about maintaining and improving quality control and is taking whatever steps are necessary.

**திரு. ப. மகாதேவன் :** மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொள்முதல் கொள்கையைப்பற்றி "Pat the poor and tap the rich" என்று சொன்ன காரணத்தினால், சில அதிகாரிகள் ஏழை எளிய விவசாயிகளைத் தடவிக் கொடுத்தும், பெரிய விவசாயிகளைத் தட்டிப் பறிப்பதும் முடிந்தால் முதுகில் நாலு தட்டுதட்டிப் பறிமுதல் செய்கின்றதும் ஆன ஒரு நிலையைப் போக்குவதற்கு இந்த அரசாங்கம் முன் வருமா ? மு.ப. 10-00

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஏழை எளியவர்களுக்காக இந்த அரசாங்கம் வாதாடுவதில் பாவம் இல்லை என்று கருதுகிறேன்.

*திரு. பெ. பெரியசாமி :* ஒரு ஏக்கருக்கு விதிவிலக்கு என்பதை 1½ ஏக்கர் வரையில் விதிவிலக்கு என்று ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(பதில் இல்லை.)

*திரு. க. இராமமூர்த்தி :* தலைவர் அவர்களே, மார்ச் 8-ஆம் தேதி அன்று சென்னை நகரத்திற்கு இரண்டு நாளைக்கு வேண்டிய தானியங்களைத்தான் வைத்திருந்தார்கள் என்று கூறினார்கள். அதேநேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் போதுமான அரிசி இருப்பு இருந்திருக்கிறது. தேவைப்படுகிற அரிசியை ஒரு நாள் இரவி லேயே லாரியில் சென்னைக்குக் கொண்டுவந்திருக்க முடியும். அப்படியிருக்க இதை ஒரு தவருகப் பிரச்சாரம் செய்வது சரியா என்று கேட்கிறேன்.

*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :* நினைத்தால் கொண்டு வரலாம் என்பது வேறு விஷயம். உண்மை நிலை அன்றையதினம் 500 டன்தான் சென்னையில் கையிருப்பில் இருந்தது என்பதாகும். இன்றைக்கு எடுத்துக்கொண்டால், அரிசி விநியோகப் பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டுள்ள ஒவ்வொரு இடத்திலும் 2½ மாதங் களுக்கான ஸ்டாக் கையில் வைத்திருக்கிறோம். அக்டோபர் மாதம் 10-ஆம் தேதி வரையில் தானிய விநியோகத்தில் நமக்கு எந்தவிதச் சங்கடமும் இராது. ஆனால், அன்றையதினம் ஒரு நாளைக்கு மறுநாள் அரிசி இல்லாத—அன்றாடம் காய்ச்சி என்று சொல்வார்களே, அந்த அன்றாடம் காய்ச்சி நிலையை இந்த அரசுக்கு ஏற்படுத்தியிருந்தார்கள். அதைத்தவிர, இதைப்பற்றிப் பிரேத விசாரணை செய்யவில்லை.

*திரு. மு. ச. சிவசாமி :* தலைவர் அவர்களே, வழக்கமாக நெல் விளைச்சல் செய்யும்படியான நிலங்களில் அரசியல் காரணத்திற்காக வேறு பணப்பயிர்களை வைக்கும்படியாக சிலர் பிரச்சாரம் செய் கிறார்கள். இதனால் கொள்முதல் வரம்பு பாதிக்கப்படாதா ? இப்படிப் பிரச்சாரம் செய்கிறவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

THIRU K. VINAYAKAM : This Government has now procured enough paddy for the consumption of the people of this State. During the procurement period innocent people have moved small quantities of paddy from place to place and they have been seized and money has not yet been paid to them. Will the Government be pleased to treat these quantities as given for procurement and see that no cases are filed in the criminal courts? Whereas some cases have been filed in the criminal courts will the Government be gracious enough to pardon them and withdraw the cases from the criminal courts?





*மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :* நண்பர் கூறுகிற முறை யில் தான் ஏழை விவசாயிகளிடம் இருந்து நெல்லைப் பறிக்கிற போது பணத்தைக் கொடுத்துவிட்டு தானியத்தை எடுத்துக் கொள்கிறோம். ஆனால், இப்படிக் கடத்துவதையே ஒரு வியாபார மாகச் செய்கிறவர்கள்மீது, கள்ளச் சந்தையாகச் செய்கிறவர்கள் மீது வழக்குத் தொடரப்படுகிறது. வாபஸ் பெறுவதற்குத் தயாராய் இல்லை. நமது முயற்சிகளுக்கே அது குந்தகம் ஏற்படுத்தும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* உணவுதானியக் கொள்முதல், பங்கீடு, குறித்து இன்று பேரவையில் விவாதம் நடக்க இருப்ப தனால், இனி இவ்வினாவில் மேற்கொண்டு துணைவினாக்கள் போடு வதை நிறுத்தலாம் என்று நினைக்கிறேன்.

*திரு. பெ. சௌந்திரபாண்டியன் :* தலைவர் அவர்களே, நான் 35 நிமிடங்களாகக் கேள்விபோட அனுமதி கேட்டுக்கொண்டிருந்தும் வயது வந்தவர்களுக்கே வாய்ப்புக்கொடுத்து, எனக்குக் கொடுக்காது விட்டது, என்னைப் போன்ற இளைஞர்களுடைய ஊக்கத்தைக் குறைக்காதா என்று கேட்கிறேன்.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. It is an insult to the people who have already been given chances to say that only older people are given chances. Will the Member be good enough to withdraw that allegation?

MR. SPEAKER : For the information of the hon. Member Mr. Soundarapandian, I wish to draw attention to Rule 38 (2) of the Assembly Rules under which the Speaker may disallow any supplementary question, if a sufficient or reasonable number of supplementary questions have already been put in respect of the same question. நம்முடைய சட்டப்பேரவை விதி 38-ல் இதுபற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு போதுமான அளவுக்கு துணைக்கேள்விகள் போடுவதற்கு நான் அனுமதித்திருக் கிறேன். திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் உணவு விவாதத்தில் கலந்து கொண்டு பேச வாய்ப்பு இருக்கிறது.

## நெல் மூட்டைகளின் எடை

*259 வினா.—*திரு. கரு. சீமைச்சாமி :* மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல் மூட்டை எடையை நிர்ணயிப்பதில் தஞ்சையில் மூட்டைக்கு 57 கிலோ என்றும், தென்னார்க்காடு மாவட்டத்தில் 51 கிலோ என்றும், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் 65 கிலோ என்றும் வழக்கத்தில் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் என்றால் காரணமென்ன ?

[1967 ஜூலை 11

THE HON. THIRU K. A. MATHIALAGAN: (a) It is a fact that different weights are being adopted for a bag of paddy according to local custom. In the districts of South Arcot, North Arcot, Chingleput and Salem, the weight for one bag of paddy is being adopted as 75 Kgs. In Thanjavur, Tiruchirappalli, Ramanathapuram and Kanyakumari districts, is is being adopted as 57 Kgs. In Tirunelveli district, it is being adopted as 65 Kgs. In Madurai district, it is being adopted as 65 Kgs. in a few places and as 57 Kgs. in most of the areas.

(b) The Government have not prescribed the size of a bag for any district. The adoption of weight for a bag of paddy depends upon the size of the bag according to local custom. It does not affect payment of value for procurement as it is paid only in the basis of weight of the quantities handed over to the Civil Supplies Department.

## உருளைக் கிழங்கு

*260 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1957 முதல் 1966 வரை நமது ராஜ்யத்தில் உருளைக் கிழங்கு உற்பத்தி எவ்வளவு?

(இ) வெளிநாடுகளுக்கும், வெளி ராஜ்யங்களுக்கும் ஏற்றுமதி ஆகிறதா? எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** (அ) & (இ): விவர அறிக்கை ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார் மேஜையின் மேல் வைத்திருக்கக் கூடிய இந்த விவர அறிக்கையைப் பார்த்தால், 1957-58 லிருந்து 1965-66 வரையிலே ஆரம்பத்திலிருந்து உற்பத்தியைவிட மிகவும் குறைந்திருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? மேலும் உற்பத்தியை அதிகமாகப் பெருக்குவதற்கு ஊக்கம் செய்ய உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** உருளைக் கிழங்கு உற்பத்திக் குறைவுக்கான காரணங்களை கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதனுடைய உற்பத்தி லேட்பிளைட் என்ற வியாதியால் பாதிக்கப்பட்டது, அதனால் குறைந்துவிட்டது.

*261 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960 முதல் 1966 வரையில் வெளி நாடுகளிலிருந்து உருளைக் கிழங்கு விதை இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா? எந்தெந்த நாடுகளிலிருந்து, எவ்வளவு?

6-ம் பக்கங்களில் II இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1967 ஜூலை 11]

(இ) ஆம் எனில், என்ன விலைக்கு வாங்கி, என்ன விலைக்கு விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** (அ) & (இ) 1960-ம் ஆண்டிலிருந்து 1966-ம் ஆண்டுவரை இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு விதையின் அளவும், நாடுகளின் பெயரும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. (1) | அளவு. (2) | மதிப்பு. (3) | நாடு. (4) |
| --- | --- | --- | --- |
| | | ரூ. | |
| 1962 .. .. | 47 டன் 14 அந்தர் | 51,986·62 | பிரிட்டன். |
| 1964 .. .. | 10 டன் | 7,000 | பிரிட்டன். |
| 1965 .. .. | 100 டன் | 43,465·15 | பிரிட்டன். |
| 1965 .. .. | 15 டன் | வடக்கு அயர்லாந்திலிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டது. | |
| 1966 .. .. | 5 அந்தர் | வடக்கு அயர்லாந்திலிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டது. | |

1965-ம் ஆண்டு இறக்குமதி செய்யப்பட்ட 115 டன் உருளைக் கிழங்கு விதையைத் தவிர, மற்றவை உழவர்களுக்கு விற்கப்படாது. விதைப் பெருக்கத்திற்காகவும், பெருக்கிய பின்னர் உழவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்காகவும், அரசுக்குரிய பண்ணையிலேயே விதைக்கப்பட்டன. 1965-ல் இறக்குமதியான விதைகள் சில வகையான புழு பூச்சிகளாலும், நோய்களாலும் பாதிக்கப்பட்டிருந்ததால் பயிரிடுவதற்கோ அல்லது உட்கொள்ளுவதற்கோ தகுதி அற்றவையாயிருந்தன.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** அமைச்சர் அவர்கள் 260-வது கேள்விக்குப் பதிலளிக்கிற நேரத்திலே வியாதியின் காரணமாகத்தான் உற்பத்தி குறைந்துவிட்டது என்று கூறினார்கள். இந்த அரசாங்கத்திற்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதைகள் நல்ல அருமையான விதைகள் என்று தெரிவிக்கப்பட்டது. அப்படியிருந்தும் வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. வெளிநாட்டிலிருந்து வந்திருந்த விதைகள் அழுகிப்போன, கெட்டுப்போன விதைகளாக இருந்ததால்தான் பாதிக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** வெளிநாடுகளிலிருந்து வந்த விதைகள் நல்ல விதைகள்தான். நீலகிரியிலே லேட்பிளைட், கோல்டன் பிளைட் போன்ற வியாதிகளால்தான் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

DR. H. V. HANDE: Sir, are this Government aware of the fact that large quantities of potatoes were imported from North India to South India about two years ago and there was a wastage of potatoes on a large scale? In fact, they became rotten potatoes and they emitted a lot of stink and it was a big scandal. So, will this Government tell us the reasons for such colossal waste of potatoes?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** உத்திரப் பிரதேசத்திலிருந்து ஏற்கனவே வரவழைக்கப்பட்ட உருளைக்கிழங்குகள் மோசமானதாக வரவழைத்தார்கள், அதிலே சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டது. அதைப்பற்றிய முழு விவரங்களும் வேண்டுமானால், அதற்குத் தனிக் கேள்விபோட்டால், முழு விவரங்களையும் அளிக்கலாம்.

**திரு. கே. போஜன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு விதையானது மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே அதை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்பொழுது ஜெர்மன் நாட்டுடன் ஒரு ஒப்பந்தம் ஆகியிருக்கிறது, இண்டோ-ஜெர்மன் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்கள் கிட்டத்தட்ட நமக்கு இரண்டு கோடி ரூபாய் இலவசமாக அளிக்க இருக்கிறார்கள். அதன்மூலமாக நல்ல விதைகள், பொறுக்கு விதைகள், டிராக்டர் போன்றவை, இரசாயன உரங்கள் இவையெல்லாம் இலவசமாக அளிக்கப்படும். அப்படிச் செய்யும்பொழுது நீலகிரியில் உருளைக் கிழங்கு உற்பத்தி கணிசமாக ஏற்படும் என்பதை நான் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**திரு. ஆர். விஜய ரகுநாத தொண்டமான் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உருளைக் கிழங்கு விதைகளை வாங்கி விவசாயிக்குக் கொடுக்கிறார்கள். அவர்கள் அதை உபயோகப்படுத்துவதற்கு முன்பு அரசாங்கம் ஏதாவது பரிசோதனை நிலையங்கள் வைத்து அதாவது டெஸ்டிங் சென்டர்ஸ் வைத்து, அதிலே இவற்றையெல்லாம் ஆராய்ச்சி செய்து, அட்வைஸ் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்பொழுது நீலகிரியிலே அத்தகைய ஆராய்ச்சிகள் நடக்கின்றன; கோடைக்கானலிலும் நடக்கிறது. அதன்மூலம் நல்ல பொறுக்கு விதைகள் கொடுத்து வருகிறார்கள். 1961-ஆம் ஆண்டில் உற்பத்தியான 115 டன் முழுவதும் விதைக்காகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. சர்க்கார் விதைப் பண்ணையிலே உற்பத்திசெய்து விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, விதையிலே ஒன்றும் தகராறு இல்லை.

## Tuberculosis Eradication Programme

* 262 Q.— THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(a) whether there is any proposal to take active steps to reorganise the Tuberculosis Eradication Programme in the City; and

(b) whether the Government would consider the possibility of opening more diagnostic, therapeutic and peripheral centres?





**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) சென்னை நகரில் தற்போது திருத்தியமைக்கப்பட்ட உருக்கி நோய் ஒழிப்புத் திட்டம் ( Tuberculosis Eradication Programme செயல்பட்டு வருகிறது. பதினான்கு உருக்குநோய் ஆய்வு நிலையங்களும், சிகிச்சை நிலையங்களும் திறக்கப்பட்டுள்ளன. இந்த நிலையங்கள் ஆற்றும் பணியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தேவையானபோது, மேலும் உருக்கி நோய் ஆய்வு நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

**திரு. கே. விநாயகம் :** ஐயா, இந்த க்ஷயரோக வியாதி ஒரு பெரிய வியாதியாக இருப்பதால் க்ஷயரோக ஆஸ்பத்திரிகளில் க்ஷயரோக வியாதியஸ்தர்களுக்கு பெட் வசதிகள் போதுமான அளவு இல்லாத காரணத்தினால் அவர்கள் தங்களுடைய பெயர்களை ரிஜிஸ்டர் செய்துகொண்டு அவரவர்களுடைய முறை வரும்போதுதான் அவர்களுக்கு கார்டுகள் அனுப்பப்படுகின்றன. பெரும்பாலும் அந்த வியாதியஸ்தர் இறந்துபோன பிறகுதான் சிகிச்சைக்கு வரலாம் என்ற கார்டு வருகிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இனியாகிலும் அவர்கள் இறப்பதற்கு முன்னாலேயே வந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அதிகப்படியான க்ஷயரோக ஆஸ்பத்திரிகள் சென்னையிலே ஏற்படுத்த உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் புகார் ஒன்றும் வரவில்லை. அவர்கள் ஆட்சியில் அப்படி இருந்திருக்கலாம், இந்த ஆட்சியில் அப்படி நடக்காமல் பார்த்துக்கொள்வோம்.

## மாவட்ட நகராட்சிகள் சட்டம்

* 263 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகரசபை சட்டத்தை திருத்தும் விஷயம் தற்போது எந்த நிலையிலுள்ளது ?

(இ) இந்த முயற்சி எந்த ஆண்டில் எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தை ரத்து செய்து, அதை மீண்டும் சட்டமாக இயற்றும்பொருட்டு முந்திய சட்டசபையில் தமிழ்நாடு 1966-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் மசோதா (3—8—1966-ல்) கொண்டுவரப்பட்டது. இது குறித்து அச்சட்டசபை நிறைவேற்றிய ஒரு பிரேரணையின்மேல், பொதுமக்கள் அம் மசோதா மீது தங்கள் கருத்துக்களை 31—10—1966-க்குள் தெரிவிப்பதற்காக அது தமிழ்நாடு அரசாங்க இதழில் வெளியிடப்பட்டது. முந்திய சட்டசபை கலைக்கப்பட்டதன்மேல்,

அம்மசோதா காலங்கடந்ததாகிவிட்டது. அம்மசோதாவை மீண்டும் கொண்டு வருவதற்காக, புதிதாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளன.

(இ) 1946-ம் ஆண்டிலிருந்து இந்த முயற்சி எடுக்கப்பட்டது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், 1946-ம் ஆண்டிலிருந்து இதற்காக முயற்சி எடுத்துக்கொண்டிருந்தபோதிலும் 1960-ஆம் ஆண்டிலே இந்த முயற்சி எடுக்கப்பட்டு அதற்காக கமிட்டி அமைக்கப்பட்டு பிறகு 1961-ஆம் ஆண்டிலே தேர்தல் வருவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னாலே அதை அடுத்த அரசாங்கம் வந்து கவனித்துக்கொள்ளட்டும் என்று பிறகு விட்டுவிட்டார்கள். இப்படியே அது ஒவ்வொரு முறையும் விடப்பட்டு வருகிறது. தொடர்ந்து பல ஆண்டுக்காலமாக இப்படியே இருந்து வருகிறது. ஆகவே இனியாகிலும் தாமதப்படுத்தாமல் எத்தனை வருட காலத்திற்குள் இதைக் கொண்டுவருவதாக உத்தேசம் இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு இப்பொழுது முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மிக விரைவாகவே சட்டத்தை அமல்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, in view of the rich experience gained by working out the various Acts, we have found out many defects in these Acts. So will the Government take steps to repeal all the existing Acts and then formulate a new comprehensive Act instead, for different subjects relating to Panchayat Unions, Municipalities including Corporation?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஒரு காலத்திலே நல்லது என்று எடுத்துக்கொள்ளப்படுவது காலப் போக்கிலே பயன்படத்தக்கதாக இல்லையென்ற நிலை இருப்பதாலே முழுமையாக நீக்கப்பட்டாலும், அதற்கு மறுபடியும் சிலபல திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டியிருக்கும். ஆகவே நல்ல அம்சங்களை எடுத்துக்கொண்டு புதிதாக தேவைக்கேற்ப நல்ல அம்சங்களைச் சேர்த்து ஒரு நல்ல சட்டத்தை மேற்கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

* 264 Q.—THIRU K. VINAYAKAM :<br>THIRU R. R. MUNISWAMY : } Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to amend the Local Bodies Acts (Panchayats Act, Panchayat Union Act, Municipalities Act, Corporation Act) to confer more powers on local bodies; and

(b) if so when and how.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) & (இ) பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும் அதிக அதிகாரம் அளிக்கும் வகையில், தமிழ்நாடு 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருத்துவதற்கான செயற்குறிப்பு தற்போது எதுவும் இல்லை.





தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தை ரத்துசெய்து அதற்கு மாறாகப் புதிய சட்டம் இயற்றவும், 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தில் விரிவான திருத்தங்களைச் செய்யவும் செயற்குறிப்பு உள்ளது. பொதுமக்களின் விருப்பத்திற்கேற்பவும், இச்சட்டங்கள் செயல்படும்போது ஏற்பட்ட இடர்ப்பாடுகளை நீக்குவதற்காகவும் இவ்வாறு செய்யக் கருதப்பட்டுள்ளது.

**திரு. ரா. ரா. முனுசாமி :** பஞ்சாயத்துக்குப் போதிய அதிகாரம் இல்லாத காரணத்தால் பஞ்சாயத்தில் உள்ள தலைவர்களைப் பார்த்து பொதுமக்கள் குடிதண்ணீர் வசதி, ரோடு வசதி இல்லை யென்று கூறும்போது ‘ நாங்கள் என்ன செய்வது ? எங்களுக்கு அதிகாரல் இல்லை, 30 ரூபாய்க்கு மேல் செக் கிழிக்க முடியாது ’ என்று கூறுகிறார்கள். இந்த நிலையை மாற்றி பஞ்சாயத்துக்கு அதிக அதிகாரம் கொடுக்க வழி செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 30 ரூபாய்க்கு மேல் செக் போட அதிகாரம் இல்லையென்ற பெரும் குறையைச் சொல்லுகின்ற அதே நேரத்தில் அந்தப் பதவிக்கு 30,000 ரூபாய் செலவு செய்கின்ற தலைவர்களும் நாட்டில் இருக்கிறார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். தேவையான மாறுதல்களை தேவையான நேரத்தில் செய்வதற்கு அரசாங்கம் தயங்காது.

THIRU K. VINAYAKAM: Has the Government got any scheme to revive the defunct taluk boards and district boards?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் அரசுக்கு இல்லை.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஏற்கனவே இருந்த ஜில்லா போர்டு அதிகாரம் கூட இப்போது கிடையாது. ஆகவே, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் சரியான முறையில் இயங்க முடியாமல், பொதுமக்களுக்கு நன்மை செய்ய முடியாமல் இருக்கின்றன. அதை உத்தேசித்து பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தனிக் கேள்வி வேண்டும்.

THIRU K. VINAYAKAM : When this Government decide upon reorganising the Local Boards Acts, will they think of the possibility of providing for the election of the presidents of panchayat boards, Chairman of panchayat union councils and the Mayor of the Madras Corporation directly by the people instead of the elected members electing them which involves a lot of financial commitment for the luminary that gets elected?

[1967 ஜூலை 11

அம்மசோதா காலங்கடந்ததாகிவிட்டது. அம்மசோதாவை மீண்டும் கொண்டு வருவதற்காக, புதிதாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளன.

(இ) 1946-ம் ஆண்டிலிருந்து இந்த முயற்சி எடுக்கப்பட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், 1946-ம் ஆண்டிலிருந்து இதற்காக முயற்சி எடுத்துக்கொண்டிருந்தபோதிலும் 1960-ஆம் ஆண்டிலே இந்த முயற்சி எடுக்கப்பட்டு அதற்காக கமிட்டி அமைக்கப்பட்டு பிறகு 1961-ஆம் ஆண்டிலே தேர்தல் வருவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னாலே அதை அடுத்த அரசாங்கம் வந்து கவனித்துக்கொள்ளட்டும் என்று பிறகு விட்டுவிட்டார்கள். இப்படியே அது ஒவ்வொரு முறையும் விடப்பட்டு வருகிறது. தொடர்ந்து பல ஆண்டுக்காலமாக இப்படியே இருந்து வருகிறது. ஆகவே இனியாகிலும் தாமதப்படுத்தாமல் எத்தனை வருட காலத்திற்குள் இதைக் கொண்டுவருவதாக உத்தேசம் இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு இப்பொழுது முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மிக விரைவாகவே சட்டத்தை அமல்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, in view of the rich experience gained by working out the various Acts, we have found out many defects in these Acts. So will the Government take steps to repeal all the existing Acts and then formulate a new comprehensive Act instead, for different subjects relating to Panchayat Unions, Municipalities including Corporation?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஒரு காலத்திலே நல்லது என்று எடுத்துக்கொள்ளப்படுவது காலப் போக்கிலே பயன்படத்தக்கதாக இல்லையென்ற நிலை இருப்பதாலே முழுமையாக நீக்கப்பட்டாலும், அதற்கு மறுபடியும் சிலபல திருத்தங்கள் கொண்டு வரப்படவேண்டியிருக்கும். ஆகவே நல்ல அம்சங்களை எடுத்துக் கொண்டு புதிதாக தேவைக்கேற்ப நல்ல அம்சங்களைச் சேர்த்து ஒரு நல்ல சட்டத்தை மேற்கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

* 264 *Q*.—THIRU K. VINAYAKAM :
THIRU R. R. MUNISWAMY : } Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to amend the Local Bodies Acts (Panchayats Act, Panchayat Union Act, Municipalities Act, Corporation Act) to confer more powers on local bodies; and

(b) if so when and how.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) & (இ) பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும் அதிக அதிகாரம் அளிக்கும் வகையில், தமிழ்நாடு 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருத்துவதற்கான செயற்குறிப்பு தற்போது எதுவும் இல்லை.



1967 ஜூலை 11]

தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தை ரத்துசெய்து அதற்கு மாறாகப் புதிய சட்டம் இயற்றவும், 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தில் விரிவான திருத்தங்களைச் செய்யவும் செயற்குறிப்பு உள்ளது. பொதுமக்களின் விருப்பத்திற்கேற்பவும், இச்சட்டங்கள் செயல்படும்போது ஏற்பட்ட இடர்ப்பாடுகளை நீக்குவதற்காகவும் இவ்வாறு செய்யக் கருதப்பட்டுள்ளது.

திரு. ரா. ரா. முனுசாமி : பஞ்சாயத்துக்குப் போதிய அதிகாரம் இல்லாத காரணத்தால் பஞ்சாயத்தில் உள்ள தலைவர்களைப் பார்த்து பொதுமக்கள் குடிதண்ணீர் வசதி, ரோடு வசதி இல்லையென்று கூறும்போது 'நாங்கள் என்ன செய்வது ? எங்களுக்கு அதிகாரம் இல்லை, 30 ரூபாய்க்கு மேல் செக் கிழிக்க முடியாது' என்று கூறுகிறார்கள். இந்த நிலையை மாற்றி பஞ்சாயத்துக்கு அதிக அதிகாரம் கொடுக்க வழி செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** 30 ரூபாய்க்கு மேல் செக் போட அதிகாரம் இல்லையென்ற பெரும் குறையைச் சொல்லுகின்ற அதே நேரத்தில் அந்தப் பதவிக்கு 30,000 ரூபாய் செலவு செய்கின்ற தலைவர்களும் நாட்டில் இருக்கிறார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். தேவையான மாறுதல்களை தேவையான நேரத்தில் செய்வதற்கு அரசாங்கம் தயங்காது.

THIRU K. VINAYAKAM: Has the Government got any scheme to revive the defunct taluk boards and district boards?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் அரசுக்கு இல்லை.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஏற்கனவே இருந்த ஜில்லா போர்டு அதிகாரம் கூட இப்போது கிடையாது. ஆகவே, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் சரியான முறையில் இயங்க முடியாமல், பொதுமக்களுக்கு நன்மை செய்ய முடியாமல் இருக்கின்றன. அதை உத்தேசித்து பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தனிக் கேள்வி வேண்டும்.

THIRU K. VINAYAKAM : When this Government decide upon reorganising the Local Boards Acts, will they think of the possibility of providing for the election of the presidents of panchayat boards, Chairman of panchayat union councils and the Mayor of the Madras Corporation directly by the people instead of the elected members electing them which involves a lot of financial commitment for the luminary that gets elected?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அதுபற்றி தேவையான போது ஆராயப்படும்.

## பத்திரப்பதிவு முறை

* 265 வினா—திரு. வி. கோதண்டராமன் : } மதிப்பிற்குரிய
திரு. கே. விநாயகம் : }

சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

பத்திரங்கள் ரிஜிஸ்டர் செய்யும் முறைகளில் 1—4—1967 முதல் என்னென்ன விதமான மாறுதல்கள் கொண்டு வர உத்தேசிக்கப் பட்டுள்ளன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1—4—1967 முதற்கொண்டு செயல்படுத்தப்பட்டு வரும் புதிய பத்திரப்பதிவு முறையின்படி, பத்திரப்பதிவு அலுவலகம் ஒன்றில் பதிவு செய்யப்படுவதற்குப் பத்திரம் கொடுக்கப்படும்போது மூலப்பத்திரத்துடன் அப்பத் திரத்தின் நகல் ஒன்றும் சேர்த்துக் கொடுக்கப்படவேண்டும். பதிவுப் புத்தகத்தில் பத்திரத்தை முழுதும் எடுத்து எழுதுவ தற்குப் பதிலாக, அவர் சேர்த்துக் கொடுக்கும் பத்திர நகல், இதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள கோப்புப் புத்தகங்களில் சேர்க்கப்படும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இதனால் பாதிக்கப்பட்ட அந்த ஊழியர்களுக்கு மீண்டும் வேலை கொடுப்பதற்கான உத்தர வாதம் உண்டா? 10 ஏ (1) என்றவிதியின்கீழ் வேலை செய்தவர் களாக இருந்தாலும், சாதாரணத் தொழிலாளர்களையெல்லாம் ஆறு மாதம், ஒரு வருஷம் ஆனால் பர்மனென்ட் செய்யவேண்டுமென்று சொல்லும்போது, அவர்களையெல்லாம் நிரந்தரமாக்கி தகுதியான வேலைவாய்ப்பு கொடுக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழிலாளர்களுடைய பிரச்சினைக்கும், 10 ஏ (1) அப்பாயிண்ட்மெண்டுக்கும் சம்பந்தம் இல்லை. இந்தத் துறையிலே புதிய முறை புகுத்தப்பட்ட காரணத் தால் இரண்டு வகையான அரசாங்க ஊழியர்கள் பாதிக்கப்படு கிறார்கள். நிரந்தரமாக இருக்கிறவர்கள் அத்தனைபேரும் அரசாங் கத்தின் வேறு துறைகளிலே எங்கெங்கு வேலை இருக்கிறதோ அவைகளுக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று உத்தரவு பிறப் பித்திருக்கிறோம். அதுபோல் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். இன்னொரு முறை. ஒவ்வொரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசிலும் எப்போது வேலை இருக்கிறதோ அப்போது சில பேர் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். அவர்கள் தொழிலாளர்களைப் போல் தொடர்ந்து வேலை செய்கிறவர்கள் அல்ல. ஒரு மாதம், இரண்டு மாதம் என்று அப்போதைக்கப்போது வேலை இருக்கும்போது மட்டும் வேலை செய்கிறவர்கள். அவர்களுக்கும் எந்த வகையில் வேலை கொடுக்கலாம் என்று அரசாங்கம் தொடர்ந்து பரிசீலனை செய்து வருகிறது.





THIRU K. VINAYAKAM: May I know what the distinct advantage is which the Government envisages by this change? Is the Government aware of the fact that procurement of stamp paper itself is very difficult nowadays and on the top of it the person who wants to register will have to make a separate copy, have it typed, and give for registration? Have the Government abolished the practice of taking photostat copies of documents that was in vogue?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** புதிய முறையினால் எளிதாக பத்திரங்களைப் பதிவு செய்து மக்கள் பயன் அடைவார்கள் என்பது ஒரு கருத்து. இரண்டாவது, அரசாங்கத்திற்கு நிர்வாகச் செலவு குறைகிறது. இந்த இரண்டு கருத்துக்களின் அடிப்படையில் புதிய முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஸ்டாம்ப் கிடைக்கவில்லை என்பதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. அது இந்திய சர்க்கார் தரவேண்டியது. அது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தி உணவுத் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பித்தி ருக்கிறார்கள். ஸ்டாம்ப் கிடைக்க வில்லையானால் சாதாரண தாளில் பத்திரத்தை எழுதி சர்டிபை பண்ணிக்கொண்டாலும் அது இந்தியன் ஸ்டாம்ப் ஆக்ட் படி செல்லுபடியாகும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**திரு. ரா. ரா. முனுசாமி :** பத்திர ஸ்டாம்புகள் வெளியே ஏஜெண்டுகளால் விற்கப்படுவதால் இப்போது கிடைக்காது 100 ரூபாய்க்கு 50 ரூபாய் மேற்கொண்டு கொடுத்தால்தான் பத்திரம் கொடுக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட நிலையை மாற்ற புதிய அரசு பத்திரப் பதிவு ஆபீசிலேயே பத்திரங்கள் வழங்க ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது மிகைப்படுத்திச் சொல்லும் குற்றச்சாட்டு ஆகும். அதைத் தவிர்க்கப் போடப் பட்ட புதிய உத்தரவைப் பற்றித் தெரிவித்தேன். கனம் அங்கத் தினர் கூறியது போல் ஏதேனும் நடந்தால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

DR. H. V. HANDE : Why was this new method of registration introduced? Was it because the Government felt that they could effect economy in expenditure in different departments? What is the number of employees who will be thrown out of employment on account of this new method? Was the unemployment problem created as a result of this change accidental or intentional?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** புதிய முறை புகுத்தப் பட்ட காரணத்தால் என்ன பயன் என்று ஏற்கனவே விளக்கியிருக் கிறேன். இன்னும் பல காரணங்களை மானியக் கோரிக்கை விவா தத்தின்போது சொல்லி இருக்கிறேன். இதன் காரணமாக வேலை இல்லாமல் செய்யப்பட்டுவிட்டது என்ற குற்றச்சாட்டு தவறு. 400-க்கு மேற்பட்டவர்கள், நிரந்தரமாக உள்ளவர்கள், நிச்சயமாக வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள். அவ்வாறு வேறு துறையிலே வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படும் வரையில் இந்தத்

துறையிலேயே வேலைக்கு இருப்பார்கள் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதனால் யாராவது பாதிக்கப் பட்டிருப்பதாக இருந்தால் தனியாக எழுதி அனுப்பலாம்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** இந்தத் திட்டத்தின் மூலமாக பத்திரங்களில் ஸ்டாண்டர்டு மை இல்லாத காரணத்தால் மங்கிப் போகக்கூடிய நிலைமை ஏற்படும் என்று பயப்படுகிறார்கள். அதனாலே கொஞ்சம் நாள் ஆகிவிட்டால் நகல் கிடைப்பதே அரிதாகி விடுமோ என்ற கவலை இருப்பதால் அரசாங்கம் இதுபற்றி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த மை பற்றியெல்லாம் பரிசீலிக்கப்பட்டது. அப்போதைக்கப்போது என்னென்ன தேவை என்று அறிந்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

### கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், சைதாப்பேட்டை.

* 266 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கத்தின் பல ஊழல்களைப் பற்றி மதிப்பிற் குரிய கைத்தறி கூட்டுறவு உற்பத்தி விற்பனை இலாகா அமைச்சர் அவர்களுக்கு திரு. வி. கே. கோதண்டராமன், எம்.எல்.ஏ., அவர் கள் 1967-ம் ஆண்டு மார்ச் மார்ச் மாதம் கடைசி வாரத்தில் எழுதி அனுப்பியது சேர்ந்ததா?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இது விஷயம் மாநில கைத்தறி நெறியாளரின் விசார ணையில் உள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்தக் குற்றச்சாட்டு நீண்ட நெடுங்காலமாகவே இருந்து வரக்கூடிய மிகப் பெரிய குற்றச் சாட்டு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இது விஷயத் தில் துரித நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினர் அவர்கள் கொடுத்த குற்றச்சாட்டின் மீது உடனடியாக நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று கைத்தறி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அதன் பேரில் சொசைடியில் பல ஊழல்கள் இருக்கின்றன, கட்டடங்கள் கட்டியதில் ஊழல்கள் நடைபெற் றிருக்கின்றன என்பதெல்லாம் ஆராயப்பட்டு பின்னர் 'ஏன் அந்த சொசைடியைக் கலைக்கக்கூடாது ?' என்று கேட்டு 18—4—1967-ல் நோட்டீஸ் அனுப்பப்பட்டு சொசைடியைச் சேர்ந்த குழுவினர் பதிலுரை அனுப்பியிருக்கிறார்கள். இயக்குநரும், பதிவாளரும் கலந்து இதிலே நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியிலே ஈடு பட்டிருக்கிறார்கள்.





DR. H. V. HANDE : Is it a fact that the orders were passed a few months ago and still they have not at all been implemented? Is the Government aware of the long gap between the passing and the implementation of the order?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நோட்டீஸ் முதலில் கொடுக்கப்பட்டது; அதையொட்டி சொசைடியின் பதிலும் வரப் பெற்றிருக்கிறது ; பதிலையொட்டி எடுக்கவேண்டிய நடவடிக்கை யைப் பற்றி இயக்குநரும், பதிவாளரும் ஆராய்ந்து கொண்டிருக் கிறார்கள். விரைவில் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

### சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் கம்பெனி, அரக்கோணம்

* 267 வினா—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மதிப்பிற்குரிய கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா : முற்பகல் 10-30

(அ) அரக்கோணத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் கம்பெனிக்கு (Southern Asbestos Company 1966) 1960-ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கத்தாரால் கடன் வழங்கப்பட் டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு தொகை ?

(உ) அத்தொகை எத்தனை வருட தவணை முறையில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) அரக்கோணத்தில் உள்ள சதர்ன் ஆஸ்பெஸ்டாஸ் கம்பெனிக்கு சென்னை தொழில் முதலீடு கார்ப்பரேஷன் ரூ. 25 லட்சம் கடனாகக் கொடுத்திருக்கிறது.

(உ) அக்கடன் தொகை எட்டு ஆண்டு தவணையில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** 25 லட்சம் ரூபாய் கடனாகக் கொடுக் கப்பட்டது என்று சொன்னார்கள். அந்தக் கம்பனியின் மூலதனம் எவ்வளவு என்று அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** அந்தக் கடன் இந்தப் புது அரசு பதவியேற்ற பின் கொடுத்ததா ? அல்லது அதற்கு முன்பு கொடுத்ததா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 12—7—1965-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

[1967 ஜுலை 11

## சிவகாசியில் அரிசி வியாபாரிகள் கடையடைப்பு

* 268 வினா—திரு. எம். பூபதி: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1967 மார்ச் 15-ம் தேதி சிவகாசி நகரில் 79 மூட்டை பதுக்கல் அரிசி கொண்டு சென்ற லாரியை, சிவகாசி தாசில்தார் தடுத்து நிறுத்தி அரிசி மூட்டைகளை ரேஷன் கடை மூலம் விநியோகம் செய்ததால் சிவகாசி நகரிலுள்ள அனுமதி பெற்ற வியாபாரிகள் ஒருமுகமாக பொது மக்களுக்கு அரிசி விற்பதை நிறுத்தி கடைகளை அடைத்துவிட்டது குறித்து மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களுக்கும் உணவு அமைச்சர் அவர்களுக்கும் தந்திகளும், மகஜர்களும் வந்தனவா ?

(இ) ஆம் எனில், அவைகள் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

## *Hospital for Tiruttani*

* 269 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to build a Government Hospital in Tiruttani, Chingleput district; and

(*b*) if so, when it would materialise?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) திருத்தணியில் அரசின் புதிய மருத்துவ மனைக்கான கட்டடங்கள் கட்டும் வேலை, தேவையான நிலங்கள் மருத்துவத் துறையால் எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் மேற்கொள்ளப்படும்.

THIRU K. VINAYAKAM: Sir, may I know what is the estimate of this building and where is it located and when it would be started?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The estimate of the building is Rs. 6.89 lakhs. The Government are taking steps to acquire lands at Amirthapuram village and it will be implemented soon.

## *Underground drainage for Chingleput*

* 270 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal for provision of underground drainage system to Chingleput Municipality; and

(*b*) if so, the financial implications of that scheme?



1967 ஜுலை 11

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) தற்போது செங்கல்பட்டு நகராட்சியில் புதைவடிகால் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM: Sir, may I know whether any request was made by the Chingleput Municipality regarding the underground drainage system, what is the grant which they wanted from the Government and whether the Government have decided to oblige them with that grant?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: I have no information about it.

## "அரவட்லா" மலைமீது சாலை அமைத்தல்

* 271 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குடியாத்தம் தாலுக்காவிலுள்ள "அரவட்லா" மலைமீதுள்ள கிராமங்களுக்கு செல்ல ரோடு போடும் விஷயம் தற்போது என்ன நிலையிலுள்ளது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பஞ்சாயத்து நிறுவனம் இவ்வேலையை நிதி நிலைமைக்கேற்றபடி பகுதி பகுதியாக மேற்கொள்ளும். இவ்வருடம் ஒரு பகுதியில் வேலை நடக்கும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இது பேரணாம்பட்டு தொகுதியைச் சேர்ந்த பிரதேசம். அந்த மலையில் நாலைந்து கிராமங்கள் உள்ளன. இன்றும் அந்த மலையில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான உணவாக இருந்தாலும் சரி அல்லது எதுவாகயிருந்தாலும்சரி மலைக்கு மேலே கொண்டு போகவும், கீழே கொண்டு வரவும் உள்ள ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களை கழுதைகளின் மேல்தான் எடுத்துச் செல்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? பாரஸ்ட் கண்ட்ராக்டர்ஸ், கண்ட்ராக்ட் எடுப்பவர்கள் சில ரோடுகளை ஃபார்ம் செய்திருக்கிறார்கள், விறகு போன்றவைகளைக் கொண்டு செல்வதற்கு. ஆகவே அந்த ரோடுகளை செப்பனிட்டு நல்ல ரோடுகளாகப் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அந்தப் பாதையின் நீளம் ஆறு மைல் தூரம். கழுதைகளின் மேல் ஏற்றிச் செல்வது பற்றி விவரங்கள் இல்லை. நிதிநிலைமை இடம் கொடுக்கிற வகையில் முயற்சி எடுக்கப்படும். நிதிநிலைமை கட்டுப்பாடு காரணமாக பகுதி பகுதியாக எடுத்துக் கொண்டு நடைமுறைப்படுத்தப் படுகிறது.

[1967 ஜூலை 11

திரு. வி. கே. கோதண்டராமன் : அந்தக் கிராமங்களுக்குச் செல்லும் பாதை காட்டு இலாகா சம்பந்தப்பட்டதாக இருக்கிற காரணத்தினுல் கனம் காட்டு இலாகா அமைச்சர் அவர்களை வற்புறுத்தி அந்த ரோடைப்போடும்படி கனம் அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டு அதற்கான ஏற்பாட்டைச் செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி** : இது காட்டு இலாகாவிலிருந்து பஞ்சாயத்து ஊராட்சி ஒன்றிப்புக்கு 1963 ல் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அப்படி பெற்றுக்கொண்ட பிறகு மீண்டும் அவர்களை வற்புறுத்துவது இயலாத ஒன்றுக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு :—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

## 2. உரிமைப் பிரச்சினைகள்.

### (அ) எதிர்க்கட்சித் தலைவர் 'நவசக்தி' நாளிதழுக்கு அளித்த அறிக்கை.

MR. SPEAKER: The hon. Member, Dr. Hande raised a motion of privilege against the hon. the Leader of the Opposition for having given a statement to a daily paper known as 'Navasakthi'. I promised to give my ruling on that subject to-day. I mentioned that, while giving my ruling, I would also take into account the further statement made on the floor of the House by the hon. the Leader of the Oppositon. The hon. the Leader of the Opposition said on the 7th—

'நான் சொன்னதெல்லாம் முதலமைச்சர் பேசினதிலே எந்தத் தவறு என்றும் நான் சொல்லவில்லை' . . . (பத்திரிகைச் செய்திகள் விட்டுவிட்டு வந்துகொண்டிருக்கின்றன.)'

In view of the statement made by the hon. the Leader of the Opposition, I have to see whether there still exists any ground for a privilege motion against the hon. the Leader of the Opposition. I have already stated several times in this House that when an hon. Member makes a statement in this House that he did or did not make a statement outside the House, what he stated on the floor of the House should be taken as final; that applies to the hon. the Leader of the Opposition. Therefore, I have to assume that what the hon. the Leader of the Opposition stated on the floor of the House is final, and could not be questioned either by this House or any committee of this House. That being so, I have to hold that no *prima facie* case exists against the hon. the Leader of the Opposition.



1967 ஜூலை 11]

கோதுமை மிக எளிதில் கிடைக்கும்போது, வட ஆர்க்காடு மாவட்டத்தில் மாதம் ஒன்றுக்கு 700 டன் கோதுமை செலவாகும். இதற்கு எதிராக, 1967 மார்ச், ஏப்ரல், மே மாதங்கள் ஒவ்வொன்றிலும் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு 50 டன் கோதுமையே ஒதுக்கப்பட்டது. ஜூன் மாதத்தில் இது 250 டன்னாக உயர்த்தப்பட்டது. எனவே, இவ்வாண்டில் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட கோதுமை அளவு அதன் தேவைக்கு மிகக் குறைந்ததாகும். மற்றும், வட ஆர்க்காடு மாவட்டத்தின் பற்றாக்குறைப் பகுதிகளான குடியாத்தம், வேலூர் தாலுக்காக்களில் குடும்பக்கார்டு முறை செயலில் உள்ளது. இத்தாலுக்காக்களுக்கு உபரி தாலுக்காக்களிலிருந்து அப்போது அரிசி போதிய அளவிற்கு வராததால் இங்கே வழங்கப்படும் அரிசியுடன் கோதுமையும் சேர்த்து வழங்க வேண்டியிருந்தது. எனவே, இந்த மாதங்களில் அரக்கோணம் தாலுக்காவிற்கு கோதுமை எதுவும் வழங்கப்பட முடியவில்லை. எனினும், மே மாதத்தில் வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு வழங்கல், விற்பனைச் சங்கம் மூலம் அரக்கோணம் தாலுக்காவிற்கு மூன்று டன் கோதுமை அனுப்பப்பட்டது. கோதுமை மூட்டைகள், வேலூரில் உள்ள மேற்சொன்ன சங்கத்தால் தரப்படுத்தப்பட்ட பின்னர் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதற்காக அதன் அரக்கோணம் கிளைக்கு அனுப்பப்பட வேண்டும். எனவே, வேலூரிலிருந்து அரக்கோணத்திற்குக் கோதுமை அனுப்பப்படுவதில் சற்றுக் காலதாமதம் ஏற்பட்டது. ஜூன் மாதத்தில் இந்திய அரசு இம்மாநிலத்திற்கு அதிக அளவு கோதுமை ஒதுக்கியதால், ஜூன் மாதத்தில் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கப்படும் கோதுமைப் பங்கீட்டளவு 250 டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது. அரக்கோணம் தாலுகாவிற்கு ஒதுக்கப்



1967 ஜூலை 11] [திரு. கே. ஏ. மதியழகன்]

படுகிற கோதுமையின் அளவும் உயரும். இதன் மூலம் கோதுமையை இன்றியமையாது பயன்படுத்துவோர் உட்பட பொது மக்களுக்கு ஓரளவிற்குப் பரிகாரம் கிட்டுமென எதிர்பார்க்கிறோம். இதுதவிர, கோதுமையை உணவாகக் கொள்ள வேண்டியிருக்கும் பிணியாளர்களுக்கு மிகக் குறைந்த அளவில் உள்ள மாவட்டச் சேமிப்பகத்திலிருந்து வேண்டுகோளின் பேரில், தனி அனுமதிச் சீட்டுகளை வழங்கி கோதுமை வழங்கப்பட்டு வருகிறது.

வட ஆர்க்காடு மாவட்டத்தின் சர்க்கரைத் தேவை மாதம் 1,200 டன் ஆக இருக்க, அதனை 605 டன் அளவிற்குக் குறைத்ததால், 1967 ஜூன் மாதத்தில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் சர்க்கரைப் பற்றாக்குறை ஏற்பட்டது. இந்திய அரசு இம்மாநிலத்திற்கு வழங்கும் சர்க்கரையின் அளவைக் குறைத்ததனால், மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படும் சர்க்கரையின் அளவினை விகிதாசாரப்படி குறைக்க வேண்டிவந்தது. இதுவே வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கவேண்டிய சர்க்கரையின் அளவைக் குறைத்ததற்குக் காரணமாகும்.

## 5. அரசினர் மசோதாக்கள்.

### (அ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு (மாற்றலாகியுள்ள பகுதி) ஜென்மிக்கரம் செலுத்தல் நீக்க (திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967-ஆம் ஆண்டு, தமிழ்நாடு (மாற்றலாகியுள்ள பகுதி) ஜென்மிக்கரம் செலுத்தல் நீக்க (திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த மசோதாவினை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம்மசோதா அறிமுகம் செய்யப்பட்டது.

## 6. அறிவிப்புகள்.

### (அ) 1967-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1967-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதாவை இப்பேரவையில் கொண்டுவருவதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் மேன்மைமிகு கவர்னரவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று அறிவிக்கிறேன்.

(5) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(இ) 1967-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1967-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த மசோதாவினை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம்மசோதா அறிமுகம் செய்யப்பட்டது.

7. 1967-68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து நிதிக் கோரிக்கைகள். இன்றைக்கு மூன்று கோரிக்கைகள் உள்ளன. முதல் கோரிக்கை, அரசாங்க வணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு பற்றி எண் 46, ஏறத்தாழ ஒரு மணி வரையில் எடுத்துக் கொள்ளலாம். அதற்குப் பின்பு ஒரு கோரிக்கை எண் 47, மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் பற்றி, 1-30 வரையில்; மாலையில் தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற பகுதி, கோரிக்கை எண் 24 எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள், அவருடைய கோரிக்கையைக் கொண்டு வருவார்கள்.

**கோரிக்கை எண் XLVI—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.**

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன் :

"கோரிக்கை எண் XLVI—அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 85,89,07'100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்.

**THIRU M. WILLIAM :** To discuss about the procurement policy, I move the cut motion standing in my name, namely—

'That the allotment of Rs. 85,89,07,100 under Demand No. XLVI—Capital Outlay on Schemes of Government Trading —be reduced by Rs. 100.'



* **மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தினுடைய விலை மதிக்க முடியாத நேரத்தை நான் அதிகம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. எனினும், இந்த அரசின் மிக மையமாகக் கருதப்படுகிற உணவுக் கொள்கையின் அடிப்படையையும், அது மேற்கொண்டுள்ள சாதனைகளையும் இந்த மாமன்றத்தின் கருத்துக்குக் கொண்டுவரவேண்டிய இன்றிய மையாக் கடமையைக் கருதி, மேலோட்டமாக இந்த மானியக் கோரிக்கையின்மீதுள்ள சில விவரங்களை இங்கே நான் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

இந்த அமைச்சரவை பதவியேற்றபோது சென்னை மாநகரின் இரண்டு நாள் தேவைக்கான அரிசிகூட இருப்பில் இல்லை. அதே மாதிரி மாநில முழுவதிலும் அப்போதிருந்த இருப்பு 50 நாட்களுக்குக்கூட போதாது. 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 8-ம் தேதி அன்று இருந்த அரிசி இருப்பு அளவும் அதேகால அளவில் முந்திய ஆண்டின் இருப்பு நிலையும் வருமாறு :—

1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 8-ம் தேதி யன்று உள்ளபடி இருப்பு நிலைமை—1,05,597 டன் அரிசி.

1966-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 8-ம் தேதி யன்று உள்ளபடி இருப்பு நிலைமை—2,38,105 டன் அரிசி.

1965, 1966-ம் ஆண்டுகளிலிருந்ததுபோல கோதுமை போன்ற உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதன்மூலமும் வெளியிலிருந்து உதவி வருவதற்குக்கூட வழியில்லையென்று தெளிவாகத் தெரிந்தது.

சம்பா பயிர்க்காலத்தில் நெல் கொள்முதல் வேலையின் தொடக்கம் நன்றாக இல்லை. சாதாரணமாக கொள்முதல் வேலைக்கு மிகவும் சாதகமாகவுள்ள ஜனவரி, பிப்ரவரி திங்கள்களில் கொள் முதல் மிகவும் குறைந்துவிட்டது. 1966-67-ம் ஆண்டுகளில் செய்யப் பட்ட கொள்முதல் அளவு குறித்த புள்ளி விவரங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இது தெளிவாகத் தெரியவரும்.

| | 1966. | 1967. |
|---|---|---|
| | (அரிசி டன் கணக்கில்.) | |
| ஜனவரி | 1,02,228 | 41,599 |
| பிப்ரவரி | 1,95,072 | 1,06,549 |

இருப்பு குறைந்ததன் காரணம் இதுதான். தொடக்கத்தில் கொள் முதல் வேலைக்கு இடர்ப்பாடு ஏற்பட்டது.

ஆயினும், இச்சிக்கலுக்குத் தீர்வுகாண இந்த அரசு தயங்க வில்லை. உணவுப்பொருள் கட்டுப்பாடுகளை அறவே நீக்கவேண்டும் என்றும் தனிப்பட்ட மாநில மண்டலங்களை எடுத்து விடவேண்டு மென்றும் பெரும்பான்மையோர் கருத்து தெரிவித்தனர். ஆனால்,

* அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அமைச்சரின் உரை.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1967 ஜூலை 11

கட்டுப்பாடுகளை நீக்குவதற்குமுன் கணிசமான அளவுக்கு அரசிடமுள்ள இருப்புகளை அதிகரித்துக்கொள்ளவேண்டியது இன்றியமையாதது என்பதை மறந்து விடுவதற்கில்லை. தமிழகத்தின் எல்லையிலுள்ள கேரள மாநிலம் மிகவும் பற்றாக்குறை உள்ள மாநிலம் ஆகும். எனவே, வட்டார மண்டலம் அமைப்பது பற்றி சிந்திக்கக்கூட முடியாத நிலை இருந்தது. இருப்புகள் பற்றிய நிலவரங்கள், கொள்முதலை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் நமது பொறுப்புகளின் அளவு ஆகியவற்றைப் பற்றி நேரடியாகத் தெரிந்து கொள்வதற்காக மாவட்டக் கலெக்டர்கள் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. உணவுப் பொருள் குறித்த கட்டுப்பாடு முழுவதையும் எடுத்துவிடுவதோ, வட்டார மண்டல முறையைக் கொண்டுவருவதோ அவசரமும் அபாயமும் நிறைந்த சோதனையாகும் என்றும் இருப்புகளை நன்கு அதிகரிக்கும் வகையில் கொள்முதல் வேலையை முழுமூரமாக்கி அதன் பின்னர் படிப்படியாகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது குறித்து சிந்திப்பது சாலச் சிறந்ததாகும் என்றும் இந்த மாநாட்டு விவாதங்கள் மூலம் தெரிய வந்தது.

மாநாட்டின் முடிவில் தமிழக முதலமைச்சர் மும்முனைத் திட்டமொன்றை விளக்கினார்—

(1) பெரு நிலக்கிழார்களிடமிருந்து அதாவது, 10 ஏக்கரும் அதற்கு மேற்பட்டும் நிலங்களை வைத்திருக்கும் நிலக்கிழார்கள் விற்பனைக்காக வைத்துள்ள உபரி இருப்பு முழுவதையும் கொள்முதல் செய்யும் அளவில் கொள்முதல் வேலை மும்முரமாக்கப்படவேண்டும். ஒரு ஏக்கரும் அதற்குக் குறைவாகவும் நிலம் வைத்துள்ள குடியானவர்களுக்கு கொள்முதலினின்றும் முழுவதும் விலக்கு அளிக்கப்பட வேண்டும். இடையிலுள்ள பிற குடியானவர்களிடமிருந்து இது குறித்து முடிவு செய்யப்பட்டுள்ள அளவு கொள் முதல் செய்யப்படவேண்டும்.

(2) பதுக்கல் வேலையும், கடத்தல் வேலையும் அறவே ஒழிக்கப்பட வேண்டும். இதற்காக அவசியமானால் அரசு இன்னும் அதிகமான அதிகாரங்களை மேற்கொள்ளும்.

(3) உணவுப்பொருள் உற்பத்தியில் தன்னிறைவு நிலை ஏற்பட்டுவிட்டால் மட்டும் போதும் என்ற வகையில் அல்லாது எவ்வளவு குறுகிய காலத்தில் முடியுமோ அவ்வளவு குறுகிய காலத்தில கணிசமான அளவுக்கு உபரி இருப்பு இருக்கும் வகையில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க மும்முரமாக முயற்சி செய்யப்படவேண்டும்.

இவ்வாறாக, ஏழை மக்களுக்குத் தங்களது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்றால் கொள்முதல் வேலை தொடர்ந்து நிறைவேற்றப்பட வேண்டுமென்று இவ்வேலையில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும்—உற்பத்தியாளருக்கும், உணவுப்பொருள் வழங்கு துறை அதிகாரிகளுக்கும்—அரசு திட்டவட்டமாக அறிவித்தது.



1967 ஜூலை 11] [திரு. கே. ஏ. மதியழகன்]

அதே சமயத்தில் பதுக்கியுள்ள இருப்புகளை வெளிக்கொண்டு வருவதன் மூலமும் பிற மாநிலங்களுக்கு அரிசி எடுத்துச் செல்லப்படாத வகையில் இம்மாநில எல்லைகளை மூடுவதன் மூலமும் வெளிச் சந்தையில மக்கள் உபயோகத்திற்காக அதிக அளவு உணவுப் பொருள்கள் கிடைக்கச் செய்ய திட்டவட்டமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

THIRU K. VINAYAKAM: On a point of clarification, Sir, this note having been printed and circulated and also having been assimilated by the Members, I think it will save the time of the House if the Hon. Minister does not continue to read it further.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, உணவுப் பொருள்கள் வழங்குவது குறித்து இந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த இந்தக் கொள்கைக் குறிப்பு அச்சடிக்கப்பட்டுக் கனம் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலும், அதையே என்னுடைய இந்த மானியக் கோரிக்கையைக் குறித்த முன்னுரையாக நான் படிக்க விரும்பியது, அது இந்த சட்டப் பேரவையின் அதிகார பூர்வமான பதிவேட்டில் பதிவாக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான். இந்த அரசாங்கத்தினுடைய உணவுக் கொள்கையைப்பற்றியும், 120 நாள் சாதனைகளைக் குறித்தும் இதிலே நான் விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறேன். கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி, இதைப் படிப்பதற்குச் சற்று நேரம் ஆகக்கூடும் ஆதலாலும், இந்த மன்றத்தின் விலைமதிக்க முடியாத நேரத்தை அதிகம் எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற காரணத்திற்காகவும், இந்த என்னுடைய குறிப்பு முழுவதையுமே மன்ற நடவடிக்கைகளில் வெளியிடத்தக்க ஒன்றாகக் கருதிக்கொள்ளவேண்டும் என்று, கனம் சபாநாயகர் அவர்களே, தங்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தக் குறிப்பில் அடங்கியுள்ள விவரங்களைக் கனம் உறுப்பினர்கள் அறிந்துகொள்ளுவது இந்த விவாதத்தை மேலும் பயனுள்ளதாக ஆக்கும் என்ற காரணத்தாலும் இதை நான் படிக்க விரும்பினேன். ஆகவே, இந்தக் குறிப்பின் பிற பகுதிகளும் அதிகாரபூர்வமான வெளியீட்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டுவிட்டதாக நான் கருதுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. விநாயகம் அவர்கள் சொன்னபடி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய குறிப்பு முழுவதையுமே படித்துவிட்டதாக நாம் கருதிவிடுவோம். ஆனால், பின்னால் ஒரு முறை அமைச்சர் அவர்கள் இதிலே இருக்கிறது என்று சுட்டிக்காட்ட வேண்டிய நிலைமை இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சென்ற ஆண்டில் சிறு தானியங்கள் குறித்து கொள்முதல் வேலை மேற்கொள்ளப்பட்டிருப்பினும் இந்த ஆண்டில் சிறு தானியங்களைக் கொள்முதல்

[திரு. கே. ஏ. மதியழகன்] [1967 ஜூலை 11

செய்யும் வேலை மேற்கொள்ளப்படவில்லை. சிறு தானியங்களை இம்மாநிலத்திற்குள் எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம் என்று அனுமதிக்கப்பட்டது. இதன் பலனாக சிறு தானியங்களின் வெளிச் சந்தை விலை இறங்கி வருகிறது.

மாவட்டக் கலெக்டர்கள் மாநாட்டை அடுத்து, நெல் கொள்முதல் வேலையை முழுமுரமாக்குமாறும் இதற்கான நிர்வாக அமைப்பு சுறுசுறுப்பாகச் செயல்படும் வகையில் அதனை முடுக்கி விடுமாறும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. மாநில எல்லைப் பகுதிகளில் அரிசி வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல முடியாத வகையில் காப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பெருநிலக் கிழார்கள் பதுக்கிவைத்துள்ள இருப்புக்களைக் கண்டுபிடித்து தமிழக 1966-ம் ஆண்டு நெல், அரிசி (இருப்பு அறிவித்தல்) குறித்து ஆணையின் விதித்துறைகள் கண்டிப்பாகச் செயல்படுத்தப்படும் வகையில் நடவடிக்கைகள் முழுமுரமாக மேற்கொள்ளப்பட்டன. அதிகாரிகளின் தலையீடு இன்றி பொது மக்கள் தாமாக முன்வந்து தங்களிடமுள்ள இருப்புகளை அறிவிக்க அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் அவர்கள் தங்களிடமுள்ள இருப்புகளை பதினைந்து நாட்களுக்குள் அறிவிக்க வேண்டுமென முதலமைச்சர் வேண்டுகோள் ஒன்றை விடுத்தார். மேலும், சென்னை மாநகரை வடசென்னை, தென்சென்னை என இரு கூறுக்குவதன் மூலமும், ஒவ்வொரு பிரிவுக்கும் தனித் தனியாக துணை ஆணையரை நியமிப்பதன் மூலமும், சென்னைமாநகரில் செயலில் உள்ள சட்டப்படிக்கான பங்கீட்டு முறை மேற்கொண்டும் திறம்படச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பதுக்கல் ஒழிப்பு வேலையில் வருவாய்த்துறை அதிகாரிகளுடனும் உணவுப் பொருள் வழங்கு துறை அதிகாரிகளுடனும் இணைந்து செயல்படும் வகையில் போலீஸ் கண்காணிப்புப் பிரிவு வேலை முழுமுரமாக்கப்பட்டது. இப்பிரிவின் துணையுடன் 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 6-ம் தேதி முதல் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ம் தேதி வரை 16,390.70 குவிண்டால் நெல், 5,473.57 குவிண்டால் அரிசி, 929.66 குவிண்டால் சிறு தானியங்கள், 41 குவின்டால் யூரியா உரம், 2,018 மூட்டைகள் பிற எருக்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன. இவற்றின் மொத்த மதிப்பு சுமார் ரூ. 17.57 லட்சம். இதே கால அளவில், தங்கள் இருப்புக்களை அரசுக்குக் கொடுக்க விரும்பாத குடியானவர்களிடமிருந்து இப்பிரிவின் துணைக்கொண்டு உணவு வழங்கு துறை அதிகாரிகள் சுமார் ரூ. 56.72 லட்ச மதிப்புள்ள 107,395.79 குவின்டால் நெல், 6,771.65 குவின்டால் அரிசி, 157.25 குவின்டால் சிறு தானியங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றியது.

சென்னை மாநிலத்தின் எல்லைகளில் உள்ள சோதனை சாவடிகள் மேற்கொண்டும் திறம்படச் செயல்படும்படிச் செய்யவும், அரிசி, பிற இன்றியமையாப் பொருள்கள் விலை ஏறுவண்ணம் விழிப்புடன் நிலைமையை கவனித்து வருமாறும் விலையேற்றத்தைத்



1967 ஜூலை 11] [திரு. கே. ஏ. மதியழகன்]

தடுக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

குடும்ப உபயோகத்திற்காக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அரிசி எடுத்துச் செல்ல விரும்பும் மக்களுக்கு தொல்லை ஏற்படுவதைத் தவிர்க்க. தனிப்பட்ட ஒருவர் தமிழகத்திற்குள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அனுமதிச் சீட்டின்றி எடுத்துச் செல்லக்கூடிய அதிக அளவு அரிசியின் அளவு ஐந்து பட்டணம் படியிலிருந்து பத்துப் பட்டணம் படியாக அதிகரிக்கப் பட்டுள்ளது. இந்த விதிமுறைகள் சரிவர அனுசரிக்கும்படிப் பார்த்துக் கொள்ள எல்லா மாவட்டக் கலெக்டர்களுக்கும் திட்டவட்டமான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. உணவு தானியங்களை வழக்கமாக கள்ளக்கடத்தல் செய்பவர்கள் மிகுதியான அளவுக்கு உணவு தானியங்கள் எடுத்துச் செல்வதைத் தடுப்பதும், சொந்த உபயோகத்திற்காக உணவு தானியங்களை எடுத்துச் செல்வோருக்குத்தான் இந்தச் சலுகை வழங்கப்பட வேண்டும் என்பதும் அரசின் நோக்கமாகும்.

சென்னை மாநகருக்குள் சொந்த உபயோகத்திற்காக அரிசியை கொண்டுவர செயலில் இருந்த நடைமுறைப்படி, சம்பந்தப்பட்ட வட்டத்தின் பங்கீடு அதிகாரியிடமிருந்து ஒப்புச்சான்றிதழ் ஒன்றை முதலில் பெற வேண்டும். பின்னர், எந்த தாலூகாவிலிருந்து அரிசியைக் கொண்டு வர விரும்புகிறாரோ அந்தத் தாலூகாவின் தாசில்தாருக்கு அனுமதிச் சீட்டுக்கென விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். அந்த வேண்டுகோள்களைக் குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்வதில் தாலூகா அலுவலகங்கள் தாமதம் செய்கின்றன என்று புகார்கள் வந்தன. அந்த நடைமுறையை அரசினர் இப்போது எளிதாக்கியுள்ளனர். தற்போது செயலில் உள்ள முறைப்படி, விண்ணப்பதாரர் சென்னை மாநகரில் உள்ள உணவுப் பங்கீடு துணை ஆணையருக்கு (பங்கீடு முறை) நிர்ணயப் படிவத்தில் தம்முடைய பங்கீட்டு அட்டையுடன் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். அதன்மேல் நேரடியாக அனுமதிச் சீட்டு வழங்கப்படும். அது வழங்கப்பட்ட ஒரு வாரத்திற்குப் பிறகு செயலுக்கு வரும். அந்த ஒருவார இடைக்காலத்தில், அவசியமானால் அது குறித்து, அதிகாரபூர்வமாக பரிசீலனைகள் செய்யப்படும். அனுமதிச் சீட்டு 30 நாட்களுக்குச் செயலிலிருக்கும்.

தற்போதுள்ள கட்டுப்பாடுகள் மிகுந்த இடர்பாடுகளை உண்டாக்கக் கூடியவை அல்ல என்றும், அவை எந்த முக்கியக் காரியத்திற்காகச் செயல்படுத்தப்படுகின்றனவோ அது நிறைவேறியவுடன் தளர்த்தப்படும் என்று உறுதி கூற அரசு விழைகிறது. கொள்முதல் குறிக்கோள் அளவு முழுவதும் அடையப்பட்ட அல்லது கணிசமான அளவுக்குக் கொள்முதல் செய்யப்பட்ட மாவட்டங்களில் மாவட்டத்திற்குள் அரிசியைக் கொண்டு

[திரு. கே. ஏ. மதியழகன்] [1967 ஜூலை 11

செல்வதற்காக இருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. எடுத்துக் காட்டாக கோவை, சேலம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை ஆகிய மாவட்டங்களில் அக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. மற்ற மாவட்டங்களிலும் கொள்முதலின் குறிக்கோள் அளவை எய்திய வுடன் அத்தடைகள் நீக்கப்படும். தாலுகாக்களுக்கிடையில் அரிசி யைக்கொண்டு செல்வதற்கான தடை நீக்கப் பட்டதனால் இம்மா வட்டங்களில் அரிசியின் விலை ஓரளவு குறைந்துள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது. அடுத்தடுத்துள்ள பற்றுக்குறை மாவட்டங் களுக்கிடையில் அரிசியைக்கொண்டு செல்வதற்கான தடையையும் அரசு நீக்கலாம். அப்போதுதான் மிகுதியான பகுதிகளுக்குள் அரிசி நடமாட்டம் ஏற்பட வசதியாய் இருக்கும்.

விருந்தினர்க் கட்டுப்பாட்டு ஆணையின் கீழ், சாதாரண விருந்துகளில் 25 பேர்களுக்கு மேற்பட்டும், திருமணங்கள், ஈமக் கடனகள் ஆகிய நிகழ்ச்சிகளில் 50 பேருக்கு மேற்பட்டும் தானிய உணவு வழங்குவது குறித்த கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டு மென்று பல முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளன. அரிசி, அரிசிப் பண்டங்களிலிருந்து தயாரிக்கப் படுபவை நீங்கலாக ஏனைய எல்லா தயாரிப்புகளும் தாராளமாக வழங்குவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்னும் முறையீடு செய்து கொள்ளப்பட்டது. எனவே, மேற்சொன்ன ஆணையைத் திருத்தி, மேலேகுறிப்பிட்டுள்ள நிகழ்ச் சிகளின் போது, அரிசிப் பண்டங்கள் அவற்றிலிருந்து செய்யப் பட்ட உணவுகள் ஆகியவை நீங்கலாக ஏனைய உணவு வகைகள் வழங்கப்படலாம் என்று அரசு அனுமதியளித்தது. மேலும், சாதாரண விருந்துகளில் 50 பேருக்கு உணவளிக்கவும் ஈமக்கடன் கள், திருமணங்கள் ஆகிய நிகழ்ச்சிகளின் போது 100 பேருக்கும் உணவு வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

திங்கட்கிழமைகளிலும் வியாழக்கிழமைகளிலும் மாலை ஐந்து மணிக்குப் பிறகு அரிசி உணவுகள் பரிமாறுவது தடை செய்யப்பட்டிருந்தது. தங்கள் இல்லங்களைவிட்டு தொலைவில் வாழ்ந்துவருபவர்களும் நகரங்களுக்கு வந்து தற்காலிகமாக தங்கு பவர்களும் சிற்றுண்டிச் சாலைகளையும் உணவகங்களையும் தங்கள் உணவுக்காக நம்பியிருக்க வேண்டியிருப்பதால், மேற்சொன்ன கட்டுப்பாட்டின் விளைவாக அவர்களுக்குப் பெருமளவு இடர்ப்பாடு ஏற்படுவதாக அறிவிக்கப்பட்டது. உணவக உரிமையாளர்களிட மிருந்தும் நகரப் பொது மக்களிடமிருந்தும் அது குறித்துப் பல முறையீடுகள் வந்தன. எனவே, இம்மாநிலத்தில் உள்ள உணவ கங்களில் திங்கட்கிழமைகளிலும், வியாழக்கிழமைகளிலும் மாலை 5 மணிக்குப் பிறகு உணவு வழங்குவதன்மீதிருந்த கட்டுப்பாடுகளை நீக்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

குடும்பப் பங்கீட்டு அட்டைகளின் அடிப்படையில் சட்ட பூர்வமான பங்கீட்டு முறையும் முறைப்படியற்ற பங்கீட்டு முறை யும் செயலில் உள்ள பகுதிகளில் ஏராளமான போலி பங்கீட்டு அட்டைகளும் குடும்பப் பங்கீட்டு அட்டைகளும் பயன்படுத்தப்



1967 ஜூலை 11] [திரு. கே. ஏ. மதியழகன்]

பட்டு வந்ததாக இந்த அரசின் நாட்டத்திற்குக் கொண்டு வரப் பட்டது. உணவுப் பங்கீட்டுத் துறையின் ஆய்வுப் பிரிவு புலன் விசாரணை செய்து போலிப் பங்கீட்டு அட்டைகள் பயன்படுத்தப் பட்டு வருவதைத் தடுக்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டது. போலிப் பங்கீட்டு அட்டைகள் பயன்படுத்தப் படுவதால் மான உணவு தானியங்கள் கள்ளச் சந்தைக்காரர்களிடமும், பதுக்கல் செய்வோரிடமும் சிக்குகின்றன. இம்மாநிலம் முழுவதும் இத்தகைய போலிப் பங்கீட்டு அட்டைகள் பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிய வந்துள்ளது, அதன் விளைவாக ஏராளமான போலிப் பங்கீட்டு அட்டைகள் கண்டு பிடிக்கப்பட்டு நீக்கப்பட்டன. சென்னை மாநகரில் மட்டும், 36,173 பங்கீடு அட்டைகள் பரிசோதிக்கப்பட்டு, 3,266 போலிப் பங்கீட்டு அட்டைகள் நீக்கப்பட்டன. நகரில் போலிப் பங்கீட்டு அட்டை களைக் கண்டுபிடித்து நீக்கும் வேலையை விரைவுபடுத்துவதற்காகக் கூடுதலான நேர்முகப் பணியாளர்களை நியமிக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் வாழ்க்கைச் செலவுப் புள்ளி விவரத்தை முடிவுசெய்வதற்கு உணவுத் தானியங்களே மிகவும் முக்கிய அடிப் படியாக உள்ளன என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். எனவே அரிசியின் விலையை இறக்கிவிட்டால் ஏனையப்பொருள்களின் விலைகளும் தானாகவே இறங்கிவிடும் என்று இந்த அரசு கருது கின்றது. ஆகவே, கொள்முதல் நடவடிக்கைகளை மும்முரப்படுத் திய பின்னர் ஒரு பட்டணம் படி அரிசியை ஒரு ரூபாய் விதத்தில் விற்பனை செய்ய அரசு முடிவு செய்துள்ளது. இந்த முடிவு, நாட்டத்துடன் ஆராய்ந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட பெரிய துணிச்சலான முடிவாகும். இந்த முடிவு பொதுமக்களால் பெரு மகிழ்ச்சியோடு வரவேற்கப்பட்டுள்ளது. தொடக்க நிலையில், 1967-ம் ஆண்டு மே மாதம் 15-ம் தேதி முதற்கொண்டு சென்னை மாநகரிலும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உணவுப் பங்கீட்டு முறை நடைமுறையில் உள்ள பகுதிகளிலும் மட்டும் முப்பத் தோறு லட்சம் மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள போதிலும் சட்டத்திற்குட்படாத உணவுப் பங்கீட்டு நடைமுறையில் உள்ள ஏனைய பகுதிகளிலும் இத்திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். இவ்வாறு செய்யப்படும்போது மொத்தம் 154 லட்சம் மக்கள் இந்தச் சலுகை யைப் பெறுவார்கள். இத்திட்டத்தைச் சென்னை மாநகரி லும் கோயம்புத்தூர். மாவட்டத்தில் சட்டப்படியான உணவுப் பங்கீடு நடைமுறையிலுள்ள பகுதிகளிலும் நிறைவேற்றுவதற்கு ஆண்டொன்றுக்குத் தோராயமாக ரூ. 3.31 கோடி அல்லது திங்கள் ஒன்றுக்கு ரூ. 27.6 லட்சம் அரசிற்குச் செலவாகும். இத்திட்டம் தற்போது முறைபாடற்ற உணவுப் பங்கீடு செயலில் உள்ள பகுதி களுக்கும் விரிவுபடுத்தப்பட்டால், ஆண்டிற்கு ரூ. 8.90 கோடி அல்லது திங்களுக்கு ரூ. 74.16 லட்சம் அளவில் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. இருப்பினும், நிகரமாக எவ்வளவு

செலவாகும் என்பது ஏனைய பகுதிகளிலும் எந்தத் தேதியிலிருந்து இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது என்பதைப் பொறுத்த தாகும்.

சலுகை விலையில் அரிசி விற்பனை செய்வது குறித்து அறிவிக்கப்பட்டதையொட்டி சற்று குறைந்த விலைகளில் தனியார் வாணிக நிலையங்களில் அரிசி மிகுந்த அளவில் கிடைக்கின்ற காரணத்தினால் வெளிச் சந்தைகளில் அரிசியின் விலை ஓரளவு குறைந்துள்ளது. ஒரு ஏக்கரும் ஒரு ஏக்கருக்கு குறைவாகவும் நிலம் வைத்துள்ள சில உழவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகையும் கண்காணிப்புப் பிரிவின் நடவடிக்கைகளும் இவ்வாறு விலை குறைவதற்கு உதவியாக இருந்தன. சட்டப்படியான உணவுப்பங்கீட்டு நடைமுறையில் உள்ள பகுதிகளில் குறைந்த விதங்களில் அரிசி வழங்கப்படுவதனால், அப் பகுதிகளுக்கு உயர்ந்த விலைகளில் அரிசியை விற்பனை செய்வதற்கான கவர்ச்சி நிலை அண்டை மாவட்டங்களில் மந்தப்பட்டு வருகிறது. இருப்பு நிலை குறித்து விழிப்போடு கவனித்து வந்ததாலும் உபரிப் பகுதி களிலிருந்து பற்றாக்குறைப் பகுதிகளுக்கு தக்க தருணத்தில் தானியத்தை அனுப்பி வைத்ததாலும் சம்பாப் பயிர் பருவத்தின் போது கொள்முதல் மந்தப்பட்டிருந்ததைப் பார்த்தால், கடந்த மூன்று மாதங்களில் மிகுந்த ஊக்கத்தோடும் முனைப்போடும் கொள்முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதென்றும், அரசின் உணவு வழங்கு ஆதாரங்களில் போதுமான அளவில் இருப்பு உள்ளதென்றும் மக்களிடையே கருத்து பரவியுள்ளது. இக்காரணத்தினாலும், முற்றிலும் தேவைப்படுகின்ற காலத்திற்கு மேல் கட்டுப்பாட்டை வைத்துக் கொண்டிருப்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல என்று அரசு அறிவித்துள்ளதாலும் இருப்புக்களை முடக்கி வைத்தால் இழப்பிற்குள்ளாக நேரிடும் என்னும் எண்ணம் வணிக சமூகத்தினரிடையே இயல்பாகவே ஏற்பட்டுள்ளது. பத்துப் படி அரிசியை எவ்விதத் தடையுமின்றி எடுத்துச் செல்ல லாம் என்று அனுமதியளித்துள்ளதன் மூலம் சொந்தப் பயனுக்கு அரிசி கொண்டு செல்வதற்குத் தாராளமாக அனுமதி வழங்கப்படு வதனால் பயன்கொள்வோர் தங்கள் தேவைகளுக்காக உள்ளூர்ச் சந்தையை மட்டுமே நம்பியிருக்கவேண்டிய நிலைமை குறைந்து விட்டது. ஆகவே இருப்புக்களை முடக்குவதனால் பெரிதும் ஆதாயம் ஏற்படாது என்று வணிகர்களுக்கு உணர்வு ஏற்பட் டுள்ளது. மாவட்டச் சோதனைச் சாவடிகளும் மாநிலச் சோதனைச் சாவடிகளும் செவ்வனே செயல்படும்வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதால் இம் மாநிலத்திற்குள் அரிசிப் புழக்கம் தாராளமாக நடைபெற்றுவருகிறது. இருப்பினும், தன்னல நோக்குடைய வணிகர்கள் வேண்டாத கட்டுப்பாடுகள் இருப்ப தாக பூச்சாண்டி காட்டி வருகின்றனர்.

அரிசி விலை குறைக்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏனைய பொருள்களின் விலைகளும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுவது ஒரு புறமிருக்க, மற்ற இன்றியமையாப் பொருள்களின் விலைகளைக்





குறைப்பதற்காக ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் அரசு யோசித்து வருகிறது. இதற்காக மற்ற இன்றிய மையாப் பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்காக மேற்கொள் ளப்படத்தக்க நடவடிக்கைகள் குறித்து நுணுக்கமாக ஆராய்ந்து அரசாங்கத்திற்கு அறிக்கை ஒன்றை அனுப்புமாறு வருவாய்த் துறைக் கழகத்தின் இரண்டாவது உறுப்பினரை அரசு கேட்டுள்ளது. அந்த அறிக்கை வரப்பெற்று அரசினால் ஊக்கமாக ஆராயப்பட்டு வருகிறது.

வேர்க்கடலைப் பருப்பு, வேர்க்கடலை எண்ணெய், கரும்பு வெல்லம் முதலியவற்றை இம்மாநிலத்திற்கு வெளியே ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதிக்க அரசு ஆராய்ந்து வருகிறது. இதனால் மேற்படிப் பொருள்கள் வெளிச் சந்தைகளில் மலிவான விலைகளில் விற்பனைக்குக் கிடைக்கும் வகையில் இம்மாநிலத்திற்குள் அவை பெருமளவில் புழங்கிவர வழி ஏற்படும். இம் மாநிலத்தின் பல பகுதிகளில் பருப்பு வகைகளுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை நிலைமையைச் சரிக்கட்டும் பொருட்டு பிற மாவட்டங்களிலிருந்து பருப்பு வகைகளை இறக்குமதி செய்யவும் இந்த அரசு முயற்சி எடுக்கும். இன்று அரசிடம் சிறு அளவில் பருப்பு இருப்புகள் உள்ளன. ஆனால் அரிதாக உள்ள இப்பண்டத்தில் வணிகர்கள் பெருத்த ஆதாயம் ஈட்டுவதைத் தவிர்க்கக் கருதி, மொத்த அளவுகளில் வணிகர்களுக்கு வழங்காமல், உண்மையில் பயன் கொள்வோர் மட்டும் பலனடையும் வகையில் சிறு சிறு அளவு களில் மட்டுமே அவைகளை அரசு வழங்கி வருகிறது.

இந்தக் குறிப்புரையைத் தொடர்ந்து மேலும் சில வார்த்தைகள் நான் பேச விரும்புகிறேன். பால் பண்ணையைப்பற்றியும் ரசாயன உரத்தைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல இந்த மாமன்றம் அனுமதிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தரமான பாலைக் குறைவான விலையில் கொடுக்கவேண்டும் என்பதற்காகப் பால் பண்ணை துவக்கப்பட்டது. நான் எதிர்த் தரப்பில் இருந்தபோது, ஒரு சமயம் இந்த மாதவரம் பால் பண்ணையைக் குறித்துப் பேசுகையில், அதில் எந்த அளவிற்குச் சீர்கேடுகள் இருந்தன என்பதைக் குறிப்பிட்டு இருக்கிறேன். அந்தப் பண்ணையிலிருந்த சீர்கேடான நிலைமைகளைக் குறித்து ஒரு சமயம் வாதாடிய நானே, அந்தப் பால் பண்ணைக்கான பொறுப்பையும் இப்பொழுது ஏற்றுக்கொள்ளும் விசித்திரமான சூழ்நிலைக்கு உள்ளாகியிருக்கிறேன். அந்தப் பொறுப்பு இன்றைக்கு என் மீது சுமத்தப்பட்டிருக்கிறது என்று கூட நான் சொல்லலாம். இருப்பினும், அந்தக் குறைபாடுகளெல்லாம் நீங்கிவிட்டன என்று சொல்லுவதற்கு நான் இப்பொழுது தயாராக இல்லை. ஆனால், இந்த அரசாங்கம் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, பால் பண்ணைத் திட்டத்தில் என்ன என்ன முக்கியமான காரியங்களைச் செய்திருக்கிறது என்பதை மட்டும் இப்பொழுது இங்கே நான் குறிப்பிடுவது, இந்த விவாதத்தை இன்னும் பலனுள்ளதாக்குவதோடு, கனம் உறுப்பினர்களுடைய கருத்தைத்

தெரிவிப்பதற்கும், அதனையொட்டி, இதைச் செம்மைப் படுவதற்கும் முடியும் என்ற கருத்தில் ஒன்றிரண்டு வார்த்தைகள் நான் சொல்ல விரும்புகிறேன்.

மாதவரம் பால் பண்ணைத் திட்டத்தின் முக்கிய நோக்கம், தரமான பாலை வெளியில் உள்ள விலையைவிடக் குறைந்த விலையில் கொடுக்கவேண்டும் என்பதுதான். இந்த ஆண்டு முப்பதாயிரம் லிட்டர் பால் நாள்தோறும், விநியோகிக்கப்பட்டிருக்கிறது. எந்த ஆண்டிலும், கோடை காலத்தில் முப்பதாயிரம் லிட்டர் பால் விநியோகிக்கப்படவில்லை. முப்பதாயிரம் லிட்டர் விநியோகிக் கும் அளவுக்கு வேறு எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்குச் செய்யப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் ஒரு படி பால் வெளியில் நான்கு ரூபாய்க்கு விற்கிறது. மாதவரம் பால் பண்ணையில் ஏறக் குறைய 1¾ ரூபாய்க்கு ஒரு படி பால் கொடுக்கிறோம். முப்ப தாயிரம் லிட்டர் என்னும்போது, அது சென்னை மாநகரத்தின் தேவையில் மூன்றிலொரு பகுதியைப் பூர்த்தி செய்ய முடிகிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுவேன்.

பால் பதனிடும் தொழிற்சாலைகளைத் தஞ்சை மாநகரத்திலும், சிதம்பரத்திலும் துவங்குவதற்கான முடிவுகள் ஏற்பட்டு, துவக்க விழா நடைபெற வேண்டிய அம்சம் இருக்கிறது. சேலம், திருநெல் வேலி, மற்றும் பால் பதனிடப்படும் தொழிற்சாலை இல்லாத மாவட்டங்களிலும், நம்முடைய நிதி நிலையையொட்டி நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் துவக்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நியூஜிலாந்து நாட்டின் உதவியுடன் ஒரு கோடி ரூபாய்ச் செலவில் மதுரைப் பால் பண்ணை திட்டத்தை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த திங்களில் மதுரைமாநகரில் துவக்கி வைத்தார்கள். அந்த வகையில், பத்தாயிரம் லிட்டர் பால் தினந்தோறும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு மகிழ்ச்சியான செய்தியையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மதுரைப் பால் பண்ணைத் திட்டத்தின் கீழ், மதுரை மாநகரத்தில் இருக்கிற கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள், ஏழை எளியவர்கள் அனைவருக்கும் மலிவான விலையில், டைப்லிடைஸ்டு விலையில், பால் விநியோகிக்கும் திட்டம், காந்தியார் பிறந்த புனித தினமான, அக்டோபர் இரண்டாம் தேதி யன்றிலிருந்து வழங்கவேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, மதுரை மாநகரில் காந்தியார் பிறந்த நாளிலிருந்து, கர்ப்பிணிப் பெண்கள் ஏழை எளியவர்கள், குழந்தைகள் ஆகியவர்களுக்கு மலிவான விலையில் பால் வழங்கும் திட்டம் அங்கே செயல்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

'ஓர்ல்டு ஃபுட் ப்ரோக்ராம் எய்ட்' இன்கீழ் மாட்டுத் தீவனத் திற்காக 2,500 டன் மைலோவும் சோளமும் வழங்குவதற்காகத் தூது கோஷ்டி நம்முடைய முதலமைச்சர் அவர்களை சந்தித்துப்





பேசினார்கள். ஓர்ல்டு ஃபுட் ப்ரோக்ராம் எய்ட்டின் மூலம் நாம் பெறும் அந்தத் தீவனத்தைக்கொண்டு நம்முடைய கால்நடைகளை மேலும் அபிவிருத்தி செய்யமுடியும், இன்னும் அதிகமாகப் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் ஐம்பது லட்ச ரூபாய் அவர் களிடமிருந்து கிடைக்கும். அது இன்னும் கிடைக்கும் வண்ணம் புதிய திட்டம் வந்திருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி நம்முடைய நண்பர் திரு. விநாயகம் அவர்கள் ஒன்றை எடுத்துக் கூறினார்கள். கேள்வி நேரத்தில் ஆரே காலனி யில் லாபம் வருகிறதே, என் நீங்கள் அந்த மாதிரி நடத்தக் கூடாது என்று கேட்டார்கள். தூரத்துப் பச்சை எப்பொழுதும் கண்ணுக்குக்குளுமை என்பதுபோலத்தான். ஆரேயில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டு, மராட்டிய சர்க்கார் பாலின் விலையை இப்பொழுது ஏற்றியிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆனால் அதனால் நமக்கு நஷ்டம் ஏற்படவேண்டும் என்று நான் வாதம் செய்ய வில்லை. அது இந்த அரசின் கொள்கையும் அல்ல. பலத்த நஷ்டம் ஏற்பட்டிருந்தது உண்மைதான். ஆனால், பிரத்தியேகமான நடவ டிக்கைகள் எடுத்து, இந்த ஆண்டில் நஷ்டத்தைக் குறைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு முடியும் தருவாயில்பார்த்தால், அறிக்கைகள் சமர்ப்பிக்கும் தருவாயில், மாதவரம் பால் பண்ணையில் நிர்வாகத்தில் வெகுவாகச் சிக்கனம் ஏற்பட்டிருக்கும் என்பதைப் பார்க்கலாம் என்பதை இந்த நேரத் திலே தெரிவிக்கிறேன்.

நகரத்திலே இருக்கின்ற மாடுகளை அப்புறப்படுத்தி, பால் சப்ளை செய்யும் காரியத்தில் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றன. காலையில் கனம் உறுப் பினர் திரு. ஹாண்டே ஒன்றைக் கேட்டார்கள். அவர்களுக்குச் சொல்லுவேன். திரு. வர்கீஸ் அவர்கள் நல்ல சிபாரிசு ஒன்றைச் செய்திருக்கிறார்கள். அந்த திட்டத்தின் கீழ் செயல்படும் வகையில் காரியங்கள் செய்யப்படும். 4,000 மாடுகளை அபிவிருத்தி செய்யவும், இதையும் இணைத்து செயல்படும் தீவிரமான திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்த முயற்சிக்கும்.

ரசாயன உரம் பற்றியும் குறிப்பிட்டார்கள். அது பற்றி இரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம்முடைய மொத்தத் தேவை 1,63,000 டன்கள், நைட்ரஜன் உரங்கள். ஆனால் 93,000 டன்தான் மத்திய சர்க்கார் நமக்குக் கொடுத்திருக்கிறது. அதிலும் மூன்று மாதத்தை ஒரு க்வாட்டர் என்று வைத்து, அதற்கு 28,000 என்று ஒதுக்கிவிட்டு, 15,000 டன்தான் அனுப்பினார்கள். அதிலும் இன்னும் பாக்கியிருக்கிறது. ரசாயன உரத்தில் முக்கியமானது, அது போதிய அளவு, வேண்டிய நேரத்தில் கிடைக்க வேண்டும். right quantity in right time என்று சொல்லுவதைப் போல, வேண்டிய அளவு மொத்தமாக, உரிய காலத்தில் கிடைக்கச்

செய்வதில்லை. டெல்லி நகருக்குச் சென்றபோது, நானும் அமைச்சர் கோவிந்தசாமியும் மத்திய அமைச்சரிடம் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னோம். அதை வெகுவாக வற்புறுத்தி வந்திருக்கிறோம். அடுத்த க்வார்ட்டரிலாவது, ரசாயன உரம் முழுவதையும் கொடுத்து, அது நமக்கு வந்து சேரும்படிச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

அதே நேரத்திலே இன்னொரு ஆபத்தான அம்சம் ஏற்பட்டிருக்கிறது. நெய்வேலியில் ரசாயன உற்பத்திச் சாலையிலிருந்து 30 சத விகிதம் வெளி மார்க்கெட்டுக்குக் கொடுக்க வேண்டும் என்று நிபந்தனை போட்டிருக்கிறார்கள். அந்த 30 சத விகிதத்தில், 15 சத விகிதம் நமக்குக் கொடுக்கப்படுகிறது. மற்ற 15 சத விகிதம் வெளி மாநிலங்களுக்கு கொடுக்கப்பட்டு எங்கேயோ பறந்து விடுகிறது. இந்திய அரசாங்கம் ஒரு பூல் பிரைஸ் போடுகிறார்கள். அந்த பூல் பிரைஸை, மத்திய அரசைச் சேர்ந்த ஒரு பொது நிறுவனம், கடைசிக் கட்ட விலையையும் உயர்த்தி வெளிச் சந்தையில் விற்கிறார்கள். அதைப்பற்றி நாங்கள் பலமாகக் கண்டனம் தெரிவித்திருக்கிறோம். முப்பது சதவிகிதம் வெளி மாநிலங்களுக்குச் செல்லவேண்டும் என்று சொல்லிவிட்டு, பூல் பிரைஸையும் இந்திய சர்க்காரே நியமித்துவிட்டு, எல்லோரும் அதைப் பின்பற்ற வேண்டும் என்று சொல்லும்போது, அவர்களுடைய ஆதீனத்தில் இருக்கும்—அது அந்தமான் தீவு அல்ல, அந்தமான் தீவு கூட இப்பொழுது நம்முடன் இருக்கிறது; ஏதோ ஒரு வெளி நாடு போல நெய்வேலியை நினைத்து, அதிலிருந்து வரும் பொருளுக்கு பூல் பிரைஸை அனுஷ்டிப்பதில்லை என்பதை கண்டித்திருக்கிறோம்—ஒரு நிறுவனமே அப்படிச் செய்வதை நாங்கள் கண்டிக்கிறோம். நெய்வேலியிருந்து வரும் உரத்தை விநியோகம் செய்ய ஏஜெண்டுகளை வைத்திருக்கிறார்கள். அடுத்த இரண்டு மாதத்தில் 50 சதவிகிதம் என்றும், பிறகு 75 சதவிகிதம் என்றும் நெய்வேலி உரச்சாலையிலிருந்து வெளிச்சந்தைக்கு வர இருக்கிறது. நாங்கள் சென்றிருந்த போதும், முதல் அமைச்சர்கள் மாநாட்டிலும் குறைந்தது 75 சதவிகிதம் நெய்வேலி உரச்சாலையிலிருந்து உரம் இந்த மாநிலத்திற்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாக வற்புறுத்தி வந்திருக்கிறோம். மத்திய சர்க்கார் ரசாயன உரத்தின் விலையை ஏற்றுகிறார்கள். நாம் இங்கே விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, அவர்கள் ரசாயன உர விலையை ஏற்றுகிறார்கள். ஏற்கனவே போனஸ் கொடுத்து வந்தார்கள். அதையும் இப்பொழுது அகற்றிவிட்டார்கள். 'டீவால்யவேஷன்' வருவதற்கு முன்னால் இருந்த விலையை வைக்க வேண்டும். அப்படிச் செய்தால், கனம் எதிர்கட்சித் தலைவர் சொல்லுவதைப் போன்று விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாத விலையாக இருக்காது. இந்த நியாயத்தை மத்திய அரசு உணர வேண்டும். விவசாயிகளுக்கு புரொக்யூர்மெண்ட் பிரைஸ் என்று சொல்லுவதைக் காட்டிலும், ரசாயன உரத்திற்கான element of subsidy கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுவேன்.



அது மட்டுமல்ல, ஜனவரிக்கு முன்னால் இருந்த ரசாயன உரத்தின் விலையை 'ரெஸ்டோர்' செய்ய வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இந்த மன்றத்திலே திரும்ப திரும்பச் சொல்லப் பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் போனசாகக் கொடுப்பதற்குப் பதிலாக, விலையை ஏற்றுவது பரிகாரம் ஆகாது. அதற்குக் காரணம், ரசாயன உரத்திற்கு சப்சிடி எலிமெண்ட் கொடுத்து, ஜனவரிக்கு டிவால்யுவேஷனுக்கு முன்னால் இருந்த விலையையும் கொடுத்தால் சரியானதாக இருக்கும். இந்த மன்றத்தின் எல்லாப் பகுதியினரும், குறிப்பாக முக்கிய எதிர்க்கட்சியாக இருக்கும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள், விவசாயிகளுக்கு உண்மையிலேயே முன்னேற்றம் ஏற்பட்டு, அவர்கள் நன்றாக இருக்க வேண்டும் என்பது நியாயம், என்று அதில் அக்கறையுள்ளவர்களாக இருந்தால், பொறுப்போடு, இந்த மாநில அரசின் கரங்களைப் பலப்படுத்தி, டெல்லி மாநகரில் இருக்கும் மத்திய உணவு அமைச்சுத் துறையை வற்புறுத்தி ரசாயன உரம் பழைய விலைக்குக் கொடுக்க வேண்டும், அதற்கு மானியம் கொடுக்க வேண்டும், என்று சர்க்காரோடு சேர்ந்து பாடுபடவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த விவாதத்தைத் தொடங்கி வைக்கிறேன்.

* திரு. எம். வில்லியம் : சபைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று நடவடிக்கைகள் எடுக்கும் காலத்தில், விவசாயிகள் பேரில் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து உற்பத்தியைக் குறைக்கும் விஷயத்தைப் பற்றிக் கூற விரும்புகிறேன். விவசாயிகள் கிராமப் பிரதேசங்களில் அதிகமாக இருக்கிறார்கள். பட்டணத்தில் வசிக்கும் மக்களுக்கு உணவு அளிக்க கிராமத்தில் வசிக்கும் விவசாயிகள் என்பதை முதலாவதாகக் கூற விரும்புகிறேன். அவ்வண்ணமாக, விவசாயம் நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் போது, விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமே தவிர, ஊக்கத்தை குறைக்கும் எந்த விதமான நடவடிக்கையும் எடுப்பது சரியல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) தலைமை.]

நமது அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், விவசாயிகளுக்கு விவசாயம் செய்கிற நேரத்தில்—ஏற்ற பருவத்தில் உரம் அளிக்கப் பட வேண்டும். அதேமாதிரி விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கும் ஏற்றவாறு தக்க விலையும் கொடுக்க வேண்டும். (முற்பகல் 11-30) இப்போது நாம் நல்ல விலையை அளித்து வருகின்றோமா? நெல்லை கொள்முதல் செய்கின்றோம்—எந்த விலைக்குச் செய்கின்றோம்? அதன் உற்பத்திச் செலவு என்ன என்பதை நாம் நன்றாகச் சிந்திக்க வேண்டும்.

[திரு. எம். வில்லியம்] [1967 ஜூலை 11

ஒரு ஏக்கர் நிலமுள்ள விவசாயிக்கு எவ்வளவு நெல் கிடைக்கும், எவ்வளவு ரூபாய் செலவாகும், என்பதையெல்லாம் நினைத்துப் பார்த்தால், செலவு போக ஒருவேளை இரண்டு, மூன்று குவிண்டால் நெல்தான் கிடைக்கும் என்று கருதுகிறேன். விவசாயத்திற்கு அதிகமாக செலவாகின்ற நேரத்தில் முழு நெல்லையும் கொள்முதல் செய்வது சங்கடமான காரியம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு ஏக்கர் உள்ள விவசாயிகளுக்கு மட்டும்தான் கொள் முதலிலிருந்து விலக்கு அளித்திருக்கிறீர்கள். அது சரியல்ல. ஒரு குடும்பத்தை ஒரு விவசாயி நடத்த வேண்டுமானால், அந்த நிலத்திலிருந்து என்ன கூடுதலாக லாபம் கிடைக்கிறது என்பதை சற்று சிந்திக்க வேண்டும். ஒரு ஏக்கர் நிலமுள்ளவர்களுக்கு மட்டும் விலக்கு அளித்தால் போதாது. குறைந்தது நிச்சயமாக 3 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு கொள்முதலிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும். அப்போதுதான், ஒரு ஏக்கருக்கு மேற்பட்டு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு தங்களுடைய நிலங்களில் விவசாயம் செய்ய நல்ல உற்சாகம் ஏற்படும். விவசாயி களின் ஊக்கம் குறைந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படி கவனித்துக்கொள்ளாவிட்டால், விவசாயிகளுக்கு ஊக்கம் குறைந்து, விவசாயம் பாதிக்கப்பட்டு, நாட்டில் பஞ்சமும் ஏற்படும். ஆகவே, குறைந்தது 3 ஏக்கர் நிலமுள்ள விவசாயி களுக்கு கொள்முதலிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, 10 ஏக்கர் உள்ள விவசாயிகளிடத்தில் உபரி நெல்லை மட்டுமே கொள்முதல் செய்ய வேண்டும். ஒரு ஏக்கர் முதல் 10 ஏக்கர் வரையுள்ள விவசாயிகளிடமிருந்து எவ்வளவு நெல் கொள்முதல் செய்யப் போகிறோம் என்பதைச் சர்க்கார் திட்டவட் டமாகச் சொல்ல வில்லை. எவ்வளவு நெல் உபரியாக இருக்கும்? ஐந்து அங்கத்தினர்கள் கொண்ட ஒரு குடும்பத்தில் எவ்வளவு நெல் உபரியாக இருக்கக்கூடும்? செலவு போக எவ்வளவு மீதம் வரும் என்பதையெல்லாம் கணக்குப் பார்க்காமல்—கொள்முதலைப் பற்றித் திட்டவட்டமாகச் சொல்லாமல் உபரியாக இருக்கும் நெல்லை எடுத்துக்கொள்வது என்றால், நிச்சயமாக அதனால் பலவித மான கஷ்டங்கள் ஏற்படும். திட்டவட்டமாக ஒரு கொள்கையை ஏற்படுத்த வேண்டும். சட்டபூர்வமான ரேஷன் அளித்து, லெவி முறையில் கொள்முதல் நடத்தவேண்டும் லெவி ஏற்பாடு என்று வரும்போது, எத்தனை ஏகருக்குக் கொள்முதலிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்பதைத் தீர்மானிக்க வேண்டும். அப்படி யில்லாவிட்டால் விவசாயிகளை அதிகாரிகள் பலவாறாக துன்புறுத்து வார்கள் என்று நான் கூறிக்கொள்கிறேன். திட்டவட்டமான கொள்கை இல்லாமல் குடும்பக் கார்டு மட்டும் கொடுத்து, முழுமையான அரிசி கொடுக்காமல் இருப்பது சரியல்ல. அதிகாரப் பூர்வமான ரேஷன் முறையை நாம் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். நடைமுறையில் கொண்டுவர வேண்டுமானால், லெவி முறையில் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதைச் சிந்தித்து நியாயமான முறையில் விவசாயிகளுக்கும் கஷ்டம்



1967 ஜூலை 11] [திரு. எம். வில்லியம்]

ஏற்படாமல் இருக்கத்தக்க விதத்தில் நாம் ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்குமென்று கூறிக்கொள்கிறேன். குடும்ப கார்டு சிஸ்டத்தில் ஒரு யூனிட்டுக்கு 500 கிராம் அரிசி அளிக்கப்படுகிறது. இப்போதுள்ள நிலைமையில் விவசாயிக்கு எப்போதும் ஒரு சந்தேகம்தான் ஏற்படுகிறது. விவசாயிகளை நம்பி வாழ்கின்ற மக்களுக்கும் சந்தேகம்தான் ஏற்படுகிறது. திட்டவட்டமான கொள்கையை நாம் கொண்டுவரவேண்டும்.

(மணியடிக்கப்பட்டது)

கொள்முதலை எந்தவிதமாக நாம் நடத்துகிறோம் என்பதைச் சிந்திக்க வேண்டும். அதிகாரிகள் தங்கள் இஷ்டம்போல் நடந்து கொள்கிறார்கள். கொள்முதல் நியாயமான முறையில் நடைபெற வில்லை. அங்கும் அரசியல் விஷயம்தான் கலக்கப்பட்டு வருகிறது. நியாயமான முறையில்—பாரபட்சமில்லாத முறையில் கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

குமரி மாவட்டத்தில் குடும்ப கார்டு சிஸ்டம் எல்லா இடத்திலும் இருக்கிறது. விளவங்கோடு தாலுகாவில் மார்க்கெட்டில் அரிசி விற்கக் கூடாது என்று தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். ஒரு யூனிட்டுக்கு 500 கிராம் அரிசி என்று அளித்தால், அதில் இரண்டு நாள் ஜீவனம் கூட நடத்த முடியாது. பாக்கி நாட் களுக்கு வெளிச்சந்தையில் தான் வாங்கிச் சாப்பிட வேண்டும். அம்மாதிரியான தடை உத்தரவினால், வெளி மார்க்கெட்டில் அரிசி வாங்க முடியவில்லை. மக்கள் பாக்கி நாட்களில் வெளி மார்கெட்டில் வாங்கிச் சாப்பிட வேண்டாமா, அல்லது சாக வேண்டுமா என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒன்று வெளிச் சந்தையில் அரிசி விற்க ஏற்பாடு செய்ய வேண்டும், அல்லது 1,200 கிராமும் அரிசியாகவோ, கோதுமையாகவோ வழங்க வேண்டும். அப்படியில்லாவிட்டால், விளவங்கோடு தாலுகாவில் உள்ள 3 லட்சத்து 30 ஆயிரம் மக்களின் மரணத்திற்கு ஏதுவான நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கு வசிக்கும் மக்களில் 100-க்கு 70 பேர் பாட்டாளிகள்; கூலி செய்து பிழைக்கிறார்கள். அவர்கள் தப்பித்தவறி, இரண்டு படி—மூன்று படி அரிசி வெளியிலிருந்து கொண்டுவந்தால், அதிகாரிகள் அதைப் பறிமுதல் செய்துவிடுகிறார்கள். அந்தமாதிரி பறிமுதல் செய்த அரிசிக்கு பணமும் கொடுப்பதில்லை. இம்மாதிரியான சூழ்நிலையைக் கட்டா யமாக நீக்க வேண்டும். அதற்குத் தகுந்த ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமெனக் கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. எம். ராஜா : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு வாணிகத் திட்டங்களுக்கான மானியக் கோரிக்கையின் மீது எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்ததற்காக முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த நாட்டின் மக்கள் அனைவருக்கும் உணவு வழங்க வேண்டுமென்பதில் யாருக்கும்

எந்தவித கருத்து வேறுபாடும் இருக்காது என்று நான் நம்புகின்றேன். சோஷலிச சமுதாயத்தை அமைக்க விரும்பும் எந்த அரசும் அந்த நாட்டு மக்களின் பசியைப் போக்குவதைத் தன் தலையாய கடமையாக எண்ணிச் செயல்படும். அந்த முறையிலே, இன்று புதிதாக பதவி ஏற்றிருக்கும், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையின்கீழ் இயங்கிவரும் அமைச்சரவை சோஷலிச சமுதாய திட்டத்தை நிறைவேற்றும் முகத்தான், உணவுக் கொள்முதல் திட்டத்தையும், பங்கீட்டுத் திட்டத்தையும் தீவிரமாகவும், உறுதியாகவும் செயல்படுத்துவதில் முனைந்திருக்கிறது. இந்தப் புதிய அரசு பதவி ஏற்றுக்கொண்ட போது, இந்த நாட்டின் உணவு நிலை எப்படி இருந்தது என்பதை சற்று எண்ணிப் பார்ப்போமானால், பயங்கரமான நெருக்கடி நிரம்பியிருந்த சூழ்நிலையிலே, இந்தப் புதிய அரசு எப்படி வெற்றிகரமாகச் செயல்பட்டு வந்திருக்கிறது என்பதை எண்ணும்போது யாரும், இந்தப் புதிய அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்தப் புதிய அரசு பதவியேற்றுக் கொண்டபோது இந்த நாட்டின் உணவு நிலை 1966-ல் எந்த அளவு இருந்ததோ, அதில் ஏறக்குறைய 45 சதவிகிதமே இருந்திருக்கிறது. கடந்த கால அரசு கொள்முதலுக்குச் சாதகமாக இருந்த, 1966, ஜனவரி, பிப்ரவரி மாதங்களிலே எந்த அளவுக்குக் கொள்முதல் செய்திருந்ததோ அதில் 45 சதவிகிதம்தான் 1967 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் கொள்முதல் செய்திருந்தது. இந்தமாதிரியான நெருக்கடியான நிலையில் பொறுப்பேற்ற புதிய அரசு, நான்கு மாத காலத்திற்குள் இந்த நாட்டின் உணவு நெருக்கடியைச் சமாளித்து வெற்றி கண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதை நாட்டு மக்கள் அனைவரும் பாராட்டுகின்றனர். புதிய அரசு பொறுப்பேற்ற நேரத்தில் முதல் அமைச்சர் அவர்கள் கலெக்டர் மகாநாட்டைக் கூட்டி, கொள்முதலை எவ்வாறு செயல்படுத்த வேண்டுமென்பதற்கு, மும்முனைத் திட்டத்தைக் கொடுத்தார்கள். அதில் பத்து ஏக்கருக்கு மேல் இருப்பவர்களிடம் உள்ள உபரியைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று, 1 ஏக்கருக்கு கீழ் உள்ளவர்களுக்கு விதிவிலக்கு அளித்துவிட வேண்டும் என்றும் கூறினார்கள். ஒரு ஏக்கருக்குக்கீழ் உள்ளவர்களுக்கு விதி விலக்கு அளித்ததன் மூலம் பல லட்சம் விவசாயிகள் பலன் அடைந்திருக்கிறார்கள். அதே நேரத்தில் நெல் வியாபாரத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள் நெல்லைப் பதுக்குவதற்கு இடம் கொடுக்காமலும், அதிக நிலம் இருந்தும் கொள்முதலுக்கு நெல் தரமாட்டேன் என்ற விவசாயிகள் நெல்லைப் பதுக்குவதற்கு இடம் கொடுக்காமலும் கொள்முதல் விஷயத்தில் இந்த அரசு தீவிர நடவடிக்கையை மேற்கொண்டதன் விளைவாக பதுக்கல்காரர்களிடமிருந்து 17 லட்சம் ரூபாய் அளவுக்கு உணவு தானியங்களை இந்த அரசு கைப்பற்றியிருக்கிறது. அதுபோலவே தங்கள் கையிருப்புகளை அரசுக்குக் கொடுக்க விரும்பாத விவசாயிகளிடம் இருந்து கிட்டத்



தட்ட 57 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தானியங்களை இந்த அரசு கைப்பற்றியிருக்கிறது. இந்த நிலை நாட்டிலே வளரக்கூடாது. உணவுப்பொருள் கொள்முதலையும், விநியோகத்தையும் சோஷலிச சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த அரசே வைத்துக் கொள்ளவேண்டும். தனியார் உணவு வியாபாரம் செய்வதைத் தடை செய்ய வேண்டும். இப்போது அதற்குத் தக்க சட்டம் இல்லாவிட்டாலும் அதற்கான சட்டத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான அளவுக்கு நமக்கு உரம் கொடுக்க மத்திய சர்க்கார் முன் வராமல் இருப்பதைக் கண்டிப்பதோடு, தமிழகத்திற்குக் கொடுத்தாக வேண்டுமென்ற நமது கோரிக்கையை நான் வரவேற்கிறேன். விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முயன்று கொண்டிருக்கும் நேரத்தில் நெல்லுக்கு அதிக விலை கொடுக்கக் கூடாது வேண்டுமானால் விவசாயிகளுக்கு உணவு உற்பத்திக்குத் தேவைப்படுகிற பொருள்களைக் குறைந்த விலையில் கொடுக்கலாம். இன்றைக்கு நாம் ஒரு ரூபாய்க்கு ஒரு படி என்று போட்டு வருவதனால் நமக்கு 5 கோடி நட்டம் ஏற்படுகிறது. இந்த ஐந்து கோடியை மத்திய சர்க்கார்தான் ஈடுசெய்ய வேண்டும் என்று வற்புறுத்தியாக வேண்டும். உரத்திற்காக நமக்கு ஏற்படுகிற செலவையும் அவர்கள் தான் ஈடுகட்டியாக வேண்டும். வெளிநாட்டில் இருந்து கோதுமை வரவழைத்துக் கொடுப்பதற்கு அவர்கள் 118 கோடிக்கும் அதிகமாக வடக்கு மாநிலங்களுக்கு மானியம் கொடுக்கிறபோது தமிழக அரசு ஏழை மக்களுக்கு குறைந்த விலையில் அரிசி கொடுப்பதனால் ஏற்படுகிற நட்டத்தை மத்திய சர்க்கார்தான் ஏற்றுக் கொண்டாக வேண்டும். தமிழக அரசே ஸ்டேட் டிரேடிங்கை அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) :** நேரம் குறைவாக இருப்பதன் காரணமாக ஒவ்வொரு உறுப்பினரும் ஐந்து நிமிடத்திற்கு மேற்படாமல் இனி பேசி முடிக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. வெ. முனுசாமி:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 1967-68-ஆம் ஆண்டுக்கான 'அரசினர் வாணிகத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு' என்கிற மானியக் கோரிக்கையின் கீழ் எனது கருத்துக்களை வழங்கலாம் என்று இருக்கிறேன். பண்டைய நாளில் நாட்டு மக்களை பசி பட்டினிப் பிணியில் இருந்து காப்பாற்ற ஆங்காங்கே நெற்களஞ்சியங்களும், கேழ்வரகுக் களஞ்சியங்களும் வைத்திருந்தார்கள் என்பதை இன்றைக்கும் இருக்கும் அந்தக் களஞ்சியங்களைக் கண்டு தெரிந்துகொள்ளலாம். அந்த அடிப்படையில் தான் தமிழக அரசு இன்றையதினம் நடந்து வருகிறது கொள்முதலை நீக்கிவிட வேண்டும் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். ஆனால் கொள்முதல் சம்பந்தமாக இருந்து வருகிற சில

கேடுபாடுகளை, சில தவருன முறைகளை நீக்க வேண்டும் என்பதாகத்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறி வருகிருர்கள். உண்மையைச் சொல்ல வேண்டுமென்று சொன்னுல்—வாணிகம் என்கிறபோது அதில் லாப நோக்கு மறைந்தே கிடக்கிறது. தனிப்பட்டவர்கள் வாணிகத் துறையில் இறங்குகிறபோது லாபம் ஒன்றைக் கருதியேதான் ஈடுபடுகிருர்கள். நாட்டுமக்களை அவர்கள் நினைக்கவில்லை. நாட்டு மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகிற உணவு தானியப் பொருள்களை அதன் காரணமாகத்தான் அரசு விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இந்த நேரத்தில் நான் ஒரு கருத்தை மன்ருடித் தெரிவித்துக்கொள்கிறேன். நெல் வியாபாரத்தில் தனியாருக்கு அரசு லைசென்சு கொடுத்துக்கொண்டிருக்கிறது. அரசாங்கம் கொள்முதல் செய்து கொண்டிருக்கிருர்கள். டி.எஸ்.ஓ., தாசில்தார் ஆகியோர் உடந்தையாகச் சென்று அங்கங்கே கொள்முதல் செய்கிருர்கள். அதே நேரத்தில் லைசென்சு பெற்றுள்ள தனியார்கள் தங்கள் செய்கிற கொள்முதலுக்குக் கணக்குக்கொடுக்காமல், பில் கொடுக்காமல், கள்ளக்கடத்தலுக்கு உடந்தையாக இருக்கிருர்கள் என்று கேள்விப்படுகிறேன். திண்டிவனம், செஞ்சி பகுதியை எடுத்துக்கொண்டால் அவர்கள் பிடிக்கின்ற நெல்லை தனியாக அரைத்து, கடலூருக்கு அனுப்பி அங்கிருந்து கள்ளத்தனமாக சிலோனுக்கும், அங்கிருந்து சீனுவிற்கும் போகிறது என்கிற பயங்கரமான செய்தி அடிபடுகின்றது. இதை நிச்சயமாய் போக்கியாக வேண்டும். தனியார்களுக்கு இந்த அரசு லைசென்சு கொடுக்கக் கூடாது. பில் கேட்டால் தருவதில்லை எடை போடுவதிலே பல தப்புகள்—ஆகவே அரசாங்கம் முன் நின்று ப்ரொக்யூர்மெண்டு தாசில்தார், டி.எஸ்.ஓ.-வை வைத்துக் கொண்டு கொள்முதல் செய்கிறபோது அதைத் தனியாரிடத்தில் போடச்சொல்லாது நெல்லை வாங்கியாக வேண்டும். அப்படிச் செய்கிறபோது நிச்சயமாக கேடுபாடுகளை நீக்குகிற நிலைமை ஏற்படும் இன்றைய தினம் மில் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு அந்த லைசென்சு தரப்படுகிறது. ஆகவே அரைக்கவேண்டுமே அதற்காக லைசென்சு கொடுக்கிறது என்று சொன்னுல் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், மாவட்டத்திற்கு ஒரு ரைஸ் மில் என்று வைத்து, அதன் மூலமாக அறைத்து அரசாங்க கோடவுன்களிலே சேமித்து வைத்து விநியோகிப்பது என்ருல் நிச்சயமாக இந்த நாட்டு மக்களுடைய பசியையும், பட்டினியையும் போக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இன்றையதினம் ரெகுலேடெட் மார்க்கெட் என்று மணிலா சம்பந்தமாக இருக்கிறது, அதேபோன்று, நெல்லையும் ரெகுலேட்டெட் மார்க்கெட் மூலம் விற்கின்ற அளவு ஏற்படுத்திஞல், தனியாரிடம் போட்டு விவசாய மக்கள் நஷ்டம் அடைகிற நிலைமை மாறி ரெகுலேட்டெட் மார்க்கெட்டிற்கு விவசாயிகள் எடுத்துச்செல்கிற நிலை ஏற்படும்.



அதற்கடுத்து இன்றையதினம் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஈ.ஓ. அக்ரி என்பதாக விவசாய விஸ்தரிப்பு அதிகாரி இருக்கிருர். அந்த அதிகாரி விதைகளைத் தந்துகொண்டிருக்கிருர். நாமோ அரிசியைக் குறைந்த விலையில் கொடுக்க திட்டமிட்டிருக்கிருேம். ஆகவே உற்பத்திக்கு மிகவும் அடிப்படைத் தேவையான உரம், விதை, மற்ற கருவிகளை குறைந்த விலையில் அவர்கள் மூலமாக விவசாயிகளுக்குக் கொடுத்தால்; நன்ருக இருக்கும். விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகளே உரங்களையும், மற்ற கருவிகளையும் தருகிற நிலையை ஏற்படுத்திஞல் நிச்சயமாக உரத்திற்காக கள்ளச் சந்தையை நாடிச் செல்கிற நிலை மாறும்.

அதற்கடுத்து இன்றைக்கு செக் போஸ்டுகள் இருக்கின்றன. அங்கே என்ன என்ன அக்கிரமங்கள் நடக்கின்றன என்பதை நாம் கவனிக்கவேண்டும். சைக்கிள்களில் போகிற தானியத்தைத் தடுக்கிருர்கள். காரில் கொண்டு போகிற தானியத்தைத் தடுத்து நிறுத்துகிருர்கள். ஆனுல் லாரியில் கொண்டு போகிறவர்களை விட்டுவிடுகிருர்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** குறிப்பிட்ட சம்பவம் ஏதாவது இருந்தால் சொல்லவேண்டும், எப்போது எந்த செக் போஸ்டில் லாரியில் கொண்டுபோக அனுமதிக்கப்பட்டது, எந்த அதிகாரி அதைத் தடுக்காது விட்டார் என்கிற விவரங்களைத் தர வேண்டும். பொதுவாகச் சொல்வது சரியல்ல. இதுபோன்ற தப்பு அபிப்பிராயத்தை அரசாங்கத்திற்கு விரோதமாகச் சொல்ல நினைக்கிறவர்களுக்குத்தான் இது உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. முனுசாமி:** இன்றையதினம் லாரிகளில் போகிறவர்களை விட்டுவிடுகிருர்கள். இவை போன்ற புகார்களை தனிப்பட்ட முறையில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு, மாதவரம் பால் பண்ணையை ஏற்றுக்கொண்டு இருக்கிருேம். பால் சப்ளை செய்யவேண்டுமென்ற நோக்கம் புனிதமானதுதான். அத்துடன் திடகாத்திரமான மாடுகளையும் கன்றுகளையும் வளர்க்க வேண்டுமென்ற குறிக்கோளும் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட நிலவரம் அங்கே இல்லாததற்குக் காரணம், கால் நடைகளைக் கட்டிப்போட்டு தீவனம் போடும் நிலையில் ஓரளவு நஷ்டம் ஏற்படுவதாக கருதப்படுவதுதான். இதற்கு, கண்டிப்பாக மேய்ச்சல் நிலங்களை ஏற்படுத்தி, பால் பண்ணையில் இருக்கும் கால் நடைகளுக்கு மேய வசதி செய்து கொடுப்பது லாபகரமாக இருக்கும் என்று கூறி, இப்படி அத்தியாவசியமான பொருள்களுக்கு ஆன வணிகத்தை அரசாங்கம் நேரடியாக நடத்த வேண்டுமென்று கூறி இந்த மானியக் கோரிக்கையை ஆதரிக்கிறேன். வணக்கம்.

***திரு. என். சங்கரய்யா:** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீது என்னுடைய சில கருத்துக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சி முடிவடையக்

கூடிய நேரத்தில் கொள்முதலில் கவனம் செலுத்த வில்லை என்பது புள்ளி விவரங்கள் மூலமாகவே உறுதிப்படுகிறது. இதில் சந்தேகமே கிடையாது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

அடுத்தபடியாக புதிய ஆட்சி ஏற்பட்டபிறகு, இன்று இந்தக் கொள்முதலில் 10 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கக் கூடியவர்களிடம் உள்ள மார்க்கடபிள் சர்பலஸ் முழுவதையும் நிச்சயமாக கொள்முதல் செய்வதற்கு அரசினர் தீவிரமாக முயற்சி செய்ய வேண்டுமென்று நான் மிகவும் அழுத்தமாகக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் பெரு நிலக்கிழார்களிடம் உள்ள அதிகப்படியான அரிசியை கொள்முதல் செய்யவேண்டும். மார்கடபிள் ஸர்ப்லஸ் முழுவதையும் அரசாங்க அதிகாரிகள் நல்ல முறையில் கொள்முதல் செய்கிறார்களா என்பதை நாம் தீவிரமாக கவனிக்க வேண்டுமென்று நான் மீண்டும் வற்புறுத்துகிறேன். இதைக் குறித்து அமைச்சரவர்களும் கூறினார்கள். ஏறக்குறைய 1¼ கோடி மக்களுக்கு மேல் இன்ஃபார்மல் ரேஷன் முறையில் உணவு கொடுக்கப்பட்டு வருகிறது. தேவையானால் இதை அதிகப்படுத்த வேண்டி இருக்கும். மதுரை முனிசிபல் வாடுக்கு கிழ்ப்பக்கத்தில் உள்ள கிராமங்களில் இன்ஃபார்மல் ரேஷன் கிடையாது. எனவே அங்குள்ள மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கும் இந்த ரேஷன் கொடுக்கப்படவேண்டும் என்றால் ரேஷனிங் டிமாண்டு அதிகப்படியாகுமோ என்று சர்க்கார் பயப்படவேண்டியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தில் பதில் அளிக்கும்போது இரண்டு அறுவடைகளையும் சேர்த்து ஏறக்குறைய 8½ லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்ய திட்டமிருப்பதாக கூறினார்கள். தேவையானால் நாமே 12 லட்சம் டன் வரைக்கும் அரிசி கொள்முதல் செய்து டவுன் பக்கத்தில் உள்ள கிராமங்களுக்கும் கொடுக்க முயற்சிக்கவேண்டும்.

அமைச்சர் அவர்களுடைய உரையிலே கட்டுப்பாடு என்பது நமது கொள்கை அல்ல, தேவைக்காக வைத்திருக்கிறோம். தேவை முடிந்த உடனே நீக்கிவிடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது சரியான கொள்கைதான். ஆனால் இன்று உலக அரிசி சப்ளை நிலைமையை எடுத்துக்கொண்டு பார்க்கும்போது நாடு முழுவதும் உள்ள உணவு நிலைமையை எடுத்துக்கொண்டு பார்க்கும்போது இன்றைக்குள்ள கட்டுப்பாடுகள் நீண்டகாலத்திற்கு நீடிக்க வேண்டிய நிலைமைதான் பின்னணியில் இருக்கிறது என்பதை புதிய அமைச்சர் அவர்களே உணர்கிறார்கள் என்பதை நான் நிச்சயமாக நம்புகிறேன். ஆகவே இந்த அடிப்படையில் தான் அரசாங்க வியாபாரம் என்ற பிரச்சினையை அணுக வேண்டியிருக்கிறது.

இப்போது ஒரு படி அரிசித் திட்டத்தை 154 லட்சம் மக்களுக்கு கொண்டு வரும்போது 8.90 கோடி ரூபாய் அரசாங்கத்திற்குச் செலவாகும் என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். இவ்வாறு ஏறக்குறைய 9 கோடி ரூபாய்க்கு அரசாங்கம் அதிகப்படியாகச் செலவு செய்து 154





லட்சம் மக்களுக்கு ரூபாய்க்கு 1 படி அரிசி கொடுக்கக்கூடிய திட்டத்தைக் கூட ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு முதலில் இன்பார்மல் ரேஷன் முறையில் இன்னும் அதிகப்படியான மக்களுக்கு உணவுப்பொருள்களை வழங்குவது பொருத்தமாக இருக்கும். கிராமங்களைப் பொறுத்தவரையில் பல இடங்களில் தேவை இருக்கிறது. ஆகவே இன்பார்மல் ரேஷன் முறைகளை அதிகப்படியான பேர்களுக்கு விஸ்தரிக்கவேண்டிய அவசியத்தைக் குறித்து 8 லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்வதற்குப் பதிலாக 12 லட்சம் டன்வரை கொள்முதல் செய்யலாம். இதை நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். இதைச் செய்யக்கூடிய எந்த ஒரு அரசாங்கத்துக்கு எதிராகவும் பெரிய பணக்காரர்கள், பெரிய நிலப்பிரபுக்கள் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் கூக்குரலை எழுப்பத்தான் செய்வார்கள். அவர்கள் பாதிக்கப்படுவதாகக் கூறுவார்கள். ஆனால் அது உண்மை அல்ல. வெளிமார்க்கெட்டில் விற்று கொள்ளை லாபம் அடைவதற்குத்தான் முயற்சிப்பார்கள். ஆகவே அவர்களுடைய கூக்குரலுக்குச் செவி சாய்க்காமல் தமிழகத்தில் உள்ள 3½ கோடி மக்களுடைய நலனில் பாதுகாக்கவேண்டுமென்ற அக்கறை கொண்டுள்ள இந்த அரசாங்கம் அதிகப்படியான மக்களுக்கு இன்பார்மல் ரேஷன் முறையைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக ஒரு பிரச்சினையை நான் கூறுகின்றேன். எல்லா மாவட்டங்களிலும் சொந்த உபயோகத்திற்கு என்று பத்து படி அரிசி கொண்டுபோகலாம் என்ற விதி இருக்கும்போது கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அந்த விதி இல்லை. விளவன்கோடு தாலுக்காவிற்கு அரிசி கொண்டுபோக—கேரளத்தின் பக்கத்தில் உள்ள கல்குளம் பகுதியில் இருக்கிறது—அனுமதிக்கப்படுவதில்லை என்று புகார் கூறுகிறார்கள். ஆகவே ஒன்று விளவன்கோடு தாலுக்கா மக்களுக்கு உணவு ரேஷனை அதிகப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் விளவன்கோடு தாலுக்கா மக்களுக்கும் பத்து படி அரிசி பக்கத்தில் உள்ள தாலுக்காவில் இருந்து கொண்டு செல்ல அனுமதித்தே ஆகவேண்டும்.

இன்றுள்ள நிலையில் அங்கே பெரிய அளவுக்கு விலைவாசி ஏறியிருக்கிறது. இதையும் உணவு அமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

ரெவின்யூ போர்டு இரண்டாவது உறுப்பினருடைய பொறுப்பில் விட்டு இதர பண்டங்களின் விலையைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். எங்களைப் பொறுத்தவரையிலும் இந்த அரசாங்கம் உணவு விலையைக் கட்டுப்படுத்துவது மட்டும் அல்லாமல் இதரப் பொருள்களின் விலையையும் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கக்கூடிய எல்லா நடவடிக்கைகளுக்கும் முக்கியமாக நாங்கள் எங்களுடைய ஆதரவைக் கொடுப்போம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எண்ணெய் வித்துக்களின் விலை பெரிய அளவிற்கு உயர்ந்து இருப்பதால் கடலை எண்ணெய், நல்லெண்ணெய் போன்றவற்றின் விலைவாசி உயர்ந்து அதன்காரணமாக மக்கள் பாதிக்கப்படு கிறார்கள். ஆகவே முதல் அமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும் இதர பண்டங்களுடைய விலைவாசியைக் கட்டுப்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டியது முக்கியமான விஷயம். அதில் எல்லோருடைய ஆதரவையும் எதிர்பார்க்கிறோம் என்று கூறியிருப்பதற்கிணங்க எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் இந்த விஷயத்தில் அரசாங்கத்திற்கு எங்களுடைய ஆதரவு உளளது என்பதை உறுதியாகக் கூறிக்கொள்கிறேன். அரசியல் காரணமாக இதை எதிர்க்கிறவர்கள், மக்களை எதிர்க்கிறார்கள். மக்களுடைய நலனை எதிர்க்கிறார்கள், மக்களுக்கு நியாயமான விலையில் உணவுப் பண்டங்களும், இதரப் பண்டங்களும் கிடைக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு ஒருசிலர் எதிர்க்கிறார்கள் என்றால் அந்த எதிர்ப்பைச் சமாளித்துதான் ஆகவேண்டும். அந்த எதிர்ப்பைக் கண்டு நிலைகுலைய வேண்டிய அவசியம் இல்லை என்று நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன். இன்றைக்கு மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமானால் அதற்கு இந்த அரசாங்க வர்த்தகம் என்பதை பிரதானமாக கொள்ள வேண்டும். அந்த வகையில் புதிதாக வந்திருக்கும் இந்த அரசாங்கம் செயல்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மானியத்தின் மீது என் கருத்துக்களைக் கூறி என் உரையை முடித் துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்:** கனம் சேர்மன் சார், உணவுப்பிரச் சினையைப்பற்றி இநத மன்றத்தில் இரண்டு மூன்று தடவை பேசி யிருக்கிறேன். இப்போதும் அதே கருத்துக்களைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமாக, இந்தக் கட்டுப்பாடு, ரேஷன் என்பதே தெளிவான ஒரு கம்யூனிஸ்ட் கொள்கை. இதைச் சொல்லித்தான், மேடை யிலே இந்த பாலிஸியை கிரிடிஸைஸ் செய்து தான், ஜனங்களுக்கு மத்தியிலே நியாயம் என்று உணரச் செய்து தான் இந்த மாற்று சர்க்காருக்கு வழிவகை கிடைத்தது.

இருபது ஆண்டுகாலம் ஆட்சி செய்து மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் 23 ஆயிரம் கோடி ரூபாயை இந்த நாட்டில் செலவு செய்ததாக காங்கிரஸ் சொன்னபோதிலும் அவர்கள் ஒரேடி யாக தொலைந்ததற்கு காரணமே இந்த உணவு வினியோகத்தில் தலை யிட்டது தான். இன்றைக்கு அமெரிக்காவில் போய் ஒரு கோடி டன் கோதுமை கேட்கிறோம். அதை அமெரிக்க பிரஸிடெண்ட் கருணை கூர்ந்து 3 கோடி டன் தருவதாக வாக்களித்து, அனுப்பி விட்டாலும் இந்த சர்க்கார் கையில் கொள்முதல், வினியோகம், கட்டுப்பாடுகள் இருந்தால் எப்போதுமே நிலைமை சீர்படாது. ஆகவே, இதெல்லாம் பழைய காங்கிரஸ் அரசாங்கத்தின் போக்கிலேயே போய்க் கொண்டிருப்பது ரொம்ப வருந்தத்தக்க விஷயம். இவ்வளவு தீவிரமாக இருக்கும், டி.எம்.கே. கட்சியைச்





சார்ந்துள்ள மந்திரிசபையில் இருக்கும், நீங்களே ஏன்தான் முன்பிருந்த அரசின் வினியோகக் கொள்கைகளை மேடைகளில் தாக்கிப் பேசினீர்களோ எனக்குப் புரியவே இல்லை. இந்தி யாவிலேயே சென்னை ராஜ்யம் தான் நல்ல கிளியர் மெஜாரிடி உள்ள ஒரு மந்திரி சபையை அமைத்திருக்கிறது. மற்றதெல்லாம் கதம்ப மந்திரி சபைகளாக இருக்கின்றன. வங்காளத்திலும், கேரளத்திலும் மற்ற சில இடங்களிலும் அவர்கள் ஏனோதானோ என்று பல கட்சிகளுடைய தாட்சண்யத் திற்கு பயந்து, ஒரு மாதிரி வழவழா கொழகொழா என்று நடந்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்கலாம். ஆனால் நீங்கள் ஏன் அப்படி நடந்துகொள்கிறீர்கள் என்றுதான் நான் கேட்கிறேன். காங்கிரஸ் சர்க்கார் எத்தனையோ சாதித்து இருக்கிறது. தமிழ் நாட்டில் எத்தனையோ அணைக்கட்டுகள் கட்டி இருக்கிறார்கள்— இதெல்லாம் அவர்களைப் பாராட்டுவதற்காக சொல்ல வரவில்லை— எவ்வளவு மின்சார பம்புசெட்டுகளை வைத்திருக்கிறார்கள். இதை யெல்லாம் செய்து உற்பத்தியாகும் 60 லட்சம் டன் உணவுத் தானியம் எங்கே போகிறது? ஆகவே, தயவு செய்து இவைகளை அறவே, தைரியமாக நீக்கி விடுங்கள். நீங்கள் கடவுளை நம்பவில்லை என்றால், இயற்கையை நம்பி விட்டுவிடுங்கள். உங்களுடைய தலை யில்தான் எல்லா பாரத்தையும் சுமத்தி இருக்கிறது என்று நீங்கள் தயவு செய்து தப்புக் கணக்குப் போட வேண்டாமென்று இந்த அரசினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன். உணவு விஷயத்தில் தைரியமாகச் செயல் படுங்கள். நவரோஜி ரோடுக்கு உங்களுடைய மோட்டாரை ஓட்டிச் செல்லுங்கள், பெரியாரிடம் யோசனை கேளுங்கள். யோசனை கேட்கச் சொல்லுகிறேன் என்றால் நீங்கள் தெரியாதவர்கள் என்று நான் ஏதோ சொல்வதாக நினைத்துக் கொள்ள வேண்டாம். அவர்களிடம் கேளுங்கள் சரியான கருத்துக் களை வெளியிடுவார்கள். இந்திய சர்க்காருக்கு எதிரிடையான, உணவு ரேஷனை நாங்கள் நீக்கிவிட்டோம், நாங்கள் ஃப்ரீ மோவ் மெண்ட் வைத்துக்கொண்டு இருக்கிறோம் என்று புரட்சிகரமான திட்டத்தைக் காண்பியுங்கள். காங்கிரஸ் சர்க்காரே நான்கு வரு ஷங்களுக்கு முன்புதான் இப்படிப்பட்ட காரியங்களில் இந்தியா பூராவும் தலையிட்டது. அவர்களுடைய தவறான போக்கின் மூலம் ந. ப 12-0
விலைவாசி ஓரளவு ஏறிக்கொண்டே போகிறது. அவர்கள் போட்ட மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களும், ஓவர் ஸைஸ்ட் ப்ளான் என்று சொல்வது போல பெரிய திட்டங்களைப் போட்டு அகலக் கால் வைத்து ஆப்பை பிடுங்க முடியாமல் மாட்டிக்கொண்டார்கள். ஆகவே, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் காலத்திலிருந்து சில தவறான நடவடிக்கைகளை எடுத்ததின் மூலம்தான் விலைவாசிகள் கூடின. விலைவாசிகள் கூடிவிட்டபடியால், ஜனங்களுடைய கவனத்தை அதிலிருந்து திருப்புவதற்காக அவர்கள் யோசித் தார்கள். உடனே உணவுப் பொருள்கள், அரிசி, கோதுமை போன்ற வியாபாரத்தை சர்க்கார் எடுத்துக்கொண்டு தில்லு முல்லுகள் செய்து ஜனங்களுடைய கவனத்தை அங்கங்கே திருப்பி விடுவதற்கு முயற்சி செய்து அவர்கள் கெட்ட பெயரை எடுத்தார் கள். அவர்கள் அதிருப்தியை உண்டாக்கிக்கொண்டார்கள்.

ஒரு படி அரிசித் திட்டம் என்று சொல்கிருர்கள். ஒரு பகுதிக்கு மாத்திரம்தான் கொடுக்கப்படுகிறது. மற்றப் பகுதிகளுக்கு இல்லாமல் இருக்கிறது. கேட்டால் கொஞ்சம் கொஞ்சமாகச் செய்கிருேம் என்று சொல்கிருர்கள். இப்படி ஒரு படி அரிசி கொடுப்பது ஏழைகளுக்கு ஓரளவுக்கு உதவிதான் என்ருலும் இது எல்லாம் உருப்படியான உதவி ஆகாது; பெரிய உதவி என்னவென்ருல் இந்த மாதிரிக் காரியத்தில் அரசாங்கம் பொறுப்பிலிருந்து விடுபட்டு, நூற்றுக்கணக்கான பிரச்னைகள் நாட்டிலே இருக்கின்றன, மக்களுக்கு நல்ல வாழ்வைக் கொடுப்பதற்காக சிறு சிறு திட்டங்கள் செய்யலாம், நிர்வாகத்திலே சீர்திருத்தங்கள் செய்யலாம், ஆகவே அவற்றிலே அரசாங்கம் கவனத்தைச் செலுத்த வேண்டும். உங்களுடைய எனர்ஜியை, சக்தியை இதிலே வீணுக்க வேண்டாம். இன்பார்மல் ஆக கொள்முதலை வைத்துக்கொண்டு உணவு கட்டுப்பாட்டை அறவே நீக்கிவிடுங்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மந்திரிசபை அடிக்கடி வேடிக்கையாக பதில் சொல்கிருர்கள். புளி விலை குறைந்து விட்டது, கத்தரிக்காய் விலை குறைந்து விட்டது, கொத்தமல்லி விலை குறைந்துவிட்டது என்றெல்லாம் சொல்கிருர்கள், விலைவாசி ஏறியதற்குக் காரணம் இருபது ஆண்டுகாலமாக ஆட்சிசெய்த காங்கிரஸாருடைய தவருன போக்கினுல்தான். ஆகவே விலைவாசியைக் குறைப்பது என்பது ராஜ்ய சர்க்கார் அளவிலே முடியாது விலைவாசியைக் குறைப்பதற்கு என்ன சக்தி இருக்கிறது, என்ன திறமை இருக்கிறது ஒரு வழியும் இங்கே கிடையாது. ஆகவே எங்கள் சர்க்கார் வந்தபிறகு இதிலே 10 பைசா விலை குறைந்துவிட்டது, அதிலே 5 பைசா குறைந்து விட்டது என்றெல்லாம் பேசுகிருர்கள், அது சரியல்ல. சபாநாயகர் பகுதியிலே பத்து கிராமங்களுக்கு ரேஷன் கொடுப்பது தூத்துக்குடிப் பகுதியிலே பத்து கிராமங்களுக்கு ரேஷன் கொடுப்பது, திருநெல்வேலியிருந்து வந்து ஒரு உறுப்பினர் கேட்டால் அவருக்கு ஐந்து கிராமங்களுக்கு இதற்காக ஆர்டர் கொடுப்பது, இப்படியெல்லாம் ஸ்டெடி இல்லாத கொள்கைகளை உணவு விஷயத்தில் வைத்துக்கொள்ளவேண்டாம். ரேஷனை அறவே நீக்கிவிட்டு ஃப்ரி மூவ்மெண்ட் ஏற்படுவதற்கு வகைசெய்ய வேண்டும். ஒரு மூட்டை திருநெல்வேலியில் 100 ரூபாய் என்று கள்ளமார்க்கெட்டில் விற்கிருர்கள். இந்த கண்ட்ரோலை எல்லாம் நீக்கி விட்டால் மூட்டை ரூ. 60-க்கு விற்கக்கூடிய நிலைமை ஏற்படும். நீங்கள் இப்படி செய்துவிட்டு, ஆதிமூலம் சொன்னுரே அதனுல் அப்படி செய்தோமே இப்பொழுது இப்படி ஆகிவிட்டதே என்று சொல்லக்கூடிய நிலைமை வாராது, நான் தவருன கொள்கையைச் சொல்லமாட்டேன். நான் சொல்கிறபடி பின்னுல் இது விஷயமாக நடக்காவிட்டால் நான் அப்பொழுது ராஜிநாமா செய்வதற்குக்கூட தயாராக இருப்பேன். ஆகவே பழங்காலக் கொள்கையைப் பின்பற்றுநீர்கள், அது நல்ல கொள்கை அல்ல என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.





*திரு. வை. சுவாமிநாதன்: கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது உணவு தானிய வியாபாரத்தை அரசாங்கமே ஏற்று நடத்தினுல் தான் நல்லது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வியாபாரிகள் எல்லாம் இந்த வியாபாரத்தை நடத்தினுல் அவர்கள் அளவுகளை எல்லாம் குறைக்கக்கூடிய, அதாவது 50 கிலோ என்ருல் அதற்குக் குறைந்து எடைபோடுகிருர்கள், இந்த நிலைமையில் விவசாயிகள் கஷ்டப்படுகிருர்கள். அதோடு மட்டுமல்ல, ஏற்கனவே விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய விலை கட்டுப்படியாகாத நிலைமை இருக்கிறது. ஆகவே சர்க்காரே ஏற்றுக்கொண்டு நடத்தினுல்தான் எடைக் குறைவைத் தடுப்பதற்கு வழி ஏற்படும்.

பால் விநியோகம் பற்றிச் சொல்லும்போது சென்னையில் அதிகமாகப் பால் கொடுக்கப்படுகிறது. திருச்சி, மதுரை போன்ற இடங்களிலிருந்து சென்னைக்குப் பால் கொண்டுவரப்படுகிறது. ஆனுல் திருச்சியிலே பால் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது, அங்கே உற்பத்தியாகிற பால் அங்கே சப்ளை செய்யப்படுவதற்கு வழிசெய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் மக்கள் கஷ்டம் இல்லாமல் பால் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலை ஏற்படும். இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டும். தஞ்சாவூர் போன்ற இடங்களிலிருந்து வருகின்ற பாலை திருச்சிக்கு அனுப்புவதற்கு வழிசெய்தால் நல்லது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரேஷனைப் பொறுத்தவரையில் எங்களுடைய பகுதி தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. பாய்லர் தொழிற்சாலை, ஆயுதத் தொழிற்சாலை, என்ஜினியரிங் கல்லூரி, பொன்மலை ஒர்க்ஷாப் இவையெல்லாம் நிறைந்து இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதிக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டம் கொண்டுவர வேண்டும். அங்கே இன்பார்மல் ரேஷனையாவது கொண்டுவந்து இப்போதுள்ள விலைக்காவது அரிசி அங்குள்ளவர்களுக்குக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் விதைகள் தரமான விதைகளாக இல்லை. விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற விதைகள் நல்ல விதைகள் இல்லையென்ருல் மற்ற நல்ல விதைகளைக் கொடுப்பதற்கும் அதற்காக ஏற்படுகின்ற பொறுப்புகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** எந்த இடத்தில் வாங்கிய விதை சரியாக இல்லையென்பதைப்பற்றித் தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வை. சுவாமிநாதன்:** அதைப்பற்றி விரிவான கடிதத்தை நான் அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைக்கிறேன். விதைகள் கொடுக்கப்படுவதில் உள்ள பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமானுல் அரசாங்க அதிகாரிகளுக்கு இது விஷயத்தில் பயம் இருக்கும். சத்துள்ள விதைகளாகக் கொடுக்கவேண்டும்.

விதைக்காகக் கொடுக்கப்படுகின்ற 30 சதவிகிதத்தை விவசாயிகளுக்குத் தொடர்ந்து கொடுக்க வேண்டும். அவர்களுக்கு நிறையப் பணம் கொடுத்தால்தான் அவர்கள் நல்ல விதைகளை, காயவைத்து விதைகளையெல்லாம் அரசாங்கத்திற்குக் கொடுப்பார்கள்.

மாட்டுத் தீவனங்களுக்கு, அதாவது பிண்ணாக்கு, பருத்திக் கொட்டை போன்ற பொருள்கள் எல்லாம் ஏராளமான விலை விற்கின்றன. விவசாயிகள் வாங்கிப்போடும் அளவுக்கு முடியாத நிலைமை இருக்கிறது. ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதுபோல் மாட்டுத் தீவனங்களையும் குறைந்த விலையில் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து கொண்டால் வாயில்லா ஜீவனங்களும் இந்த அரசாங்கத்தைப் பாராட்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு சல்பேட் வாங்குவதற்காகக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. சல்பேட்டின் விலை உயர்ந்துவிட்டது. ஒரு ஏக்கருக்கு ரூ. 35 என்ற வீதத்தில் தான் அவர்களுக்குப் பணம் கொடுக்கப்படுகிறது. 35 ரூபாய் விவசாயிகளுக்குப் போதாது, ஆகவே ஏக்கருக்கு 35 ரூபாய் என்று இருப்பதை 50 ரூபாய் என்று ஆக்கினால்தான் நல்லபடியாக அவர்கள் விவசாயம் செய்ய முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கடன்கள் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. அவர்கள் கிராம முன்சீப், கர்ணம், கிராமசேவக் போன்றவர்களிடம் போய் கமிஷனரை எல்லாம் பார்த்து கடன் பெறவேண்டி இருக்கிறது. அதற்குள் 60 நாள் 90 நாள் பயிர்தான் இருக்கும், அவை விளைச்சல் விளைந்து முடிந்து விடும். ஆகவே கமிஷனர்கள் அந்தந்த ஊர்களுக்குச் சென்று விவசாயிகளுக்குக் கடன்கள், சல்பேட் போன்றவற்றை உடனுக்குடன் கொடுத்தால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. எம். கண்ணப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள அரசாங்க வணிகத்திட்டங்கள் மூலதனச் செலவு என்ற மானியக் கோரிக்கையை வரவேற்று ஆதரித்து சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற நான்கு மாத காலத்தில் ஏழை எளியவர்களுக்கு உணவு அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில் சென்னையிலும் கோயம்புத்தூரிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதே போன்ற மற்ற எல்லா நகரங்களுக்கும் எல்லா கிராமங்களுக்கும் அந்தத் திட்டத்தை விஸ்தரிக்கவேண்டுமென்ற கொள்கையைப் படிப்படியாக நிறைவேற்றம் செய்வதற்காக அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. நான்கு மாத காலத்தில் பதுக்கல் பேர்களையெல்லாம் பிடித்து, அரிசி, உரம் போன்றவற்றைப் பதுக்கி வைத்ததையெல்லாம் வெளியே கொண்டுவந்து பொது





மக்களுக்கும் விவசாயிகளுக்கும் விநியோகம் செய்திருக்கிறது. திங்கட்கிழமை, வியாழக்கிழமை இரண்டு நாட்களிலும் மாலை நேர, அதாவது இரவு நேரத்திலே அரிசி உணவு போடக்கூடாது என்று போடப்பட்ட தடையை இந்த அரசு நீக்கியிருக்கிறது; அதன் மூலம் எல்லோருக்கும் எல்லா நாட்களிலும் எல்லா நேரங்களிலும் உணவு கிடைக்குமென்று செய்திருக்கிறார்கள். விருந்துகளுக்கு இப்பொழுது கட்டுப்பாடுகள் வைத்திருக்கிறார்கள். 50 பேர்களுக்குமேல் உணவு போடக்கூடாது என்று வைத்திருக்கிறார்கள். திருமண வீட்டிலே 100 பேர்களுக்கு மேல் சாப்பிடக் கூடாது என்ற உத்திரவும் விசித்திரமாக இருக்கிறது, இதை மாற்றியமைக்க வேண்டும். திருமண வீட்டிலே 100 பேர்கள்தான் சாப்பிட வேண்டுமென்று ஒரு சட்டத்தை வைத்துக்கொண்டு அங்கே ஆயிரம் பேர்கள் சாப்பிடக்கூடிய நிலைமை இருக்கிறது. ஒன்று சட்டத்தை அமல் நடத்த வேண்டும், அல்லது சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவை மாவட்டத்தில் இருக்கிற உணவு நிலைமைகளைப் பற்றி எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அங்கே முதலில் கட்டுப்பாடு நீக்கப்பட்டது. அவ்வாறு கட்டுப்பாடு நீக்கப்பட்டவுடனே அங்கு ஒரு லிட்டர் அரிசி ரூ. 1-50, ரூ. 1-60 என்று விற்று வந்த நிலைமாறி லிட்டர் 1 ரூபாய், 80 காசு 76 காசு என்ற அளவுக்கு விலை குறைந்து விற்கப்பட்டது. பொள்ளாச்சி பெரிய சந்தை; அங்குகூட ஒரு லிட்டர் 80 காசுக்கு விற்கப்பட்டது. கோவை நகரத்தில் ஒரு படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வந்த பிறகு, வெளி மார்க்கெட்டில் அரிசி விற்கக்கூடாது; அப்படி விற்பதன் காரணமாக கேரளாவுக்கு அரிசி கடத்தப்படுகிறது என்று வெளியிலே அரிசி விற்பது தடை செய்யப்பட்டது. அதன் காரணமாக கோவை நகரில் மட்டுமல்ல; பொள்ளாச்சி, உடுமலை, கோபி, பவானி போன்ற எல்லாப் பகுதிகளிலும் அரிசி விலை முன்பு எந்த அளவுக்கு இருந்ததோ அந்த அளவுக்கு அதிகப்படியாக ஏறி விட்டது. கிராமங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் மார்க்கட்டில் தாங்கள் விளைவிக்கும் அரிசியை, தானியத்தை விற்கக் கொண்டு வந்தால் அவைகளை அதிகாரிகள் பறிமுதல் செய்யும்படியான நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையை மாற்றியமைக்க வேண்டும். கேரளாவுக்குச் செல்லும் அரிசியைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றால் அதற்குப் போலீஸ் படை இருக்கிறது; சட்டம் இருக்கிறது. கேரளாவுக்கு அரிசி கடத்துகிறவர்களுக்கு ஆயுள் தண்டனை வேண்டுமானாலும் கொடுக்கலாம் வாகனங்களைப் பறிமுதல் செய்கிற அளவுக்கு சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். ஆகவே, அத்தகைய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு கோவை மாவட்டத்திலுள்ள கட்டுப்பாட்டை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எப்படி பெரிய நகரங்களிலே படி அரிசித் திட்டத்தை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறதோ அந்த முறையில் அந்தத் திட்டத்தைச் சிறு சிறு கிராமங்களுக்கும் சிறிய நகரங்களுக்கும் விஸ்தரிப்புச் செய்வது நல்லது என்ற யோசனையைத் தெரிவித்துக் கொண்டு, அரசாங்க வணிகத் திட்டங்

களுக்கான மூலதனச் செலவுக் கோரிக்கையை வரவேற்று ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கனம் உணவு அமைச்சர் அவர்கள் அரசாங்க வாணிகத் திட்டங்களுக்கான மானியக் கோரிக்கை கொண்டு வந்ததை வரவேற்று இரண்டொரு கருத்துக்களை தெரிவித்த கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற 3, 4 மாதங்களாக உணவுத் துறையில் இருக்கக்கூடிய அமைச்சர் அவர்களும், அவர்களுடைய அதிகாரிகளும் கொள்முதலில் நன்கு திட்டமிட்டு நல்ல முறையில் கொள்முதல் செய்து நம்முடைய தேவையை ஓரளவுக்கு பூர்த்தி செய்திருப்பது குறித்து மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். பயங்கரமான சூழ்நிலைகள் உருவாகிக் கொண்டிருந்த நேரத்தில் தமிழக மக்களுக்காக நல்ல அரிய பல திட்டங்களைத் தீட்டி அதன் மூலம் நல்ல முறையில் நெல்லைக் கொள்முதல் செய்து தமிழகம் எங்கும் பசியோடு இருக்கக்கூடிய மக்களுக்கு அரிசி அளிக்கக்கூடிய வகையில் திட்டத்தை நிறைவேற்றியதற்காக இந்தத் துறை அமைச்சருக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த இலக்குக்கு உணவுப் பொருளைக் கொள்முதல் செய்யவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களோ அந்த இலக்கு கூடிய விரைவில் பூர்த்தியடைவதற்கான நல்ல திட்டங்கள் உருவாகி வருவதைக் காண்கின்ற நேரத்தில் சர்க்காரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த இரண்டு மாத காலமாக பல்வேறு மாவட்டங்களில் விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் விவசாயக் கருத்தரங்கை அமைத்து விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக வழிவகைகளையும் உரம் போன்றவைகளை நியாயமான முறையில் விவசாயிகளையும் பெறுவதற்கான வழிவகைகளையும் வகுத்துக் தந்திருக்கிறார்கள். அதனால் விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறார்கள். ஆறு மாதகாலத்திற்குள்ளாக சம்பா பயிருக்குப் பிறகு சர்க்கார் எதிர்பார்க்கக்கூடிய இலக்கு முடிந்துவிடும். முடிந்தவுடன் மேற்கொண்டிருக்கக்கூடிய உணவுப் பொருளை வெளிமார்க்கட்டில் விற்க வழி செய்தால் வியாபாரிகள் நல்ல முறையில் நடக்க வழி வகை ஏற்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். சர்க்கார் இந்தத் துறையை மேற்கொண்டிருப்பதால் வியாபாரிகளுக்கு வாய்ப்பே கிடைக்காது என்று கருதுகிறார்கள். இப்போதுகூட அந்தந்த மாவட்டங்களில் கொள்முதல் இலக்கு முடிந்து கட்டுப் பாடுகள் நீக்கப்பட்டவுடன் வியாபாரிகள் நல்ல முறையில் வியாபாரம் செய்து கொண்டிருப்பதைக் காண்கிறோம். அந்த முறையில் சர்க்காருடைய இலக்கு பூர்த்தியானவுடன்



மேற்கொண்டு வியாபாரிகள் உணவுப் பொருளை வியாபாரம் செய்ய வாய்ப்புத் தரவேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் சொல்ல ஆசைப்படுகிறேன். வெளி மாநிலங்களில் இருந்து பருப்பு வகைகளாக கடலைப் பருப்பு, உளுத்தம் பருப்பு, துவரை போன்றவைகளை சர்க்கார் நிறைய வாங்கி ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய சிறு சிறு வியாபாரிகளுக்கு 5 மூட்டை, 10 மூட்டை என்று விநியோகிக்கப்படுமானால் நிச்சயமாக பருப்பு விலைகள் குறைய ஏதுவாக இருக்கும். அந்த வகையில் கொடுப் போமானால் குறைந்த விலையில் பொதுமக்களுக்குக் கிடைப்பதோடு தட்டுப் பாடு இல்லாமலும் கிடைக்க வழி ஏற்படும்.

இப்போது சர்க்கரை தட்டுப்பாடாக இருக்கிற காரணத்தால் கல்கண்டு காய்ச்சுவதைச் சர்க்கரைத் தட்டுப்பாடு நீங்கும் வரை நிறுத்தி வைக்க ஆவன செய்யவேண்டும். கல்கண்டு காய்ச்சுவது முழுவதையும் தாற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும்.

தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் ரொட்டி செய்து அன்றாடம் விற்பனை செய்து குடும்பத்தை நடத்தக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அந்தக் குடும்பங்களுக்கு மைதா வழங்கக்கூடிய நிலை ஒரு வாரத்திற்குக்கூட போதாமல் இருக்கிறது. இதைப் பற்றிப் பரிசீலனை செய்து ரொட்டி செய்து விற்கக் கூடிய குடும்பங்களுக்கு தேவையான அளவு மைதா மாவு கொடுப்பதற்கு வழிமுறைகளைச் செய்யவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு. . . (மணி அடிக்கப்பட்டது).

* திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, சர்க்கார் கொள்முதலில் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும்கூட கொள்முதலில் நாம் நிர்ணயித்த எல்லையை அடைய சில சிரமங்கள் இருக்கின்றன. கிராமப்புறங்களில் சாதாரண விவசாயிகளிடத்தில் கொள்முதல் செய்வதில் தீவிரமான அக்கறையை அதிகாரிகள் செலுத்துகிறார்கள். பத்து ஏக்கருக்கு மேற்பட்டவர்களிடமிருந்து சரியான முறையில் கொள் முதல் செய்யப்படுவதில்லை. அதே சமயத்தில் ஒரு ஏக்கருக்கு விதிவிலக்கு என்று சொல்லிக்கொள்ளும் நிலையிலே கூட, விதி விலக்குக்கு உட்பட்ட விவசாயிகள்கூடத் தொந்தரவுக்கு ஆளாகிறார்கள் என்ற தகவல் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தக் கொள்முதல் முறையாக வெற்றியடைய வேண்டுமானால் மூன்று ஏக்கருக்கு விதிவிலக்குக் கொடுக்கவேண்டும். அதற்கு மேற்பட்டு இருக்கும் பத்து ஏக்கர் வரையில் லெவி அடிப்படையில் கொள்முதல் செய்யவேண்டும். பத்து ஏக்கருக்கு மேற்பட்டு இருந்தால் அவர்களுடைய விவசாயத் தேவை, குடும்பத் தேவை போக மீதி பூராவும் கொள்முதல் செய்ய வேண்டுமென்ற கொள்

[திரு. என். வரதராஜன்] [1967 ஜூலை 11

கையை உறுதியாக அமுல்படுத்த வேண்டும். இவ்வாறு செய்தால் இன்றைக்கு இருக்கக்கூடிய உணவு நிலைமையைச் சமாளிக்க இயலும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, இதை வெற்றிகரமாக நடத்த வெகு ஜன கமிட்டிகளை அமைப்பது குறித்து சர்க்கார் முடிவாக ஆலோசிக்க வேண்டுமென்பதை வற்புறுத்துகிறேன்.

இந்த சர்க்கார் வந்த பிறகும்கூட நாற்றம் எடுத்த அரிசி பல இடங்களில் கொடுக்கப்படுவதாகத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதற்கு அடிப்படையான காரணம் மொத்த வியாபாரிகள் லாபத்திற்காக இவ்வாறு உணவு தானியங்களை விநியோகிப்பது தான். இதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொன்னால் ஏற்கனவே வற்புறுத்தியதுபோல் ஸ்டேட் ட்ரேடிங் கார்ப்பரேஷன் மூலம் நம் கொள்முதலும் விநியோகமும் இருக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். பருப்பின் விலைகள் உயர்ந்து கொண்டேயிருக்கின்றன. இன்று நியாயவிலைக் கடைகள் மூலம் இந்தப் பருப்பை விநியோகிக்க முயற்சி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் கொள்முதலில் மிகவும் அக்கறையோடு பங்கெடுத்துக் கொள்ளவேண்டுமென்றால் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய பொருள்கள் இன்று உயர்ந்த விலையில் விற்றுக்கொண்டிருக்கின்றன. அப்படி அவை உயர்ந்து கொண்டிருப்பதால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். குறிப்பிட்ட அளவிற்கு கூட்டுறவு மூலமாகவோ அல்லது வேறு துறைகள் மூலமாகவோ அவர்களுக்கு வேண்டிய பொருள்களை நிர்ணயமான விலையில் விவசாயிகளுக்கு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சரவை கொள்கை ரீதியான ஒரு பிரச்சினையை விவாதிக்கவேண்டிய அவசியத்தில் இருக்கிறது. நகர பஞ்சாயத்துக்களில் ஆசிரியர்கள், சர்க்கார் சிப்பந்திகள், தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அங்கு நியாயவிலைக் கடைகள் இல்லை, ரேஷனும் இல்லை. உணவுக் கட்டுப்பாடும் இருக்கிறது. அவர்கள் இன்றையதினம் படி, இரண்டு, மூன்று ரூபாய் விலை கொடுத்து அரிசி வாங்கவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரதேசங்களுக்கு ஏதாவது ஒரு ரூபத்தில் உணவு விநியோகிக்கும் பொறுப்பை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டாமா? தட்டுப்பாடு உள்ள கிராமங்களும் இருக்கின்றன. சுய தேவைப் பூர்த்தி செய்து கொள்கிற கிராமங்களும் இருக்கின்றன. இந்தக் கிராமங்களைப்பற்றி பரிசீலனை செய்யவேண்டாமா? இன்றைய கொள்கையோடு இருந்துவிட்டால் போதும் என்பது சரியல்ல. ஆகவே, இந்தப் பிரதேசங்களுக்கு ஏதாவது ஒரு ரூபத்தில் உணவு கிடைக்க வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சர்க்கரை சம்பந்தமாக இன்றிருக்கிற நெருக்கடி பற்றி இங்கு அழுத்தமாக கூறினார்கள். இன்று கற்கண்டு காய்ச்சவில்லை பணம் காய்ச்சிக் கொண்டிருக்கிறார்கள். 100 ரூபாய்க்கு வாங்கி 400 ரூபாய்க்கு விற்கிறார்கள். ஆகவே, இதில் உறுதியான கொள்கையை அனுஷ்டிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசாங்கம் நம் கோட்டாவைக் குறைத்து விட்டது. ஆகவே,



1967 ஜூலை 11] [திரு. என். வரதராஜன்]

இருக்கும் சர்க்கரையையாவது சகல பகுதி மக்களுக்கும் கொடுக்க தீவிரமான ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருச்சி மாவட்டம் தவிர மற்ற மாவட்டங்களில் சர்க்கரை முறையாகக் கிடைப்பதில்லை, கார்ட் முறைகூட சரியாக இல்லை என்பது தான் இன்றைய நிலை. வாங்கும் கோட்டாவைக் கூட வியாபாரிகள் சரியாக மக்களுக்குக் கொடுப்பதில்லை. ஆகவே, நியாயவிலைக் கடைகள் மூலம் சர்க்கரை கொடுக்கப்படவேண்டும். கற்கண்டு கோட்டாவை தடைபடுத்தவேண்டும். பெரிய ஹோட்டல்களுக்கு கொடுக்கும் கோட்டாவைக்கூட குறைத்து விடலாம். சாதாரண டீக்கடைக்காரர்களுக்கு சர்க்கரை கிடைப்பதில்லை. அவர்கள் தான் வெளியில் மூன்று, நான்கு ரூபாய் கொடுத்து வாங்கி தொழில் நடத்தவேண்டியிருக்கிறது. கள்ள மார்க்கட் பெருகுவதற்கு அது காரணமாக இருக்கிறது. ஆகவே சிறிய டீக்கடைக்காரர்களுக்கு சர்க்கரையை அதிகப்படுத்தி, கற்கண்டிற்குக் கொடுப்பதைத் தடைப்படுத்தி, சர்க்கரையை விநியோகிக்கவேண்டும். சிறிய ரொட்டிக்கடைகளின் மைதா பிரச்சினையையும் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE: Hon. Temporary Speaker, Sir, I shall try to make my speech as brief as possible in order to save time.

We the members belonging to the Swatantra Party are the only persons who can say that the Government is going on the wrong path. Neither the Congress nor any other party can say that. The policy was started by the Congress Party and the present Government is pursuing it. I want to make it very clear that we completely disagree with the food policy of the Government. We want to make that clear. Tomorrow my constituency should not feel that I have not made such a statement.

During the question hour to-day the Food Minister asked me to point out specific instances. Because he made that statement on the floor of the House, I am constrained to give a reply on the floor of the House. I shall read a small extract from a letter which I have received from Coimbatore:—

"We have this day sent to you by registered parcel rice issued through a ration shop at Coimbatore. The rice specimen sent to you was supplied to the ration card holders linked with Coimbatore Staff Co-operative Society situated at Robertson Road in 13th Ward, R. S. Puram, Coimbatore. The price per kilo is 86 paise. This is not the variety that is supplied under the one-rupee-a-measure scheme of the Government. You are aware that Sri N. A. Parasuraman happends to be the councillor of the said ward. He obtained this sample from the buyer and handed over to us for onward transmission to you requesting you to exhibit the same in the Assembly."

[1967 ஜூலை 11

*மாண்புமிகு தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) : அதிகார பூர்வமான தகவல்களை மட்டும் சபையில் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன். கடிதத்தைப் படிப்பது பாராளுமன்ற முறைக்கு ஒத்துவராது என்பதால் அதிகார பூர்வமாக கிடைத்ததை மட்டும் படிக்கும்படி சொல்கிறேன்.*

DR. H. V. HANDE : Under what rule is the Temporary Speaker prohibiting me from reading the extract?

MR. CHAIRMAN (THIRU P. MALAICHAMY) : I shall give it after half an hour.

DR. H. V. HANDE : If I am doing anything unparliamentary, he can ask me.

THE HON. THIRU A. GOVINDASAMY : That copy should be made available to the Speaker.

THIRU R. PONNAPPA NADAR : Whenever an hon. Member reads any letter or extract, that document will have to be placed on the table of the House so that it can be made use of by the other Members who participate in the discussion.

DR. H. V. HANDE : I hope that these interruptions will not affect the time allotted to me.

With the due permission of the Chair, I pass on the specimen of rice that has been sent to me to the Hon. Minister for Agriculture.

(The hon. Member then passed on the packet.)

Such rotten rice has been sold in Coimbatore at 86 Paise per kilo. I request the House to take this into consideration. Now we are going in a particular direction. We want to nationalise everything. We want to procure and distribute as much rice as possible.

*மாண்புமிகு திரு. எ. கோவிந்தசாமி : இந்த அரிசி எந்த ரேஷன் கடையிலிருந்து வாங்கப்பட்டது என்ற தகவல் இருந்தால் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

DR. H. V. HANDE : I just now gave the name of the Society. It is the Coimbatore Staff Co-operative Society situated at Robertson Road in 13th Ward, R.S. Puram, Coimbatore.

My submission is that if we go on procuring and stocking, we will not succeed in protecting the stocks. That has been my argument for the past several years ever since I entered the Legislature and even now I am repeating that argument. There is not enough godown space in the Madras State, and the officers who are in charge of the storage of rice will not take that much interest which they will take if it belongs to them. Disinterestedness is creeping into it. The stock of rice in the godowns will steadily



1967 ஜூலை 11] [Dr. H.V. Hande]

deteriorate because nobody will take proper care of it. The previous Government and this Government also have taken upon themselves the heavy responsibility of collection, storage and distribution of rice. The Government have with them a stock of 5 to 6 lakh tonnes of rice. If the one-rupee-a-measure scheme is extended, larger quantities will have to be stored. There is a cry for supply at one rupee a measure and for extension of statutory ration. If this demand is to be satisfied, the Government will have to store about 45 lakh tonnes. If the entire work of storage and distribution is taken over by the Government, I have got the greatest fear that they may not be able to properly handle it. Even with the statutory rationing limited to Madras City and Coimbatore the consumers are not satisfied and the producers are not satisfied.

As far as the procurement policy is concerned, I have time and again stated in this House that because of that policy initiated by the former Government and pursued by the present Government, everybody is dissatisfied. There is a show of force by a number of officers. The ration officers in the cities and the procurement officers in the villages think that the customers are at their beck and call and a sense of officialdom is being thrust upon innocent persons. My submission is that it should not go on for long. The Government have procured stock on hand and they should remove rationing. If they fear that the stock is not enough, let them increase it. Once they feel that the safety mark is reached, I request the Government to remove control. I am making the request in the interest of the Government. I am not making the speech to attack the Government or to cause pain to the Government. I want to help the Government. I will be failing in my duty if I do not tell this House that unless the controls are removed, there is no salvation. If the Government remove rationing, we may be able to win the applause, good wishes and blessings of countless persons in this State.

*திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வந்திருக்கும்படியான இந்த மானியத்திலே அருமை நண்பர் கனம் வில்லியம் கொண்டு வந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது இருக்கும்படியான முக்கியமான விவாதம் என்ன நமு*
*வென்றால், சர்க்கார் வாணிகத்துறையிலே உணவு பொருள்களை பகல்*
*வியாபாரம் நடத்திக்கொண்டிருக்கும் விஷயத்தைப் பற்றிய 12–30*
*தோடு, சென்னை பால் பண்ணை--பால் வழங்கும் திட்டமும் இதிலே இருக்கிறது. அதோடு விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் திட்டமும் இணைக்கப்பட்டிருக்கிறது.*

*இப்போது நம் நாட்டிலே இருக்கும்படியான நிலையில் உணவுப் பொருள்கள் பற்றாத காரணத்தினால், சர்க்காரே இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்முதல் செய்து மக்களுக்கு நியாயமான விலையில் வழங்க வேண்டுமென்ற பெரிய பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்*

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 ஜூலை 11

கிறது. இப்போது கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடக்க முடியுமா? நடக்க முடியாதா? என்ற பிரச்சினைதான். வெற்றிகரமாக நடக்குமா, முடியாதா என்ற பிரச்னையைவிட, இது பெரிய சிக்கலான ஒரு பிரச்னை. ஏன்? சர்க்கார் இந்தத் துறையிலே தலையிடுகிற வேளையிலே, விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிற காரணத்தினால், விலைவாசிகள் கட்டுப்படியாகாது இருக்கிற காரணத்தினால், பட்டணத்தில் இருக்கிறவர்களுக்கும், கஷ்டப்படும்படியான தொழிலாளிகளுக்கும் வாங்கும் சக்தி இல்லாத மக்களுக்கும் உணவு தானியங்களை விநியோகிக்கும் நிலையில் வைத்திருக்கிறார்கள். எந்த இடத்திலே தவறு என்றால்—தவறு என்பது நான் இப்போது சொல்லிக்கொள்ளுவது அல்ல; 10-15 வருஷங்களாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்—விவசாயி, உற்பத்தி செய்பவன் சர்க்காருக்குக் கொடுக்கும்போது கட்டுப்படியான விலை சர்க்காரால் நிர்ணயிக்கப்படவில்லை; அதுதான் இப்போது இருக்கும்படியான பெரிய பிரச்சனை. சர்க்கார் நிர்ணயித்திருக்கும் விலைக்கும், வெளியிலே விற்றால் விவசாயிகளுக்குக் கிடைக்கும் விலைக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. சர்க்கார் நிர்ணயித்த விலையைவிட அதிகமாக, இரண்டு மடங்கு விலையில் வெளியே விற்கப்படுகிறது. அதை கள்ள மார்க்கெட் என்று கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லலாம்—அது பகிரங்க மார்க்கெட் என்று சொல்லுகிறேன். சர்க்கார் துறையில் இருக்கும் உணவு அமைச்சர் அவர்கள் அதைக்குறித்து, விலையை நாங்கள் தீர்மானம் செய்திருக்கிறோம், அந்த விலைக்குத்தான் விற்கப்படுகிறது என்று அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதிலேதான் பெரிய சிக்கலான பிரச்னை.

முதலிலே இந்த விலையைப் பொறுத்த வரையில், நியாயமான விலை—கட்டுப்படியாகும் விலை—கொடுப்பது மிக மிக அவசியம். சர்க்காருக்கு இருக்கும் கொள்கை என்னவென்றால், அவர்களுடைய திட்டம் என்னவென்றால்—அவர்கள் தேர்தலுக்காகச் சொன்னார்கள் என்று சொல்லவில்லை—ரூபாய்க்கு மூன்று படி அரிசி—பட்டணம் படி—கொடுக்கவேண்டும் என்பது. (குறுக்கீடு) ஆம்; படிப்படியாகத்தான். முதலில் ஒரு படி என்று ஆரம்பித்து ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுக்கவேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கை. ரூபாய்க்கு மூன்று படி அரிசி விற்கவில்லையா என்று சொல்லுகிறார்கள். ஆம்; விற்றது என்று நானும் சொல்லுகிறேன். நானே விற்றிருக்கிறேன். 1937, 1938-ல். ரூபாய்க்கு மூன்று படி விற்றோம். அப்போது விவசாயிக்கு உற்பத்திச் செலவு என்ன ஆயிற்று என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அப்போது இருந்த உற்பத்திச் செலவு இன்றைக்கு இருந்தால், ரூபாய்க்கு மூன்று படி என்ற விலையில் விவசாயி கொடுக்கவேண்டும் என்று சொன்னால் அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அப்போது ரூபாய்க்கு மூன்று படி விற்றபோது உற்பத்திச் செலவு ஏக்கருக்கு 30 ரூபாய். அப்போது ஒரு



1967 ஜூலை 11] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

மூட்டைக்கு நெல் 5 ரூபாய்—50 பட்டணம் படி கொண்ட மூட்டை நெல் 5 ரூபாய், அரிசி ஒரு மூட்டை 10 ரூபாய். நானே அந்த விலையில் வாங்கிச் சாப்பிடிருக்கிறேன். 30 ரூபாயாக இருந்த உற்பத்திச் செலவு இன்றைக்கு 300 ரூபாயிலிருந்து 350 வரையில் ஆகிறது ஏக்கருக்கு. 10 மடங்கு உற்பத்திச் செலவு உயர்ந்திருக்கும்போது, அப்போது அரிசியின் விலை 10 ரூபாய் என்றால் இப்போது 100 ரூபாய்க்கு விற்றால்தான் அது நியாயமான விலையாகும் என்று நியாயமாக இருக்கிறவர்கள், உண்மையான விவசாயிகள் ஏற்றுக்கொள்ளுவார்கள். கணக்குப் பார்த்தால், இப்போது உற்பத்திச் செலவு 10 மடங்கு ஆகியிருக்கிறது. பட்டணத்தில் உள்ளவர்களுடைய வாழ்க்கைப்புள்ளி உயர்ந்திருக்கிறது. 100 புள்ளி, 200 புள்ளி என்று சொல்லுகிறார்கள். ஏழை விவசாயிகளின் உற்பத்திச் செலவு எத்தனை புள்ளிகள் உயர்ந்திருக்கின்றன என்று யாரும் கணக்குப் போடுவது கிடையாது, யாரும் கேட்பது கிடையாது. ஏனென்றால் மாடு மாதிரி உழைத்துப் பயிரிட்டுக் கொடுப்பதற்கு விவசாயி இருக்கிறான். எந்த அரசாங்கம் வந்தாலும் விவசாயிகளை கவனிக்கிறோம், கவனிக்கிறோம் என்று வாயளவில் சொல்லுவதாக இருக்கிறதே தவிர, மனதாரச் செய்யும் நிலை இல்லை என்ற குற்றச்சாட்டைச் சாட்ட விரும்புகிறேன்.

1937-ம் வருஷத்தில் விவசாயிகள் உற்பத்திச் செலவுப் புள்ளி 100 என்றால் இன்றைக்கு 1,000 புள்ளியாக உயர்ந்திருக்கிறது. 1,000 புள்ளிகளுக்கு ஏற்ற அளவுக்கு, ஏழை விவசாயிகளுக்கு—உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு—கட்டுப்படியான விலை கிடைக்கவேண்டிய உத்திரவாதம் அளிக்க கடமையும், பொறுப்பும் சர்க்காருக்கு இருக்க வேண்டும் என்று நான் ஞாபகப்படுத்திக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நிலையில், பகிரங்க மார்க்கெட்டில் இருக்கும் விலை, மக்களுடைய வாங்கும் சக்திக்கும், விவசாய மக்களின் உற்பத்திச் செலவுக்கும், நாட்டிலே இருக்கிற பற்றாக்குறை நிலைக்கும் ஏற்ப இருக்கிறது அந்த விலை. அது நியாயமா என்றால் நியாயம் என்று ஏற்றுக்கொள்ள முடியாது. உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற நிலையில், விவசாயிகளுக்கு உற்சாகமூட்டும் திட்டங்கள் இருக்கின்றனவா? கேட்டால், இப்போது இருக்கும்படியான சர்க்கார் கொள்கை என்னவென்றால், உண்பவனைத்தான் கவனிக்கச் சர்க்கார் உத்திரவாதம் அளிக்கிறது, உண்டாக்குகிறவனைக் கவனித்துக்கொள்ளுவதாகத் தெரியவில்லை. உண்பவன்—பட்டணத்தில் இருப்பவர்கள், ஆலைத் தொழிலாளர்களெல்லாம்—உண்டு பலனை அனுபவித்துக்கொள்ளலாம். உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்கு பலன் நிச்சயமாக இல்லை. என்னுடைய வாதம் என்னவென்றால், உண்பவர்களுக்குக் கொடுக்கக்கூடிய மானியத்தை ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்தால், இந்தப்

பற்ருக்குறை நீங்கி எப்போதும் நல்ல முறையில் இருக்க முடியும் என்பதுதான். இந்த என்னுடைய எண்ணத்தைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்போது இருக்கும்படியான நிலையில் கொள்முதல் செய்கிருர்கள். கொள்முதலை எடுத்துக்கொள்வோம். ப்ரொக்யூர் மெண்ட் செய்வதில் நியாயம் இருக்கிறதா என்ருல், இதைவிட அக்கிரமமான, அநீதியான திட்டம் இருக்கவே முடியாது என்று வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். புள்ளி விவரத்தை வைத்துக்கொண்டு முன்ஞலே இதைச் செய்தார்கள், அதைச் செய்தார்கள் என்று திருப்பித் திருப்பிச் சொல்லுவதில் பிரயோசனம் இல்லை. இந்தத்தவறு நடந்து வருகிறது. யார் கொடுக்கிருர்களோ அவர்கள் கொடுக்கிருர்கள்; கொடுக்காதவர்கள் தப்பித்துக்கொள்கிருர்கள். நியாயமான, இன்ஞர் இவ்வளவு கொடுக்க வேண்டும் என்ற திட்டம் எப்போதும் ஏற்படவில்லை. கொடுக்காதவர்கள் தப்பித்துக்கொண்டு போய்க்கொண்டிருக் கிருர்கள். கொடுத்தவர்கள் மீண்டும் வற்புறுத்தப்பட்டு, கட்டாயப்படுத்தப்பட்டு கொள்முதல் செய்யப்படுகிறது. ஆகவே, தான் சர்க்காருடைய திட்டம் நியாயமான திட்டமாக, நல்ல திட்டமாக, நீதியான திட்டமாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு வருகிரேம். என் கொள்முதல் திட்டத்தின்கீழ் கொடுக்க மறுக்கிருர்கள் என்ருல், கொள்முதல் திட்டத்தின்கீழ் கொடுக்கப் படும் விலைக்கும் வெளியில் இருக்கும் விலைக்கும், இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. வெளியில் விற்ருல் 100 ரூபாய் கிடைக்கும் ; சர்க்கார் நிர்ணயித்த விலை 50 ரூபாய்தான். அமைச்சர் அவர்கள் கேள்விக்களுக்கு பதில் சொல்லும்போது, நாம் நிர்ணயம் செய்திருக்கும் அந்த விலைதான் வெளியில் இருக்கிறது என்று சொன்ஞர்கள். அது எப்படி இருக்கிறது என்ருல், முழுப் பூசனிக்காயைச் சோற்றிலே மறைப்பது மாதிரி இருக்கிறது. முழுப் பூசனிக்காயைச் சிறு சோற்றில் மறைக்க முயற்சி செய்கி ருர்கள். நாங்கள் வைத்த விலைதான் வெளியில் இருக்கிறது என்று அவர்கள் சொல்லுவார்களாஞல், தீப்பறவை தன்னுடைய தலையை மணலில் புதைத்துக்கொண்டு உலகமே தெரியாமல் இருக்கும் நிலையில் இருப்பது போலவே இருக்கும். இதே நிலையில், இன்ஞெரு உத்திரவு. எங்கே போஞலும் அரிசி கொண்டு போகலாம். அரிசி தான் எங்கும் கிடைக்கிறதே, ஏன் இந்த உத்திரவு? மாவட்டத் திற்குள் எங்கு வேண்டுமாஞலும் கொண்டு போகலாம் என்று ஒரு உத்திரவு. இதெல்லாம் கொள்முதலிலே சரியான திட்டம் இல்லாத காரணத்திஞல்தான்.. சர்க்காரே இந்தத் திட்டத்தைப் பூர்ணமாக நடத்தட்டும், நான் ஏற்றுக்கொள்கிறேன் இதற்குப் பரிகாரம் என்ன என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சௌகரியமான இடத்தில் தனிப்பட்ட வியாபாரிகளிடத்தில் செல்லுவது, ரைஸ் மில்காரர்களிடத்தில் ஒப்படைப்பது, அரிசியைக் கெடுத்து வைப்பது என்று ஏற்படுவதால், உணவு அமைச்சராக இருக்கிறவர் முன்பு செய்த காரியத்தை இப்போது





டாக்டர் ஹாண்டே செய்து கொண்டிருக்கிருர். பொறுப்பு இல்லாமல் இப்படி கெட்ட அரிசியைக் கொடுப்பதைத் தடுப்பதற்கு இதுவரைக்கும் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? இம்மாதிரி கெட்ட அரிசி கொடுப்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டால் சர்க்காருக்கு எந்தவிதமான சங்கடம் ஏற்படும் என்பது அவர்களுக்குத் தெரியும். முன்ஞலேயே இருக்கிறது, ஒரு ஏக்கருக்குக் குறைவாக பூமி உள்ளவர்கள் கொள்முதலிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிருர்கள். ஐந்து ஏக்கர் வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஒவ்வொரு ஏக்கராகப் பிரித்துக்கொள்ள லாம். மூன்று ஏக்கர் வைத்துக்கொண்டிருப்பவர்கள் ஒவ்வொரு ஏக்கராவாகப் பிரித்துக்கொள்ளலாம். எங்களுடைய காங்கிரஸ் சர்க்கார்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டையே நான் இப் பொழுது திருப்பி ஆளும் கட்சியினருக்குச் சொல்ல வேண்டி யிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஒரு குடும்பத்தில் ஐந்து பேர்கள் இருந்தால், ஒவ்வொருவரும் தனித்தனியாக ஒரு ஏக்கர் பிரித்துக்கொண்டு விடலாம். 13 லட்சம் ஏக்கர் நிலங்களில் உற்பத்தியாகக்கூடிய நெல்லை, அரிசியை, 5 ஏக்கர் வைத்திருப்பவர்கள் சர்க்காருக்குக் கொடுத்தது போக, பாக்கியிருப்பதை பகிரங்க மார்க்கெட்டில் விற்பதை சர்க்கார் ஏன் அனுமதிக்கக் கூடாது என்பதுதான் கேள்வி அல்லது வேண்டுமாஞல் சர்க்காரே தானியப் போக்குவரத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும். அல்லது ரைஸ் மில்கள் பூராவும் சர்க்காரே எடுத்துக்கொண்டு, விநியோகம் பூராவும் சர்க்காரே செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நிலைமை கட்டுக்கடங்கும். அப்படி யில்லாமல் ஒரு பக்கம் ஓட்டைகளை விட்டுவிட்டு இருந்தால், நிலை மையை எப்படி சமாளிக்க முடியும் ? மக்கள் கஷ்டப்படுகிற நிலைமை தான் ஏற்படும். ரைஸ் மில்களை எடுத்துக்கொள்வது எந்த விதத்திலும் கஷ்டமான காரியமல்ல. தேசியமயமாக்க வேண்டும் என்ற நிலையிலேகூட நான் சொல்ல வரவில்லை. ஏனென்ருல், நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியிருக்கும். ரைஸ் மில்களை சர்க்காரே வாடகைக்கு எடுத்துக்கொண்டு, அந்த கோடவுன்களை சர்க்கார் உபயோகப்படுத்தி, ரைஸ் மில்களில் ஆகக்கூடிய அறை கூலியை அவர்களிடம் கொடுத்து, சர்க்கார் உத்தியோகஸ்தர்களையும், ப்ரொக்யூர்மெண்டு ஆபீஸர்களையும் அங்கேயே வைத்துவிடலாம். தமிழகத்தில் 7,000 ரைஸ் மில்கள் இருக்கின்றன. அப்படிக் கொள் முதல் செய்யும்படியான நெல்லைச் சேமிப்பதற்கு அந்தக் கிடங் குகள் உதவியாக இருக்கும். அதஞல் அரிசியோ, நெல்லோ வேறு இடங்களுக்குப் போகும்படியான நிலை ஏற்படாது. இப்படி சர்க்காரே பொறுப்பு ஏற்று நடத்திஞல் நலமாக இருக்கும்.

கொள்முதலில் எத்தகைய திட்டத்தை கையாள வேண்டும் ? லெவி ஸிஸ்டம் என்பது ஒரு குத்து மதிப்பாக ப்ரொக்யூர்மெண்டு செய்வது. கொள்முதலிலே இரண்டு வகைகள் இருக்கின்றன. இன்டென்ஸிவ் ப்ரொக்யூர்மெண்டு அண்டு லெவி ஸ்ஸிடம் ஆப்

ப்ரொக்யூர்மெண்டு. இன்டென்ஸிவ் ப்ரொக்யூர்மெண்டு என்றால், கட்டாயக் கொள்முதல் செய்வதிலே பெரிய தகராறுகள் இருக்கின்றன. அவைலபிள் சர்பிளஸ் என்று சொல்லுகிறார்கள். மார்கெடபிள் சர்பிளஸ் என்று சொல்கிறார்கள். வெளியே விற்கக்கூடிய அளவை யார் நிர்ணயம் செய்வது? கிராமக் கணக்குப் பிள்ளைதான் நிர்ணயம் செய்வார். அது அவரவர்கள் செல்வாக்கைப் பொறுத்திருக்கிறது. எனக்கு செல்வாக்கு இருக்குமானால் என்னிடத்திலுள்ள அவைலபிள் சர்பிளஸ் 10 மூட்டை என்று நிர்ணயம் செய்வார். எனக்கு செல்வாக்கு இல்லை என்றால், அதே 10 மூட்டை என்பது 50 மூட்டைகளாக மாறிவிடும். இது எந்தவிதத்தில் நியாயம்? ஆகவே, நான் சொல்லக்கூடிய ஆலோசனை என்னவென்றால், இத்தனை ஏக்கர் பூமி உள்ளவர்கள் வெள்ளாண்மையில் ஒரு பகுதியை இவ்வளவுதான் கொடுத்தாக வேண்டும் என்று குத்து மதிப்பாக ஒரு அளவு இருக்க வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும், எத்தனை ஏக்கர் பூமி இருக்கிறதோ, அந்த பூமியினுடைய தரத்திற்குத் தகுந்தபடி, வெள்ளாண்மைக்குத் தகுந்தபடி, ஏக்கராவுக்கு, இவ்வளவு நெல் மூட்டை கொடுத்தாக வேண்டும் என்பதை நிர்ணயித்து விடலாம். அதைத்தான் நான் ஏற்கனவே சொன்னேன். ஒரு ஏக்கர் பூமி வைத்திருப்பவர்களுக்கு வேண்டாம் என்று விலக்கு அளித்திருப்பதை நான் வரவேற்றாலும் கூட நாம் கொடுத்திருக்கக்கூடிய டார்ஜெட்டை, லட்சிய அளவை அடையவேண்டுமென்றால், 7 லட்சம் டன் என்று சொல்கிறார்களே அந்த அளவுக்கு நெல் வந்து சேரவேண்டுமென்றால், 2 ஏக்கர் உள்ளவர்கள் ஏக்கராவுக்கு இரண்டு மூட்டை வீதமும், 3 ஏக்கர் உள்ளவர்கள் ஏக்கராவுக்கு 3 மூட்டை விதமும், அதாவது 3 இண்டு 3, 9 மூட்டை, நான்கு ஏக்கர் உள்ளவர்கள் 4 இண்டு 4, 16 மூட்டை இதுமாதிரி 5, 6, 7 ஏக்கர் வரையிலும் பூமி வைத்திருக்கக்கூடியவர்களிடம் ப்ரொக்யூர் செய்யலாம். அதிகமாக வந்தவுடனே, ஏக்கராவுக்கு 6 மூட்டைக்குமேல் போகாமல், பாக்கியிருப்பதில் அவர்களுக்கு ஆகும்படியான விவசாயச் செலவு, இதரச் செலவுகளுக்காக கொஞ்சம் வைத்துக்கொண்டு, மீதியை அவர்கள் யாருக்கு வேண்டுமானாலும், பகிரங்க மார்க்கெட்டில் விற்றுக் கொள்ளலாம் என்ற நிலை ஏற்படுமானால், விவசாயிகளுக்கு உற்சாகம் ஏற்படும். அவர்கள் அதிகமாக உற்பத்தி செய்வார்கள்.

மக்களுக்கு நல்ல அரிசி கிடைக்கவேண்டும். இப்பொழுது சர்க்கார் கொடுக்கும்படியான அரிசி எந்தக் தரத்தில் இருக்கிறது என்பதை டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டுவந்து சமர்ப்பித்ததிலிருந்து பார்த்துக் கொள்ளலாம். சர்க்கார் கொடுக்கும்படியான அரிசி தனி ரகமான அரிசியாக இருக்கிறது. விவசாயிகள் கொடுக்கும் அரிசி நல்ல ரக அரிசியாக இருக்கிறது. விலையைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. இப்பொழுது விலை கொடுத்து வாங்குவதில் யாருக்கும் ஆட்சேபணை கிடையாது. ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்கும் திட்டம் ஒரு பக்கம் இருக்கட்டும். அந்தத் திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். அரிசி விலை





குறைந்தால் மற்ற பொருள்களின் விலை குறையும் என்று சொல்லப்படுகிறது. அரிசி குறைந்த விலையில் கிடைத்தால், பருப்பு, உப்பு, புளி, மிளகாய் குறைந்த விலையில் கிடைக்கும் என்ற ஒரு கருத்து பழைய கருத்து. அரிசி விலை குறைந்தால் பருப்பு போன்ற மற்ற பொருள்களின் விலை குறையும் என்று 20, 25 வருஷங்களுக்கு முன்னால் பெரிய பொருளாதார நிபுணர்கள் சொன்னார்கள். அப்பொழுதிருந்தே நான் அதை மறுத்துக்கொண்டு வருகிறேன். அரிசி விலை குறைந்தால், மற்ற பொருள்களின் விலை ஏறிக்கொண்டுதான் இருக்கிறது. இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப்பிறகு நிலைமைகளெல்லாம் மாறியிருக்கிறது. பருப்பு, உப்பு, புளி, மிளகாய் போன்ற பொருள்களின் விலை ஏறிக்கொண்டுதான் இருக்கிறது. இப்பொழுது ஆளும் கட்சியினராக இருப்பவர்கள் அப்பொழுது விலைவாசிப் போராட்டம் நடத்தினார்கள். 2, 3 பங்கு விலை ஏறியிருக்கிறது. தூங்குகிறவனை தட்டி எழுப்புகின்ற மாதிரி அவர்கள் விலைவாசிப் போராட்டம் நடத்தினார்கள். (குறுக்கீடு) இப்பொழுது இருக்கிற நிலையைத்தான் இப்பொழுது பேசுகிறோம். இப்பொழுது விலைவாசி குறைந்திருக்கிறதா, இல்லையா என்பது கேள்வி. இப்பொழுது ஒரு கிலோவுக்கு 10 பைசா குறைந்த விலையில் அரிசி போடுகிறார்கள். அதே நிலையில் பாக்கியிருக்கும்படியான பருப்பு, உப்பு, புளி, மிளகாய் போன்ற பொருள்களின் விலை குறைந்திருக்கிறதா என்றால், குறைந்திருப்பதாகத் தெரியவில்லை, ஏறித்தான் இருக்கிறது. மாநில மக்களுக்கு நல்லது என்று அரிசி விலையைக் குறைத்துப் போடுகிறார்கள் என்றால், பாக்கியிருக்கும் பொருள்களுடைய விலை குறைந்ததாகத் தெரியவில்லை, அதிகமாகிக்கொண்டுதான் இருக்கிறது என்பதைத்தான் பார்க்கிறோம். அதை யாரும் மறுக்க முடியாது. ரேடியோவில்கூட விலையைச் சொல்வதை நிறுத்தி விட்டார்கள். அவர்கள் சொல்வதற்கும், மார்க்கெட்டில் கிடைப்பதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. ஆதலால்தான் நிறுத்திவிட்டார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் மத்திய அரசாங்கத்தினுடைய பொருளாதாரத் திட்டங்கள் என்றும், அதை அகற்றுவதற்கு அரசாங்கம் லாப வேட்டைக்காரர்களை கடுமையாக தண்டிக்கவேண்டும், சொத்துக்களை பறிமுதல் செய்யவேண்டும், பிரைஸ் வேஜஸ், டிவிடெண்டு போன்றவைகளையெல்லாம் ஃப்ரீஸ் செய்யவேண்டும் என்ற ஒரு யோசனையை மத்திய அரசு டெப்யூடி பிரைம் மினிஸ்டர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த யோசனையை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆதரிக்கிறார்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்கார்மீது பழிபோட்டு, அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்கிறீர்களா என்று கேட்கிறார்கள். அவர்கள் சொன்னதையெல்லாம் இவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்று நான் மிகவும் பணிவோடு கேட்கிறேன். தப்பித்துக்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 ஜூலை 11

கொள்வதற்கு மத்திய சர்க்கார் பேரில் பழி போடுகிறார்கள் மத்திய சர்க்கார் சொல்வதையெல்லாம் இவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? மத்திய சர்க்காரிடம் வட்டியைத் தள்ளிகொடுங்கள், அசலைத் தள்ளிக்கொடுங்கள், எழுச்சி நாள் கொண்டாடுவோம் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அது பிரச்சினை இல்லை. இப்பொழுது விலைவாசியைப்பற்றி நான் பேசிக் கொண்டிருக்கிறேன். அரிசி விலை குறைந்தால், மற்ற பொருள்களின் விலை குறையும் என்று சொல்லப்பட்டதே, அப்படி குறையவில்லை என்றுதான் சொல்கிறேன். "நாங்கள் வந்தவுடனேயே விலைவாசி குறையும், படிப்படியாக இறங்கும் அரிசி குறைந்த விலைக்குப் போடுவோம்" என்றெல்லாம் சொன்னீர்களே நீங்கள் அதற்கு என்ன செய்துவிட்டீர்கள் என்று நான் கேட்டால், கல்கத்தா போக வழி எங்கே என்று கேட்டால், பம்பாய் போக வழி இருக்கிறது என்று சொல்வது நன்றாக இருக்காது. எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரைச் சொல்லி பிரயோசனம் இல்லை. இப்பொழுது நீங்கள் வைத்திருக்கக்கூடிய நிலை என்ன? இப்பொழுது நீங்கள் ஆட்சியில் இருக்கும்பொழுது விலை இறங்கியிருக்கிறதா என்றால், இல்லை. விளக்கெண்ணெயைத் தவிர, மற்ற எல்லா பொருள்களின் விலையும் ஏறியிருக்கிறது. விலை இறங்கியிருக்கிறது என்றால் அதற்கான புள்ளி விவரங்களை வைக்க வேண்டும். இல்லாவிட்டால் என்னோடு வெளியே வாருங்கள் மார்க்கெட்டுக்குப் போகலாம். முன்பு என்ன விலை, இப்பொழுது என்ன விலை என்று விசாரிக்கலாம். விலை குறைந்திருக்கிறது என்று நிரூபிக்கப்பட்டால், நான் உங்களிடம் அடிபணிந்து மன்னிப்பு கேட்கத் தயாராக இருக்கிறேன். இப்பொழுது விலை ஏறியிருக்கிறதே, காரணம் என்ன என்பதைப்பற்றி நன்றாக சிந்தித்து ஆராயவேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்லுகிறேன். குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. குற்றம் சாட்டின பெருமை எனக்கு வேண்டாம். நாம் செய்யும்படியான காரியங்கள் நல்ல முறையிலே, சிறந்த முறையிலே, மக்களுக்கு நன்மையான முறையிலே நடக்கிறதா என்பதைத்தான் பார்க்க வேண்டும். குற்றச்சாட்டு என்பதற்காகச் சொல்லவில்லை. எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரைக் காட்டித் தப்பித்துக்கொள்ள முடியாது. 'நீங்களே சொல்கிறீர்கள், அதைவிட எங்களுக்குச் சக்தி இருக்கிறது, மத்திய சர்க்காரை அடக்கும்படியான சக்தி இருக்கிறது, அவர்களைச் சமாளிப்பதற்குச் சக்தியும், தைரியமும், அந்தஸ்தும் உடையவர்கள் நாங்கள்' என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அப்படியிருக்கும்பொழுது என் மத்திய சர்க்கார்மீது பழி போடவேண்டும் என்பதுதான் கேள்வி. இது மாதிரி நிலையில் நீங்கள் என்ன திட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் எதிர்கட்சியினராக இருக்கும் பொழுது இந்தப் பிரச்சினையைப் பற்றி எப்படியெல்லாமோ பேசியிருக்கிறீர்கள். தரத்தைப்பற்றி பொருள்களைக்கொண்டு சபையில் காட்டியிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் ஆளும் பொறுப்பில் இருக்கிறீர்கள். விலைவாசி



1967 ஜூலை 11] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

குறையவில்லையே? கொள்முதல் திட்டத்தை நீங்கள் வெற்றிகரமாக நடத்த முடியவில்லையே? நீங்கள் கொள்முதல் செய்யும் முறை ஏழை மக்களுக்கு, விவசாயிகளுக்கு நன்மை செய்வதாக அமைந்திருக்கிறதா? வங்காளத்தில் விலை ஜாஸ்தி என்றால், அங்கே போலீஸை வைத்து ப்ரொக்யூர்மெண்ட் செய்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இங்கே என்னவோ தயவு தாட்சண்யம் காட்டி, கெஞ்சிக்கேட்டு ப்ரொக்யூர்மெண்ட், செய்வது மாதிரி. ஆயிரக்கணக்கான போலீஸ்காரர்களை வைத்துக்கொண்டு, ஏழை மக்களிடம் பதுக்கல், பதுக்கல் என்று சொல்லிக் கொள்முதல் செய்கிறார்கள். எங்கே போய் பதுக்கல் என்று சொல்லுகிறார்கள்? விவசாயியினுடைய களத்து மேட்டிலே, அவனுடைய வீட்டிலே வைத்திருக்கும் தானியத்தைப் பதுக்கல் என்று சொல்லி எடுக்கிறார்கள். விவசாயி, களத்து மேட்டிலும், வீட்டிலும் இல்லாது வேறு எங்கே கொண்டு வைப்பான் தன்னுடைய தானியத்தை? இதிலே இன்னும் தோழர்கள் அனுப்பிய லிஸ்டை வைத்துக் கொண்டு செய்கிறோம் என்கிறார்கள். இன்னொரு இடத்தில் தோழர்கள் பார்த்து இங்கே பூச்சி விழுந்துவிட்டது என்று சொன்னால், ப்ரொக்யூர்மெண்ட் அங்கே கிடையாது. என்னுடைய குற்றச்சாட்டு என்னவென்றால், கொள்முதல் திட்டம் நியாயமாக, கண்ணியமாக, விவசாயிகளுக்குத் தொந்தரவு இல்லாமல் நடத்தப்பட வேண்டும். முன்னால் இருந்த சர்க்கார் சரியாகச் செய்து கொண்டு வந்தார்கள், அப்பொழுது அதிருப்தியே இல்லை என்று சொல்லவில்லை. விவசாயிகளுக்கு எந்த சர்க்கார் இடைஞ்சல், தொந்தரவு செய்கிறதோ அது நிலைக்காது என்கிற பாடத்தை நாங்கள் கற்றுக்கொண்டிருக்கிறோம் (ஆளும் கட்சியிலிருந்து ஆரவாரம்) உங்களுக்குந்தான் அது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்தப் பலன் இன்னும் 3, 4 வருஷத்திற்குப் பிறகு கிடைக்க இருக்கிறது. ஆகவே, இந்தக் கொள்முதல் வேண்டவே வேண்டாம் என்பது எங்கள் கட்சியினுடைய நோக்கம் இல்லை. கொள்முதல் வேண்டும் ஆனால், அதே நேரத்திலே விவசாயிகளுக்கும் ஊக்கம் இருக்கவேண்டும். உற்பத்தி பெருக வேண்டும். அதற்காகத்தான் சொல்லுகிறேன், அதை ஒரு லெவி திட்டமாக வைத்து அதன்மூலம் வசூல் செய்து அதையும் சர்க்காரே எடுத்து நடத்தினால், நலமாக இருக்கும் என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன்.

முன்னால் போனஸ் கொடுக்கப்பட்டது. இப்பொழுது சர்க்கார் வைத்திருக்கும் விலை ரூ. 40, 42, 45 என்று ரகவாரியாக இருக்கிறது. போனஸைச் சேர்த்து 43, 54, 48 என்று க்விண்டாலுக்கு இருக்கிறது. அதை இப்பொழுது அதிகப்படுத்த வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஏற்கனவே இருக்கும் 43, 45, 48 என்பதுடன் நான்கு ரூபாய் சேர்த்து விற்கவேண்டும், சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். போனஸாக மத்திய சர்க்கார் கொடுக்கும் நான்கு ரூபாயை இணைத்தால், ஓரளவு விவசாயிகளுக்கு விலை

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 ஜூலை 11

கூட்டிக் கொடுத்ததாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ளு
கிறேன். ஆகவே, இந்த மாதிரிவகைகளில் சர்க்கார் விவசாயி
களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். கட்டுபடியாகும் விலை
கொடுக்க வேண்டும். கொள்முதலிலே சரியாகச் செய்ய வேண்டும்
இப்பொழுது ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்துக்கள் இருக்
கின்றன. விவசாயிகளுக்குப் பட்டாக்கள் இருக்கின்றன.
டிமாண்டு என்ன என்று இருக்கிறது. பஞ்சாயத்து போர்டு
ஆபீசிலேயே அதை ஒட்டிவிடவேண்டும். சர்க்காரிடத்தில்
சரியான கணக்கு இருக்கிறதோ என்னவோ தெரியாது, முன்புகூட
கோயம்பத்தூரிலிருந்து வேறு ஸ்டேஷனுக்கு அனுப்பியதில்
ஏதோ தவறு ஏற்பட்டு ரூ. 20,000 நஷ்டமாகி விட்டது என்று
பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டியில்கூட வந்தது. (குறுக்கீடு)
யார் தப்புச் செய்தால் என்ன, தப்பு தப்புத்தானே. ஆகவே,
இந்த வாணிபத்தை வெளியாரிடம் விடாமல், சர்க்காரே எடுத்து
நடத்த வேண்டும். இந்தச் சட்டசபை கலைவதற்கு முன்னால்
கொள்முதலில் இத்தகைய முறை கையாளப்படும் என்று
விவசாயிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அவர்கள்
அதை உணர வேண்டும். இவ்வளவு சர்க்காருக்குக் கொடுக்க
வேண்டும் என்பதை அவர்களுக்கு முன்கூட்டியே அறிவித்து
விட்டால், ஓரளவு அவர்களும் நியாயமாக நடக்க தயாராக
இருப்பார்கள். அதற்கும் மேல் யாராவது தவறுகள் செய்தால்
தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்னை மாதவரம் பால் பண்ணையைப்பற்றி அறிக்கை கொடுத்
திருக்கிறார்கள். இந்த அறிக்கையைப் பார்த்தால், நஷ்டத்தைக்
கொடுத்துக்கொண்டு வருகிறது என்று தெரிகிறது. நஷ்டம்
இல்லாமல் நடத்தவேண்டிய பொறுப்பு சர்க்காருக்கு இருக்கிறது.
ஆனாலும், அது ஒரு 'ஒயிட் எலிபெண்ட்' என்று சொல்லு
வார்களே, அதுபோல இருக்கிறது, சர்க்கார் எடுத்திருக்கிறது.
உற்பத்திச் செலவும் அதிகமாக ஆகிறது. தனிப்பட்ட விவசாயிகள்
உற்பத்தி செலவு எக்கச்சக்கமாக ஏறியிருக்கிறது என்று சொல்
லும்போது, சர்க்காரே எடுத்துச் செய்வதில் இன்னும் அதிக
மாகத்தான் இருக்கும். அதேதான் இந்தப் பால் பண்ணையைப்
பொறுத்தும் இருக்கிறது. ஒரு லிட்டர் பால் வெளியிலே 1½
ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அந்த நிலையில் ஏழை எளியவர்கள்
குழந்தைகளுக்கு எப்படிப் பால் கொடுக்க முடியும்? குடும்பம்
நடத்துகிறவர்கள் எப்படிக் குழந்தைகளைப் போஷாக்காக
வைத்துக் கொள்ள முடியும்.

இன்னொரு ஆலோசனையும் சொல்லுவேன். நம்முடைய தேசத்
தில் தானிய உற்பத்தியைமட்டும் பெருக்கிப் பிரயோசனம் இல்லை.
பால், பழ வகைகளைக் கணக்கெடுப்பதே இல்லை. தானியத்தை
மட்டும் உற்பத்தி செய்கிறோம், உற்பத்தி செய்கிறோம் என்கிறோம்.
பல இடங்களிலும் இந்தக் கருத்தை நான் சொல்லும்போது,
தமாஷாகப் பத்திரிகைகளில் எழுதினார்கள். சாப்பாட்டுக்கே
வழியில்லாதபோது, கருத்திருமன், பாலும் பழமும் வாங்கிச்
சாப்பிடச் சொல்கிறார்களே என்று. நான் வாங்கிச் சாப்பிடச்



1967 ஜூலை 11] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

சொல்லவில்லை. ஒவ்வொரு விவசாயியும், இவற்றை உற்பத்தி
செய்து, இவற்றைப் பெருக்கினால், அதனால் தானியத்தின்
தேவையும் குறைந்து போகும். அதோடு சத்துள்ள உணவுப்
பொருள்களும் அதிகமாகக் கிடைக்கும். பாலும், பழமும்
கிடைக்கும். இப்பொழுது சர்க்காருடைய ஸ்டேட் ட்ரேடிங்கிலே
கூட ஹார்ட்டிகல்சருக்கு, பழவர்கங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும்
கொடுத்தால் நலமாக இருக்கும். பலவகையான கடன் திட்டங்
களெல்லாம் வைத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நல்ல
முறையில் ஏழை எளிய விவசாயிகளுக்குக் கிடைக்கும் வகையில்
செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, திரு. வில்லியம்
கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவைத் தலைவர் அவர்
களே, இந்த மானிய விவாதத்தின்போது, எல்லா உறுப்பினர்
களும் நல்ல, ஆக்கப்பூர்வமான கருத்துக்களை வழங்கியிருக்கிறார்
கள். முதலிலே நான் அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்ள
வேண்டும். சாதாரணமாக உணவு சம்பந்தமான விவாதங்களை
இந்த மாமன்றத்திலே எவ்வளவோ காரசாரமானதாக நடத்தி
யிருக்கிறார்கள். இந்த மன்றத்திலே சர்க்காருடைய உணவுத்
துறையின்மீது கண்டனங்களைச் சொல்ல முடியாத அளவு
விவாதம் அமைந்திருக்கிறது. இன்றைக்கு இந்த அரசாங்கம்
வந்து மூன்று, நான்கு மாதங்களில், அலைக்கழித்துக் கொண்
டிருந்த இந்தப் பிரச்சினையை நல்ல முறையில் சமாளித்
திருக்கிறது என்பதைப் பெருமையாக எடுத்துக் கொள்ள
வேண்டும். இரண்டொரு பேச்சுக்கள் காரசாரமானதாகத்
தோன்றலாம், ஆனால் அப்படிப்பட்ட தோற்றத்திற்குச்
சமாதானம் சொல்ல முடியும். பொதுவாக, இந்த அரசாங்கத்தின்
கொள்கை இந்த மாமன்றத்திலே வரவேற்கப்பட்டிருக்கிறது.
தமிழ் நாட்டில் மூன்றரைக் கோடி மக்களும், மாண்புமிகு முதல்
அமைச்சர் கொண்டு வந்திருக்கும், ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி
என்கிற திட்டத்தைப் பாராட்டுகிறார்கள். அதனால் இன்றைக்குப்
பலன் பெறும் சென்னை நகரமும், கோவை நகரமும் மட்டுமல்ல,
தமிழகத்திலே, இங்கே மட்டுமல்ல, இந்தியாவிலேயே எல்லாப்
பத்திரிகைகளும் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். டெல்லி
மாநகரத்திற்கு நான் சென்றிருந்தபோது, அங்கே ஆந்தர நாட்டு
முதல் அமைச்சர் திரு. பிரம்மானந்த ரெட்டியும், கேரள முதல்
அமைச்சர் திரு. நம்பூத்ரிபாடும், இன்னும் வட நாட்டைச் சேர்ந்த
வேறு பல முதல் அமைச்சர்களும், இதைப் பெருந்திட்டமாகவே
இருக்கிறது என்று, அண்ணா அவர்களுடைய அரசாங்கத்திற்குப்
பெரிய பாராட்டுதல்களை மனமுருக—உபசாரத்திற்காகச் சொன்
னது அல்ல—அனுபவம் பெற்றவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
அது மட்டுமல்ல, மாநிலத்திலே எல்லாப் பத்திரிகைகளும் இந்தப்
பெருங்காரியத்தை வரவேற்றிருக்கின்றன பொருளாதார விளைவு
களைப் பற்றிக் கவலைப்படாமல், மனோதிடத்துடன், சாதாரண
மக்களுக்குக் குறைந்த விலையில் அத்யாவசியத் தேவையான
அரிசியைக் கொடுக்க முடியும் என்று காட்டியவர் உலகத்திலேயே

நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் என்பதைத் தமிழகப்
பத்திரிகைகளெல்லாம் வரவேற்றிருக்கின்றன. அப்பத்திரிகை
களுக்கு, உலகத்திலேயே அரசாங்கம் ஏற்றுச் செய்யும்
முயற்சிக்குப் போாதரவு பெற்றிருப்பது தமிழக அரசு என்ப
தால், இந்த மன்றத்திலே அவர்களுக்கு நன்றியையும், பாராட்டு
தலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தத் துறையில் இந்த மூன்று மாதகாலமாகச் செய்யப்
படுகிற திட்டம் இந்த ஆண்டு முடிவுக்குள்ளே, புற நகரங்
களுக்கும், தாம்பரம், பரங்கிமலை, திருவொற்றியூர் போன்ற இடங்
களுக்கும் அடுத்த கட்டமாக, 'குடும்பக் கார்டு' இருக்கும்
இடங்களுக்கும் நிதி நிலைக்குத் தக்கப்படி விஸ்தரிக்கப்படும்.
அரசாங்கத்தினுடைய இந்த விநியோக முறையில் நண்பர் எதிர்க்
கட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த உற்சாகம் காட்டினார்கள்.
நண்பர் ஹாண்டே அவர்கள் அரிசிப் பொட்டலம் ஒன்றை
எடுத்துக் காட்டியிருப்பதில் ரொம்ப சந்தோஷம், உலகமே அதில்
அடங்கியிருப்பது போல். உணவு அமைச்சராவர்கள் முன்பு செய்த
பாணியை அவர்கள் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். திரு.
ஹாண்டே அவர்கள் கோயம்புத்தூர் 13-வது வட்டத்திலிருந்து
அரிசிப் பொட்டலம் ஒன்றைக் கொண்டுவந்து காண்பித்தார்கள்.
அது 13-வது வட்டத்திலிருந்து விநியோகிக்கப்பட்டது என்பதாக
அவர்கள் சொன்னார்கள். கண்டிப்பாக இதைக் கவனிக்க
அரசாங்கம் சிக்கிரம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்று
சொல்லிக் கொள்ளுகிறேன்; தப்பித்துக் கொள்ள விரும்பவில்லை.
கோயம்புத்தூரில் 30 லட்சம் பேர் வாங்குகிறார்கள். இன்றைக்கு
மைலாப்பூர், மாம்பலம், வண்ணாரப்பேட்டையில் இப்படியிருந்தது
என்று இல்லாமல் கோயம்புத்தூரில் நடந்தது என்று சந்தேகத்
திற்குரிய காரியத்தை இந்த மன்றத்தின் முன்னால் கொடுத்திருக்
கிறார்கள். அது இல்லை என்றுகூட வாதாடவில்லை. பழைய
ஸ்டாக்கிலிருந்து கொடுத்திருக்கலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இங்கேயும் இப்படி இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கொண்டு வந்திருப்
பார்கள். இம்மாதிரி நிலைமைகள் ஏதோ பழைய பிரிட்டிஷ் நச்
சொத்துப்போல பழைய அரசாங்கத்தினுடைய கிடங்கிலே கலந்
திருக்கலாம். அதைப்பற்றிய சமாதானம் இந்த மன்றத்தில் சொல்
லப்படும். பொறுப்பேற்ற மூன்று மாத காலத்திலே அதனுடைய
தரத்தை அதிகரிக்கச் செய்வதற்காக விசேஷ அதிகாரிகள் நியமிக்
கப்பட்டார்கள். இன்னும் சில விசேஷ அதிகாரிகளை 'அவுட்
டர்னில்' போட இருக்கிறோம். ஹாண்டே அவர்களும், எதிர்க்
கட்சித் தலைவரும் சொன்னதை வைத்துக்கொண்டு வெளியிலே,
பத்திரிகையிலே இப்படித்தான் உணவு தானியங்கள் இருக்கிறது
என்று கருதிவிடக்கூடாது அதற்கு எந்தவிதமான ஆதாரமும்
இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



கூறி, எல்லா வெட்டுப் பிரேரணைகளையும் திரும்பப் பெற்றுக்
கொண்டு இந்தப் பிரச்சினைகளை நாம் அனைவரும் ஒருமுகமாகச்
சமாளிக்க வேண்டுமென்று கூறி, இந்த மானியக் கோரிக்கைக்கு
எல்லோருடைய சம்மதத்தையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** சார், ஆன் எ பாயிண்ட் ஆஃப்
இன்பர்மேஷன் . . . நமது அமைச்சர் அவர்கள் 81 பைசாவுக்கு
நல்ல சாப்பாடு போட ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார்கள்.
ஆனால், ரயில்வே ஸ்டேஷனிலே விற்கும் சாப்பாடு முன்னைவிட
அதிகமாக விலை உயர்த்தப்பட்டிருக்கிறதே, அதைப்பற்றி மத்திய
அமைச்சரிடம், நம்முடைய அமைச்சர் பேசிவிட்டு வந்திருப்ப
தாகப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறதே, அதுபற்றி என்ன
முடிவு எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இது சம்பந்தமாக நான்
டெல்லி அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறேன். அவர்களும்
இரண்டு ரகமான சாப்பாடுகளாகப் பிரித்துப் போட ஏற்பாடு
செய்து கொண்டிருக்கிறார்கள். கனம் அங்கத்தினருடைய
யோசனையை மேலும் வலியுறுத்தி, மத்திய அரசுக்குத் தெரிவிப்
போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** தலைவர் அவர்களே, உணவுக்
கொள்கையைப்பற்றி சுதந்திரா கட்சி பேசுவது கொஞ்சம் ஓரளவு
மந்திரிசபைக்கு எரிச்சலை உண்டு பண்ணுவதாக மறைமுகமாக
நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். நாங்கள் என்ன சொல்லுகிறோம்
என்றால், முன்னாலே இருந்த காங்கிரஸ் சர்க்கார் கொள்முதலுக்கு
ஒரு காடியைக் கூடவே அனுப்பினார்கள். நீங்களும் அந்தச்
சர்க்கார் போன வழியிலே போகக்கூடாது என்பதை வணக்கத்
தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன் இப்படித் தெரிவிப்பது
என்னுடைய கடமை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த கோரிக்கைமீது
விவாதம் முடிவடைந்தது. மாண்புமிகு உணவு அமைச்சர்
அவர்கள் கொண்டுவந்த கோரிக்கையும், அதற்கான வெட்டுத்
தீர்மானமும் பேரவையின் முடிவுக்கு விடப்படுகின்றன.

வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு
தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன் உள்ள
கேள்வி :

"கோரிக்கை எண். XLVI —அரசாங்க வாணிகத் திட்டங்
களுக்குக்கான மூலதனச்செலவு என்ற தலைப்பின்கீழ் ரூபாய்
85,89,07,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க
வேண்டும்.

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்
பட்டது.

கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இரசாயன உரம் போன்றவை போதிய அளவில் இந்த மாநிலத்திற்குக் கிடைப்பதற்கும், குறைந்த விலையில் கிடைப்பதற்கும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பை நல்க கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் சொல்லும் நேரத்தில், மிகுந்த பெருமை யோடும் பூரிப்போடும் நான் இன்னும் ஒன்று சொல்லிக் கொள்ளு வேன். வேறு அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் குறைக்க வேண்டும் என்று சொன்னார்கள். வேர்க்கடலை பருப்பு, பிண்ணாக்கு, இவற்றிற்கான கண்ட்ரோல் ஆர்டர் போட வேண்டும், வெல்லத்திற்காக கண்ட்ரோல் ஆர்டர் போட வேண்டும் என்பதற்கு மத்திய அரசின் ஒப்புதலைக் கேட்டு, இந்த அரசாங்கம் அதற்கான உத்தரவுகளை அனுப்பியிருக்கிறது. இவை கட்டுப்படுத்தப்படுமானால், சர்க்கரைப் பிரச்சினையும், அத்தியாவசியமான எண்ணெய்ப் பிரச்சினையும் தீர ஓரளவுக்கு மார்க்கம் இருக்கிறது என்பதையும் நான் இந்த மன்றத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கொள்முதலைப் பொறுத்தவரையில், இவ்வளவு பெரிய அளவிற்குக் கொள்முதல் இந்த மாநிலத்தில்தான் நடைபெற்றிருக் கிறது என்று மிகுந்த பெருமையோடு தெரிவித்துக் கொள்ளு கிறேன். பெரிய பாராட்டுதலைப் பெற்றிருப்பதற்குக் காரணம் இந்த அரசாங்கத்தினுடைய திறமை மட்டுமல்ல, இந்த மாநிலத்தி லுள்ள மூன்றரைக் கோடி மக்களும் இந்த அரசாங்கத்திற்குப் பின்னாலே இருக்கிறார்கள் என்பதுதான், அந்த ஒத்துழைப்பு நீடித்திருக்கும் என்றே நான் மனதார நம்புகிறேன். ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தின் மூலமாக—நான் வேடிக்கைக்காகச் சொல்லவில்லை—பெருமளவுக்கு விலை சரிந்திருக்கிறது, விலைவாசி சமப்படுத்தப்பட்டிருக்கிறது, செல்வாக்குப் பெருகி இருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை நகரத்தில் இருக்கிற ஓட்டல்காரர்கள் அதிக விலையில் விற்று வந்தார்கள் என்றாலும், இப்பொழுது என்பது பைசாவிற்கு ஸ்டாண்டர்டு மீல், தரமான சாப்பாடு, போடக்கூடிய நிலைமையும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்களே கூட ஒரு ஓட்டலுக்கு உரிமையாளர். அவர்களைச் சார்ந்தவர்கள், எண்பது பைசாவிற்கு ஓட்டலில் சாப்பாடு போடுவதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரத்தில் அமலுக்கு வர இருக் கிறது. அதைத் தொடர்ந்து மற்ற நகரங்களில் இருக்கும் ஓட்டல் களுக்கும் வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இங்கே நம்முடைய சட்டசபைத் தலைமைச்செயலகத்திலே இருக் கும் ஓட்டலைப் பொறுத்தவரையில், 75 பைசாவிற்கே தரமான சாப்பாடு உறுப்பினர்களுக்கும் மற்ற தலைமைச் செயலகத்திற்கு அலுவல் காரணமாக வருகிறவர்களுக்கும் போட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதே மாதிரியாக, ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தில், கல்லூரிகளில் இருக்கும் ஹாஸ்டல்கள்,



ஆஸ்பத்திரிகள் இன்னும் சேர்க்கப்படவில்லை. இன்ஜினீரிங் கல்லூரி, மெடிக்கல் கல்லூரி, கலைக் கல்லூரிகளிலுள்ள ஹாஸ்டல் கள், இவையெல்லாம் இந்த முப்பது லட்சம் மக்களுக்குரிய திட்டத் திலே இன்னும் சேர்க்கப்படவில்லை. கோவை நகரத்தின் புற நகரங்கள், சென்னை நகரத்தின் புற நகரங்கள், சென்னை நகரத்தில் இருக்கும் ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள் இவற்றில் உள்ள விடுதிகளிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தை அமலாக்கு வதற்கும் அதற்கு இந்த அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது என்பதையும் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொண்டு, இந்தப் பெரும் பிரச்சினையை இந்தியாவையே அலைக் கழிக்கும் பிரச்சினையைத் தீர்ப்பதில் மற்ற மாநிலங்களில் இல்லாத அளவிற்கு நாம் ஏதோ அடியெடுத்து வைத்திருக்கிறோம், தலைமை தாங்கியிருக்கிறோம், அதற்கு ஆக்க பூர்வமான ஒத்துழைப்பைத் தரவேண்டும். குறுகிய காலத்திற்குள் கேரள மாநிலத்திற்கு முப்பதாயிரம் டன் அவர்களுடைய நெருக்கடி நிலையைச் சமாளிப் பதற்காக, கேரள முதலமைச்சர் திரு. நம்பூதிரிபாட் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களைச் சந்திக்க வந்த நேரத்தில், இந்த அளவு அரிசி அனுப்பவேண்டும் என்று சொன்னார்கள். கேரளத்தின் பட்டினி நிலையைப் பார்த்து, நாம் தனியாக இருக்கக் கூடாது, நாம் என்றைக்குமே நம்மைத் தனிமைப்படுத்திக் கொண்டவர்கள் அல்ல என்ற முறையில், 'அனுப்புகிறோம்' என்று சொல்லி, முதலில் 18,000 டன்னும், பிறகு 12,000 டன்னும் ஆக மொத்தம் 30,000 டன் பக்கத்து மாநிலமாகிய கேரளத்திற்கு மிகுந்த பெருமையோடு விருந்துணர்ச்சியோடு, தமிழ்ப் பண்பா டோடு நாம் உதவியிருக்கிறோம்.

அதேமாதிரியாக, நம்முடைய ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்கள், நெல்லூர் அரிசி நமக்குத் தருவதாக வாக்களித்திருக் கிறார்கள். இந்த நேரத்தில் இந்த மக்களின் சார்பாக அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதிரியான முயற் சிகளில் எல்லோருடைய ஒத்துழைப்பும் நல்லவிதமாகக் கிட்டினால், மேலும் இரசாயன உரம் வழங்குதல், பால் பண்ணை, உணவு உற்பத்தி போன்ற துறைகளில் நல்ல கவனம் செலுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் 'பெங்கால் கிராம்' பற்றிச் சொன்னார்கள். 'பெங்கல் கிராம்' பருப்பு வகைகள் சம்பந்தமாக ஏற்கெனவே இருந்த அரசாங்கத்தினால் வாங்கப்பட்டு, கிடங்குகளிலே வைக்கப்பட்டவைகளில் 20 லட்சம் ரூபாய் நஷ்டமாகும் என்று கணக்கிட்டு, தற்போது 14 லட்சமாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது. மேலும், அரியானா மாநிலத்திலிருந்தும், வடக்கு மாநிலங்களிலிருந்தும் பருப்பு வகைகளை இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு, உத்திரப்பிரதேசம் போன்ற இடத்திலிருந்து பருப்பு வகைகளை அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்கள் செய்யும் சிறு உதவிகூட தக்க நேரத்தில் உதவிகாமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினைகளையெல்லாம் தீர்ப்பதில் இந்த அரசு மேலும் மேலும் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளும் என்று

இவை திரு. இராஜகோபாலாச்சாரியார் அவர்களுடைய கருத்துக்கள். ஸோன் 1, ஸோன் 2, ஸோன் 3, ஸோன் 4, என்று இப்படித்தான் அவர்களும் செய்திருந்தார்கள். இதை நான் சொல்லுவது ஏதோ அரண் தேடிக்கொள்ளுவதற்காக அல்ல. இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை—இந்தக் கண்ட்ரோல் வேண்டும் என்பது அல்ல; வேண்டாம் என்பதும் அல்ல. இந்த மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும்போது அந்தப் பொறுப்பைச் சரிவர நிறைவேற்றுவதற்கும், செம்மையாகச் செயல்படுத்துவதற்கும் உரிய காரியத்திற்காகத்தான் இந்தக் கொள்கையை இந்த அரசு கொண்டிருக்கிறது என்பதைக் கனம் உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முக்கியமான ஒன்றிரண்டு விவரங்கள் சொன்னார்கள். அவர்கள் இந்தக் கொள்கையை எதிர்ப்பதுபோல் தோன்றினாலும், அவர்கள் இதை ஒன்றும் எதிர்க்கவில்லை. இந்த அரசாங்கமேகூட, இன்னும் கொஞ்சம் யோசனை செய்துதான் செய்யலாம் என்ற அளவிற்குச் சொன்னார்கள். அந்த வகையில்தான் "மனுபலி ப்ரொக்யூர்மெண்ட்" பற்றிக் குறிப்பிட்டு, எடுத்துக்கொள்ளுங்கள், எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்து, அவருடைய கட்சியின் அதிகாரப் பூர்வமான கருத்துதானா, எந்த அளவிற்கு அவர்களுக்குப் பின்னால் இருக்கிறவர்கள் அதை ஏற்றுக்கொள்ளுகிறார்கள், அந்தக் கட்சி ஏற்றுக்கொள்ளுகிறது என்று தெரியவில்லை. இந்த அரசாங்கம் அத்தகைய திட்டத்தைக் கொண்டுவரும்போது, அதற்கு எந்த அளவிற்கு அவருடைய கட்சி ஆதரவு வழங்கும் என்பதை வருங்காலத்தில் அவர்கள் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். கொள்கை அளவில், மனுபலி ப்ரொக்யூர்மெண்ட் செய்ய வேண்டும், அரசாங்கமே எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கட்டத்திற்கு வரவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்தக் கருத்துக்கு வந்திருப்பது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்தான். ஆனாலும், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, இன்னமும் நல்ல எண்ணத்தில் நம்பிக்கை இருக்கிறது. இன்றைக்கேகூட, 80 சத வீதம் வெளிச் சந்தையில்தான் விடப்பட்டிருக்கிறது. 20 சத வீதம்தான் ப்ரொக்யூர்மெண்ட் செய்கிறோம். இதற்கான காரியங்களில் இன்னும் அவர்கள் நல்ல வகையிலே ஒத்துழைக்கலாம்; ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அடுத்த கொள்முதல் பருவத்தில் இந்த அரசாங்கம் மேற்கொள்ளுகிற இந்தக் காரியங்களில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். எல்லோருமே கொள்முதல் விஷயத்தில் ஒத்துழைக்கவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கேட்டுக்கொண்டுள்ளார்கள். உணவு விஷயத்தில் அரசியலே கிடையாது என்பதை எல்லாத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆகவே, இதிலே ஒத்துழைப்புக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு எல்லோருக்குமே இருக்கிறது.



கொள்முதல் கொள்கையை இன்னும் அபிவிருத்தி செய்யலாம். இன்னும் மேன்மையாக்கலாம். இதற்காக கலெக்டர்கள் மாநாடு கூட்ட இருக்கிறோம். இப்பொழுது ஏற்பட்ட பல இடைஞ்சல்களையும் நீக்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏதோ காரசாரமாகச் சொன்னார்கள் என்று யாரும் கருதிவிடத் தேவையில்லை. விலையைப் பொறுத்தவரையில் அவர் குறிப்பிட்டது, இருபது வருஷங்களாக அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிற விஷயந்தான். அதைச் சொல்லி அரசியல் ஆக்க வேண்டும் என்றால் அதிலே திருப்திப்படட்டும்; விவசாயிகளுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லட்டும். அதற்கு அவரவர்கள் சாமர்த்தியத்திற்குத் தகுந்தாற்போல் சொல்லிக்கொள்ளலாம். நான் முதலில் சொன்னபடி, எங்காவது இரண்டு ஆஸ்பத்திரிகள், எட்டு பள்ளிக்கூடங்கள் என்று இப்படி பல காரியங்களைச் செய்ய வேண்டுமென்றாலும், பல விதங்களில் சேமிப்பதிலிருந்துதான் எடுத்துக்கொள்ளவேண்டும். இன்றைக்கேகூட 43 ரூபாய் என்று விலையை கொடுத்துவிடுவதால் மட்டும் விவசாயிகளுடைய பிரச்சினை தீர்ந்து விடுமென்று சொல்வதற்கில்லை. விவசாயிகளுக்காகச் சர்க்கார் பல விதங்களில் உதவி செய்து வருகிறது. இரசாயன உரவிலை ஏறிவிட்டது. அதைக் குறைக்க வேண்டும் என்று இந்த அரசு பாடுபட்டுக்கொண்டு வருகிறது. அதைக் குறித்து டில்லியில் இருக்கிறவர்களிடம் கேட்க எங்களோடு சேர்ந்து எதிர்த்தரப்பில் இருக்கிறவர்களும் கரம் கொடுக்க வேண்டுமேயொழிய, நான்கு ரூபாய் இன்னும் விலையை உயர்த்திவிட்டால் மட்டும், கண்டிப்பாக விவசாயிகளுக்கு விமோசனம் கிடைத்துவிடும் என்று சொல்லுவார்களானால், அதை இந்த அரசாங்கம் நம்பத் தயாராயில்லை. விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் எத்தனையோ உதவிகளைச் செய்து தருகிறது. புதிய பம்ப்செட்டுகள் போட உதவி செய்வதன் மூலம் இரு போக விளைச்சலுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. உயர்தர வீரிய விதைகளை அளிப்பதன் மூலம் இன்டென்சிவ் ஃபுட் ப்ரொடக்ஷன் ஏற்படுகிறது. இம்மாதிரியான காரியங்களில் உதவுவது மட்டுமல்லாமல், நீர்ப்பாசன வசதி செய்து தருவதன் மூலமும், இந்த நாட்டிலுள்ள உழவர்களுக்கு, குடியானவர்களுக்கு இந்த அரசு உதவுகிறது. இப்படியெல்லாம் உதவி செய்துதான் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமே தவிர, ஏதோ நாற்பது ரூபாயிலிருந்து நாற்பத்தி நான்கு ரூபாய்க்கு விலையை உயர்த்துவதனால்மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடுவதில்லை, விவசாயக் கருவிகள், விதைகள், நீர்ப்பாசன வசதிகள் போன்ற இந்தத் துறைகளில் உதவுவதன் மூலம்தான் விவசாயம் செழிக்க மார்க்கம் இருக்கிறது. Devaluation -க்குப் பிறகு ரசாயன உரத்தின் விலையை ஏற்றிவிட்டார்கள். அதிலும் கவனம் செலுத்தவேண்டும். இவற்றையெல்லாம் செய்வதை விடுத்து, நான்கு ரூபாயிலே இந்தப் பிரச்சினை தீரும் என்றால், அதைக்கூட ரொம்ப சந்தோஷமாகச் செய்துவிடலாம். ஆனால், அது இந்த விஷயத்துக்கு முழுப் பரிகாரம் ஒரு நாளும் ஆகாது. அதற்கு மாறாக, குடியானவர்களுக்கு நல்ல பெரும் வாய்ப்பை ஏற்படுத்துவதற்கான பணிகளை இந்த அரசாங்கம் மேற்

களிடம் அனுதாபம் காட்டாமல் இருந்தால் இந்த நாட்டின் ஏழைகளுக்கு நல்ல நிலைமைகளைச் செய்ய பெரிதும் வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக்காரியத்திலே இந்த மாமன்றத்திலுள்ள அத்தனை பேர்களின் ஒத்துழைப்பையும் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக நம்முடைய ஹாண்டே அவர்களும், ஆதிமூலம் அவர்களும் சொன்னார்கள், வழக்கமாகச் சொல்வதைத்தான் சொன்னார்கள். ஏதோ டீ-கண்ட்ரோல் என்பதெல்லாம் சகலரோக நிவாரணியும் அடங்கியிருப்பதைப் போலவும் எங்களுக்கு ஞானம் இல்லாத காரணத்தினாலே தெரியாதது போலவும் சொன்னார்கள். ஆனால் டீ-கண்ட்ரோல் வேண்டுமா? வேண்டாமா? என்பது அல்ல. அல்லது கண்ட்ரோல் போற்றுதற்குரிய காரியம் என்பதும் அல்ல. சோறு போட வேண்டும், நியாயமான விலைக்கு அரிசி அளிக்கவேண்டும் என்ற காரணத்தின் விளைவாகத்தான் கண்ட்ரோல்கள் இருக்கிறதே தவிர வேறு எதற்கும் அல்ல என்று தெரிவித்துக்கொள்ளும் நேரத்தில் ஒன்றை ஹாண்டே அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதற்காக அவர்கள் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ராஜாஜி அவர்கள் காலத்தில் கண்ட்ரோலை எடுத்து விட்டார்கள் என்று சொல்வார்கள். கனம் எதிர்க்கட்சித்தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் உறுப்பினராயிருந்ததை மறந்திருக்க மாட்டார்கள். விஷய விளக்கத்திற்காகத்தான் சொல்கிறேன். அவர்களேகூட கண்ட்ரோலை எடுத்துவிட்டார்கள் என்று கனம் ஹாண்டே அவர்கள் கருதிக்கொண்டு இருப்பார்களேயானால் ரொம்பத் தவறானது ஆகும். இதற்கு முன்னால் ஆந்திரா, கேரளம், கர்நாடகம் மூன்றும் ஒரு பகுதியாகச் சேர்ந்திருந்தது. இப்பொழுது மாவட்டத்திற்கு மாவட்டம் வைத்திருப்பதைப்போல நான்கைந்து ஜில்லாக்களுக்கு என்று சேர்த்து வைத்திருந்தார்கள். ஒரு ஸோனிலிருந்து மற்றொரு ஸோனிற்குப் போனால் காவல் நிலையம், பத்து படி அரிசி, இரயிலிலே போகக்கூடாது, மோட்டாரிலே போகக்கூடாது என்றெல்லாம் இருந்தது. இப்பொழுது அந்தக் கருத்திலே மாவட்டத்திற்கு மாவட்டம் இருக்கிறது. இது ஏழை மக்களின் நன்மைக்காக என்று கருதி இந்த வாதத்தை வற்புறுத்தக்கூடாது என்று சொல்லிக்கொள்ளுகிறேன். இது ராஜாஜி வழி என்றும் வைத்துக்கொள்ளலாம். நாங்கள் புதிய வழியிலே போய் விட்டோம் என்றுகூட அல்ல இன்றைக்கு மாவட்டத்திற்கு மாவட்டம் கட்டுப்பாடுகள் இருக்கின்றன.

Dr. H. V. HANDE: Sir, I want to offer an explanation. That was the first step. Subsequently he decontrolled the whole area. The Hon. Minister is reading only about the first act and not the subsequent act. In the interest of the Government itself, we are requesting the removal of control. First of all control could be lifted in a couple of districts and only step by step and in proper time lifting of control can be extended.





**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதையேதான் நாங்கள் சொல்லுகிறோம். அவர்கள் செய்த இந்த முறையினுடைய கட்டத்திலேதான் இருக்கிறது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், உணவு உற்பத்தித் திட்டம் முழு வெற்றியடைந்து, பெரிய அளவிற்கு உற்பத்தி பெருகிவிடுமானால், உணவுப் பொருள் கண்ட்ரோலை வைத்துக்கொண்டே இருக்கவேண்டும் என்பது எங்களுடைய கொள்கை அல்ல. எப்படியும் எடுக்கத்தான் போகிறோம். கண்ட்ரோலை எடுக்கவேண்டுமென்றால், எந்தப் பொறுப்புள்ள அரசும் அதற்குரிய நிலை இருக்கிறதா என்பதையும் பார்த்துத் தான் செய்யவேண்டும். இந்த மாநிலத்திற்குத் தேவையான உணவு உற்பத்தி பெருகிவிடுமானால், எல்லாக் கண்ட்ரோலையும் கண்டிப்பாக எடுக்கவேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் நோக்கமாகும். அதைத்தான் இந்த அரசாங்கம் தன்னுடைய கடைசிக் கொள்கையாக வைத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், அதே சமயத்தில், மூன்றரை கோடி மக்களுடைய உயிர்களைப் பாதிக்கக்கூடிய ஒரு பிரச்சினையில் விளையாட இந்த அரசாங்கம் ஒரு நாளும் சம்மதிக்காது என்பதையும் நான் மிக மிகத் தெளிவுபடுத்திவிட விரும்புகிறேன். திரு. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் எப்படிப் போட்டார்கள் என்பதை முதலில் மிகத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். அப்பொழுதும் இதே கட்டத்தில் தான் முதலில் செய்யப்பட்டது. அதற்குப் பிறகுதான் கண்ட்ரோலை எடுத்தார்கள். கித்வாய் திட்டம் எல்லாம் அதற்குப் பிறகுதான் வந்தது என்கிற நிலைமைகளையெல்லாம் இந்த மன்றமும் நாடும் நன்றாக அறியும். நாங்கள் அதைக்கூடத் தவறு என்று கருதவில்லை. உணவு உற்பத்தி விளைவானது தேவைக்கேற்ற அளவிற்கு ஏற்பட்டுவிட்டால், அடுத்த வருஷத்திலேகூட கண்ட்ரோலை எடுத்துவிடலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி வற்புறுத்தி வருகிறார்கள்.

With a view to regulate the movement of rice from surplus areas to deficit areas the State will be divided into a number of zones with one or two surplus districts supplying in the free market the needs of a few deficit districts included in each zone. Within the zone free private trade will be allowed. There will be no control as regards price or the quantity of rice to be distributed except through fair price shops. Movement from one zone to another by railways or motor vehicles will not be allowed except under permits issued by the Collector of the district from which transport is proposed. In regard to transport for personal consumption by landholders, permits will be given by the Collectors of the districts from where transport is proposed and the quantity to be allowed to be transported will be limited to the reasonable requirements of the family as fixed by the Collector of that district. Transport by peasantry of small quantities by headloads or other non-mechanical conveyances shall not be interferred with.

அடுத்தபடியாக, இன்னும் முக்கியமாக இங்கே பேசிய உறுப்பினர்கள், முக்கியமாக இந்த அரசாங்கத்தை ஆதரிக்கிற இடது சாரி கம்யூனிஸ்ட் கட்சியிலிருப்பவர்கள், முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், மூன்றரைக் கோடி மக்களுக்கு அத்தியாவசியமான பொருளான உணவு கொடுக்க வேண்டியது பொறுப்பு, அவசியத்தைப்பற்றியும், அரசாங்கம் மேற்கொண்டுள்ள கொள்முதல்பற்றியும் சொன்னார்கள். கொள்முதலில மிகுந்த நம்பிக்கை இருக்கிறது. உங்கள் ஒத்துழைப்பால். குடும்பக் கார்டுகளை விஸ்தரிக்கும் மார்க்கமும் வரும்.

கோவை மாவட்டம் பவானி உறுப்பினர் திரு. ஏ. எம். ராஜா அவர்களும், பொள்ளாச்சி கண்ணப்பன் அவர்களும், பதுக்கல்காரர்கள், கள்ளக்கடத்தல்காரர்கள்பற்றி வெகு ஆத்திரமாகச் சொன்னார்கள். அந்த உணர்வு நாட்டில் இருக்கிறது. அதைப்பல கோடிக்கணக்கான மக்களின் உணர்வு என்றுதான் நம்புகிறேன். நண்பர் மாதவன் அவர்கள் கேட்டபொழுது எதிர்க்கட்சித்தலைவர் நேரடியான பதிலை ஒரு காரியத்திற்குச் சொல்லவில்லை. பொதுவாக இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் கொள்முதலில் எவ்வளவு பெரிய திட்டங்கள் இருக்கும் நேரத்தில் பதுக்கல்காரர்கள், கள்ளக்கடத்தல்காரர்கள் போன்ற சமுதாயப் புல்லுருவிகள், ஏழை எளியவர்களின் வயிற்றில் அடிப்பவர்கள் காரியத்தில் வேகமாக, தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். 'என்ஃபோர்ஸ்மெண்ட் ஸெல்' என்ற பெயரால் மிகக் கண்காணிப்போடு செய்யப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட கள்ளக்கடத்தல்காரர்கள், பதுக்கல் பேர்வழிகள், சூதாடிகள் ஆகிய இவர்கள்மீது மிகக் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காக அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின்கீழ் ஆறாவது பிரிவின் கீழ் கடும் தண்டனை கொடுக்க இந்தியப் பேரரசுவிடமிருந்து ஒரு தாக்கீது வந்திருக்கிறது. அந்தத் தாக்கீதின் ஆறாவது அம்சத்தின்படி அந்தத் தானியங்கள், வாகனங்கள் முதலியவை பறிமுதல் செய்யப்படவேண்டும். கலெக்டர்கள் வேகமாக, எச்சரிக்கையாக இருக்கும் முறையில் பதுக்கல்காரர்கள் கள்ளக்கடத்தல்காரர்கள் ஆகியவர்களைத் தண்டிக்க வழிவகைகளைக் காண மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகிறது. இந்திய அரசாங்கம் வெறும் தானியங்கள், வாகனங்கள் ஆகியவற்றை மட்டுமல்லாமல் அவர்கள் எவ்வளவு சொத்து சேர்த்திருக்கிறார்களோ அதையெல்லாம் பறிமுதல் செய்யவேண்டும், மொத்த சொத்தும் பறிமுதல் செய்யப்பட வேண்டுமென்று மொரார்ஜி தேசாய் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அதற்குப் பலத்த ஆதரவை இந்த அரசாங்கம் ஏழை எளிய மக்களின் சார்பில் வழங்கியிருக்கிறது. அடுத்த கட்டமாக நாடே கடத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதில் கூட தவறு கிடையாது. சமுதாயத்திலுள்ள இப்படிப்பட்டவர்களுக்கு வெளி நாடுகளிலெல்லாம் பெரிய குற்றமாகக் கருதி தூக்குத் தண்டனை போடுவார்கள். ரஷ்யா போன்ற நாடுகளில் தூக்குத்தண்டனை போன்றவை நடைபெறுகின்றது. நம்முடைய நாட்டைப் பொறுத்தவரை அது வேண்டாம். ஆனால் இதைச் செய்கிறவர்







**கோரிக்கை எண் XLVII—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த கோரிக்கை எண் XLVII மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பில் ரூ. 30,98,94,900-க்கு மேற்படாத தொகையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோருவார்கள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் XLVII—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 30,98,94,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** விவசாயிகள் விவசாய கடன் சர்க்காரிடமிருந்து பெறுவதில் ஏற்படும் தாமதத்தையும், கஷ்டங்களையும் எடுத்துரைக்க கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் XLVII—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பனங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 30,98,94,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த மானியக் கோரிக்கைக்கு திரு. ஆர். ராமச்சந்திர துரை அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏதாவது முன்னுரை கூற விரும்புகிறார்களா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** முதலில் உறுப்பினர்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

***திரு. நா. காசிராமன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கைமீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கையிலே, ஸ்தல ஸ்தாபனங்களுக்கும், மற்ற பல இலாகாக்களுக்கும் கடனும் முன் உதவிப் பணமும் கோரப்பட்டிருக்கிறது. சென்னையிலே இருக்கும் கார்ப்பொரேஷனுக்கு சென்ற வருஷத்தைவிட இந்த வருஷம் 29 லட்சத்திற்கு அதிகமாக கடனாகவும் மானியமாகவும் தொகை அளிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குடிதண்ணீர், சாலைகள் வசதி, சாக்கடை வசதிகள், பாலங்கள், மேம்பாலங்கள், ஆஸ்பத்திரிகள், பள்ளிகள், மார்க்கெட்டுகள் பராமரிப்புக்காகக் கணிசமான தொகையைச் செலவிடுவதால், சென்னை நகரம் விரைவிலே முன்னேற்றம் அடையும் என்பதிலே யாருக்கும் சந்தேகம் இல்லை. இதைப்போலவே தமிழ் நாட்டின் மற்றப் பகுதிகளிலுள்ள முனிசிபாலிட்டிகளுக்கும் கணிசமான தொகை ஒதுக்கப்பட வேண்டும். முனிசிபாலிட்டிகளுக்கு கொடுக்க வேண்டிய தொகையில் கணிசமான அளவு குறைக்கப்

[திரு. நா. காசிராமன்] [1967 ஜூலை 11

பட்டிருக்கிறது. மார்க்கெட்டுகள், ரோடுகள், நகரசபைத் தொழிலாளர்கள் வீடுகள் கட்ட கடன், நகரத்தின் தொழிலாளர்கள் நலன், குடிநீர், சுகாதார வசதிகள் போன்றவற்றிற்கு அதிகமான அளவில் செலவாகிக் கொண்டு வருகின்றது. ஆனால் முனிசிபாலிட்டிகளுக்கு சென்ற வருஷத்தைவிட இப்போது 9,71,221 ரூபாய் குறைத்து மதிப்புப் போட்டிருக்கிறார்கள். நகரசபைகள் பல திட்டங்களை நிறைவேற்ற இருக்கின்றன. நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு, இந்தக் கடன் தொகையைக் குறைத்தால் விலைவாசிகள் ஏறியிருக்கும் இந்த நேரத்தில் அவர்கள் நிலை சிரமமாகிவிடும். வாட்டர் சப்ளை, டிரைனேஜ் சிஸ்டம் போன்றவைகளுக்கும் சிரமநிலை ஏற்படும். மற்ற ஸ்தல ஸ்தாபனங்கள் பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அளிக்கும் கடன் தொகைகளும் குறைக்கப்பட்டிருப்பது வருந்தத்தக்க விஷயம்.

அடுத்தபடியாக, விவசாயத்திற்கும், உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும்கூட சலுகை கொடுக்கப்படவில்லை. Loans to agriculturists under the Land Imp ov men's Act and Ag icult urists Loan Act என்ற இனத்தில் 18 லட்சத்து 93 ஆயிரம் ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கும், அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய கடன் தொகைகளும் குறைக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குத் தர வேண்டிய கெமிகல் பெர்டிலைசர்சிலே 50 லட்சம் ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் விவசாயிகள் கடனிலே அதிகமாக ரசாயன உரம் பெறுவதில் சிரமம் ஏற்படும். பில்டர் பாயிண்ட் ட்யூப் வெல்ஸ் திட்டத்திலே 14 லட்சம் ரூபாய் குறைத்திருக்கிறார்கள். இதனால் விவசாயிகள் ஊக்கமாகப் பாடுபட முடியாத சங்கடங்கள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதுபோலவே Distribution of oil-engines and electric motors under the hire purchase system என்ற தலைப்பின் கீழ் 75 லட்சம் ரூபாய் குறைத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நாம் இந்தத் துறையின் கீழ் அதிகமாகக் கடன் கொடுத்தால் தான்
பி. ப. 1–30 அவர்கள் உற்சாகத்தோடு விவசாயத்துறையில் ஈடுபட முடியும்.

அதோடு ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதிலும் ஒரு லட்சத்து இருபத்தையாயிரத்து அறுநூறு ரூபாய்களைக் குறைத்திருக்கிறார்கள். இதனால் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதிலும் கஷ்டம் ஏற்படும்.

அதோடு Loans to Madras State Small Industries Corporation என்ற இனத்தில் 30 லட்சம் என்ற இனத்தில் 30 லட்சம் ரூபாய்க்கும் அதிகமாக வெட்டு செய்திருக்கிறார்கள். இம்மாதிரி செய்வதனால் சிறிய தொழில்களின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படும். அதுவும் நல்லதல்ல.



1967 ஜூலை 11] [திரு. நா. காசிராமன்]

அதோடுகூட சர்க்கார் அலுவலகத்தில் வேலை செய்கிறவர்களுக்கு வாகனங்கள் வாங்கிக்கொள்வதற்குக் கொடுக்கப்பட்டு வந்த கடன் தொகை 35 லட்சம் ரூபாய் இவ்வாண்டு 30 லட்சமாகக் குறைந்திருக்கிறது. நாம் அதிகாரிகள் அதிக நேரம் பணியாற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அம்மாதிரி எதிர்பார்க்கின்ற நேரத்தில் அவர்கள் துரிதமாக ஆபீஸ் வரவும், நேரம் கழித்துப் போகிறபோது வசதியாக வீட்டிற்குச் செல்லவும் வேலை காரணமாக வெளியூர் சென்று வருவதற்கும் வாகனங்கள் வாங்கிக் கொள்ள நாம் கடன் கொடுத்தாக வேண்டும். இவர்களுக்குக் கடன் வழங்க ஒதுக்கப்பட்ட தொகை குறைக்கப்படுவது சங்கடத்தில் கொண்டு போய்விடும்.

அதோடு Small Scale Industries in the Private Sector என்ற தலைப்பின்கீழ் சென்ற ஆண்டு 35 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இவ்வாண்டு அதை 30 லட்சமாக குறைத்திருக்கிறார்கள். இதில் ஒரு ஐந்து லட்சம் குறைந்திருக்கிறது. இதுவும் தனியார் துறையில் சிறு தொழில்களின் வளர்ச்சியைப் பாதிக்கும்.

அதோடு Loans to Co-operative Industrial Estates for purchase of Machinery, lands, etc என்ற இனத்தை எடுத்துக் கொண்டால் 13 லட்சம் குறைவாக ஒதுக்கியிருக்கிறார்கள். இம்மாதிரி குறைத்து ஒதுக்கியிருப்பதன் காரணமாக பல முக்கியமான காரியங்கள் செய்ய முடியாமல் போய்விடும். ஆகவே திரு. இராமச்சந்திரதுரை அவர்கள் கொண்டு வந்திருக்கும்படியான வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, இப்போது கடனாக அல்லது இலவசமாகக் கொடுக்கக்கூடிய இந்த மானியத்தின்மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக இப்போது நகர சுத்தித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நகர சுத்தித் தொழிலாளர்கள் என்று சொல்லக்கூடிய நேரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களையும்விட அடி தட்டில் இருக்கக் கூடிய மோசமான தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் இவர்கள். நம்முடைய நன்மையைக் கருதி, நமக்கு எந்தவிதமான நோய் நொடியும் வராதிருக்க, நமக்குப் பாதுகாப்பாக இருக்கக் கூடிய இப்பேர்ப்பட்டவர்கள் விஷயமாக நான் மிகத் தாழ்மையுடன் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த விஷயத்தில் முதல் முதலாகக் கவனம் செலுத்தவேண்டும். ஒவ்வொரு நகர சபையிலும், ஒவ்வொரு பஞ்சாயத்து போர்டிலும் இப்படி இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு இலவசமாகப் பணம் கொடுத்தோ, கடனாகக் கொடுத்தோ வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று விவசாயிகளுக்கு மோட்டார், பம்புசெட்டுகள் வாங்கிக் கொள்வதற்காக கடன் கொடுக்கப்படுகிறது. இந்த

[திரு. நா. காசிராமன்] [1967 ஜூலை 11

பட்டிருக்கிறது. மார்க்கெட்டுகள், ரோடுகள், நகரசபைத் தொழிலாளர்கள் வீடுகள் கட்ட கடன், நகரத்தின் தொழிலாளர்கள் நலன், குடிநீர், சுகாதார வசதிகள் போன்றவற்றிற்கு அதிகமான அளவில் செலவாகிக் கொண்டு வருகின்றது. ஆனால் முனிசிபாலிட்டிகளுக்கு சென்ற வருஷத்தைவிட இப்போது 9,71,221 ரூபாய் குறைத்து மதிப்புப் போட்டிருக்கிறார்கள். நகரசபைகள் பல திட்டங்களை நிறைவேற்ற இருக்கின்றன. நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு, இந்தக் கடன் தொகையைக் குறைத்தால் விலைவாசிகள் ஏறியிருக்கும் இந்த நேரத்தில் அவர்கள் நிலை சிரமமாகி விடும். வாட்டர் சப்ளை, டிரைனேஜ் சிஸ்டம் போன்றவைகளுக்கும் சிரமநிலை ஏற்படும். மற்ற ஸ்தல ஸ்தாபனங்கள் பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அளிக்கும் கடன் தொகைகளும் குறைக்கப்பட்டிருப்பது வருந்தத் தக்க விஷயம்.

அடுத்தபடியாக, விவசாயத்திற்கும், உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும்கூட சலுகை கொடுக்கப்படவில்லை. Loans to agriculturists under the Land Improvements Act and Agriculturists Loan Act என்ற இனத்தில் 18 லட்சத்து 93 ஆயிரம் ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கும், அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய கடன் தொகைகளும் குறைக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குத் தர வேண்டிய கெமிகல் பெர்டிலைசர்சிலே 50 லட்சம் ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் விவசாயிகள் கடனிலே அதிகமாக ரசாயன உரம் பெறுவதில் சிரமம் ஏற்படும். பில்டர் பாயிண்ட் ட்யூப் வெல்ஸ் திட்டத்திலே 14 லட்சம் ரூபாய் குறைத்திருக்கிறார்கள். இதனால் விவசாயிகள் ஊக்கமாகப் பாடுபட முடியாத சங்கடங்கள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதுபோலவே Distribution of oil-engines and electric motors under the hire purchase system என்ற தலைப்பின் கீழ் 75 லட்சம் ரூபாய் குறைத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நாம் இந்தத் துறையின் கீழ் அதிகமாகக் கடன் கொடுத்தால் தான் அவர்கள் உற்சாகத்தோடு விவசாயத்துறையில் ஈடுபட முடியும்.

அதோடு ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதிலும் ஒரு லட்சத்து இருபத்தையாயிரத்து அறுநூறு ரூபாய்களைக் குறைத்திருக்கிறார்கள். இதனால் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதிலும் கஷ்டம் ஏற்படும்.

அதோடு Loans to Madras State Small Industries Corporation என்ற இனத்தில் 30 லட்சம் என்ற இனத்தில் 30 லட்சம் ரூபாய்க்கும் அதிகமாக வெட்டு செய்திருக்கிறார்கள். இம்மாதிரி செய்வதனால் சிறிய தொழில்களின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படும். அதுவும் நல்லதல்ல.



1967 ஜூலை 11] [திரு. நா. காசிராமன்]

அதோடுகூட சர்க்கார் அலுவலகத்தில் வேலை செய்கிறவர்களுக்கு வாகனங்கள் வாங்கிக்கொள்வதற்குக் கொடுக்கப்பட்டு வந்த கடன் தொகை 35 லட்சம் ரூபாய் இவ்வாண்டு 30 லட்சமாகக் குறைந்திருக்கிறது. நாம் அதிகாரிகள் அதிக நேரம் பணியாற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அம்மாதிரி எதிர்பார்க்கின்ற நேரத்தில் அவர்கள் துரிதமாக ஆபீஸ் வரவும், நேரம் கழித்துப் போகிறபோது வசதியாக வீட்டிற்குச் செல்லவும் வேலை காரணமாக வெளியூர் சென்று வருவதற்கும் வாகனங்கள் வாங்கிக் கொள்ள நாம் கடன் கொடுத்தாக வேண்டும். இவர்களுக்குக் கடன் வழங்க ஒதுக்கப்பட்ட தொகை குறைக்கப்படுவது சங்கடத்தில் கொண்டு போய்விடும்.

அதோடு Small Scale Industries in the Private Sector என்ற தலைப்பின்கீழ் சென்ற ஆண்டு 35 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இவ்வாண்டு அதை 30 லட்சமாக குறைத்திருக்கிறார்கள். இதில் ஒரு ஐந்து லட்சம் குறைந்திருக்கிறது. இதுவும் தனியார் துறையில் சிறு தொழில்களின் வளர்ச்சியைப் பாதிக்கும்.

அதோடு Loans to Co-operative Industrial Estates for purchase of Machinery, lands, etc என்ற இனத்தை எடுத்துக் கொண்டால் 13 லட்சம் குறைவாக ஒதுக்கியிருக்கிறார்கள். இம்மாதிரி குறைத்து ஒதுக்கியிருப்பதன் காரணமாக பல முக்கியமான காரியங்கள் செய்ய முடியாமல் போய்விடும். ஆகவே திரு. இராமச்சந்திரதுரை அவர்கள் கொண்டு வந்திருக்கும்படியான வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, இப்போது கடனாக அல்லது இலவசமாகக் கொடுக்கக்கூடிய இந்த மானியத்தின்மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக இப்போது நகர சுத்தித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நகர சுத்தித் தொழிலாளர்கள் என்று சொல்லக்கூடிய நேரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களையும்விட அடி தட்டில் இருக்கக் கூடிய மோசமான தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் இவர்கள். நம்முடைய நன்மையைக் கருதி, நமக்கு எந்தவிதமான நோய் நொடியும் வராதிருக்க, நமக்குப் பாதுகாப்பாக இருக்கக் கூடிய இப்பேர்ப்பட்டவர்கள் விஷயமாக நான் மிகத் தாழ்மையுடன் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த விஷயத்தில் முதல் முதலாகக் கவனம் செலுத்தவேண்டும். ஒவ்வொரு நகர சபையிலும், ஒவ்வொரு பஞ்சாயத்து போர்டிலும் இப்படி இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு இலவசமாகப் பணம் கொடுத்தோ, கடனாகக் கொடுத்தோ வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று விவசாயிகளுக்கு மோட்டார், பம்புசெட்டுகள் வாங்கிக் கொள்வதற்காக கடன் கொடுக்கப்படுகிறது. இந்த

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1967 ஜூலை 11

இனத்தை எடுத்துக்கொண்டாலும், கிணறுகள் வெட்ட கடன் கொடுக்கும் இனத்தை எடுத்துக் கொண்டாலும் நாம் எதற்காகப் பணம் கடன் கொடுக்கிறோமோ அதற்காகச் செலவிடப்படுவதில்லை. ஏழைகளுக்குப் போய்ச் சேருவதில்லை. பணம் படைத்தவர்கள் வாங்கி வேறு காரியங்களுக்காகச் செலவிட்டுக் கொள்கிறார்கள். ஆகவே விவசாய அபிவிருத்தி என்ற இனத்தின்கீழ் இப்படிக் கடன் கொடுப்பதற்குப் பதிலாக சர்க்கார் மூலமாகவே நல்ல நீரோட்டமுள்ள இடத்தில் பிரும்மாண்டமான கிணற்றை வெட்டி, மோட்டார் பம்பு வைத்துக் கொடுத்தால் அதைச் சுற்றியுள்ள நூறு ஏக்கர் பாசன வசதி பெறும். இருபது வருடம் தவணைகளில் அதற்கான செலவை அந்த விவசாயிகளிடம் பெற்றுக் கொண்டு, பிறகு அவர்களுக்கே அதை உரிமையாக்கலாம். அப்படிச் செய்வது தான் மிகவும் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சர்க்காரே இதுபோன்ற பெரிய கிணறுகளை வெட்டித் தரும் காலம் வரையில் கிணறு வெட்ட பணம் கொடுக்கிறபோது— இப்போது 2,000 என்ற அளவில் கொடுக்கிறார்கள். அது போதாது அதை இரட்டிப்புமடங்காகக் கொடுக்க வேண்டும். அதுவும் கிணறு வெட்ட மானியமோ, கடனோ கொடுக்கிறபோது மழை வந்துவிட்டால் சரியான முறையில் செலவிடப்பட முடியாத சிக்கல் வந்துவிடுகிறது. கொடுக்கின்ற கடன் காலத்தில் கொடுக்கப் படவேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எஸ். ஜே. ராமசாமி**: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்கீழ் 30,98,94,900 ரூபாய்களை முதலமைச்சர் கோரியிருப்பதை நான் ஆதரிக்கிறேன். இதில் விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய கடன்களை ஒருமுகப்படுத்த வேண்டும். இன்றைக்கு விவசாயிகளுக்கு கிணறு வெட்ட கடன் கொடுக்கப்படுகிறது. மாடு வாங்கக் கடன் கொடுக்கப்படுகிறது. உரம் வாங்க, பம்புசெட்டு வாங்க, என்று இப்படி பல இனத்தின் கீழ் கடன்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கக்கூடிய விவசாயிகளை கணக்கெடுத்துக்கொண்டு மொத்தமாக ஒரு விவசாயிக்கு இவ்வளவு என்பதாக கடனை ஒருமுகப் படுத்திக் கொடுக்க வகை செய்தால் நன்றாக இருக்கும். இன்றைய தினம் பல பல இனங்களின்கீழ் கடன் கொடுக்கப்படுகிறபோது பலவிதமான தொந்தரவுகளுக்கு அவர்கள் உள்ளாகிறார்கள். இதைப்பற்றி ஏற்கனவே பேசிய உறுப்பினர் எடுத்துச் சொன்னார். ஆகவே விவசாயிகளுக்கு வழங்கப்படுகிற கடனை ஒருமுனைப் படுத்த வேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை**: தலைவர் அவர்களே, கடன் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையில் நம்முடைய நண்பர் காசிராமன் அவர்கள் பல துறைகளில் ஏற்கனவே இருந்ததைவிட அளவு குறைக்கப்பட்டிருப்பதைக் குறிப்பிட்



1967 ஜூலை 11] [திரு. சி. என். அண்ணாதுரை]

டார்கள். அதை மிக வருத்தத்துடன்தான் குறைத்துக் கொண்டேன். குறைத்துக் கொண்டதற்கு சந்தோஷப்படவில்லை. நிதி நிலைமையில் எதிர்பாராத சிக்கல்கள் ஏற்பட்டதன் காரணமாக இந்தவிதமான குறைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது குறித்து திரு. காசிராமனைப் போல நானும் வருத்தப்படுகிறேன். நிதி நிலைமையை சீர்ப்படுத்துகிற வகையில் நிலைமைகள் வளருமானால் இதில் குறைக்கப்பட்டிருக்கிற பல துறைகளில் மறுபடியும் அதிகப்படுத்துவதற்கான முயற்சியில் நான் நிச்சயமாக ஈடுபடுவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் கோதண்டராமன் அவர்கள் நகரசுத்தித் தொழிலாளர்களைப் பற்றிப் பேசும்போது அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரவேண்டுமென்று தாழ்மையுடன் சொல்லிக் கொள்கிறேன் என்றாலும் உரிமையுடன் சொல்லிக் கொள்ளலாம். அவர்கள் குறைகள் நீக்கப்பட்டாக வேண்டும். இதற்கு இந்த மானியத்திலே ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை குறைவாக இருந்தாலும், வீட்டு வசதிக்கு தேவையான மனை கொடுக்கவும் கடன் வசதிகளைப் பெற்றுத் தருவதிலும் இந்தச் சர்க்கார் முனைந்து இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நமது அரக்கோணத் தொகுதி உறுப்பினர் குறிப்பிட்டதை நான் சரியாகப் புரிந்து கொண்டேனோ என்னவோ தெரியவில்லை. கடன்களை எல்லாம் ஒருமுகப்படுத்தி மொத்தமாகக் கொடுத்துவிட வேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு விவசாயியைக் கூப்பிட்டு, 'இந்தா உனக்கு ஐயாயிரம் ரூபாய் கடன், இதை வைத்துக் கொண்டு நீ கிணறு வெட்டினாலும் சரி, கெடா மாடு வாங்கினாலும் சரி, கல்யாணம் செய்வதற்கு வைத்துக் கொண்டாலும் சரி' என்று கொடுத்துவிட வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஆபத்தான பரீட்சைகளிலே ஈடுபட இந்தச் சர்க்கார் தயாராக இல்லை. ஏற்கனவே கிணறுகள் வெட்டுவதற்காகக் கொடுக்கப்பட்ட மானியங்கள் சரியாகப் பயன்படுத்தவில்லை என்ற புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. திரு. கோதண்டராமன் அவர்கள் பேசும்பொழுது கிணற்றை வெட்டிக்கொடுத்துவிட்டால் நல்லது அல்லது அதற்காகக் கொடுக்கப்படுகின்ற பணத்தை அதிகமாக்கினால் நல்லது என்று குறிப்பிட்டார்கள். இப்பொழுது தரப்படுகின்ற மானியங்கள் எல்லாம் மாவட்டத்திற்கு மாவட்டம் கணக்கு எடுத்துத்தான் வெவ்வேறு அளவிலே கொடுக்கப்படுகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்திலே ஒரு கிணறு வெட்டுவதற்கு என்ன செலவாகும்; சேலம், கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களிலே ஒரு கிணறு வெட்டுவதற்கு என்ன செலவாகும் என்பதையெல்லாம் கணக்கிட்டுத்தான் கடன்கள் வழங்கப்படுகின்றன. சேலம் மாவட்டத்திலும், கோயம்புத்தூரிலும் கிணறு வெட்டுவதற்குச் சர்க்கார் கொடுக்கிற கடனிலேயே கிணறு வெட்டமுடியாது, யாரும் வெட்டியதும் இடையாது. சர்க்கார் வழங்குகின்ற கடனை

[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 ஜூலை 11

உரிமையோடு வாங்கிக் கொள்ள வேண்டுமென்றுதான் அதை எல்லாம் பெற்றுக் கொள்கிறார்கள். கோயம்புத்தூர் மாவட்டத்திலே ஒரு கிணறு வெட்ட வேண்டுமென்று சொன்னால் 20 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்தால்தான் கிணறு வெட்ட முடியும். ஆகவே இவற்றையெல்லாம் சர்க்கார் நன்றாக உணர்ந்திருக்கிறது. இதிலே எனக்கு அக்கறை நிரம்ப இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் XLVII —மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 30,93,94,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப் பேரவை இப்பொழுது கலைந்து இன்று மாலை நான்கு மணிக்கு மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

[இடைவேளைக்குப் பின்]

பேரவை மீண்டும் மாலை 4 மணிக்கு மாண்புமிகு பேரவைத்
பிற் பகல். 1-44 தலைவர் தலைமையில் மீண்டும் தொடங்கியது.

### 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) மதுரைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கான தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் மூன்று வெற்றிடங்களுக்கு முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள நான்கு வேட்பாளர்களில், கீழ்க்கண்ட மூன்று வேட்பாளர்கள் இன்று நடந்த தேர்தலில் முறைப்படி உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பதை இப் பேரவைக்கு அறிவிக்கின்றேன்:—

(1) திரு. மு. ச. சிவசாமி

(2) திரு. ம. பொ. சிவஞானம்

(3) திரு. நா. சௌந்தரபாண்டியன்

வேட்பாளர்களுக்குக் கிடைத்த வாக்குகள்—

| | |
|---|---|
| (1) திரு. மு. ச. சிவசாமி - - - - | 139 |
| (2) திரு. ம. பொ. சிவஞானம் - - - - | 142 |
| (3) திரு. நா.சௌந்திரபாண்டியன் - - - | 133 |
| (4) திரு. கரு. சீமைச்சாமி - - - - | 18 |



1967 ஜூலை 11]

### 7. 1967-68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் XXIV —தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து நிதிக் கோரிக்கை.
XXIV என்னுள்ள கோரிக்கையை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் XXIV —தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,32,10,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

**திரு. சி. கோவிந்தராஜன் :** தலைவர் அவர்களே, தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் கொடுக்கும் முறையைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XXIV—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,32,10,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளில் தொழிலாளர்களை சிக்கனம் என்ற பெயரால் வேலை நீக்கம் செய்வதைத் தவிர்ப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XXIV —தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 2,32,10,200-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

* THE HON. THIRU S. MADHAVAN : M. Speaker, Sir, In modern times, what the policy of a Government on labour relations should be, is more or less settled. The working class movement all over the world, the various conventions of the International Labour Organisation, the increasing complexity of production the greater sophistication in political ends, are the factors that have together defined labour policy in the contemporary world. To create conditions so that, in the factory, the worker is able to assume a more responsible relationship to the employer, and, outside the factory, is less subject to those social pressures which

* Cyclostyled speach circulated to Members.

[Thiru S. Madhavan] [1967 ஜூலை 11

prevent him from growing into the full stature of a human being—this, in essence, is the policy of this Government. The difference between the policy of one Government and another lies, however, not in their published statement, but in the degree of seriousness with which they try to fulfil it. The difference lies also in the professional competence with which the labour scene is analysed and adjustments made in the policy itself. I wish to emphasise, therefore, that this Government is committed to the welfare of labour. I wish to emphasise, however, also the recognition on our part that industrial relations cannot be discussed as if they were a phenomena isolated from the general condition of society. Industrial relations, and the temper of them, depend on other social relationships; just as Government action itself reflects the prevalent social values. Any policy on labour affairs can be meaningful, therefore, only if it is related to what is happening in the society: economically, culturally, and more often politically.

Coming to the details by which we hope to work out a truly purposive labour policy, certain facts must first be narrated. These facts are such that will throw light on what the labour scene has hitherto been in this State. They may be divided broadly into those that are about industrial disputes and those that more directly concern labour welfare.

In 1966, the number of disputes had increased by over a thousand. The number of strikes and lock-outs, as also the number of mandays lost consequentially, had much increased in 1966 when compared to what the figures were in the year before that. There were, in 1966, 176 strikes including lock-outs; as a result, 754,612 mandays were lost; the number of workers involved in them had risen to 69,310. Not until recently was any analysis done, however, of the factors responsible for the increase in industrial disputes and the stoppage of work. From a study of the kinds of disputes investigated by the Labour Officers, it is nevertheless seen that nearly 32 per cent of disputes were on account of dismissal and suspension of workers. 16.5 per cent of disputes were for higher wages and allowances; disputes regarding bonus were 12.5 per cent. In other words, the disputes involving financial demands like higher wages, allowances and bonus, put together were still less in number than the ones created by wrong dismissal and suspension of workers. This is further supported by the fact, that, of the total number of disputes settled by conciliation, 35 per cent—which again is the largest percentage in that group—were about dismissal and suspension of workers; likewise, of those settled by adjudication, 34 per cent involved the same problem. Of the total number of disputes, in 1966, retrenchment claims only 1 per cent; leave facilities and hours of work nearly 2 per cent. 36 per cent of the disputes could not be classified: they were caused by no major issues and were based on such demands as supply of coffee during work, badges for identification, an extra pair of shoes, of dress, of blankets when cold, included



1967 ஜூலை 11] [Thiru S. Madhavan]

demand for reducing workload. The conclusion is that 68 per cent of the disputes in 1966 had little to do with economic recession in industry. More than two-thirds of disputes that is to say, were not for economic reasons as is frequently made out. Most labour conflicts have no bigger issues beneath them but injured feelings, freyed tempers, misunderstandings. They could as well have been prevented had there been an effctive grievance machinery in the industrial establishments in which they arose.

The Labour Department generally handles industrial disputes *after* a grievance becomes a dispute; the purpose of the grievance machinery is on the other hand to prevent a grievance becoming a dispute, to do something *before*. Steps will, therefore, be taken to make the grievance procedure truely effective.. So far it has not been effective at all. As a matter of fact, only an insignificant number of industrial establishments had set up what could be called a grievance procedure. The Government hitherto paid little attention to this important method of improving industrial relations; and there is little evidence that its importance had been recognised. This Government will insist that all industrial establishments organise a grievance machinery.

The analysis of how the disputes themselves were handled by the conciliation officers, and the time taken by them and the Labour Courts in promoting settlement, indicate that a review into their working is perhaps, required. The number of disputes settled by conciliation in 1966 were only 15.3 per cent; in 1965, they were a little less than 14-8 per cent. 19 per cent of the disputes settled in 1966 by conciliation took between three and six months, 16 per cent took between six and twelve months, and 4 per cent took over twelve months before they could be settled. The rather low percentage of disputes in which the employer and the employees were reconciled by the conciliation officers as much as the long time taken by them will be reviewed. There has unfortunately been a steady decline in the number of disputes resolved by informal arbitration. Where arbitration was suggested as a way out to the parties by the conciliation officers, but was rejected, nearly 67 per cent was by the management. Only in 5½ per cent of cases did the employees turn down informal arbitration. In other words, if this very desirable method of settling disputes was rejected, it was by the employer, and not by the employee. When this was put to the representatives of the employers who had attended a meeting called by me at Madras on June 15, 1967, their argument was that arbitration must have been negatived because the issues perhaps involved high financial demands. This is not quite true. For among the cases where arbitration was accepted are included disputes relating not only to discharge and dismissal, but also issues involving large financial commitments, such as higher wages, dearness allowance and bonus, etc. So far no specific analysis was undertaken to find out why did the employers not find informal arbitration an acceptable

method of settling disputes. The Government will analyse this trend; and try to ensure more disputes were settled by informal arbitration.

The Government will also pay serious attention to establishing joint management councils—both in the public and the private sector. It is a matter of regret that so far little or no attention has been paid to this worthy institution. In this State only in 18 establishments—16 in the private sector and 2 in the co-operative sector—do the joint management councils exist. Steps are now being taken to review the role the labour department can play in this regard.

The progress in the field of labour welfare has so for been negligible. There has been little progress in providing houses for the industrial workers. Largely it was on account of limited funds. This Government will try to secure from the Government of India more funds for this essential requirement of the workers. In Madras City a substantial number among the workers live in slums. That is a big problem of which a study will be made. Although no easy way is there in view by which these workers could live in more humane and comfortable surroundings, this Government will nonetheless attend to their welfare to the degree possible. The grants given for labour welfare by various commodity boards, particularly tea and coffee boards, have been not utilised satisfactorily. These defects are being reviewed; and hereafter a greater emphasis will be attached to measures by which the labour welfare could be secured.

This Government is examining how to make available legal assistance to trade union(s) representing workers in regard to proceedings arising under any labour law in the High Court of Judicature at Madras to which they may be a party. The unions to whom this legal assistance may become available should have a membership not exceeding 500 on the relevant date. The Government is also examining the proposal to appoint a standing counsel for this purpose. In what other ways the welfare of the labour could be secured is being studied by this Government, Labour welfare will be the chief concern in our State from now on.

To fulfil that aim, the Government has also decided to constitute a Labour Advisory Group. This group will consist of representatives of various labour interests. The chief function of this group will be to advise the Government on all aspects of labour, particularly industrial relations and labour legislation. The Government has decided, at the same time, to reconstitute various other committees that exist and redefine their purpose—the most important among them being the State Labour Advisory Board and the State Evaluation and Implementation Committee. There are certain industries in the State, such as hotel industry, where the working conditions are found to be not satisfactory. Earlier it was ordered that a Special Officer would review the



working conditions in hotel industry; now the Government is examining a suggestion that this enquiry be entrusted to a committee on which both the employers and the workers will be represented.

In the begining it was said that labour problems cannot be dissociated from what is happening generally in society. These remarks best apply to what has so far been considered crucial to indusrial peace. I mean the Code of Discipline. If discipline and co-operation, concepts that lie under almost each sentence of the Code., are required before the worker and his employer can live in a productive partnership, they must not be totally absent from the general social life. Discipline and co-operation must not also be absent from the political life, which, as is well-known, is the major influence on the labour movement in this country. I am afraid they are absent. If the trade unions and the managements were naturally able and willing to fashion their relation, as the Code suggests, then indeed the Code would be not quite necessary. If they were not, for reasons which are of course complex, then the Code would hardly be of any use. The Madras Government is anxious that the sooner we give up satisfying ourselves with mere words, the better will be the appreciation of complex labour problems.

The Code of Discipline has, in a sense, created and not solved, the problem of recognition of trade unions by the employers. The basic issue, quite apart from others that generate conflict, is regarding which union among the countless, will have the sanction to negotiate with the management. It will be unnecessary for me to dwell on the way the multiplicity of unions have, on the one hand, divided the workers and thereby seriously limited their collective bargaining power and, on the other, made things for even the more responsible among the managements difficult. This Government, in a manner we consider appropriate, will try to create conditions where in one industry there is only one union. Patently that will be in the best interest both of the worker and the management. With a collective sanction behind it, this one union will negotiate, by collective bargaining, for higher wages where they can be paid; for increased participation in the productive management, for mutually accepted less hours of work; and for greater leisure. The question, however is: How to ensure one union in one industry? My suggestion is: Persuade the trade union leaders to consider such a step seriously; and since the four central labour organisations have their own political affiliations, a simultaneous political truce on this point has to be achieved. Now suppose it is somehow possible to achieve such a state of things, the question still remains as to how will this idea work in view of the fundamental right of the worker to associate—a right that has certainly to be respected. The answer is: the idea of one union in one industry is not a legal idea. It is based on the thesis that labour relations are ultimately extra-legal. The worker has to accept this idea voluntarily: for he has to give up a formal, legal freedom in exchange to what is

much more real, namely, power to negotiate fruitfully. The details of how the worker will elect the chief negotiating body can soon be worked out. By a secret ballot all the workers will appoint a committee of workers which will be authorised to look after their interests. This idea is a little different from what has so far been suggested by many persons. The suggestion of electing one union still maintains the distinction between the recognised union and those that are not. The election by secret ballot of one among many other unions will mean that other unions will still ramain on the scene, though without sanction to negotiate. If collective bargaining is to become a reality, and the workers are to attain a position where they do not have to depend heavily on Government intervention, then the only course open is as suggested by me earlier—to elect a committee of workers.

The Madras Government is inclined to favour the idea of rationalising labour legislation. Generally it is believed that legislation is the answer—which most definitely it is not—to all labour problems. The labour laws which have no sanction behind them are not useful. In fact, they create more difficulties. In brief this Government is of the view that, unless there is proper sanction for taking such a course, labour laws ought not to be multiplied—a trend which seems to be there.

This Government is opposed to automation.

A factor which is responsible for some cynicism is that the Government had so far allowed the public sector undertakings to violate labour laws while it had proceeded against the private sector for doing so. To make a law which just cannot be enforced by applying effective sanctions is bad enough, and certain of the labour laws are of that kind, but to distinguish between Government undertakings and those of the private owner is to invite a criticism which is justified, and anyway damaging. We have taken steps to correct such damage.

The Government has received the Report of Dr. V. Shanmugasundaram, Professor and Head of the Department of Economics, University of Madras, who was appointed as the Expert to examine the Report of the Special Committee earlier appointed by the Government to prepare the new series of consumer price index. The Report is being examined and shall be placed before the State Labour Advisory Board when it next meets.

The Government of Madras is unhappy to observe that out of 304 engineering units in the State, covered by the recommendations of the Central Wage Board for Engineering Industry, 215 units have not given the interim wage relief to their workers. Of the 65.901 workers entitled to this wage relief, 48,838 had not received it. The Government has taken definite steps, however, to ensure that the *interim* wage relief is paid to the workers by the engineering units without delay. A memorandum, dated the 28th



June 1967 was sent to these industrial units in Madras State requesting them to co-operate. The indication is that some have as a result of the inititative taken in this regard by the Government. Steps are similarly taken to ensure that leather and leather goods industries implement the recomendations made by that Wage Board.

Regarding the medical care of the workers, the Government have decided to cover as well the areas, before the end of this year, where the workers population is not less than one thousand. On account of the shortage of the doctors and para-medical personnel, the medical benefits under the Employees' State Insurance Scheme could not so far be extended to the families of insured persons in Madras City, Coimbatore and Madurai. The availability of doctors now more or less assured, the intention of the Government is to cover Madras City families by October 1967.

Finally, a word about that unhappy development in the trade union activity called gherao. This government has already expressed unequivocally its condemnation of the coercive elements being introduced in labour relations. *Gherao* is illegal and not a legitimate trade union activity at all. Having said this, it is necessary to emphasise that labour conflicts will not be treated by this Government as merely a law and order question. No instance of *gherao* will be tolerated; but neither will be tolerated violation of labour laws, agreements, awards, or recommendations of a Wage Board, on the part of the employers.

** திரு. ஜே. ஜேம்ஸ் :* மாண்புமிகு சபைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பில் இந்த மானியத்தின்மீது கொண்டு வரப் பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானத்தையொட்டிச் சில கருத்துக் களைக் கூற விரும்புகிறேன். புதிய அரசு பதவியேற்றதும் அதிலும் இடது சாரி கம்யூனிஸ்டுகளின் தோழமையுடன் இந்த அரசு பதவியை ஏற்றதும் நாட்டிலுள்ள தொழிலாளர்கள் அனைவரும் ஏதோ புதிய அரசு புரட்சிகரமான, புதுமையான தொழிலாளர் நலனுக்கான திட்டத்தை வகுக்கும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் தொழிலாளர் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற தொழிலாளர் நலன்பற்றிய அறிக்கை யைப் புரட்டிப் புரட்டிப் பார்த்த போது அதிலே புரட்சிகரமான, புதுமையான, தொழிலாளருக்கு நன்மை பயக்கக்கூடிய ஒரு அம்சத்தையும் நான் காண்பதற்கு முடியவில்லை.

*(திரு. பெ. மலைச்சாமி, தலைமை)*

தொழிலாளர் நமது சமுதாயத்தின் முதுகெலும்பு. நமது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் அயராது உழைத்து நாட்டுக்கு மிகச் சிறந்த சேவையைச் செய்து கொண் டிருக்கின்ற தொழிலாளர்கள் நமது மக்களில் முக்கியமான பாகம் என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும். என்றாலும்கூட நமது அரசு வகுத்திருக்கின்ற இந்த மானியத்தில் அவர்கள் நலன்

எவ்வாறு பாதுகாக்கப்பட்டிருக்கிறது, அவர்களுக்காக என்னென்ன திட்டங்களை வகுத்திருக்கிறது என்று பார்த்தால் அது மிகவும் துக்கப்பட வேண்டிய நிலையில்தான் இருக்கிறது.

இரண்டு தினங்களுக்கு முன்னதாக முதலமைச்சர் அவர்கள் தொழிற்துறை சம்பந்தமாக நான்கு அம்சக் கொள்கையை இந்தச் சபையில் சமர்ப்பித்ததை நாம் அறிவோம். அதில் முதல் அம்சத்தைக் கேட்டபோது, தொழிலாளர்களுக்கு இந்த அரசு பெரும் தீங்கை விளைத்து விட்டது என்றே நான் எண்ணினேன். முதல் அம்சமாக முதலமைச்சர் கூறியது என்னவென்றால் 'இன்று இந்த நாட்டில் இருக்கும் தொழில் மந்த நிலையைப் போக்குவதற்குப் புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்குப் பதிலாக இருக்கின்ற தொழில்களை அபிவிருத்தி செய்வதுதான் இந்த அரசின் கொள்கை' என்று கூறினர்.

நமது நாட்டில் எண்ணற்ற படித்த வாலிபர்கள் வேலையில்லாமல் அலைந்து திரிவதை அறிவோம். வேலையில்லாத் திண்டாட்டம் நமது நாட்டில் அதிகமாக இருக்கிறது என்பதை இந்த அரசு நன்கு அறியும். தொழில் நிலையங்களை ஏற்படுத்துவதன் ஒரு நோக்கம் நாட்டில் இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பது என்பதும் இந்த அரசுக்கு வெகு தூரமான விஷயம் அல்ல. விஷயம் அறிந்த பிறகு கூட நமது முதலமைச்சர் அவர்கள் நாட்டின் தொழில் கொள்கையைப் பற்றிக் கூறியபோது இந்த நாட்டில் தொழில் துறைகளை விஸ்தரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னது இந்த நாட்டிலுள்ள எண்ணற்ற வேலை இல்லாத வாலிபர்களுக்கு வாழ்க்கைக்கு வழி வகுக்கின்ற பொறுப்பு எனக்கு இல்லையென்று கூறுவது போல் இருந்தது ஆகவே, சபாநாயகர் அவர்களே, இன்று இருக்கிற நிலையில் இந்த அரசு தொழிலாளர்களைப் புறக்கணித்து இருக்கிறது என்று வேதனையோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்று இருக்கின்ற தொழிற்கூடங்களானாலும், சரி அதிலே இருக்கின்ற தொழிலாளர்கள் நிலையானாலும் சரி, என்ன நிலைமையில் இருக்கிறது என்பதைச் சற்று சிந்திக்க வேண்டும். கழிந்த 15 வருஷங்களாக தொழிலாளர்கள் இடையில், தொழிற் துறையில் இருந்த அமைதி, சுமுகமான ஒரு நிலை இன்று காணப்படவில்லை. நல்ல ஒரு 'அட்மாஸ்பியர்' தொழிற் கூடங்களில் காணப்படவில்லை. 'இண்டஸ்ட்ரியல் பீஸ்'. இப்போது காணப்படவில்லை. கழிந்த 3, 4 மாதங்களாக ஆங்காங்கே, லூகாஸ் டி.வி.எஸ். கம்பெனி, நெய்வேலி, அம்பத்தூர் தொழிற் கூடங்கள், இங்கெல்லாம் வேலை நிறுத்தம், கதவடைப்பு, தொழிலாளர்களுக்கு வேலை இல்லை என்று ஒவ்வொரு நாளும் பத்திரிகையில் செய்தி வந்து கொண்டே இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று சிந்திக்கவேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. தொழிலாளர் நலனுக்காக அமைச்சரவை இரண்டு கோடிக்கு அதிகமான மானியத்தைக் கோரி அது இந்தச்





சபையில் இருக்கிறது. ஆகவே, தொழிற்துறையில் தொழிலாளர்களுக்குத் தீமை விளைவிக்கக்கூடிய சக்தி என்ன என்று சிந்தித்து அதற்குப் பரிகாரம் காண வேண்டிய பொறுப்பு இந்த அமைச்சரவைக்கு உண்டு என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசை ஓரளவிற்குப் பாராட்ட வேண்டிய பொறுப்பும் எனக்கிருக்கிறது. நம் நாட்டில் ஆங்காங்கே 'கெரோ' என்ற, வன் சக்தி, தீய சக்தி செயல்பட்டுக்கொண்டிருக்கும்போது நம் அரசு அதை ஆதரிக்கவில்லை. அதை எதிர்க்கிறோம் என்று அப்போதே அது தோன்றிய காலத்திலேயே ஒரு அறிக்கை விட்டதை நாம் அறிவோம். அந்த நிலையில் இந்த அமைச்சரவையை நான் பாராட்டுகிறேன், ஆனால் அந்த அறிக்கையோடு நின்று விடக் கூடாது. அந்த அறிக்கையை நடைமுறையில் நல்ல முறையில் அமல்படுத்த வேண்டுமென்று இந்த அமச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன். இப்போது இண்டஸ்ட்ரியல் பீஸ் நிலவவில்லை. ஆகவே தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். நம் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. நம் நாட்டின் உற்பத்தி பாதிக்கப்படுகிறது, பொருளாதாரம் குன்றுகிற நிலை ஏற்படுகிறது என்று சொன்னேன். ஆகவே இந்நிலையை மாற்றி தொழிலாளர்களின் நலன்கள் எந்த முறையில் பாதுகாக்கப்படவேண்டுமோ அதற்கு வேண்டியதை இந்த அரசு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கிடைக்கவேண்டும். அதற்கு என்னென்ன சட்டங்கள் வேண்டுமோ அவற்றை என்னென்ன முறையில் அமல்படுத்த வேண்டுமோ அவற்றை இந்த அரசு செய்ய வேண்டும். தொழிலாளர்களுக்குத் தொழில் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இப்போது ஆங்காங்கே முதலாளிகள் தங்கள் இஷ்டம் போல் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்குவதும் தங்கள் இஷ்டம்போல் அவர்களுக்கு ஊதியம் கொடுக்கிற நிலையும் இருக்கிறது. அதற்கு ஒரு முடிவை இந்த அரசு காண்பதற்கு வழிவகை வகுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப் பட்டது.)

Sir, I may be permitted to take a few more minutes because on our side there may not be many hon. Members to speak on this Demand.

MR. CHAIRMAN (THIRU P. MALAICHAMY): The hon. Member can take two more minutes.

திரு. ஜே. ஜேம்ஸ்: நமது அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் இன்னும் ஒரு நல்ல அம்சத்தைக் காண நேரிட்டது. நம் மாநிலத்திலுள்ள உயர்நீதிமன்றத்தில் தொழிற் சட்டங்களைப் பாதுகாக்க, தொழிலாளர்களுக்காக ஒரு லீகல் அட்வைஸர், என்று ஒரு வழக்கறிஞரை நியமிக்கவேண்டுமென்ற கருத்து அரசுக்கு இருப்பதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதில் ஒரு திருத்தத்தைக் கூற விரும்புகிறேன். உயர்நீதிமன்றத்தில் மட்டும் என்ற

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1967 ஜூலை 11

நிலை போதாது. ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள மாவட்ட கோர்ட்களிலும் அந்தப் பகுதிகளில் உள்ள தொழில் கோர்ட்களிலும் ஏழைத் தொழிலாளர்களின் உரிமையைப் பாதுகாக்க அங்கு வருகிற வழக்குகளில் அவர்களுக்காக வாதாட ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு வழக்கறிஞரை நியமித்து அந்த முறையில் தொழிலாளர்களுக்கு நன்மை செய்து கொடுக்கவேண்டுமென்பு அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களுக்காக கூலி, மினிமம் வேஜஸ் பல துறைகளில் பல ஆண்டுகளுக்கு முன்னதாக நிர்ணயிக்கப்பட்டது, இப்போது நிலவரத்திலுள்ள கூலி பல வருடங்களுக்கு முன்னதாக அன்றிருந்த சூழ்நிலையைப் பரிசிலனை செய்து அதற்குத்தக்கபடி கூலி நிர்ணயம் செய்யவேண்டுமென்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன். எவ்வளவோ சட்டங்கள் தொழிலாளர்களுக்காக, நம் மாநில சட்டங்களானுலும்சரி அல்லது மத்திய அரசாங்கச் சட்டங்களானுலும் சரி இப்போது சட்டங்களுக்குக் குறைவில்லை. ஆனுல் அந்தச் சட்டங்களினுல் எவ்வளவு தூரம் ஏழைத் தொழிலாளர்கள் பயனடைகிருர்கள், நன்மை அடைகிருர்கள் என்பதைச் சிந்தித்துப்பார்த்தால் பயன் மிகவும் குறைவாக இருக்கிறது. அதில் உள்ள குறை என்னவென்ருல் அதை அமல்படுத்துகிற அதிகாரிகளுக்கு அதில் ஏதோ சில கஷ்டங்கள் இருப்பதாகத் தெரிகிறது. அப்படி அந்தச் சட்டங்களில் ஏதாவது கோளாறு இருக்குமானுல், உண்மையில் ஏழைத் தொழிலாளர்களுக்குப் பயன்தரதக்க விதத்தில் அதை அமல்படுத்த வகை இல்லை என்ருல் அந்தச் சட்டங்களைத் திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கடைசியாக ஒன்று மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது விலைவாசி விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கும்போது ஆங்காங்கு தொழிலாளர்களுக்காக கன்ஸ்யூமர் கோவாப்பரேடிவ்ஸ் அமைத்து அவை மூலம் அவர்களுக்குத் தேவையான பொருள்களை விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். அதோடு இப்போது சட்டப்பிரகாரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டியிருக்கிற ஹௌஸிங் அலவன்ஸ் மெடிக்கல் அலவன்ஸ், போனஸ் போன்றவை அவர்களுக்குக் கிடைக்கும் விதத்தில் சட்டத்தை அமல் செய்வதற்கு வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் அறிவார்கள். நம் மாநிலத்திலே எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் ரப்பர் ப்ளான்டேஷன் இருக்கிறது. அங்கு ஏகதேசம் 20,000 தொழிலாளர்கள் இத்துறையில் ஈடுபட்டிருக்கிருர்கள். அவர்களின் நிலைமை இன்று பரிதாபகரமான நிலையில் இருக்கிறது. அந்தப் பகுதியில் இந்தத் தொழில் சட்டங்கள் அமலில் இருக்கின்றனவா என்பு கூடச் சந்தேகிக்கவேண்டிய நிலையில் இருக்கிறது. அங்குள்ள முதலாளிகள் இந்தச் சட்டங்களை வகை வைப்பதாக இல்லை. ஒருவேளை அதிகாரிகள் வந்தாலும் கூட அந்த இடத்திலேயே தட்டிக் கழிக்கும் நிலையில் இருக்கிருர்கள். தோட்டங்களில் தொழிலாளர்களுக்காக எந்தவித ரிக்கார்ட்களோ



1967 ஜூலை 11] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அல்லது நிரந்தரமான தொழிலாளர்கள் யார் யார் என்ற கணக்கோ கிடையாது. அவர்கள் ஒரு முறையை வகுத்துள்ளார்கள். காஷ்வல்ஸ், பெர்மனன்ட் காஷ்வல்ஸ் என்று கூறி முதலாளிக்குத் தேவைப்படும்போது அவர்களைப் பிரித்துவிடலாம், சட்டப்படி அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய நன்மைகள் ஒன்றும் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்ற நிலைதான் இருக்கிறது. அவர்களுக்கு நியாயமான கூலியோ, மற்றும் நன்மைகளோ கொடுக்கப்படவில்லை. ஆகவே இந்த முறையை மாற்றியமைக்க வேண்டும். அதற்காக ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கழிந்த மூன்று ஆண்டுகளாக போனஸ் கொடுக்கப்படவில்லை. எங்கள் மாவட்டத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னதாக ஒரு நிலை இருந்தது. இப்போது கூட எல்லாத் தொழிலாளர்களுக்கும் வீடோ வீட்டுவாடகையோ அளிக்கப்படவில்லை. அங்கு தொழிலாளர்கள் எட்டு, பத்து மைல்களுக்கு அப்பாலிருந்து தோட்டங்களுக்கு வரவேண்டியிருக்கிறது. காலையில் நான்கு மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டால் ஆறு மணிக்குத் தோட்டத்திற்கு வருகிருர்கள். காலை ஆறு மணி முதல் நான்கு மணி வரையில் தோட்டத்தில் அவர்கள் வேலை செய்து விட்டுத் திரும்ப வேண்டியிருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்னுல் முதலாளிகள் அவர்களுக்கு இரண்டு வேளை மதிய உணவு கொடுப்பது வழக்கமாக இருந்தது. இடையே ஏதோ காரணத்தினுல் அதை நிறுத்திவிட்டு சில தொழிலாளர்களுக்கு மட்டும் இரண்டு வேளை உணவிற்குப் பதிலாக மூன்றணு கொடுக்க ஏற்பாடாகி இருக்கிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் காலத்தில் மூன்று அணுவைக் கொண்டு இரண்டு வேளை எவ்வாறு சாப்பிட முடியும்? ஆகவே இதை மாற்றி எல்லோருக்கும் முன்மாதிரி மதிய உணவு கொடுக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் மாவட்டத்தில் நாகர்கோவிலில் ஒரு இண்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட் இருக்கிறது. கழிந்த வருடம் அதன் தேர்வுக் குழுவில் நான் பங்கு கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. அப்போது, 160 மாணவர்களைத் தேர்ந்தெடுக்க வந்த மனுக்கள் 2,000. அங்கு ஆறு ட்ரேட்ஸ் இருக்கின்றன. இன்னும் ஆறு ட்ரேட்ஸ் கூடுதலாக அமைக்க வாய்ப்பிருக்கிறது. கட்டிடம் கட்டவேண்டியதில்லை, முதல் அதிகமாக முடக்க வேண்டியதில்லை. இப்போதுள்ளதை விட ஆறு ட்ரேட்ஸ் கூடுதல் அமைத்தால் அங்குள்ள இன்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட்டில் உள்ள நெருக்கடியை ஒருவாறு குறைக்க முடியும். ஆகவே இதைச் சற்றுப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு கடைசியாக இன்று விவசாயிகளுக்காக ஒரு சட்டம் இருக்கிறது. எவ்வளவோ வருடங்களுக்கு முன்னதாக அவர்களுக்குக் கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கால நிலையில் அந்தச் சட்டத்தை மாற்றியமைத்து அவர்களுக்கும் புதிய கால நிலையில் கூலியைத் திருத்தியமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி): காலக் குறைவு காரணமாக உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஏழு மணித் துளிகள் அளவுக்கு மேற்படாமல் தங்கள் பேச்சுக்களை முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. எஸ். ராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தொழிலாளர் நல மானியத்தின் மீது எனது கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தந்துள்ள கொள்கை அறிக்கையைப் பார்க்கிறபோது இன்றைய தினம் தமிழ் நாட்டில் உள்ள பல லட்சக்கணக்கான தொழிலாளர்களுடைய இதயங்களும், குடும்பங்களும் அமைச்சர் அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறது என்று நினைவூட்ட விரும்புகிறேன்.

தொழிலாளர் நல்வாழ்வுக்கான திட்டங்கள் இந்தச் சர்க்காரால் மேற்கொள்ளப்படவில்லை என்று கூறுவது—ஒன்று தொழிலாளர் நலம் சம்பந்தப்பட்ட இந்தக் கொள்கை பற்றிய ஏடுகளைப் படிக்க அவருக்குக் காலம் இல்லாமல் இருந்திருக்கலாம்; இல்லையென்றால், வேண்டுமென்றே அவற்றை மறைத்து, தங்களுடைய வாதத்திற்காக அதைப் பயன்படுத்தியிருக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

பல நாடுகளில் ரத்தத்தைச் சிந்தி, வேட்டுச் சத்தங்களுக்குப் பிறகுதான் தொழிலாளர்கள் தங்களுடைய நல்வாழ்வுக்கான திட்டங்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், தமிழகத்திலுள்ள தொழிலாளர்கள் அமைதியான முறையில், தங்கள் நியாயமான கோரிக்கைகளைப் பெற ஒரு நல்ல சர்க்காரை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று நினைக்கும்போது, அது உண்மையிலேயே பெருமிதம் அளிக்கிறது. நமது சர்க்கார் வெளியிட்ட கொள்கை சாசனம், இது தொழிலாளர்களின் சர்க்கார் என்பதை மிகத் தெளிவாக, வெள்ளிடை மலையென விளக்கி நிற்கிறது.

அது மட்டுமல்ல. ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் தொழிலாளர் நலனுக்காக எதிர்க்கட்சிகள், திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட, வாதாடியபோது, தொழிலாளர்களுக்காகப் பல சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன, தொழிலாளர் நலனைக் கவனிப்பதற்காக ஒரு இலாகா இருக்கிறது, தொழிலாளர் பிரச்னைகளைக் கவனிக்க நீதி மன்றங்கள் இருக்கின்றன, தொழிலாளர்கள் தகராறுகளைத் தீர்க்க தொழில் கோர்ட்டுகள் இருக்கின்றன என்று விரிவாக விளக்கி, தொழிலாளர்களின் நலனைக் காப்பாற்றிக் கொள்ள வசதிகள் உள்ளன என்று கூறி வந்தார்கள். இன்றைய தினம் தொழிலாளர் பற்றிய இந்த அறிக்கையைப் பார்க்கும்போது எந்த அளவுக்குத் தொழிலாளர் சட்டங்கள் புறக்கணிக்கப்பட்டன, எந்த அளவுக்குத் தொழிலாளர் இலாகா தங்கள் வசதிக்காகப் பயன்படுத்தப்பட்டன, எந்த அளவுக்குத் தொழிலாளர்கள் பழி வாங்கப்பட்டார்கள், எந்த அளவுக்குத் தொழிலாளர் பிரச்னைகள் தொழில் கோர்ட்டுக்குச் செல்லாமல் மறுக்கப்பட்டன



என்று புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது, தொழிலாளர் நலனுக்காக ஏற்பட்டவைகளெல்லாம் முதலாளிகளுக்குப் பாதுகாப்பாகவும், தொழிலாளர்கள் பழிவாங்கப்படுவதற்கு உதவியாகவும்தான் இருந்திருக்கின்றன. அதிலே தீவிரமான மாற்றம் தேவை, புரட்சிகரமான ஏற்பாடுகள் தேவை என்று இந்தச் சர்க்கார் உணர்ந்து, இன்றைய தினம் எடுத்திருக்கிற நல்ல நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, இந்த அமைச்சரவையை நாம் பாராட்டுகிறோம்.

Grievances machinery, joint management councils, legal assistance, State Labour Advisary Board, State Evaluation and Implementation Committee '— போன்ற தொழிலாளர் நலனைக் காப்பாற்றும் அமைப்புகள் மேற்கொண்டும் பலப்படுத்தப்பட்டிருப்பதைத் தொழிலாளர்கள் இன்றையதினம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு அடுத்தபடியாக நாமெல்லாம் சமதர்மத் திட்டத்தை ஒத்துக்கொண்டிருக்கிறோம். சமதர்மத்திட்டம் என்றால், இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் தொழிலாளர்களாக மாறுவது தான் நாம் சமதர்மத் திட்டத்தை நோக்கிச் செல்லுகிறோம் என்றால், இருக்கிற ஜனத் தொகையில் எவ்வளவு பேர்கள் தொழிலாளர்களாக மாறி விட்டார்கள் என்பதைப் பொறுத்துத் தான் சொல்ல முடியும். சொத்துக்கும், சுக போகத்திற்கும் அடிமையாகிச் சோம்பேறிகளாக இருந்தவர்கள் எவ்வளவு குறைந்து விட்டார்கள் என்று பார்க்கும்போது, பெருமளவுக்குக் குறைந்து கொண்டிருந்தால் அந்த நாடு சமதர்மத்தை நோக்கிச் செல்லுகிறது என்று பொருள். ஒரு நாட்டில் தொழிலாளர்களின் எண்ணிக்கை எந்த அளவுக்கு அதிகமாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு அது சமதர்மத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்று பொருள். தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருகப் பெருக சமதர்மத்தை நோக்கிச் செல்லுகிறோம் என்று பொருள்.

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்கள் தொழிலாளர்கள். அவர்களுக்கென்று ஒன்றும் கிடையாது. மனித உழைப்பும், ஊக்கமும் தான் அவர்களுக்கு வாழ்க்கையை ஏற்படுத்தித் தருகிறது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கணக்கிடுவதற்குக் கூட, அந்த நாட்டிலுள்ள தொழிலாளர்கள் என்ன வருமானம் பெறுகிறார்கள் என்பதைக் கொண்டுதான் கணக்கிடுகிறார்கள். இதைப் பார்த்தால், வெளிநாடுகளிலே கூட, அமெரிக்காவில் மட்டுமல்ல, சோவியத் யூனியனில் மட்டுமல்ல, ஒவ்வொரு நாடும் தன்னுடைய பெருமையைபற்றிப் பேச 'என்னுடைய நாட்டுத் தொழிலாளி காரில் போகிறான்,' என்றும் 'என்னுடைய நாட்டுத் தொழிலாளி டெலிவிஷன் செட் வைத்திருக்கிறான்' என்றும் சொல்லக் கூடிய நிலைமை இருக்கிறது. தொழிலாளர்களுடைய நல்வாழ்வுதான் அந்த நாட்டின் நல்வாழ்வுக்கு அறிகுறியாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. தொழிலாளர்களுக்கான

நல்ல திட்டங்களைத் தீட்டி, தொழிலாளர் நல வளர்ச்சிதான் நாட்டு வளர்ச்சி என்று சுமுமான சூழ்நிலை ஏற்படுத்தியிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

அதே போல ஒவ்வொரு தொழில்கூடத்திலும் பல தொழிற் சங்கங்கள் இருந்து பல்வேறு சிக்கல்களும், குரோத உணர்ச்சியும் ஏற்படுவதைத் தடுக்கும் முறையில், ஒரு தொழிலைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு ஒரு சங்கம் இருந்தால் மிக நன்றாக இருக்கும். அனைவருடைய ஒருமித்த கருத்துக்களை எடுத்துக் கூற, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைப் பெற, அது நல்ல உறுதுணையாக இருக்கும். ஆகவே, ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் இருந்தால் மிக நன்மையாக இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால், இன்றைய தினம் இருக்கிற நிலைமையைப் பார்க்கும்போது, பல தொழிற் சங்கங்கள் அரசியல் அடிப்படையிலே, அகில இந்திய ரீதியிலே இணைக்கப்பட்டு, தொழிலாளர்களால் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. இந்த நிலையில் கட்சி ரீதியில் இயங்கி வருகிற தொழிற் சங்கங்கள் ஒன்றாக இணைந்து, பிரச்னைகளை வைக்க, அங்கீகாரம் பெற முயற்சிகள் மேற்கொள்ளுமானால், அது வரவேற்கத் தக்கது. அது போன்ற நல்ல நிலைமையை உருவாக்கினால் அனைத்து மக்களும் பாராட்டுவார்கள்.

ஆனால் இன்று இருக்கிற நிலைமையில் அது நடைமுறைக்கு உகந்து வருமா என்பது ஐயப்பாடாகவே இருக்கிறது. அப்படி ஒரு நிலைமை உருவாகாவிட்டாலும் ஒவ்வொரு தொழில் சங்கத்திற்கும் இரகசிய வாக்கெடுப்பு மூலம் எவ்வளவு தொழிலாளர்கள் ஆதரவாக இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, அந்த அளவுக்குத் தொழிலாளர்கள் குழு ஏற்படுத்தும்போது, ப்ரொபோர்ஷனல் ரெப்ரெஸெண்டேஷன்—விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம்—அடிப்படையிலாவது அந்தக் கமிட்டியிலே அவர்களையெல்லாம் வரச் செய்து சுமுகமான சூழ்நிலையை உருவாக்கி, தொழில் பெருகுவதற்கும், தொழிலாளர் நலன் பெருகுவதற்கும் பாடுபடுவது நலம் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், அத்தனை தொழிற் சங்கங்களும் ஒன்றுபடுவதற்குள் கமிட்டி அமைப்பு முறையை மேற்கொண்டால் பலன் அளிக்கும்.

என்னுடைய தொகுதியில் இருக்கிற நெய்வேலித் தொழிற் சாலையை எடுத்துக்கொண்டால் அங்கே நான்கு சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒன்று தொழிலாளர் முன்னேற்றச் சங்கம். இன்னொன்று, நெய்வேலி லிக்னைட் மைன்ஸ் லேபர் யூனியன். மூன்றாவது, கட்சிச் சார்பற்ற ஸ்டாஃப் யூனியன். நான்காவது, ஐ.என்.டி.யூ.ஸி-யுடன் இணைந்த யூனியன் அந்த ஐ. என்.டி.யூ.ஸி. யூனியனில் அங்கத்தினர்கள் 100 பேர்கள்கூட இல்லை. 15,000 தொழிலாளர்களுக்கு மேல் இதர சங்கங்களில் இருக்கிறார்கள்: அத்தனை பேர்களும் ஒன்றுபட்டாலும், ஐ.என்.டி.யூ.ஸி; அவர்களுடன் இல்லாத நிலை இருக்கிறது. அவர்கள் எடுத்து வைக்கிற கோரிக்கை



களைப் புறக்கணிக்கிறார்கள். அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளைப் புறக்கணிக்கிறார்கள். ஏனென்றால் அங்கீகாரம் பெற்ற தொழிற்சங்கம் ஐ.என்.டி.யூ.ஸி. தான்; அங்கீகாரம் பெறாது இருந்தாலும் அதிலே 15,000 தொழிலாளர்களுக்கு மேல் இருக்கிறார்கள். அவர்களிடம் அக்கறை காட்டி, அவர்களுடைய நியாயங்களை உணர்ந்து இன்றைய தினம் தமிழகச் சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்ளுவதைக் குறித்து நெய்வேலியில் உள்ள ஒவ்வொரு தொழிலாளியும், தொழிலாளியின் குடும்பமும், முதல் அமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களையும், அவர் அமைத்த அமைச்சரவையையும் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மேலும் நிர்வாக முறையிலே ஏராளப் பணம் செலவழிக்கப்படுகிறது. பல படாடோபங்களுக்கும், வீண் செலவுகளுக்கும் தொழிலிலே வருகிற பணத்தைச் செலவழித்து, பிற தொழிலிலே பணத்தைப் போட்டு முதலாளிகள் நடத்துகிற முறையில் தொழிலில் நஷ்டக் கணக்கைக் காட்டுகிறார்கள். தொழிலில் வருகிற லாபத்தை இதரச் சொத்துக்களாக மாற்றி, இதரத் தொழில்களை ஏற்படுத்தி தொழிலாளர்களுக்கு நஷ்டக் கணக்கு காண்பித்துப் பழிவாங்கும் நிலைமை இருக்கிறது. ஆகையால் பல இடங்களில் நஷ்டம் என்று சொல்லப்படுகிறது. தொழிலாளர்களைப் பழிவாங்குவதற்காக, லாக்-அவுட் செய்கிறோம் என்று மிரட்டுகிறார்கள். ஆகவே, நிர்வாகத்தில் பங்கு பெறுவதற்காக, நிர்வாகம் நியாயமாக நடைபெறுகிறதா என்று கண்காணிக்க ஆலோசனை சொல்ல தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் தனியார் துறையில் டைரக்டராகவும், பொதுத் துறையில் டைரக்டரேட்டில் போர்டு மெம்பராக இருக்கும் முறையை ஏற்படுத்தி, நிர்வாகச் செலவுகளைக் கண்காணிக்கவும், பங்கீடுகளிலே வருகிற லாபத்தைக் கவனிக்கவும் உற்பத்தி செய்கிற பொருள்களின் தரத்தைக் கண்காணிக்கவும், அவர்கள் நேரடிப் பார்வையில் கொண்டு வந்து உற்பத்தி செய்தால் நல்ல லாபம் வரும், நாடு முன்னேற்றம் என்ற அடிப்படையில் நம்முடைய தொழில் கொள்கை அமையவேண்டும். அப்படி அமையுமானால் தொழிலாளர்கள் அனைவரும் அதை வரவேற்பார்கள் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். பிற்பகல் 4–30

* திரு. ஆலடி அருணா : அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கோரப்பட்டிருக்கிற தொழிலாளர்கள் மான்யக் கோரிக்கையை ஆதரிக்கின்ற வகையிலே எனது கருத்துக்களை இந்த மேலான அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்கும், அவர்களுடைய உரிமைகளைப் பேணுவதற்கும் அவர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்கும், ஆளும் பொறுப்பை முன்னால் ஏற்றிருந்த காங்கிரஸ் ஆட்சி பல்வேறு திட்டங்களையும், சட்டங்களையும் இந்த அவையின் மூலமாக நிறைவேற்றியிருக்கிறது. ஆனால், இந்தச் சட்டங்களெல்லாம் முதலாளிகளைப்

பாதுகாக்கின்ற வகையிலும், முதலாளிகள் தொழிலாளிகளைச் சுரண்டுவதற்கு அனுமதிக்கின்ற வகையிலும், தொழிலாளர்களுக்கு நியாயமும், வசதிகளும் வழங்காத வகையிலும் அரைகுறைச் சட்டங்களாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. இதைப்பற்றித் தொழிலாளர்களுக்காகப் பாடுபடும் தொழிலாளர் தலைவர்கள் மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், புதிய பொறுப்பேற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் இந்தக் குறைகளையெல்லாம் போக்கி இது தொழிலாளர்களுடைய அரசு, ஏழைகளுடைய, பாட்டாளிகளுடைய அரசு என்று நாடும் நல்லோரும் ஏற்கின்ற வகையிலே பல சட்டங்களையும், புதிய திருத்தங்களையும் இந்த மாமன்றத்தின் மூலம் உருவாக்கிக் காட்டும் என்ற நம்பிக்கையும் நல்லெண்ணமும் இன்றையதினம் மக்களுடைய இதயத்தில் பசுமையாக இருக்கிறது. இதையெல்லாம் நான் குறிப்பிடுகிற சந்தர்ப்பத்தில் ஒரு பிரச்னையைப்பற்றி மட்டும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், சுமார் ஒரு லட்சம் பீடித் தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். இதைப் பீடித் தொழிலாளர்கள் பிரச்சினையில் சிலருக்கு அலட்சியமான போக்கும், அது ஒரு குடிசைத் தொழில் என்றும் அதிலே வேலை செய்கின்ற தொழிலாளர்கள் நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் மிகுதியாகத் தாய்மார்களாக இருப்பதால் அக்கறையற்ற தன்மையும் பொதுவாக நிலவி வருகிறது என்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆனால் இந்தத் தொழிலாளர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்ன பாதுகாப்பு கொடுக்க இருக்கிறது. முதலாளித்துவக் கொடுமைகளிலிருந்து மீட்பதற்கு தமிழக அரசு என்ன பொறுப்பு ஏற்க இருக்கிறது என்பதைப் பற்றிய பிரச்சினை இன்றையதினம் நெல்லை மாவட்டத்தில் தீப்பிழம்பாக எழுந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1958-ல் மெட்ராஸ் பீடி பிரெமிஸஸ் ஆக்ட் என்ற ஒரு சட்டத்தை முன்னிருந்த காங்கிரஸ் கட்சி அரசு நிறைவேற்றியிருக்கிறது. அந்தச் சட்டம் ஒழுங்காக அமுல் நடத்தப்பட்டிருந்தால், சட்ட விதிகள் நியாயமாக நிறைவேற்றப்பட்டிருந்தால் 1958-லேயே பீடித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கிடைத்திருக்கும். ஆனால் காங்கிரஸ் கட்சியைத் தங்களுடைய சுய லாபத்திற்குப் பயன்படுத்திக்கொண்ட பீடி முதலாளிகள் அந்தச் சட்டத்திலிருந்து நான்கு விதிவிலக்குகளைப் பெற்று விட்டார்கள், எந்த விதிகள் தொழிலாளிகளுக்கு உரிமை கொடுத்ததோ எந்த விதிகள் தொழிலாளிகளுக்குப் பாதுகாப்புக் கொடுத்ததோ எந்த விதிகள் இந்த நாட்டு நலனுக்காகத் தேவைப்பட்டதோ, அந்த விதிகளிலிருந்தெல்லாம் விதிவிலக்குப் பெற்ற முதலாளிகள் இன்றைய தினம் தொழிலாளிகளை வாயில்லா பூச்சிகளைப் போல் வாழ வைத்திருக்கிறார்கள். எனவே அதில் திருத்தங்கள் தேவை. விதி விலக்குக் கணக்கில் வளர்ந்திருக்கிறது. இப்போதும்கூட முதலாளி கொடுக்காதே என்ற குரல் தொழில் இயக்கங்களில் ஆண்டுக்





களுக்கு வருகிற நவம்பர் மாதம் வரையில் அந்த விதிவிலக்கு இருக்கிறது. நமது மதிப்பிற்குரிய அவைத் தலைவர் மூலமாக தொழில் துறை அமைச்சர் அவர்களை மிகப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன் மீண்டும் அந்த சலுகைகளை கொடுக்காதீர்கள். பீடி தொழிலாளர்கள் தமிழகத்தை பொருத்த வரையில் 3 அல்லது 4 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. எனவேதான் இந்த விதிவிலக்கைக் கொடுக்கக்கூடாது என்று மிகப் பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மத்திய சர்க்கார் பீடி ஸிகார் வொர்க்கர்ஸ் கண்டிஷன் ஆக்ட் என்ற ஒரு புதிய சட்டத்தை ஐந்து திங்களுக்கு முன்னால் நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தச் சட்டம் எப்போது அமுல் நடத்தப்படும் என்பதற்கான சூழ்நிலையை ஆராய்ந்து பார்க்கும்பொழுது ஏறத்தாழ இன்னும் 1½ ஆண்டுகள் பிடிக்கும் என்ற நிலையை எண்ணிப் பார்க்கும்பொழுது, பீடித் தொழிலாளர்களின் பாதுகாப்புக்காக வருகின்ற சட்டங்களெல்லாம் கமிட்டிகள் என்ற பெயரால், காரணங்களற்ற காரணங்களின் பெயரால் காலம் தாழ்த்தப்படுகிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே ஒரே கம்பெனி மட்டுமே ஆதிக்கம் செலுத்துகிற கம்பெனியாக இருக்கிறார்கள். இப்பொழுது அந்தக் கம்பெனியாரால் நடத்தப்படுகிற கடைகளிலே ஒழுங்கான கூலி கொடுக்கப்படவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முக்கூடலில் மட்டும் த. பி. சொக்கலால் ராம்சேட் கம்பெனியார்கள் 125 கமிஷன் கடைகள் வைத்திருக்கிறார்கள். அங்கே பீடி சுற்றுகிற தாய்மார்களாகக் குறைந்தது 2,000 பேர்கள் இருக்கிறார்கள் 2,000 தாய்மார்கள் பீடி சுற்றுவதற்கு ஏற்கனவே முக்கூடலின் பல்வேறு பீடிக் கம்பெனிகள் இருக்கின்றன. சொக்கலால் கம்பெனியின் பெயரிலேயே இரண்டு கடை இருக்கும்பொழுது, முக்கூடல் என்ற ஒரு ஊராட்சிப் பகுதியில் மட்டும் இந்த அரசு எப்படி 125 கமிஷன் கடைகளைத் திறப்பதற்கு அனுமதி கொடுத்தது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. 125 கமிஷன் கடைகள், அவைகளிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 25,000, மறந்துவிடக்கூடாது. அந்த 25,000 தொழிலாளர்கள் எங்கிருந்து வருகிறார்கள் என்றால் சுற்றுவட்டத்திலுள்ள சுமார் 20 மைல் தூரத்திலுள்ள இடங்களிலிருந்து அங்கு பீடிக்காக இலை, புகையிலை வாங்க வருகிறார்கள். இவர்களுக்கு இடைத் தரகர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு நியாயமான கூலி கிடைக்கிறதா என்றால் இல்லை. 1958-ல் நிர்ணயிக்கப்பட்ட கூலி 1,000 பீடிக்கு ரூ. 1.37. ஆனால், கமிஷன் கடைகளில் கொடுக்கக்கூடிய கூலி 2,500 பீடிக்கு ரூ. 3 கொடுக்கப்படுகிறது. அதாவது ரூ. 3.42-க்குப் பதிலாக ரூ. 3 கொடுக்கிறார்கள். 1958-ல் நிர்ணயிக்கப்பட்ட கூலியை 1967-ல் கூட வாங்க முடியாத நிலையில் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்றால், அது எவ்வளவு அநியாயம், முதலாளித்துவக்

கொடுமை எவ்வளவு என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனவே, சபாநாயகர் அவர்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடத்தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். முக்கூடலில் கொடுக்கப்பட்டிருக்கிற கமிஷன் கடைகளின் லைசென்ஸ்கள் ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்படவேண்டும். இந்த அரசு அந்த லைசென்ஸ்களைத் திரும்பப் பெற வேண்டும். மீண்டும் அந்தக் கமிஷன் கடைகளுக்கு அனுமதி கொடுக்கக்கூடாது, எங்கே தொழிலாளர்கள் இருக்கிறார்களோ அந்த இடத்தில்தான் அந்தத் தொழிற்சாலைகளை அனுமதிப்பதற்கு அரசு அங்கீகாரம் கொடுக்க வேண்டும் என்று நான் பணிவோடு வேண்டிக்கொள்கிறேன். அதே நேரத்தில் புதிய கடைகளைத் திறக்கவேண்டும் என்று சர்க்காரிடத்திலே முறையீடு போட்டு, எங்கெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு செல்வாக்கு இருக்கிறதோ, எந்தப் பீடித் தொழிலாளர்கள் திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்களுக்கு வாக்களித்தார்களோ, அவர்களையெல்லாம் பழிவாங்குகின்ற வகையிலே அந்தக் கம்பெனி முதலாளிகள் கடைகளை மூடிவைத்திருக்கிறார்கள். இதற்கு என்ன நிவாரணம் என்று தொழில் நிர்வாகத்தில் இருக்கிற அதிகாரிகளைச் சந்தித்துக் கேட்டால், கசாப்புக் கடைக்காரர்களிடம் காருண்யத்தை உபதேசிப்பது போல் இருக்கிறதே தவிர ஏழை எளிய பாட்டாளி மக்களுடைய பிரச்சினையைப்பற்றி நியாயமான அடிப்படையில் பேசுவதாக இல்லை. நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், அதிகாரிகள் இன்னும் முதலாளித்துவ மனப்பான்மையிலிருந்து விடுபடவில்லை அவர்கள் மத்தியிலே இந்த இலாகா தொழிலாளர்களுடைய நலனுக்காகத்தான் இருக்கிறது அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்காகத்தான், பேணுவதற்காகத்தான் இருக்கிறது என்ற மனோபாவம்கூட இன்னும் சரியாக வளரவில்லை என்று கருதுகிறேன். எனவே அது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்ற கேட்டுக் கொள்கிறேன்.

குறைந்தபட்ச கூலியை நிர்ணயிப்பதற்காக 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ம் தேதி ஒரு குழு அமைக்கப்பட்டது. இன்றையவரை அந்தக் குழுவின் அறிக்கை அரசாங்கத்திற்கு வரவில்லை. எனவே இந்த அரசு அந்த அறிக்கையைப் பரிசீலித்து, உடனே குறைந்த பட்சக் கூலியை நிர்ணயித்து வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தருணத்தில் நான் கேள்விப்படுகிறேன். எனக்குக் கிடைத்த தகவல்கள் சரியானதா, தப்பானதா என்பது எனக்குத் தெரியாது. பீடி முதலாளிகள் இன்னும் 1,000 பீடிக்கு ரூ. 2 என்று மட்டும்தான் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் 1,000 பீடிக்குக் குறைந்தபட்சம் ரூ. 4 கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். 1958-ல் குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்கப்பட்டபொழுது, முக்கூடல் முதலாளிகள் தனிச் சலுகை பெற்று முக்கூடல் டைப் ஆப் பீடி என்று



அதற்கென்று கூலி நிர்ணயம் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த அக்கிரமத்துக்கு இந்த அரசு ஒரு முடிவு கட்டும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தொழிலாளர்களுடைய பிரச்சினையில் அதிகமான அக்கறை செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

* **திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் துறை மானியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பு கிடைத்ததற்காக மகிழ்ச்சி அடைகிறேன். இங்கே தொழிலாளர்கள் துறையின் சார்பாகக் கடந்த ஆண்டின் நடைமுறை நிர்வாக அறிக்கை ஒன்றும், திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கை விளக்க பிரசுரம் ஒன்றும் நமக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு அறிக்கைகளும் ஆங்கிலத்தில் அமைத்திருப்பதைக் கண்டு கொஞ்சம் வியப்பும், வருத்தமும் அடைகிறேன். நிதித் துறையினர், சட்டத் துறையினர், கல்வித் துறையினர் கூட தமிழில் அறிக்கைகள், குறிப்புகள் தயாரித்துத் தந்திருக்கிற நிலையில், அன்னிய மொழியில் போதிய புலமையற்ற பாட்டாளிகள், தொழிலாளர்களைச் சார்ந்தவர்கள் சம்பந்தப்பட்ட தொழிலாளர் துறையினரகத்திலுள்ள குறிப்பு ஆங்கிலத்தில் இருப்பதற்காக வருந்துகிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள், “அடுத்த ஆண்டில் அறிக்கை தமிழில் வரும்” என்கிறார்கள். அடுத்த ஆண்டிலேனும் வரவேண்டும் என்பதற்காகத்தானே இந்தக் குறிப்பைக் கொடுக்கிறேன். இந்த ஆண்டில் தாராதது, அமைச்சருடைய குற்றம் அல்ல; ஆனால், இந்தத் துறை நிர்வாகிகளுக்குத் தமிழ் பற்றுத் தேவை என்பதைச் சுட்டிக் காட்டுகிறேன். தொழிலாளர்கள் கோர்ட்டுகளிலே கூட, தொழிலாளர்களுக்குப் புரியும் பாஷை உபயோகப்படுத்தப்படுவதில்லை. இன்னொன்றும் சொல்ல வேண்டும், அதாவது தொழிலாளர்களே தொழில் சங்கத்தின் தலைமை ஏற்று, முன்னனிக்கு வரக்கூட அது தடையாக இருக்கிறது என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தத் தொழில் துறைக் கொள்கைப் பிரசுரத்தில் முற்போக்கான கருத்துக்கள் காணப்படுகின்றன. கடந்த காங்கிரஸ் ஆட்சியில்—ஆட்சி புரிந்த கட்சியின் கொள்கையில் நான் குறைகாணவில்லை. முற்போக்கான சோஷலிசக் கொள்கை அங்கீகரிக்கப் பட்டிருந்தது. ஆனாலும், அமைச்சர் குழுவில், முதலாளிகளைச் சார்ந்தவர்கள், முதலாளி வர்க்கத்தினர் நிறைந்திருந்த காரணத்தால், அது ஏட்டளவில் இருந்ததே அல்லாமல், வாழ்க்கைக்குப் பயன் படாமல் போய்விட்டது. இந்த ஆட்சியில் இருப்பவர்கள், முதலாளித்துவத்தால் ஊடுருவப் படாதவர்கள். ஆகவே, இந்த ஆட்சியில் தொழிலாளர் நலன்கள் காக்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது—குறிப்பாக, தொழிலாளர்கள் கோர்ட்டுகளில். முற்போக்கான சட்டங்கள் இருந்தும், ஒரு சட்டமும் தொழிலாளர்களுக்குத் திருப்தியைக் கொடுத்த

தாகவோ அல்லது நன்மையைக் கொடுத்ததாகவோ சொல்ல முடியாது என்று அனுபவம் காட்டுகிறது. பொதுவாக, ஏழைகளுக்குச் சட்டங்கள் அதிகமாகப் பயன்படுவதில்லை என்று சொல்லலாம். கலப்படத் தடைச் சட்டத்தை எடுத்துக் கொண்டால், கலப்படம் இல்லாத பொருள்கள் மக்களுக்குக் கிடைக்க வழியில்லை, என்பது தெளிவு.

தொழிலாளர் கோர்ட்டுகளில் முதலாளிகள் ஆஜராக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அந்த வகையில் சட்டத்தை அமுல் படுத்துவதில் தீவிரம் காட்டப்படுவதில்லை. அதில் கவனம் செலுத்தப்படவேண்டும்.

தொழில்களைத் தேசியமயமாக்கும் கொள்கை பற்றிச் சொல்லும் போது சற்று சித்தாந்தத்தெளிவு ஏற்படவேண்டும் என்று குறிப்பிட வேண்டும். ஒரு தொழிலைத் தேசியமயமாக்கும் போது, அதை சோஷலிசமயமாக்கவேண்டும். ஒரு தொழிலைத் தேசியமயமாக்கும் சித்தாந்தமே சோஷலிசத்தின் தோற்றுவாயாகத்தான் கொள்ள வேண்டும். தேசிய மயமாக்குவதன் மூலம் போதிய லாபகரமாக இருக்கவேண்டும் என்பது மட்டுமல்ல; தேசியமயமாக்கப் பட்ட பின்னுல், அந்தத் தொழிலில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களிடையே, "தொழிற்சாலை நமக்குச் சாதகமாக நடக்கிறது" என்கிற உணர்ச்சி ஏற்படும் வகையில் அதை சோஷலிசமயமாக்க வேண்டும்.

பஸ் போக்கு வரத்துத்துறையைப் போன்ற ஒரு தொழில் தேசிய மயமாக்கப்பட்டது என்றுல், அப்படி தேசியமயமாக்கப் பட்ட பின்னுல், அந்த இடத்தில் ஒரு தனிநபர் முதலாளிக்குப் பிறகு, ஒரு ஸ்தாபன முதலாளி ஏற்பட்டிருக்கிறது என்கிற உணர்ச்சி வ்ருவதைத் தவிர, "நம்மை நாமே நடத்துகிறேம்" என்கிற எண்ணம் தொழிலாளர்களுக்கு ஏற்படவில்லை. ஆகவே, குறைந்த பட்சமாக, பொதுத்துறை சம்பந்தப் பட்டவரையில், தேசியமயமாக்கப்பட்டதும், தொழில் ஸ்தாபனங்களில் தொழிலாளிகளையும் பங்காளிகளாகக் கொள்ள வேண்டும், அந்த முறையில் அவர்கள் அனுபவிக்கும் அளவுக்கு மாறுதல் ஏற்பட்டாக வேண்டும். அப்படிச் செய்தால்தான் தேசிய மயமாக்கப்பட்ட பிறகு சோஷலிசமாக்கப்படும் நிலை ஏற்படும். இன்றைக்கு திராவிட முன்னேற்றக்கழகம் ஆளும் கட்சியாக இருக்கிறது. சோஷலிசம் தங்கள் கொள்கை என்று தேர்தல் அறிக்கையில் கொடுத்திருப்பதால், அந்தத் துறையில் முன்னேற தக்க முயற்சிகள் எடுப்பார்கள் என்கிற நம்பிக்கை இருக்கிறது.

தொழிலாளர்களுடைய குடியிருப்பு நிலை மிக மிக மோசமாக இருக்கிறது. கிட்டத்தட்ட 500 தொழிலாளர்கள் இருக்கும் தொழிற்சாலை என்றுல், அந்தத் தொழிற்சாலையின் அருகிலேயே, தொழிலாளர் குடியிருப்பும் கட்டாயம் அமைக்க வேண்டும் என்று, தொழிற்சாலைக்கு அனுமதி கொடுக்கும்போதே கட்டாயப் படுத்த வேண்டும். அப்பொழுதுதான் குடியிருப்பு நல்ல முறையில் அமையும்.



தொழிலாளர்களின் கல்வி பற்றி அவைமுன் வைக்கப்பட்டுள்ள குறிப்பில் விளக்கப் பட்டிருக்கிறது. ஆனுல், கல்வி வளர வேண்டும் என்றுல், தொழிற்சாலைகளிலே நூல் நிலையம் ஏற்படுத்த வேண்டும். நான் சென்னை மாவட்ட நூலகக் குழுவின் தலைவனுக இருந்தபோது, சென்னை நகரில்-முற்போக்கானவர் நடத்தப்படும் தொழிற்சாலை என்று கருதப்பட்ட ஒரு தொழிற்சாலையில், ' ஒரு நூல் நிலையம் அமைக்கிறேன். இடந்தாருங்கள் என்று நான் கேட்ட போது மறுத்து விட்டார்கள். அத்தொழிற்சாலைக்கு அடுத்தாற் போல் திறந்த வெளிடத்தில் ஒன்று அதற்குச் சொந்தமாக இருந்தது. "அந்த இடத்தைக் கொடுத்தால் அங்கே தொழிலாளர்களுக்காக ஒரு நூல் நிலையக்கட்டிடம் அமைக்கிறேன்" என்று வற்புறுத்தினேன். ஆனுல், அந்தத் தொழிற்சாலை அதிபர்கள் எழுத்தின் மூலம் அனுமதி மறுத்து விட்டார்கள். அது என்ன போக்கோ தெரியவில்லை. தொழிலாளர்கள் வர்க்கமே கல்வி பயிலக்கூடாது என்கிற கண்மூடித்தனமான கொள்கையோ என்னவோ? ஆகவே, இனியும் தொழிற்சாலைகள் அமைக்கும் இடங்களிலெல்லாம், நூல் நிலையக் குழுக்கள், நல்ல நூல் நிலையங்களை அமைக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

கடைசியாக, ஒரு கருத்தைச் சொன்னுல், அமைச்சர்கள் தவறுக எடுத்துக் கொள்ளக் கூடாது. தொழில் துறையும், தொழிலாளர் நலத் துறையும் ஒரே அமைச்சரிடம் இருந்தால், நலன் பயக்கும் என்று கருதுகிறேன். எந்த அமைச்சர் என்று கூறவில்லை ஒருவரிடம் இருந்தால், தொழில் துறையில் இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி, தொழிலாளர் நலங்களுக்கு முதலாளிகளை வற்புறுத்தவும், சமரசம் ஏற்படுத்தவும் சந்தர்ப்பம் இருக்கும். இரண்டு அமைச்சர்களும் கருத்துவேறுபாடு கொண்டவர்கள் இல்லை. அவர்களிடையே கருத்து உடன்பாடு இருக்கிறது. இருந்தாலும், நிர்வாகத் துறையில் தொழில் துறையும் தொழிலாளர் துறையும் ஒருவரிடமே அமைந்தால், தொழிலாளர்களுக்கு நன்மைகள் செய்யவும், சமரசம் ஏற்படுத்தவும் எளிதாக இருக்கும். முதலாளிகளுக்கு உதவி புரியும் கரமே தொழிலாளர்களுக்கும் உதவி புரியும் கரமாக இருந்தால், ஒன்றேடொன்று உதவிகரமாக அமையும் என்ற நம்பிக்கையில் சொல்லுகிறேன். அனுபவத்தில் இதை நான் சொல்ல வில்லை. ஆசையால் சொல்லுகிறேன். அனுபவத்திற்கு ஒத்து வந்தால் முதலமைச்சர் செய்யலாம். துவக்கத்தில் அப்படித்தான் இருந்தது. வேறு நல்ல எண்ணத்தில் மாறியது. எதிர்காலத்திலேனும் பயன்படவேண்டும் என்று சொல்லுகிறேன். யார்கையிலும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சொன்னதாக நினைக்க வேண்டாம். இரண்டும் ஒருவர் கையில் இருக்க வேண்டும் என்று சொல்லி, இந்த மானியத்தின் மீது பேச வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

* **திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, தொழிலாளர் நலக் கோரிக்கையின் மீது பேசும்போது, இங்கே தொழில் துறை அமைச்சரால் கொடுக்கப்பட்டுள்ள கொள்கை அறிக்கை

இருக்கிறது. இந்தக் கொள்கை அறிக்கைமீது பேச வேண்டுமானால், சிறிது அதிக நேரம் தேவைப்படுகிறது. இங்கே எனக்கு அளிக்கப்பட்டிருக்கிற நேரம் மிகக் குறைவாக இருப்பதால், என்னுடைய தொகுதியில் இருக்கின்ற ஸ்தலத்தில் இருக்கும் விஷயங்களைச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்த பிறகு, சபாநாயகர் அவர்கள் மனமுவந்து இன்னும் சிறிது நேரம் கொடுத்தால், கொள்கை அறிக்கை சம்பந்தமாக சில கருத்துக்கள் இருக்கின்றன. பின்னால் சந்தர்ப்பப்படுமானால் அதைப் பேச விரும்புகிறேன்.

மேட்டூரிலிருந்து எனக்கு ஒரு தபால் வந்திருக்கிறது. அந்தத் தபால் சேலம் ஜில்லா போலீஸ் சூப்பரெண்டெண்டிற்கு ஒரு தொழிலாளியால் எழுதப்பட்ட புகார். அந்தத் தொழிலாளி மேட்டூரிலுள்ள அலுமினியம் தொழிற்சாலையில் இருக்கும், ராமானுஜம் என்பவர். அவருடைய புகாரில் என்ன கூறுகிறார் என்றால், தான் நீண்ட நாட்களாக ஓவர்-டைம் செய்து வருவதாகவும், அந்த ஓவர்டைமிற்குத் தகுந்த பணம் கொடுக்கவில்லை என்றும், அந்த அலுமினியம் தொழிற்சாலை மானேஜரிடம் புகார் கூறியிருக்கிறார். 'உன்னுடைய சங்கத்தில் சொல்' என்று கூறினாராம். சங்கத்தில் சொல்லி, 8—7—1967 அன்று நடந்த சங்கக் கூட்டத்திலே, தனக்கு ஓவர்-டைம் கொடுக்காதது பற்றிப் பேசியிருக்கிறார்கள். அதன் காரணமாக அந்தத் தொழிலாளி வீட்டிற்கு தொழிற்சாலை மானேஜர் நான்கு தடவைகள் ஆட்களை விட்டு, கையோடு கூட்டி வரவேண்டும் என்று சொல்லி அனுப்பியதாகவும், வீட்டில் அவர் மனைவி பயந்து விட்டதாகவும் கூறியிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையின் எல்லைக்குள்ளே அவருடைய வீடு இருக்கிறது. வீட்டிற்கு முன்னால் இரவு சிலர் கம்புகளையும், தடிகளையும் வைத்துக் கொண்டு நின்று கொண்டிருக்கிறார்கள்; அதோடு அவருடைய வீட்டில் வயது வந்த மகள் இருக்கிறாள். இரண்டு மூன்று குழந்தைகளும் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் பயந்து போய் இருக்கிறார்கள். இந்த நிர்வாகம் அவருக்கு ஆபத்தை உண்டாக்கும் என்று அவர்கள் பீதியடைந்திருக்கிறார்கள். அதன்மேல், தங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, போலீஸ் சூப்பரெண்டெண்டிற்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். அந்த விண்ணப்பத்தின் நகலை எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் முதலாளிக்கும், தொழிலாளிக்கும் உள்ள உறவு எப்படி இருக்கிறது என்பதற்கு ஒரு நல்ல உதாரணமாக இருப்பதால்தான். தொழிலாளர்களுக்காக, தொழிற்சாலை சட்டம், தொழில் தகராறு சட்டம், சம்பளப்பட்டுவாடா சட்டம் என்று இன்னும் பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. இப்படியெல்லாம் சட்டங்கள் இருந்தாலும் அங்காங்கு தொழிற்சாலை நடத்துகிறவர்கள், முதலாளிகள், தொழிலாளரை எப்படி வேண்டுமானாலும் பயமுறுத்தலாம், எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலை இன்னும் மாறவில்லை என்று எடுத்துக்காட்ட இந்தச் சின்ன சம்பவத்தைச் சொல்லியிருக்கிறேன். இன்னொரு சம்பவம்



உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு தொழிற்சாலையில், சமீபத்தில் ஒரு சங்கம் அமைக்கப்பட்டது. அதையமைத்து சங்கப் பதிவாளருக்கு விண்ணப்பம் செய்து, விண்ணப்ப பாரம் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் மரகதவேல் என்னும் தொழிலாளியின் பெயரில் வந்தது. இதனால் சங்கம் அமைக்கும் விபரம் நிர்வாகத்துக்கு தெரிந்தது. அறிந்தவுடனே யார்யார் நிர்வாகிகள் என்று கண்டுபிடித்து மேனேஜர், செக்யூரட்டி ஆபீசர், வேறு சில அதிகாரிகள், சப்-இன்ஸ்பெக்டர், ஹெட் கான்ஸ்டபிள் ஆகியோர் அன்று இரவு 12 மணிக்கு தொழிற்சங்க உப தலைவர் மோஹன் என்பவரின் வீட்டிற்குச் சென்று உன்னுடைய வீட்டிலே திருட்டுப்பொருள்கள் இருப்பதாக நாங்கள் அறிகிறோம், எனவே வீட்டைப் பரிசோதனை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அந்த விவகாரம் என்னுடைய கவனத்திற்கு வந்து போலீஸுக்குத் தந்தி கொடுத்து, அந்த விவகாரம் நின்றுவிட்டது. அடுத்தாற்போல் காரியதரிசியாக இருக்கின்ற மரகதவேல் என்பவரை ஜீப் அனுப்பி நிர்ப்பந்தமாகக் கூட்டிச்சென்று தொழிற்சாலையிலே மிரட்டி தன்னுடைய சம்மதத்தைப் பெற்றுக்கொண்டதாகக் கையெழுத்து வாங்கினார்கள். இவைகளையெல்லாம் ஏன் சொல்லுகிறேன் என்றால் இன்றைக்கு எவ்வளவோ சட்டங்கள் இருந்தாலும் சட்டத்தைக் கையாளச் சக்தியில்லாதவர்களாகத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவைகள் யாருக்கு உதவி செய்கிறது என்றால் அதைப்படைத்தவர்களுக்கும், அதில் வல்லமையுள்ளவர்களுக்கும், நடத்துகின்றவர்களுக்கும்தான் உதவியாக இருக்கிறது. சட்டத்தை நடத்தி வைக்கின்றவர்கள், அதை அறிந்து நடத்தி வைக்க முன்வாவில்லை அந்தச்சட்டங்களைத் தொழிலாளர்களுக்கு விரோதமாகவும் பயன்படுத்த முடிகிறது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். இவைகளெல்லாம் மேட்டூரில் உள்ள மதராஸ் அலுமினியம் தொழிற்சாலையில் நடந்தது.

இதே தொழிற்சாலையில், வேலைநிறுத்தம் 9-ஆம் தேதியிலிருந்து, 11-ஆம் தேதிவரை நடந்து முடிந்தது. அதற்குக் காரணம் 85 தொழிலாளிகளை வெளியே நிறுத்திய காரணத்தால் தான் இந்த வேலை நிறுத்தம் நடந்தது. இதற்குப் பிறகு பழி வாங்கும் நோக்கத்துடன் 78 தொழிலாளிகளை வேலையிலிருந்து நிறுத்தினார்கள். இதனால் சங்கத்தைச் சேர்ந்த துரையப்பன், மாணிக்கம் என்பவர்கள் நேற்றுக் காலையிலிருந்து உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். பலகோடி ரூபாய் மூலதனம் போட்டு தொழிற்சாலைகள் நடத்தப்படுகிறது என்று சொன்னால் அதில் மேனேஜிங் ஏஜன்டின் மூலதனம் மிகக் குறைவு. சர்க்காரின் பணம் அதிலே இருக்கிறது. இத்தாலியின் பணம் அதிலே இருக்கிறது. மற்றவர்கள் பணத்தைக்கொண்டு நிர்வகிப்பவர்கள் நல்லவிதமாக நிர்வகிக்கவில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மேட்டூரில் உள்ள இன்னொரு தொழிற்சாலையான மேட்டூர் கெமிகெல்ஸ் தொழிற்சாலையிலே 1966-நவம்பர் மாதத்தில் லேபர் ஆபீஸரிடம் ஒப்பந்தம் செய்து அதிலேயுள்ள காண்டிராக்ட்ஸ் முறையை ஒழித்துகட்ட ஒப்பந்தம் செய்யப்பட்டது. தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம், பஞ்சப் படியும் அளிக்க வேண்டுமென்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டது. 1966-நவம்பர் மாதத்திலே செய்த ஒப்பந்தம் 1967 ஜூலை வரையில் அமல் நடத்தப்படாமல் சண்டித்தனம் செய்துகொண்டிருக்கிறார்கள். மேட்டூர் இண்டஸ்டிரீஸ் வெள்ளைக்காரர்கள் தொழிற்சாலை. அதிலேயுள்ள ஒரு தொழிலாளி எவ்விதமான நோட்டிஸும் இல்லாமல் அவர்கள் சொன்னபடி இருக்கவில்லை என்பதற்காக 25 வருஷங்கள் வேலை செய்திருக்கும் அந்தத் தொழிலாளி உடனே வெளியே அனுப்பப்பட்டுவிட்டார். இன்றைக்கும் சமரச முயற்சிகூட நடத்தப்படாத நிலையில் இருக்கிறார். இவைகளெல்லாம் எதைக் குறிக்கிறது? தொழில்தகராறு சட்டப்படி முதலாளியும் லாக்கவுட் செய்யலாம், தொழிலாளியும் வேலை நிறுத்தம் செய்யலாம் என்று ஒரே சட்டத்தில் இருக்கிறது. இந்தச் சட்டம் அனுபவத்தில் முதலாளிக்கு உதவி செய்கிறது. ஒரு பிரச்சினையை எடுத்துக் கொண்டால் அது நடைமுறைக்கு, அமுலுக்கு கொண்டு வந்து தீர்த்து வைப்பதற்கு வருடக்கணக்கில் ஆகிறது.

மேட்டூர் இன்டஸ்டீரிஸ் ரோலிங் பகுதியில் இருக்கின்ற தொழிலாளர்களுக்கும் சம்பளம் போதாது, அதிக ஊதியம் வேண்டுமென்று ஒரு வேலை நிறுத்தம் நடந்தது. அதற்குப்பிறகு இங்கேயிருந்து கமிஷனர் வந்து தற்காலிகத் தீர்ப்பு வழங்கி ஆறுக்கு ரூபாய்க்கு 5 பை, ரூபாய்க்கு 3 பைசா அதிகம் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தார்கள். இதற்குப் பின்னால் முடிவான தீர்ப்பு வருஷக் கணக்காகியும் இன்னும் அளிக்கப்படவேயில்லை. இப்படி எவ்வளவோ பிரச்சினைகளுக்கு, ஆட்களை வேலையிலிருந்து நீக்குவது போன்ற காரியங்களில் நியாயம் வழங்குவதற்கு அதிக கால தாமதமாகிறது. 14 நாட்களுக்கு முன் நோட்டீஸ் கொடுத்து வேலை நிறுத்தம் செய்யலாம் என்று சட்டம் இருக்கிறது. ஆனால் நோட்டீஸ் காலாவதிக்குள் கன்சிலேஷன் ஆபீசர் தலையிடுகிறார். 'டிஸ்கஸ்' செய்து 'என்கொயரி' நடத்த கன்ஸிடரேஷனுக்குப் பலமாதங்கள் ஆகின்றன. அதற்குப்பின்னால் கன்ஸிடரேஷன் பெயிலியர் என்று சொல்லி ரிப்போர்ட் மேலே அனுப்பி முடிவு செய்ய ஒரு வருஷம் போய்விடும். இப்படியாகப் பொதுப் பிரச்சினைகள் தோன்றி தீர்க்கப்படாமல் இதன் காரணமாக முற்றுகை, கேரோ என்று தோன்றுகின்றன. இந்த முற்றுகை, கேரோ முதலியன ஏன் தோன்றுகிறது என்று யாரும் சிந்திப்பது இல்லை. அதற்குக் காரணம் தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் அவ்வப்போது தீர்க்க வழியில்லாமல் போவதுதான். அந்தக்காரணங்களால்தான் வேலை நிறுத்தம் நடைபெறுகின்றன. வடக்கே தொழிலாளர்கள் நடத்திவந்த போராட்டம் எல்லாப் பகுதிகளிலும் பரவ ஆரம்பித்திருக்கிறது. இதனால்தான் அநேக



பிரச்சினைகள் வருகின்றன. முற்றுகை என்றோ, கேரோ என்றோ அல்லது வேறு எந்தப் பெயர்களை வைத்துக் கொண்டாலும் அது உண்டாகும் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து தீர்க்க முற்பட வேண்டும்.

இன்றைக்கு முதலாளிகள் இல்லாமலே தொழிற்சாலைகள் நடத்த முடியும். முதலாளிகள் இல்லாமல் அரசாங்கம் தொழிற்சாலைகள் நடத்தி வருகிறது. முதலாளிகள் இல்லாமல் கூட்டுறவுத் துறையிலும் நடத்தலாம். ஆனால் தொழிலாளர்கள் இல்லாமல் நடத்த முடியாது என்பது எல்லோரும் அறிந்த உண்மை. முதலாளியைவிட, மூலதனத்தைவிட, மூலப்பொருட்களை விட மிக முக்கியமானவன் தொழிலாளி என்பது தெரியும். பொருள்களுக்கு மதிப்பு உண்டாகக் காரணம், தொழிலாளிகளின் உழைப்புச் சக்திதான். இதுதான் அடிப்படையான காரணம். இந்தச் சக்தியைத் தகுந்த முறையிலே பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றால் அவர்களின் சம்பள அமைப்பு ஒழுங்காக இருக்க வேண்டும். அமைச்சரவர்கள் கொள்கை விளக்கத்தின் பேரிலே பல முறைகள் சொல்லியிருக்கிறார்கள். ஒருமுறையை நான் எடுத்துச் சொல்லுகிறேன். தொழிலாளிகள் பிளவுபட்டிருக்கிறார்கள். அவர்களை ஒன்றுபடுத்த முயற்சி செய்ய வேண்டும். அந்த முயற்சி வெற்றிபெறவில்லை என்று சொன்னால் பார்க்யன் பேரம் செய்ய என்று ஒரு கமிட்டியை உண்டாக்க வேண்டுமென்று கொள்கை அறிக்கையில் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்து நல்ல கருத்து. ஆனால் அதிலே என்ன ஏற்படுகிறது என்றால் தொழிலாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் உள்ளவர்களும், இல்லாதவர்களும் நிலையாக இருக்க வாய்ப்பு உண்டாகிறது. அதைவிட்டு தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர்கள் ஓட்டுப்போட்டு தேர்ந்தெடுப்பதன் மூலமாக, மெஜாரிட்டி உள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அப்படியில்லாமல் கமிட்டி என்று சொல்லி எல்லா ஆட்களையும் எடுத்துப்போட்டால் அது இன்றைக்கு இல்லாவிட்டாலும், நாளைக்குத் தீமையை உண்டாக்கும். அம்மாதிரி முறையிலே இதை அமைக்காமல் தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் என்று ஏற்படுத்தும் முறையில் ஓட்டெடுப்பு நடத்தவேண்டும். தலைவர் அவர்கள் அளித்திருக்கும் நேரத்திற்கு அதிகமாக நான் எடுத்துவிட்டேன் என்று நினைக்கிறேன். இன்னும் இந்தக் கொள்கையிலே அதிகமாகச் சொல்ல வேண்டிய விஷயங்கள் இருக்கின்றன. ஆனால், இப்பொழுது சந்தர்ப்பம் இல்லாததால், நான் குறிப்பிட்ட விஷயங்களை அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து கவனத்தில் எடுத்துக்கொண்டு அவற்றிற்கான பரிகாரங்களையெல்லாம் வருங்காலத்தில் கண்டுபிடித்துச் செயல்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தொழிலாளர்களையும் சமுதாயத்தில் ஒன்றாகப் பார்க்க வேண்டும்; அவர்கள் சமுதாயத்திலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல. என்றாலும், அவர்கள்தான் சமுதாயத்தையே உருவாக்குபவர்கள், சமுதாயத்தை நடத்துபவர்கள், சமுதாயத்தை வாழ்விப்பவர்கள்

பகல் 5-00

என்ற எண்ணத்தோடு அந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளு வார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய வார்த்தைகளை முடிக்கின்றேன். இவ்வளவு நேரம் பேச சந்தர்ப்பம் அளித்ததற் காக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, தொழி லாளர்கள் மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்த மைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். புதிய அரசின் தொழிலாளர் சம்பந்தமான கொள்கையறிக்கையை நான் படித்தேன். இந்த அறிக்கை, இதுகாறும் கொடுக்கப்பட்டு வந்த அறிக்கைக்கு உண்மையிலேயே ஒரு மாறுபட்ட அறிக்கை என்றுதான் கூறவேண்டும். அந்த அடிப்படையில் இது ஒரு வர வேற்கத்தக்க அறிக்கை என்று நாங்கள் கருதுகிறோம். உதார ணத்திற்குக் கூற வேண்டுமானால், இந்தக் கொள்கை அறிக்கையில் வரவேற்கத்தக்க அம்சங்கள் என்ன என்பதை எடுத்த எடுப்பி லேயே கூறவேண்டுமானால், ஆட்டமேஷனை இந்த அரசாங்கம் எதிர்க்கும் என்று சொல்லப்படுகிறது. இரண்டாவது, சட்டங்கள், பொதுத்துறையில் மீறப்பட்டாலும் சரி, தனியார்துறையில் மீறப்பட்டாலும்சரி, சரிசமமாகப் பாவித்து, பொதுத்துறை என்பதையும் பாராமல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று திட்ட வட்டமாகக் கூறப்பட்டுள்ளது. அதே மாதிரி, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்னும் கொள்கை திட்டவட்டமாக இதில் குறிப் பிடப்பட்டிருக்கிறது. அதற்கடுத்தாற்போல், ஏற்கனவே லேபர் அட்வைசரி போர்டு என்று ஒன்று இருந்தாலும், அது நல்ல முறை யில் திருத்தியமைக்கப்பட்டு, சகல கட்சிப் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு லேபர் அட்வைசரி க்ரூப் என்ற குழுவை அடிப்படை யாகக் கொண்டு, புதிய சட்டங்களைக் கொண்டு வந்தாலும், ஏற்கனவே இருக்கும் சட்டங்களைத் திருத்தியமைத்தாலும், இவர் களுடைய ஆலோசனை பெறப்படும் என்று கூறப்பட்டுள்ளது. ஓட்டல் தொழில் சம்பந்தப்பட்ட வரையில், ஏற்கனவே ஒரு குழு, ஒரு அரசாங்க அலுவலர் தான் அதனுடைய பிரச்சினையைப் பரிசீலிப்பார் என்று போடப்பட்டிருந்தது. அதைத் திருத்தி, தொழிலாளர்களையும் பிரதிநிதித்துவம் கொண்ட கமிட்டி ஒன்று போடப்படும் என்று கூறப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல. உயர் நீதிமன்றத்தில் அல்லது ஹைகோர்ட்டில் வழக்குகள் நடைபெறு மானால், தொழிற்சங்கங்களுக்கு உதவி அளிப்பதற்காக அரசாங் கமே வழக்கறிஞர்களை நியமிக்கப் போவதாகவும் கூறப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட பல அம்சங்களைப் புதிதாக வந்திருக்கும் இந்த அரசு தங்களுடைய கொள்கை அறிக்கையாக வைத்துள்ளது.

அது மட்டுமல்ல; பல குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டிருப் பதைப் பார்த்தாலும் உள்ளது உள்ளபடியே எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. உதாரணமாக, டிஸ்மிஸல், ஸஸ்பென்ஷன் போன் றவை நடைபெறுகிறதென்றால், அது ராங் டிஸ்மிசல் என்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல்வேறு தொழில் தகராறுகளுக்கு அடிப்படையான காரணம், தவறான முறையில்





டிஸ்மிசல், ஸஸ்பென்ஷன் செய்யப்படுவதுதான் என்றும் கூறப பட்டிருக்கிறது. தொழிற்தகராறுகளில் பெரும்பகுதி தகராறுகள் இப்படிப்பட்ட டிஸ்மிஸல், சஸ்பென்ஷன்தான், கிட்டத்தட்ட 3 சத விதத் தகராறுகள் ஏற்படுகின்றன என்பதும் குறிப்பிடப பட்டுள்ளது.

அது மட்டுமல்ல, குறிப்பாக, இடைக்கால நிவாரணம் கொடுக்க வேண்டும் என்று சம்பள நிர்ணய போர்டுகள் தெரிவித்தும், அது கொடுபடாமல் இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக எடுத் துக்கொண்டால், இன்ஜினிரிங் வேஜ் போர்டு இடைக்கால நிவா ரணம் கொடுத்தும் கூட, அதைப் பல முதலாளிகள் கொடுக்க வில்லை. அரசாங்கமே இதைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். 30 தொழிற்சாலைகளில் 215-க்கு மேல் உள்ள தொழிற்சாலைகளில் இந்த இன்டெரிம் ரிலீஃப் கொடுக்கவில்லை என்று சொன்னதோடு மட்டு மல்லாமல், அவர்களைத் திட்டவட்டமாகக் கொடுத்துவிடும்படி கோரி ஒரு சுற்றறிக்கை (சர்குலர்) விடப்பட்டிருக்கிறது ஈ.எஸ்.ஐ. பேமிலி மெம்பர்ஸுக்கும் விஸ்தரிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது இத்தகைய அம்சங்களெல்லாம் அடங்கி யுள்ள இந்த அறிக்கை வரவேற்கத்தக்கது என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த அறிக்கை நல்ல அறிக்கைதான். ஆனால், இவற்றிலுள்ள வற்றையெல்லாம் நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடிய சூழ்நிலை யைப் பற்றித்தான் நாம் பரிசிலித்துப் பார்க்கவேண்டும். அரசாங் கத்தினுடைய கொள்கையை அமுலாக்கக்கூடிய அமைப்பு லேபர் இலாக்கா. அமுலாக்கக்கூடிய நபர்கள் லேபர் டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் ஆவர். இவர்களுடைய கண்ணோட்டம், கருத்தோட் டப்படிதான் இந்த இலாக்கா செயல்படும். இந்த இலாக்கா தொழி லாளர்களுக்கு உதவி செய்வதற்காக இருக்கக்கூடிய இலாக்கா என்ற உணர்வு இவர்களுக்கு இருக்கவேண்டும். இந்த எண்ணம் உயர்தர அதிகாரியிலிருந்து சாதாரண அதிகாரி வரையில் இருக்க வேண்டும். அவர்களுடைய கண்ணோட்டம், ஆடிட்யூட்டில் நிச்சய மாக ஒரு மாற்றம் வரவேண்டும். அரசு கொள்கை வகுத்துவிட் டால் மட்டும் போதாது. அதை அமலுக்குக்கொண்டுவரக்கூடிய லேபர் டிபார்ட்மெண்டின் ஆடிட்யூடும், அவர்களுடைய கொள்கைக் கருத்தோட்டம், கண்ணோட்டம் பூராவும் திட்டவட்டமாக மாற வேண்டும் என்று நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன், ஏனென்றால், இன்று சமுதாயத்தில் இருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வு களைப் பிரதிபலிக்கக்கூடிய முறையில்தான் தொழிலாளர் இலாக்கா இருந்து வருகிறது. இதுவரைக்கும் இருந்த நிலைமை, தொழிலாளர்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையில் இருக்கக் கூடிய இலாக்கா என்ற மனப்பான்மை இப்படிப்பட்ட இலாக்கா வில் இருக்கக்கூடிய பல அதிகாரிகளுக்கு இருந்தது கிடையாது. இன்றைக்கும் பல அதிகாரிகளுக்கு அத்தகைய மனப்பான்மை இல்லை என்று நான் கருதுகிறேன். அரசு ஒரு கொள்கை வைத் திருக்கிறதென்றால், அதற்கு ஏற்றாற்போல் தங்களுடைய மனப்

பான்மையை மாற்றிக்கொண்டு, லேபர் டிபார்ட்மெண்டில் இருக்கும் அதிகாரிகள் செயல்பட வேண்டும். தொழிலாளர்கள் தான் சமுதாயத்தைச் சிருஷ்டிப்பவர்கள், சமுதாயத்தில் பொருளாதாரத்தை சிருஷ்டிப்பவர்கள் " வைட்டல் செக்டார் இன் தி இன்டஸ்ட்ரி " என்ற முறையில், தொழிலாளர்கள் தான் மிக முக்கிய பகுதியாக இருக்கிறார்கள் என்ற ஒரு அடிப்படையான கண்ணோட்டம் இருக்கவேண்டும். அந்தக் கருத்தோட்டம் அதிகாரிகளுக்கு வரவேண்டும். அப்படியிருந்தால்தான், தொழிலாளர்களுக்கு இடுக்கண் ஏற்படும்போது, பல்வேறு தொழிற் தகராறுகள் வரும்போது, அவற்றை அனுதாபமான முறையில் பரிசீலித்து, நல்ல முறையில் தீர்ப்பு அளிப்பதற்கோ, உதவி செய்வதற்கோ அவர்களால் முடியும். இந்தக் கண்ணோட்டம் அவர்களுக்கு வேண்டும். இது கடந்த காலத்தில் இருந்தது கிடையாது. அதன் விளைவாக, எத்தனையோ சட்டங்கள் வந்தும், அவற்றை அமலாக்குவதில் பலவிதமான பலவீனங்கள், கோளாறுகள் இருந்திருக்கின்றன. எனக்கு முன் பேசிய கனம் உறுப்பினர் திரு. ஆலடி அருணா அவர்கள் பீடித் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட சட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்தச் சட்டம் இன்று வரை அமுலாக்கப்படவில்லை. மோட்டார் தொழிலாளர்கள் சம்பந்தமான சட்டம் கூட சமீபத்தில் அமலாக்குவதற்கு முயற்சி செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், ஏற்கனவே இருக்கும் பல சட்டங்களைக் கூட அமல் செய்வதில் பாரபட்சம் காட்டப்பட்டு, முதலாளிகளுக்குத் தகுந்த மாதிரி இருக்கும் சூழ்நிலை கடந்த காலத்தில் உண்டு. இதை மாற்றிக்கொள்ள ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

சம்பளம் நிர்ணயக் குழுக்கள் பல ஆண்டுகளுக்குப் பிறகுதான் தங்களுடைய சிபார்சுகளைச் சமர்ப்பிக்கின்றன. அதை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு கூட அதை அமல் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. பல தொழிற்சாலைகளில் அமல் செய்வதே கிடையாது.

பொதுத் துறையில்கூட, சட்டங்களை அமல்படுத்துவதில் காலதாமதம் மட்டுமல்லாமல், பல இடங்களில் அமல்படுத்துவதே கூட இல்லை. ரப்பர் ப்ளான்டேஷன் பொதுத் துறையில் இருக்கிறது. அந்தத் துறையில் ப்ளான்டேஷன் லேபர் ஆக்ட் இது வரைக்கும் அமுல் செய்யப்படாமல் இருக்கிறது. இதெல்லாம் எதைக் காட்டுகிறது ? இப்படிப்பட்ட பல சட்டங்கள் இருந்த போதிலுங்கூட, அதிகாரிகள் அதைப் பரிசீலித்து அமலுக்குக் கொண்டு வருவதில் தயக்கம் காட்டுகிறார்கள்; பாரபட்சம் காட்டுகிறார்கள் என்பதைத்தான் இதெல்லாம் காட்டுகிறது. ஹெவி கெமிகல்ஸ், ஃபெர்ட்டிலைசர்ஸ் தொழிலாளர்களுக்கு சிபார்சு செய்யப்பட்ட இடைக்கால நிவாரணம் இதுவரை கொடுக்கப்படவில்லை. இன்ஜினிரிங் தொழிலுக்கும் அப்படிப்பட்ட ஒரு தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. ஃபெர்ட்டிலைசர்ஸ் சம்பந்தப்பட்ட வரையிலும் ஹெவி கெமிகல்ஸ் சம்பந்தப்பட்ட வரையிலும்



இடைக்கால நிவாரணம் இதுவரைக்கும் எந்த தொழிற்சாலையிலும் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தொழிற்கோர்ட்டுத் தீர்ப்புகள் தாமதமாக வந்தாலும், தொழிற்கோர்ட்டுத் தீர்ப்புகள் வந்ததற்குப் பிறகும் கூட, அவற்றை அமல் செய்யாத முதலாளிகள் மீது நடவடிக்கை எடுப்பது கிடையாது. எனவேதான், இந்த இலாக்கா அதிகாரிகளின் மனப்போக்கு மாறவேண்டும் என்று நான் கூறுகிறேன். ஒரு பக்கத்தில் அவர்களுக்கிருக்கும் கருத்தோட்டம் மாறவேண்டும். இன்னொரு பக்கத்தில் இலாக்கா அமைப்பில் ஒரு மாற்றம் கொண்டுவரவேண்டும் என்றும் நான் கருதுகிறேன். மூன்று ஜில்லாக்களுக்குச் சேர்த்து ஒரு லேபர் ஆபீசர் அல்லது ஒரு ரிஜினுக்கு ஒரு லேபர் கோர்ட் என்ற நிலை மாறி, ஒரு மாவட்டத்திற்கு ஒரு லேபர் கோர்ட், ஒரு ஜில்லாவிற்கு ஒரு லேபர் ஆபீசர் என்று வந்தால், அவர்களுடைய கருத்தோட்டம் மாறுவதோடு மட்டுமல்லாமல், வேலைப்பளுவும் குறைந்து எல்லாப் பிரச்சினைகளையும் உடனுக்குடன் கவனித்துத் துரிதமாகத் தீர்ப்பு அளிக்கக்கூடிய வசதிகளும் அவர்களுக்கு இருக்கும். எனவே, அப்படிப்பட்ட நிலைமையில் இதை மாற்றியமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொழிற் சங்கங்கள் அங்கீகாரம் சம்பந்தமாக எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இது சம்பந்தமாக எங்களுடைய நீண்ட நெடுங்காலக் கொள்கை, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்தான் இருக்கவேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், துரதிருஷ்டவசமாகப் பல்வேறு சங்கங்கள் ஒரு தொழிலில் இருக்கின்றன. இந்த அறிக்கையிலே கூட கூறப்பட்டிருக்கிறது. பல்வேறு சங்கங்கள் வைத்துக்கொள்ள சட்டபூர்வமான உரிமை இருக்கிறது என்றாலும், ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் இருந்தால்தான், பார்கெயின் பண்ண வசதியாக இருக்கும். எனவே, அதை இன்றிருக்கும் சூழ்நிலையில் எப்படி உருவாக்குவது என்பதைத்தான் நாம் ஆலோசிக்க வேண்டும். இரகசிய பாலட் மூலமாகத்தான் எந்தச் சங்கத்தைப் பெருவாரியான தொழிலாளர்கள் ஆதரிக்கிறார்கள் என்பதை ஊர்ஜிதப்படுத்த முடியும். அதன் மூலமாகத்தான் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியும். தொழிலாளர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்திருப்பதன் காரணமாக, மைனாரிடி கருப்புக்குக்கூட தொழிற்சங்க நிர்வாகத்தில் பிரதிநிதித்துவம், ரெப்ரஸென்டேஷன் கொடுக்கவேண்டும். அதுமட்டுமல்லாமல், தொழிற்சங்க நிர்வாகக் கமிட்டி எடுக்கக்கூடிய முடிவுகளையெல்லாம் பொதுச் சபையில் (ஜெனரல் பாடியில்) வைத்து, ராட்டிபை செய்ய வேண்டும். அங்கீகரிக்கப்படவேண்டும். இதுதான் தொழிற் சங்க ஜனநாயகம். இந்த முறையைப் பின்பற்றுவதன் மூலம் தொழிற்சங்கங்களுக்கிடையே அரசியல் பாகுபாடு வர ஆதாரம் கிடையாது. ஏற்கனவே இருக்கும் நிலைமைகளைக்கூடச் சீர்திருத்தியமைக்க இந்த முறையைப் பின்பற்றி ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற முறையை நிச்சயமாகக் கொண்டுவரலாம். சட்ட

பூர்வமாகப் பல சங்கங்களை வைத்துக்கொள்ள வாய்ப்பு இருந்தாலும்கூட, இந்த முறையைப் பின்பற்ற வேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

தொழிற்தகராறுகளில் போலீஸ் தலையிடுவது திட்டவட்டமாகக் கூடாது என்பதைக் கொள்கை மூலமாக அறிவித்துவிட வேண்டும் நமக்குத் தெரியும் நெய்வேலியில் நடந்துகொண்டிருப்பது டி.வி. எஸ். ஊரகாஸ் போன்ற தொழிற்சாலைகளில் நடந்துகொண்டிருப்பதும் நமக்குத் தெரியும். லா அண்டு ஆர்டர் நிலைமைகளை நாம் பார்க்கவில்லை, அரசு பார்க்கவில்லை என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சரி, இப்படிப்பட்ட தகராறுகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன என்பதைப் பற்றியெல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமை ஏன் வருகிறது என்பது நமக்கெல்லாம் தெரியும். கடந்த காலத்தில் தொழிற்சாலைகளுக்குப் போலீஸ் போவது என்றால், முதலாளிகளுக்குச் சாதகமாகத் தான் போகவேண்டும் என்ற மனப்பான்மை போலீசாருடைய மனத்திலே ஊறிப்போயிருக்கிறது. எனவே தான், அசம்பாவிதமான நிகழ்ச்சிகள் பலாத்காரமான நிகழ்ச்சிகள் வருகின்ற சூழ்நிலைமை இருக்கும் என்று திட்டவட்டமாக அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்தாலும், ஒரு குறிப்பிட்ட இடத்தில் போலீஸ்காரர்களை வைத்துக்கொண்டிருந்து, அப்படிப்பட்ட நிலைமை வராத அளவுக்குத் தடுக்க முயற்சிப்பது நல்லது. அந்த வகையில் கண்காணிப்பு செய்யவேண்டுமே தவிர, ஒர்க்ஸ் பாட்டில் எந்தக் காரணத்தைக் கொண்டும் எந்த நேரத்திலும் போலீஸை அனுமதிப்பதென்பது சரியல்ல, அது தவறானதும் ஆகும். இது சம்பந்தமாகத் திட்டவட்டமாகக் கொள்கை அறிக்கையில் தெளிவுபடுத்திவிடவேண்டும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களைப் பழி வாங்கக்கூடிய பிரச்சினை. இது இந்தக் காலத்திலும் இருக்கிறது. 18-வது நூற்றாண்டில், சங்கம் ஆரம்பித்தால் பழி வாங்கக்கூடிய நிலைமை இருந்தது. இன்றைக்கும் அந்தப் போக்கு இருந்து வருகிறது. பழி வாங்கக்கூடிய பிரச்சினை எது வந்தாலும், எந்தத் தொழிற்சாலையில் வந்தாலும் உடனடியாக அதைக் கோர்ட்டுக்கு விட வேண்டுமே தவிர "கான்ஸிலியேஷன்" என்று லேபர் ஆபீஸர்களிடம் விட்டு காலம் கடத்தக் கூடாது. ஏனென்றால், இது வாழ்க்கைப் பிரச்சினை. தொழிலாளிகளுடைய வாழ்க்கைப் பிரச்சினையில் காலதாமதம் செய்யக் கூடாது. உடனடியாகக் கோர்ட்டுக்குப் போகவேண்டும். நீதிமன்றத்திற்கு விடப்பட வேண்டும். காலம் கடத்தக்கூடாது, இந்தப் பழி வாங்கும் படலம் எல்லா இடங்களிலும் நடந்து வருகின்றன. பொதுத் துறைத் தொழில்கள் இதற்கு விதி விலக்கல்ல. இப்படிப்பட்ட பழிவாங்கும் செயல்கள் எலெக்ட்ரிசிடி போர்டிலும், விருதாசலத்திலும் அரசினர் பீங்கான் தொழிற்சாலையிலும்கூட நிறைய நடந்து வருகின்றன. நெய்வேலியிலும் இருக்கிறது. தனியார் துறையில் டி.வி.எஸ். கிளாட்டன்ஸ், வீல்ஸ் இந்தியா, டி.வி.எஸ்.



ஊரகாஸ் போன்ற இடங்களிலும் இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்து வருகின்றன. இப்படிப்பட்ட பழி வாங்கக்கூடிய நிலைமைகள் ஏற்படுவதால், சட்டத்தைத் திருத்தியமைப்பது மட்டுமல்லாமல், பழி வாங்குதல் என்ற முறையீடு வந்தால் அதை கோர்ட்டுக்கே விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குப் பல இடங்களில் ஸ்டிரைக், இப்போது டி.வி.எஸ். ஊரகாஸில் ஸ்டிரைக்—சட்ட விரோதமான லாக் அவுட் செய்யப்பட்டிருக்கிறது. இந்த டி.வி.எஸ். நிர்வாகம் எந்த இடத்திலும் தொழிற்சங்கங்களை அமைக்க அனுமதிப்பது கிடையாது. மதுரையானாலும் சரி, சென்னையானாலும் சரி, தொழிற்சங்க நிர்வாகிகளையும், முக்கிய உறுப்பினர்களையும் பழி வாங்குவதே இந்த நிர்வாகத்தின் பரம்பரைத் தொழிலாக இருந்து வருகிறது. இது கண்டிக்கப்படவேண்டியதாகும். நண்பர் சுரேந்திரன் அவர்கள் 'கெரோ' வைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். 'கெரோ" என்ற வார்த்தை புதியதே தவிர, சில நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தி விடாக்கண்டர்களாக இருக்கும் முதலாளிகளிடம் சில நிர்ப்பந்த நிலைமைகளை உண்டுபண்ணுவது நமக்குப் புதியது அல்ல. பலாத்காரம் தான் இருக்கக்கூடாது, பலாத்காரம் அறவே கூடாது. "கெரோ" வை இந்த அரசு அனுமதிக்காது என்று ஒரு புறம் கூறிவிட்டு முதலாளிகள் தொழில் கோர்ட் தீர்ப்புகளைப் புறக்கணிப்பதும், அல்லது சம்பள போர்டு தீர்ப்புகளை வழங்க மறுப்பதும், சட்டங்களை மீறுவதும் அனுமதிக்க முடியாது என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எது முதலில் நடக்கிறது என்று பார்க்கவேண்டும்? தொழில்கோர்ட் தீர்ப்புகளை அமுலாக்காமலும் தொழிற் சட்டங்களை மீறுவதாலும் தொழிலாளிகளை முதலாளிகள் சட்ட விரோதமாக வேலைநீக்கம் செய்வதாலும்தான் தொழில் அமைதி கெடுகிறது, தொழிலாளர்கள் வேறு வழியின்றி ஏதாவது ஒரு முறையைக் கையாண்டு தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்படுகிறது. எங்கள் சம்பந்தப்பட்டவரை "கேரோ இல்லீகல்" என்று யாரும் கருதக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். 'ராங்ஃபுல் கன்ஃபைன்மென்ட்'ம் ஆகாது. இதற்கு அடிப்படையான காரணம் என்னவென்பதைப் பரிசீலித்து, அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய காரியங்களை இந்த அரசு செய்யும்—செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 'இது தொழிலாளர் அரசு' என்று தொழிலாளர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். முதலாளிகள் சம்பந்தப்பட்டவரை தொழிலாளர்கள் மீது எதற்கெடுத்தாலும் "கெரோ" என்ற பழியைச் சுமத்தி தங்கள் காரியங்களை வெற்றிகரமாகச் சாதித்து கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். பதினேழாவது நூற்றாண்டு பாலிசியை நாம் கையாள முடியாது என்பதை இந்த அரசு தன் கடமையாகக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு மேலும் ஐந்து நிமிஷம் பேச அனுமதியளித்த பேரவைத் தலைவருக்கும் நன்றியைத் தெரிவித்து, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

[1967 ஜூலை 11

* **ஹாஜி. ம. மு. பீர்முஹம்மது :** பேரவையின் இப்போதைய தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், முதலாளித்துவம் சமய, சமூக பேதமற்று சுரண்டுகின்ற தன்மையைப் பொறுத்தவரையில் ஒன்றிணைந்து நின்றுகொண்டிருக்கிற காட்சியை நாம் பார்க்கின்றோம், அவர்கள் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் முதலாளிகளுக்கு மத்தியில், தொழிலாளர்களுடைய உழைப்பை உறிஞ்சி, தங்களுக்குத் தேவைப்படுகின்ற உல்லாச வாழ்வை அமைத்துக்கொள்வதில் ஒன்றுபட்டிருக்கிறார்கள்.

நம்முடைய மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் பரவலாகப் பீடித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களைப் பார்க்கின்றோம். பல்வேறு மாவட்டங்களில், பல்வேறு விதமாக ஒரு மாவட்டத்திற்கும் இன்னொரு மாவட்டத்திற்கும் இடையில் பீடித் தொழிலாளர் ஊதியத்தில் ஏன் ஏற்றத்தாழ்வு இருக்கிறதென்று தெரியவில்லை. சென்ற கால ஆட்சியினர் சில தனிப்பட்ட பீடி முதலாளிகளுக்குச் சலுகை காட்டி வந்தனர். திருநெல்வேலி மாவட்டத்தில் உற்பத்தி செய்கின்ற—குறிப்பாக முக்கூடலில் பீடிக்கு மிகக் குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயித்திருக்கிறார்கள். இந்த நிர்ணய அளவு மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்படுகிறது. ஆகவே உடனடியாக மாநிலம் எங்கிலும் ஒரே அளவு கூலி கொடுக்க வேண்டிய அளவு நிர்ணயம் செய்து தருவதற்கு அமைச்சர் அவர்கள் வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பீடித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் புகையிலை நஞ்சினால் க்ஷயரோகத்திற்கு இலக்காகி விடுகிறார்கள். பீடித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள், பீடி குடிப்பவர்கள் க்ஷயரோகத்தினால் பாதிக்கப்பட்டு அல்லலுறும்போது, அந்தத் தொழிலுக்கு மூலதனம் போட்டு, மிக்க வசதிகளை ஈட்டி, வாழும் முதலாளிகளின் மத்தியில் அந்த வியாதியைக் காணமுடியவில்லை. சின்னஞ்சிறு குழந்தைகள் எல்லாம்—பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டிய வயதிலே உள்ள குழந்தைகள் எல்லாம் இந்த பீடித் தொழிலில் ஈடுபட்டு, மிகப் பயங்கரமான க்ஷயரோகத்திற்கு இலக்காகி வருவதை நாம் பார்க்கின்றோம். இந்த நிலையிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்புத் தருவதற்கு பிராவிடென்ட் நிதி ஒன்று ஏற்பாடு செய்யப்படுமானால், மிக்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மலேசியாவைப் பொறுத்தவரையில் ஒரு வீட்டில் வேலை செய்கின்ற வேலைக்காரர்களுக்கு, பிராவிடெண்ட் நிதி என்ற அடிப்படையில் அவர்களுடைய வயோதிக காலத்திற்கு பாதுகாப்பு ஈட்டு நிதியை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். நமது அரசினரும் இந்தத் துறையில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1967 ஜூலை 11] [ஹாஜி. ம. மு. பீர்முஹம்மது]

விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் அன்றாடத் தொழிலாளர்களுடைய நிலையை நாம் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். பருவ காலத்தில்தான் அவர்களுக்கு வேலை கிடைக்கிறது. அந்தப் பருவம் முடிந்ததும், வேறு ஏதாவது வேலை கிடைக்காதா என்று அலைகின்ற, பரிதாபகரமான நிலை அன்றாடத் தொழிலாளர்களின் மத்தியில் இருப்பதை நாம் பார்க்கின்றோம். அதே நேரத்தில் பல்வேறு நிலையில், நிரந்தரமாகத் தொழில் செய்கின்ற வாய்ப்பு அவர்களுக்கு இல்லை. பருவகாலம் அல்லாத நாட்களில் பிற தொழில்கள் கொடுப்பதன் மூலமாக அவர்களுக்கு இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஏதாவது ஈடு செய்ய முடியுமா என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டின் நெசவுத் தொழிலைப் பொறுத்தவரையில், நம்முடைய நெசவாளர்களில் ஒரு பகுதியினர் மாஸ்டர் வீவர்ஸ்ஸாரிடம் தொழில் செய்பவர்களாக இருக்கிறார்கள். எப்படி பீடித் தொழிலில் இருப்பவர்கள் வறுமைக்கு இலக்காகியிருக்கிறார்களோ அதேபோல, இந்த நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களும் வறுமைக்கும், ஏழ்மைக்கும் இலக்காகியிருக்கிறார்கள். விலை மலிவாக இருக்கும் ஊட்டச் சத்துக் குறைவாக உள்ள பொருள்களை வாங்கி உண்பதன் மூலம், அவர்கள் நலிந்து—மெலிந்து, நடமாடுகின்ற எலும்புக்கூடுகளாகக் காட்சியளிக்கிறார்கள். மாஸ்டர் வீவர்ஸ்ஸாரிடம் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் பாதுகாப்பு ஈட்டு நிதி ஒன்றை நமது அரசு செய்து கொடுக்குமானால், அந்த நிதி அவர்களின் வயோதிகத்தில் பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதோடு முதலாளிகளானாலும் சரி, தொழிலாளர்களானாலும் சரி முதலில் அவர்களுக்குத் தேவை நாட்டை அடிப்படையாகக் கொண்ட கடமையுணர்ச்சி. அதற்குப் பிறகு உரிமை உணர்ச்சி. முதலாளிகளும் சரி, தொழிலாளர்களும் சரி இந்தக் கடமை உணர்ச்சியைப் பெற வாய்ப்பும் வசதியும் பெருகவேண்டும். தொழிலாளர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற உணர்ச்சி எந்த முதலாளியிடமும் தானாக இயல்பில் ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது. தொழிலாளர்களுக்கான வசதிகளை, உரிமைகளைத் தேடித்தரவேண்டுமென்ற எண்ணம் இன்றைக்குப் பெரும்பான்மையானவர்களிடம் இல்லை. இன்றைய தினம் விவசாயத்துறையில் ஈடுபட்டிருக்கிறவர்கள் தங்களுடைய மாடுகளுக்கு வியாதி வருகிறபோது எவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்கிறார்களோ அந்த அளவுக்கு தங்களிடம் வேலை செய்கிற தொழிலாளர்கள் நோய்வாய்ப்பட்டால் அவர்களுடைய நோயைப் போக்குவதற்கான அக்கறை எடுத்துக்கொள்வதில்லை. அந்த அளவுக்கு மனித பண்பாடு வளர்க்கப்படவில்லை என்கிற காட்சியை தான் பார்க்கிறோம். ஆகவே தான் முதலாளிகளின் மத்தியிலும் சரி, தொழிலாளர்களுடைய மத்தியிலும் சரி முதலாவதாக கடமை உணர்ச்சியை ஊட்டி வளர்க்கக் கூடிய நல்வாய்ப்பு ஏற்பட ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியாகவேண்டும்.

திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் டி.வி.எஸ்., டி.எம்.பி.எஸ். பஸ் தொழிலாளர்கள் கடந்த தேர்தலிலே காங்கிரசுக்கு விரோதமாக வேலை செய்தார்கள் என்கிற ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள். பலர் வேலையைவிட்டு எடுக்கப்பட்டிருக்கிறார்கள். இதுபற்றி சர்வ கட்சியைக் கொண்ட ஒரு போராட்டக் குழு அமைக்கப்பட்டு எப்படிப் போராடலாம் என்பதாகச் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சிந்தனை உருப்பெற்று, உரம்பெற்று போராட்டம் துவக்கப்படுவதற்கு முன்னதாகவே இந்த அரசு டி.வி.எஸ்., டி.எம்.பி.எஸ்., ஸ்தாபனத்தாருடன் பேச்சுவார்த்தை நடத்தி வேலையில் இருந்து நீக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு திரும்ப வேலை பெற்றுத்தரவேண்டிய நடவடிக்கையை மேற்கொண்டாகவேண்டும்.

நம்முடைய நாட்டில் உள்ள தொழிலாளர்களுடைய நிலைமை, அவர்களுடைய வருங்காலம் இவைகளை அடிப்படையாக வைத்து இப்போதிருக்கிற தொழிற் சட்டத்தை புனர் நிர்மாணம் செய்து தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் தருகிற நல்ல வாய்ப்பினை இந்த அமைச்சரவை ஏற்படுத்தித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர்களுக்கும் சரி, அவர்கள் வேலை செய்கிற தொழிற் ஸ்தாபனங்களுடைய முதலாளிகளுக்கும் சரி இடையே முரண்பட்ட கருத்துக்கள் ஏற்படுகிறபோது தொழில் கமிஷனர் அவர்கள் அவர்களுக்கு இடையே நடுவராக இருந்து தீர்ப்பு அளிக்கிறார்கள். அநேகமாக அவர்களுடைய தீர்ப்பைத் தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனால் முதலாளிகள் ஏற்றுக்கொள்ள முன்வருவதில்லை. இதன் காரணமாகப் பல சிக்கல்கள் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கின்றன. ஆகவே எத்தகைய அதிகாரம் தொழில் கமிஷனருக்குக் கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுத்து அவர்கள் கொடுக்கின்ற தீர்ப்பை இருசாராரும் ஏற்றுக்கொள்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்கினால் தான், நம்முடைய நாட்டில் உள்ள தொழிலாளர்களுடைய நிலைமை சீரும் சிறப்பும் அடையும், நாட்டில் உற்பத்தியும் பெருகும் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிலாளர் நல இலாக்காவுக்கு நமது அமைச்சர் அவர்கள் பதவி ஏற்றுக்கொண்டதில் இருந்து மிக நன்றாகப் பணியாற்றி வருகிறார்கள், தொழிலாளர்களுக்கு நிம்மதி தரக்கூடிய அளவில் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள் என்ற நல்ல விஷயத்தை இந்த மாமன்றத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசிய திரு. ம. பொ. சி. அவர்கள் தொழில் இலாக்காவும், தொழிலாளர் நல இலாக்காவும் ஏன் வெவ்வாறாக இருக்கவேண்டும், இரண்டும் ஒன்றாக இணைந்து ஒரு அமைச்சரிடத்திலேயே இருந்தால் மிகவும்



நன்றாக இருக்குமே என்று சொன்னார்கள். இப்போது இருக்கிற நிலைமையே நீடிக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் தொழிலாளர் அமைச்சர் அவர்கள் சட்டத்தில் தவறு நடந்தாலும், சட்டத்திலே சில இண்டிரிகேட் லீகல் பாயின்ட் ஏற்படுகிறபோதும் நல்லமுறையில் பரிசீலித்து—முதலாளிகளோ, தொழிலாளர்களோ ஏமாற்று முறையில் தப்பிக் கொள்வதற்கு வழியில்லாத முறையில் கண்காணித்துக்கொள்ள வழியேற்படும். ஆகவே இப்போது இருக்கும்படியான ஏற்பாடே சிறந்த முறையாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இது என் கருத்து.

முக்கியமாக இன்று உலகத்தில் உள்ள எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும்—தொழில் வாய்ப்புக்கள் குறைவாக, அதேசமயம் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை பல்கிப் பெருகி இருக்கிற நாடுகளில் தொழிலாளர்களுக்கு அமைதியே இராத நிலைமை இருந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே என்னுடைய கருத்தும், நான் சார்ந்திருக்கிற சுதந்திராக் கட்சியின் கருத்தும் இந்த நாட்டில் தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டியது முதன்மையான கடமை என்பதாகும். உதாரணமாக இன்றைக்கு பெரம்பூரில் உள்ள பக்கிங்ஹாம் கர்னாடிக் மில்லை எடுத்துக்கொள்ளுங்கள். அங்கே 14 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். இன்றையதினம் அந்த ஸ்தாபனத்தை விட்டு ஒரு தொழிலாளி வெளியே வந்தால், உடனே பத்து பேர்கள் அந்த இடத்திற்கு—இன்னும் குறைவான சம்பளத்தில் கூட வேலைசெய்ய வேலைதேடிப் போகிறார்கள். இதில் இருந்தே இன்றைய தினம் தொழிலாளர் பிரச்சினை வேறாக இருப்பதையும், தொழில் வாய்ப்புப் பிரச்சினை வேறாக இருப்பதையும்—ஆக இரண்டு அம்சங்கள் தனித்தனியாக இருப்பதைப் பார்க்கிறோம். இது விஷயமாக எந்தவிதமான குழப்பமும் நம் மனதில் ஏற்படாது என்பது கருத்து. எந்தநாட்டில் தொழில் வாய்ப்புக்கள் குறைவாக இருக்கின்றனவோ, லட்சக்கணக்கான ஆட்கள் வேலை இல்லாமல் இருக்கின்ற நிலை இருக்கின்றதோ அந்த நாட்டில் இந்தக் குழப்பம் ஏற்படத்தான் செய்யும். நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், ஜனநாயக நாடு எதை எடுத்துக்கொண்டாலும் அங்கு தொழிலாளர்களுக்கு நிச்சயமாக முழு உரிமை உண்டு. எந்த நாட்டில் ஜனநாயகம் இல்லையோ, சர்வாதிகாரம் நிலவுகிறதோ அங்கே தொழிலாளர்களுக்கு உரிமை இல்லை. ஆக ஜனநாயகம் உள்ள நாடுகளில் ஜப்பானை எடுத்துக்கொண்டாலும் சரி, மேற்கு ஜெர்மனியை எடுத்துக்கொண்டாலும் சரி, அமெரிக்காவை எடுத்துக்கொண்டாலும் சரி அங்கெல்லாம் தொழிலாளர்களுக்கு என்ன என்ன உரிமை இருக்கின்றனவோ அவை இங்கே அளிக்கப்பட்டாக வேண்டும்.

குறிப்பாக அமெரிக்க நாட்டை எடுத்துக்கொண்டால் தொழிற் சங்கத் தலைவர் வருகிறார் என்றால் போதும். முதலாளிகள் அவர்களுக்கு தக்க மரியாதை அளிப்பதோடு, அவர்கள் என்ன குறை

சொல்லப்போகிறார்களோ என்று பயப்படுவார்கள். ஆனால் இங்கே தொழிற்சங்கத் தலைவரையே மதிப்பதில்லை. இந்த நிலைமை மாறவேண்டும். அதற்கு அடிப்படையான மாறுதல் அவசியம்.

அதாவது பெரம்பூர் மில்லை எடுத்துக்கொள்ளுங்கள் அல்லது வேறு ஒரு தொழில் ஸ்தாபனத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அந்த அநத தொழில் ஸ்தாபனத்திலேயே வேலை செய்யக்கூடிய ஒருவர் அந்த தொழில் ஸ்தாபனத்தின் தொழிலாளர்களுடைய சங்கத்திற்குத் தலைவராக வந்தால்தான் முதலாளி அந்தத் தலைவரை மதிக்க ஆரம்பிப்பான். ஆனால் அரசியல் வாதிகள் தங்கள் சுய நலத்திற்காக, கட்சி வளர்ச்சிக்காக ஒவ்வொரு தொழில் ஸ்தாபனங்களிலும் புகுந்துகொண்டு தங்களையே தலைவராகப் போட்டுக் கொண்டு அந்த ஸ்தாபனங்களுக்குள் இருக்கும் அமைதியான சூழ்நிலையைக் கெடுக்க அனுமதிக்கக்கூடாது. இந்த நிலை நீடிக்கு மானால் எந்த வகையிலும் தொழிலாளர் பிரச்சினையை சீர்திருத்த முடியாது என்பதை அழுத்தம் திருத்தமாக இந்த அவையில் கூற விரும்புகிறேன்.

ஓராண்டுக்கு முன்பாக பக்கிங்ஹாம் கர்னாடிக் மில்லில் நடந்து வந்த நிலைமைபற்றி நான் மேலவையில் ஒரு கேள்வி கேட்டேன். அப்போதிருந்த அமைச்சர் அவர்கள் அவ்வாறு அங்கு ஒன்றும் நடக்கவில்லை என்பதாகவும், நான் கற்பனையாக, இல்லாத விஷயத்தைப்பற்றிக் குற்றம்சாட்டுவதாகவும் சொன்னார்கள். நிச்சயமாக பக்கிங்ஹாம் கர்னாடிக் மில்லில் இருக்கிற தலைவர்கள் அரசாங்கத்தோடு தொடர்பு வைத்துக்கொண்டு, அரசாங்கத்தை தனக்குப் பயன்படுத்திக்கொண்டு தொழிலாளர்களுடைய நலனைப் புறக்கணிக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டை இன்றைக்கும் சுமத்துகிறேன். அதில் உள்ள சிக்கலை அமைச்சர் அவர்கள் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். அங்கு தொழிற்சங்கத் தலைவர் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. செக்ஷன் செக்ஷனாக உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களில் ஒருவர் தலைவராக்கப்படுகிறார். இந்த நிலையை மாற்றவேண்டும். அங்கே தொழிலாளர்களுக்கு மத்தியில் வேலை செய்கிற தொழிலாளர் ஒருவர் தலைவராக வரவும், அவரும் தொழிலாளர்களினால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படவும் வழிவகை செய்யவேண்டும். அந்த
பி.ப. மில்லில் உள்ள தொழிலாளர்களுடைய பிரச்சினை என்ன என்பதை
5-30 தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் நன்றாகப் பரிசீலனை செய்து அதைச் சீர்திருத்த முன்வரவேண்டுமென்று இந்த அவையில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பாடியிலே என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியும், அங்கே நடந்தது உண்மை, எனக்குப் பல நண்பர்கள் அங்கே இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களோடு நான் தொடர்பு கொண்டு வந்திருக்கிறேன். அங்கே வேலை செய்யக்கூடியவர்கள் பயத்தோடுதான் இருந்துகொண்டு இருக்கிறார்கள். அங்கே கட்சி விஷயங்கள் இருக்கின்றன, தொழிலாளர் சங்கத்தின் தலைவன் ஒருவன் இருந்தால், அவர் இந்த சங்கத்திற்கு வரவேண்டும், அந்த சங்கத்திற்கு வரவேண்டுமென்று சும்மா



உட்கார்ந்திருப்பவரை அழைத்து, வேலைசெய்துகொண்டிருப்பவரை அழைத்து இந்த சங்கத்தில் சேரவேண்டுமென்று சொல்லி கையெழுத்துப் போட்டால்தான் ஒத்துக்கொள்வேன் என்று சொல்லக் கூடிய நிலைமைதான் இருந்து வருகிறது.

எனக்கு முன்பு பேசிய ஒரு நண்பர் கெரோ, போலீஸ் பற்றி யெல்லாம் குறிப்பிட்டார்கள். அரசியல் காரணத்தினாலே ஒரு தொழிலாளி பாதிக்கப்பட்டால் அந்தத் தொழிலாளிக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை. 100 பேர்களில் 80 பேர்கள் வேலைசெய்யவேண்டுமென்று விரும்பினால் அந்த 80 பேர்களுக்கு சரியான பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. இந்த கெரோ என்பது பயங்கரமான ஒரு நிலைமை. வங்காளத்திலே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது பத்திரிகை வாயிலாக எல்லோருக்கும் தெரியும். கெரோ தமிழ்நாட்டிற்கு வேண்டாம். கெரோவுக்கு என்ன என்ன காரணங்கள் என்று ஆராய்ந்து அப்படிபட்ட காரணங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சியெடுத்துக் கொள்ளவேண்டும். இதைப்பொறுத்தவரையிலே எனக்கும் மற்றவர்களுக்கும் எந்த விதமான கருத்துவேறுபாடும் இல்லை. லேபர் ஆபீசர் ஏதாவது தீர்ப்புக் கொடுத்தால் அந்தத் தீர்ப்பை முதலாளியும் ஏற்றுக்கொள்ள வேண்டும். தொழிலாளர்களும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படி ஏற்றுக்கொள்வதிலே காலதாமதம் ஏற்பட்டால் இரண்டு பேர்களுக்கும் கஷ்டம்தான். ஆகவே அந்தத் தீர்ப்பை தொழிலாளியும் முதலாளியும் இரண்டு பேர்களும் உடனடியாக ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். கட்சிக்காக அல்ல, சுயநலத்திற்காக அல்ல, நம் நாட்டினுடைய தேசிய நிலைமையை ஒட்டி உற்பத்தியை வளர்க்க வேண்டுமென்ற முறையில் நிச்சயமாக இரண்டு பேர்களும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் முதலாளிக்குச் சலுகை கொடுக்க வேண்டுமென்று வாதாடுபவன் நான் அல்ல.

அடுத்தபடியாக ஃபிரி டிரேட் யூனியன் என்று சொன்னார்கள், இதிலே முதலாளிகள் செய்வதுதான் தவறு என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முதலாளிகள் என்ன செய்தார்கள் என்றால் ஏதாவது ஒரு எம்.எல்.ஏ. அல்லது எம்.பி. வந்தால் அவரைப் பணிவன்போடு வரவேற்று அவர் சொன்னதை எல்லாம் அவர்கள் கேட்டார்கள். சில பாங்குகளில் நடந்ததைப்பற்றி எனக்குத் தெரியும். ஸ்டேட் பாங்க் டிரேட் யூனியனில் தூத்துக்குடியிலே நான் பேசியிருக்கிறேன். அங்கே சுயேச்சையாக வேலை செய்துகொண்டிருப்பவன் ஏதாவது டிரேட் யூனியனுக்குச் சலுகை வேண்டுமென்று கேட்டால் கொடுப்பது இல்லை. ஆனால் யாராவது எம்.எல்.ஏ., எம்.பி. வந்து கேட்டாலோ உடனடியாக அவர்களை சலுகை தருகிறார்கள். இந்த மனப்பான்மையை முதலாளிகள் மாற்றிக்கொள்ளாத காரணத்தால்தான் பத்மாசூன் மாமி அவர்கள் செய்த தவறுதானே ஒழிய வேறு இல்லை. அவர்களை நான் இந்த அவையின் வாயிலாக, இனிமேல் அப்படிச் செய்ய

வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அந்த இலாக்காக்களில், அந்தந்தக் கம்பெனிகளில் வேலை பார்க்கிற தொழிலாளர்களுக்கு முதலாளிகள் மதிப்புத் தந்து அவர்களுடைய கொள்கையை ஏற்றுக்கொள்வதற்கு முன்வர வேண்டும், அவர்களுடைய கொள்கையை ஆராய்வதற்கு முன்வர வேண்டும். அப்படிச் செய்தால் நிச்சயமாக நன்மை ஏற்படும், அரசியல்வாதிகள் தொழிலாளர்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகமுடியும்.

கடைசியாக போலீஸ்பற்றி ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிச்சயமாக போலீஸ்காரர்கள் முதலாளிகள் பக்கத்திலே ஒன்றும் வரக்கூடாது. அது தவறு. ஏதாவது தகராறுகள் நடந்தால் கொலை ஏற்பட்டால், அடிதடிகள் ஏற்பட்டால் அரசாங்கத்தின் மேலே எல்லோருக்கும் நம்பிக்கை இருக்கிறது, மெஜாரிடியிலே வந்திருக்கிற அரசாங்கம் இது, தமிழகத்திலே மூன்று பேர்களை எடுத்துக் கொண்டால் அவர்களிலே இரண்டு பேர்களுக்கு இந்த அரசாங்கத்தின்மேல் முழு நம்பிக்கை இருக்கிறது, இந்த அரசாங்கம் என்ன சொல்லுகிறதோ அதை ஏற்றுக்கொள்ளப் பொதுமக்கள் தயாராக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரச்னைகள் ஏற்பட்டால் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அருள்கூர்ந்து உடனடியாக தைரியமாக அதிலே தலையிட்டு என்ன என்று பார்த்து போலீஸ்காரர்களைப் புகுத்த முடியுமா, போலீஸ்காரர்களுக்கு அதிலே வேலையிருக்கிறதா என்பதைப் பார்த்து அதற்குப் பிறகு அவர்கள் ஏதாவது தீர்ப்புக் கொடுத்தால் அதை நிச்சயமாக மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள், மூன்று பேர்களிலே இரண்டு பேர்களுக்கு இந்த அரசாங்கத்தின்மேல் நம்பிக்கை இருக்கிறது, ஆகவே அப்படிச்செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட விஷயங்களை அலட்சியப் படுத்தாமல், கலாட்டா நடக்கிறது என்று அலட்சியமாக இல்லாமல் தகராறு வந்தால் உடனடியாக பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதற்குப் பிறகு சரியான தீர்ப்பைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. சு. துரைசாமி**: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எதிர் வரிசையிலே இருக்கிற நண்பர்கள் இந்த சர்க்காரிலே புரட்சியான எண்ணங்கள் கிடையாது, புதுமையான கருத்துக்கள் இல்லை என்றெல்லாம் இந்த மன்றத்திலே எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் சபைத் தலைவர் அவர்கள் மூலமாகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன், இன்றைக்கு அமைந்திருக்கிற இந்த சர்க்கார் தொழிலாளர் சர்க்கார் என்பதை நாட்டு மக்கள் தெளிவாகவே இரண்டு மாத காலத்திற்கு முன்பாக





அறிவித்துள்ளதை யாருமே மறுக்கமுடியாது. இங்கே எதிர் வரிசையிலே இருந்து பேசிய பல்வேறு தொழிற்சங்கவாதிகள், வேறு பல தொழிற்சங்கங்களிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் எல்லாம் கடந்த இருபது ஆண்டு காலமாக ஆண்டுவந்த காங்கிரஸ் சர்க்காரை, உரிமையாகக் கொண்டாடக்கூடிய மே தினத்திற்கு விடுமுறை விடவேண்டுமென்று நியாயமான கோரிக்கையைக் கேட்டார்கள். தொழிற் சங்கத் தலைவர்கள், தொழிற்சங்கங்கள் கடந்த 20 ஆண்டுக் காலமாக கேட்ட நியாயமான கோரிக்கையை காங்கிரஸ் சர்க்கார் செய்யவில்லை. ஆனால் புதிய திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார், இந்த சர்க்கார் தொழிலாளர் சர்க்கார் என்பதைக் காட்டுவதற்கான முறையில், இந்த சர்க்கார் தொழிலாளர் சர்க்கார்தான், முதலாளிகளுக்காக இருக்கக்கூடிய சர்க்கார் அல்ல என்பதை உறுதிப்படுத்துவதற்கான முறையில் மே தினத்திற்கு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் விடுமுறை விட்டதன் மூலம் இந்த சர்க்கார் தொழிலாளர் சர்க்கார் என்பதை நாட்டுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அதேபோல் தொழிலாளர்கள் நிறைந்த கோயம்புத்தூர் பகுதியிலும், சென்னை நகரத்திலும் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று இருக்கிற சர்க்கார் என்பதைக் காட்டக்கூடிய வகையில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்ட சர்க்கார் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார். காங்கிரஸ் சர்க்கார் காலத்தில் தொழிலாளர்கள் குறைகளைச் சொல்வதற்கு குழுக்கள் கிடையாது. ஆனால் இன்றைக்கு இருக்கின்ற நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வருகிற, கொண்டுவர இருக்கிற பல திட்டங்களில் எல்லாம் தொழிலாளர்கள் தங்களுடைய குறைகளையெல்லாம் சொல்வதற்கான குழுக்களை நியமிக்க இருக்கிறார்கள். இந்தச் செயலின் மூலமாக இன்றைக்கு இருக்கக்கூடியது தொழிலாளர் சர்க்கார் என்பதைத் தெளிவாக இது எடுத்துக்காட்டியிருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். எதிர் வரிசையிலே இருக்கின்றவர்களும் சரி, என்னுடைய சார்பிலே பேசிய பலரும் சரி எல்லோரும் இன்றைக்கு இருக்கிற தொழிலாளர் இலாகாவைப் பொறுத்தவரையில் இந்த இலாகா சரியான முறையிலே காரியங்களைச் செய்யவில்லை என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். முதலிலே நான் இதை மறுக்கக்கூடிய நிலையில் இல்லாமல் இருந்தாலும்கூட அதிலே இன்னும் சில நல்லவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இரண்டொருவர் செய்கிற தவறு காரணமாக தொழிலாளர் இலாகாவின் மீது சந்தேகப்படக் கூடிய நிலைமை உண்டாகியிருக்கிறது. இப்பொழுது சர்க்கார் மாறியிருக்கிற காரணத்தினாலும், புதிய சர்க்கார் ஏழைகள் சர்க்கார், எளியவர்கள் சர்க்கார், தொழிலாளர்கள் சர்க்கார் என்ற காரணத்தினாலும் அதிலே இருக்கிற அதிகாரிகள் ஏற்கனவே நடந்து கொண்டிருக்கிற போக்கைக்கூட மாற்றிக் கொள்வார்கள் என்று நிச்சயமாக நான் நம்புகிறேன். அதே போல தொழிலாளர்கள் மத்தியிலே தேங்கிக் கிடக்கிற பிரச்சினைகள் இருக்கின்றன. வேலை நீக்கம் செய்தால் அதற்காக நியாய

மாக கோரிக்கைகளை எடுத்துச் சொல்கிற நேரத்திலே அப்பிரச்னைகளைப்பற்றிய முடிவுகளை உடனடியாக எடுப்பது கிடையாது. பல காலமாக ஆண்டுதோறும் பிரச்னைகள் அப்படியே தேங்கிக் கிடக்கக்கூடிய நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது.

நீதிமன்றத்திற்குச் செல்லலாம் என்றால் இரண்டு மூன்று ஆண்டு காலம் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. உயர்நீதிமன்றத்திற்குச் சென்று விட்டாலோ நாலைந்து வருஷ காலத்திற்குப் பின்னாலேதான் தீர்ப்புக் கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. இந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டாக வேண்டும். இன்று தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கைகள் எல்லாம் ஆறு மாத காலத்திற்குள்ளாகவோ, மூன்று மாத காலத்திற்குள்ளாகவோ முடிகின்ற முறையிலே மத்தியஸ்தர்களை நியமித்து தீர்ப்புகளை விரைவில் கொடுக்க வேண்டும். கோரிக்கைகள் தேங்கிக் கிடக்கக்கூடாது; அப்படிப்பட்ட நிலையைப் போக்க நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு தொழிற்சாலைகளில் அங்கிருக்கின்ற தொழிலாளர்கள் தவறு செய்து விட்டால் 'டொமஸ்டிக் என்க்வைரி' என்ற முறையில் விசாரிக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலை முதலாளிகள் தங்களுக்கு வேண்டியவர்களை 'லேபர் வெல்பர் ஆபீசர்' என்று வைத்துக் கொள்ளக் கூடிய காரணத்தால் அவர்கள் முதலாளிக்குப் பயந்து இருக்கிற உண்மையான காரணத்தை மாற்றி வழக்கை முதலாளிக்கு நன்மை ஏற்படும் வகையில் ஜோடித்து விடுகின்ற காரணத்தால் தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படக் கூடிய நிலை இருக்கிறது. வெல்பர் ஆபீசரை நியமிக்கக்கூடிய அதிகாரம் சர்க்காரிடத்தில் இருக்குமானால் அப்படிப்பட்ட தவறு நடக்க ஏதுவாக இருக்காது. ஆகவே, இப்போது அவ்வாறு நடத்தக் கூடிய விசாரணையை மறு பரிசீலனை செய்வதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பல்வேறு தொழிற்சாலைகளில், பஞ்சாலைகளில் கூட ஒப்பந்த முறை பல்வேறு உருவில் இருந்து கொண்டிருக்கிறது. 'கோன் வைண்டிங்' போன்ற பகுதிகளில் காண்டிராக்ட் முறையில் தொழிலாளர்களை வைத்துக் கொண்டு வேலை செய்கிற முறை இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட காண்டிராக்ட் முறை இருப்பதை மாற்றியமைக்க நமது அமைச்சரவை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நோக்கில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குப் பஞ்சாலைகளில் மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் 'இல்லீகல் ஸ்டிரைக்'—சட்ட விதிக்குப் புறம்பான வேலை நிறுத்தம் நடக்கின்ற நேரத்தில் அதிலே ஈடுபடுகின்ற தொழிலாளர்களுடைய சம்பளத்தில் பிடித்தம் செய்கிறார்கள்; கடுமையான நடவடிக்கைகள் கூட எடுக்கிறார்கள். அந்த மாதிரி தொழிலாளர்கள் மட்டும் தவறு செய்வது என்பது கிடையாது; பல இடங்களில்





பஞ்சாலை முதலாளிகள், தனிப்பட்ட தொழில் அமைப்பில் இருப்பவர்கள் கூட தவறுகள் செய்வதன் மூலம் கதவடைப்புச் செய்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட காலத்திலே, நிர்வாகத்தின் குறைபாடுகாரணமாக, கதவடைப்பு, ஸ்டிரைக் ஏற்படுமானால் தொழிலாளர்களுக்கு ஊதியம் தரும் முறையை உருவாக்க வேண்டும். இதைக் குறிப்பிடுவதற்கான காரணம், கடந்த இரண்டு வருஷத்திற்கு முன்பு கோவையில் உள்ள பஞ்சாலையில் நியாயத்திற்குப் புறம்பான ஒப்பந்தம் காரணமாகப் பெருவாரியான தொழிலாளர்கள் நியாயமான கோரிக்கையைச் சொன்ன நேரத்திலும் அதை மீறி அங்கே இருக்கிற நிர்வாகம் நடவடிக்கை எடுத்தது. அதற்கு அடிப்படைக் காரணம் நிர்வாகம் என்று தெரிந்திருந்தும் கூட தொழிலாளர்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை கடந்த கால சர்க்காரில் இருந்தது. யார் தவறு செய்கிறார்கள், யார் காரணம் என்று பார்த்து, முதலாளி காரணமாக இருந்தால் அப்படிப்பட்ட இடத்தில் எல்லாம் தொழிலாளர்களுக்கும் சம்பளம் கொடுக்கும் நிலைமையை உருவாக்கவேண்டும்.

இன்றைக்குத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைக் குறியீட்டு எண் பஞ்சப்படியைப் பொறுத்தவரை தமிழகம் முழுவதும் 1936-ம் ஆண்டில் இருக்கக்கூடிய ஒரு வாழ்க்கை அமைப்பு முறையை வைத்து பஞ்சப்படி கொடுத்து வருகிறார்கள். அப்படிப்பட்ட முறையை மாற்றியமைத்தாக வேண்டும். 1936-ம் ஆண்டு இருந்த வாழ்க்கை முறைக்கும் இன்று 1967-ம் ஆண்டு உள்ள வாழ்க்கை முறைக்கும் இடையே 30 ஆண்டு கால இடைவெளி ஏற்பட்டு விட்டது. அன்றைக்குப் பயன்படுத்திய பல்வேறு பொருள்களிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் 'மாநில தொழிலாளர் ஆலோசனைக்குழு' சிபாரிசின் பெயரில் பேராசிரியர் சண்முக சுந்தரம் அவர்களைக் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டியின் அறிக்கை வந்திருக்கிறது. அந்த அறிக்கையின்படி நம்முடைய அமைச்சரவை நிச்சயமாக தொழிலாளர்களுக்கு இன்று இருக்கக்கூடிய நிலைமைக்கேற்ப பஞ்சப்படியை கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

இன்றைக்கு இருக்கக்கூடிய இ.எஸ்.ஐ. திட்டம் கோவை போன்ற நகரங்களில் குடும்பங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும். கோவையிலுள்ள புஞ்சை புளியம்பட்டி போன்ற இடங்களுக்கு இந்தத் திட்டத்தைக் கொண்டு வர முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே இருந்த சர்க்கார் 250 பேருக்கு அதிகமாக இருந்தால்தான் கூட்டுறவுப் பண்டகசாலை அமைக்கப்படும் என்ற முறையை ஏற்படுத்தினார்கள். அன்றைக்கு இருந்த முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அழைத்து மாநாடு நடத்தினார்கள்; நான் கருத்தைத் தெரிவித்தேன். கோவையில் உள்ள சில குறிப்பிட்ட மில்களிலும், திருப்பூரில் உள்ள சில மில்களிலும் 250 பேருக்கு மேல் இருக்கிறார்

கள்; அங்கு கூட்டுறவுப் பண்டகசாலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று 1962-ம் ஆண்டில் ஏற்கனவே இருந்த சர்க்காரில் சொன்னோம். இன்றுவரை ஆரம்பிக்கப்படவில்லை. நம்முடைய அரசு நிச்சயமாக அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும் என்று நம்புகிறேன். அந்த முறையில் காரியங்களைச் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பஞ்சாலைகளைப் பொறுத்தவரை மிகத் தேக்கமான நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஸ்பின்னிங் டிப்பார்ட்மெண்ட் நீங்கலாக மற்ற இனங்களில் சிக்கன சீரமைப்பு செய்து முடித்து விட்டார்கள். தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான சம்பளம் கொடுக்கப்படவில்லை. ஏற்கனவே இருந்த சர்க்காரில் இதைப் பற்றி விசாரிப்பதற்காக விசேஷ கமிஷனரை நியமித்திருந்தார்கள். ஆனால் முதலாளிக்கு ஆர்வம் இல்லாத காரணத்தால் அந்தக் குழுவும் மூன்று ஆண்டு காலமாகியும் எதுவும் செய்ய முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. கோவை பஞ்சாலைகளில் ஸ்பின்னிங் டிப்பார்ட்மெண்ட் நீங்கலாக இருக்கும் எல்லா டிப்பார்ட்மெண்டிலும் சிக்கன சீரமைப்பு செய்யும் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் நியாயமாகக் கிடைக்க வேண்டிய சம்பளத்தை வாங்கித் தரும் காரியத்தில் இந்த அமைச்சரவை ஈடுபடவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு இந்த வாய்ப்பை அளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சி. நஞ்சன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தொழிலாளர் பிரதிநிதி என்ற முறையில் இரண்டொரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நீலகிரியில் உள்ள கூடலூர் பகுதி 100-க்கு 90 சதவிகிதம் தேயிலைத் தொழிலாளர் வசிக்கக்கூடிய ஒரு பகுதி. அங்கிருக்கக்கூடிய தொழிலாளர்கள் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கூடலூர் பகுதி கேரள மாநிலத்திற்கும், மைசூர் மாநிலத்திற்கும் இடையிலுள்ள பிற்போக்கான பகுதி. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் வாழ்க்கை மிக மோசமான ரீதியில் இருக்க இன்றும் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இன்று உள்ள முக்கியமான பிரச்சினை விலைவாசி உயர்வு ஒன்று. இரண்டாவது அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய அரிசி பற்றாக்குறையாக இருக்கிறது. ஒரு தொழிலாளிக்கு வாரத்திற்கு 1,400 கிராம் அரிசிதான் கொடுக்கப்படுகிறது. அது தவிர வேறு தானியங்கள் அந்தத் தொழிலாளிக்குக் கிடைக்குமா என்றால் மிகவும் கஷ்டம். பக்கத்தில் இருக்கக்கூடிய மைசூர் மாநிலத்தில் இருந்து பிளாக் மார்க்கட்டில் வாங்க வேண்டியிருக்கிறது. அவர்கள் ஒன்றுக்கு இரண்டாக விலை கொடுத்து வாங்கி தங்களுடைய ஜீவனைக் கழிக்க வேண்டிய நிலை இருக்கிறது. புதிதாக வந்திருக்கும் அரசாங்கம் என்னுடைய தொகுதி



மக்களுக்கு 1,400 கிராம் என்று கொடுக்கக்கூடிய அரிசியை இரண்டு கிலோ அளவுக்காவது கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அந்த வட்டாரத்தில் இருக்கின்ற தோட்டத் தொழிலாளர்களுக்கு கோதுமை, மைதா, ரவை இவை போன்ற தானியங்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆகவே, உணவு தானியத்தின் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. இதிலே இந்த அரசாங்கம் முக்கிய கவனத்தைச் செலுத்தி உடனடியாக ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நலனைக் கருதி வருடக்கணக்கில் வேலை செய்து வந்தவர்கள் வயது முடிந்தவுடன் அந்த எஸ்டேட்டிலிருந்து க்ராச்சுவிட்டி வாங்கிக் கொண்டு அவர்கள் குடும்பங்களுடன் தங்கள் சொந்த ஊருக்குப் போய் அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கு வசதி இல்லாததால் அவர்கள் அந்த இடத்திலிருந்து வேறு எங்கேயாவது போவதற்கு வழியில்லாமல் இருக்கிறார்கள். அந்த மாதிரி க்ராசுவிட்டி வாங்கிய தொழிலாளர்களுக்கு அந்த வட்டாரத்தில் உள்ள தரிசு பூமிகளை—தோட்ட நிர்வாகஸ்தர்களின் கையில் உள்ள பல ஆயிரக்கணக்கான தரிசு பூமிகள் எவ்வளவோ விவசாயத்திற்கு உபயோகமான பூமிகள் இருக்கின்றன—அந்த பூமிகளை தோட்ட தொழிலாளர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு ஏக்கர் வீதம் கொடுத்து அந்தப் பூமிகளில் பலவித உணவு தானியங்களை விளைவித்து அதன் மூலம் அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்த வசதி செய்து தரவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். கூடலூர் பகுதியில் ஓவானி கம்பெனிக்குச் சொந்தமாக உள்ள 19,000 ஏக்கர் பூமியில் 6,000 ஏக்கர்களில்தான் தேயிலை, காபி, ஏலம் இவைகளை உற்பத்தி செய்கிறார்கள். பாக்கி 13,000 ஏக்கர் பூமி தரிசாகக் கிடக்கிறது. இந்த 13,000 ஏக்கர் பூமியில் கிட்டத்தட்ட 10,000 ஏக்கர் பூமி சாதாரண விவசாயம் செய்யக் கூடிய பூமியாக இருக்கும். இந்த தரிசு பூமிகளை ஏழை தொழிலாளர்களுக்கு கொடுத்து அங்கு உற்பத்தி செய்யும் தானியங்களை அந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்கே விநியோகம் செய்தால் அவர்களின் வாழ்க்கை முன்னேற உதவியாக இருக்கும் என்று இந்த சமயத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நெல் பயிர் செய்வதற்கு வேண்டிய இடம் சுமார் 25,000 ஏக்கர் இருக்கும். மரவள்ளிக்கிழங்கு, ராகி, இஞ்சி போன்ற விவசாயம் செய்வதற்கான பூமி குறைந்தது 10,000 ஏக்கர் இருக்கும். இம்மாதிரி ஆயிரக்கணக்கான ஏக்கர் தரிசு பூமிகள் இருக்கும் வட்டாரங்களில் வேலைசெய்யும் ஏழைத் தொழிலாளர்களுக்கு அந்த பூமியை ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு ஏக்கர் வீதம் கொடுத்து அந்த பூமிகளில் தானியங்கள் விளைவித்து தோட்டத் தொழிலாளர்களுக்கு விநியோகம் செய்தால் மிகவும் நன்றாகயிருக்கும் என்று பணிவுடன் சொல்லிக்கொள்கிறேன். என் தொகுதியில் பல எஸ்டேட்களில் மாணவர்களுக்கு சரியாக படிக்கக்

கூடிய ஸ்கூல்கள் இல்லை. அங்கு தொழிலாளர்களுக்கு நல்ல மருத்துவ வசதியில்லை. அவர்களுக்கு போக்குவரத்து வசதியில்லை. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு பல வசதிக் குறைவுகள் இருக்கின்றன. ஆகவே தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சினைகளில் முக்கிய கவனம் செலுத்தி, தோட்டத் தொழிலாளர்கள் நலனைக் கருதி இந்த அரசாங்கம் அவர்களுக்கு உடனடியாக ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கோவை மாவட்டத்திலிருந்து நீலகிரி மாவட்டத்திற்கு அரிசி கொண்டு போய் ஓப்பன் மார்கெட்டில் விற்பதற்கு வேண்டிய ஒரு ஏற்பாட்டைச் செய்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொண்டு இந்த சந்தர்ப்பத்தில் எனக்கு பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. ஆ. கு. சுப்பையா** : தலைவர் அவர்களே, இப்போது விவாதத்தில் இருந்து கொண்டிருக்கக்கூடிய தொழிலாளர்கள் மானியக் கோரிக்கை சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். இன்றைய தினம் நம் நாட்டில் வெகு வேகமாக தொழில் வளர்ந்து கொண்டு வருகிறது. இவ்வாறு வளருவதற்குக் காரணமாக இருக்கக்கூடியவர்கள் தொழிலாளர்கள் தான். அப்படிப்பட்ட தொழிலாளர்களை வாழ்க்கையில் முன்னேற்றம் அடையச் செய்யாமல் கொள்ளை லாபம் அடித்து கோடிக்கணக்கில் சம்பாதித்துக் கொண்டிருக்கக் கூடிய முதலாளிகள் தங்கள் இஷ்டத்திற்கு தர்பார் செய்து கொண்டு வருகிறார்கள். அவ்வாறு செய்யக்கூடிய அந்த காட்டு ராஜா தர்பாருக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கூடிய முறையில் நம் தமிழக அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தினம் கோவையிலும், மதுரையிலும், காவேரி மில்லில் வேலை செய்து கொண்டிருக்கும் பஞ்சாலைத் தொழிலாளர்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள் வேலை இல்லாமல் தெருவில் தவியாக தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை உத்தரவாதம் கொடுத்தாக வேண்டும். அவர்கள் குடும்பங்கள் எல்லாம் இன்று பட்டினியாக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே பஞ்சாலைகளைத் திறக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடவேண்டும். அவ்வாறு திறக்கவில்லை என்று சொன்னால் நம்முடைய அரசாங்கம் அந்த மில்களைத் திறந்து தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கும் ஒரு நிலையை ஏற்படுத்துவதின் மூலமாகத்தான் தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் அக்கறை கொண்டு இருக்கக்கூடிய இந்த அரசு தொழிலாளர்கள் குடும்பங்களைப் பாதுகாப்பதற்கு முன் வந்திருப்பதாகச் சொல்லமுடியும். இன்று இருபதுக்கு மேற்பட்ட பஞ்சாலைகள் சம்பந்தமாக லோகநாதன் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. அந்த சிபார்சுகளை உடனடியாக சட்டமாக்குவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். காவேரி மில்லில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்களுக்கு அங்குள்ள ஆஸ்பத்திரியில் பாதிப் பேர்களுக்கு மேல் மருந்து கொடுப்பதில்லையென்று



புகார் வந்திருக்கிறது. அந்தப் புகாரையும் அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். தஞ்சை மாவட்டத்தில் கடற்கரையோரமாக உள்ள வேதாரண்யம், கோடிக்கரை, அதிராமபட்டணம் போன்ற பிரதேசங்களில் பல்லாயிரக்கணக்கான உப்பளத் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மிகவும் குறைந்த ஊதியம் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் ஊதிய உயர்வு கேட்டு கோரிக்கை வைத்ததற்காக அவர்கள் எல்லாம் வேலை செய்யவேண்டாம் என்று ஒரு மாதத்திற்கு முன்னால் தகவல் வந்து பிறகு அதிகாரிகள் தலையீட்டின் காரணமாக சமாசம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. அம்மாதிரி வேலை செய்து கொண்டிருக்கும் தொழிலாளர்களுக்கு தங்களுடைய வாழ்க்கையை சரிக்கட்டக்கூடிய அளவிற்கு இன்றைய தினம் ஒரு கூலி நிர்ணயம் செய்யக் கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தவேண்டும். தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைக்காக அல்லது வேலை உத்தரவாதத்திற்காக கோரிக்கைகள் வைத்து போராடுகிற சந்தர்ப்பத்தில் போலீஸார் முதலாளிகளுக்கு ஆதாவாக தலையிடுகிறார்கள். போலீஸார் முதலாளிகளுக்கு ஆதரவாக தலையிடுவது என்பது ஒரு பரம்பரைப் பழக்கத்தையொட்டி இன்றும் அம்மாதிரியான ஒரு நிலையை அவர்கள் கையாண்டு வருகிறார்கள். அந்த முறை நிச்சயமாக இருக்கக் கூடாது. இந்த அரசாங்கம் முதலாளிகளுக்கு சாதகமாக போலீஸார் தலையிடுவதை அனுமதிக்கக் கூடாது. போலீஸாருக்கு கண்டிப்பான உத்தரவுகள் போட்டு முதலாளிகளுக்கு ஆதரவாக போகக் கூடாது என்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விவசாயத் தொழிலாளர்களுக்காக கடந்த கால அரசாங்கம் குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டம் ஒன்றைச் செய்திருக்கிறார்கள். அந்தச் சட்டம் நடைமுறையில் அமுல் படுத்தவில்லை. சட்டபிரகாரம் கூட இன்றைய தினம் விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி கொடுப்பதில்லை. இவர்கள் தங்கள் கூலியை சட்டப்பிரகாரம் கேட்டார்களானால் அவர்களை வேலைக்கு வைத்துக் கொள்வதற்கு தயங்குகிறார்கள், வேலையிலிருந்து வெளியேற்றி விடுகிறார்கள். ஆகவே மறுபடியுமாவது விவசாயத் தொழிலாளர்களுக்காக ஒரு கூலி நிர்ணயச் பி. ப.
சட்டத்தை கொண்டு வந்தாக வேண்டும். அவ்வாறு கொண்டு 6-00
வருவதன் மூலம் விவசாயத் தொழிலாளர்களைப் பாதுகாக்க முடியும். அதோடு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற விலைவாசி உயர்விற்கு ஏற்றபடி அதிகமான ஊதியம் கொடுப்பதற்கும் உத்தரவாதம் அளிக்கமுடியும். அந்த முறையில் சர்க்கார் அந்த விவசாயத் தொழிலாளர்களுடைய கூலி நிர்ணயச் சட்டத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு முன்னால் பண்ணையாட்களாக வேலை செய்து கொண்டிருந்தவர்கள் வெளியேற்றப்பட்டு விவசாயத் தொழிலாளர்களாக, அத்துக் கூலிகளாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நியாயமான கோரிக்கையை ஏற்கும் முறையில் விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயச் சட்டத்தை உடனடியாகத் திருத்தம் செய்து கொண்டுவரவேண்டும். தஞ்சை

ஜில்லா, சிதம்பரம் தாலூகா நீங்கலாக அந்தச் சட்டத்தை முன்னாலே நிறைவேற்றினார்கள். இப்போது தஞ்சை ஜில்லாவிலும், சிதம்பரம் தாலூகாவிலும் இருக்கக் கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு, அவர்களையும் கட்டுப்படுத்தும் முறையில் விவசாயத் தொழிலாளர் கூலி நிர்ணயச் சட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயம் ஆரம்பமாகப் போகிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே நிலச்சுவாந்தார்கள் தங்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று சொல்லி, அரசாங்கத்தை அணுகி, போலீஸைக் கொண்டு வந்து கிராமம் கிராமமாக வைத்து விடுவார்கள். தொழிலாளர்களுக்கு மிகக் குறைவான கூலியைக் கொடுப்பார்கள். போலீஸைக் காட்டி விவசாயக் கூலிகளை குறைந்த கூலியை வாங்கும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவார்கள். அவ்வாறு இல்லாமல், விவசாயத் தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டு நியாயமான கூலி கிடைக்க வேண்டிய நடவடிக்கை எடுக்க, விவசாயத் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளையும், மிராசுதார்களுடைய பிரதிநிதிகளையும், அரசாங்க அதிகாரிகளையும் கொண்ட முக்கூட்டு மாநாடுகளை வட்டார ரீதியாக, மாவட்ட ரீதியாக நடத்தி, போலீஸ் தலையிடாத அளவுக்கு, கூலி நிர்ணயச் சட்டத்தைக் கொண்டுவர, ஒப்பந்தம் செய்ய, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. பெ. சீனிவாசன்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கும், தொழிற்சாலைகளுக்குமான இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேசுகிற வாய்ப்புத் தந்தமைக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது உள்ள தொழிற்சங்கச் சட்டங்களின்படி அரசாங்கம் ஒரு தொழிற் சங்கத்தைப் பதிவு செய்து கொண்டாலும், முதலாளிகள் அந்தத் தொழிற் சங்கத்தை அங்கீகரித்தால்தான் அந்தத் தொழிற் சங்கத்திற்கு உரிய மதிப்பு ஏற்படுகிறது. இந்த முறை முற்றிலும் பூர்ஷ்வா மனப்பான்மையோடு முந்திய அரசினால் ஏற்படுத்தப்பட்ட முறை. இதை உடனடியாக நீக்கி, அரசாங்கம் பதிவு செய்த மறுநாளே தொழிற் சங்கம் அங்கீகரிக்கப்பட்டதாக இந்த அமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கிற துலுக்கப்பட்டியில் மெட்ராஸ் சிமெண்ட்ஸ் என்ற ஒரு தொழிற்சாலை இருக்கிறது. இன்றைய தொழிற் சட்டங்களில் உள்ள குறைபாடுகளுக்கும், முதலாளிகளின் கோர தாண்டவத்திற்கும் ஒரு எடுத்துக்காட்டாக அங்கு நடைபெறுகிற விவகாரங்களை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவந்தேன். அங்கே அடிக்கடி லே-ஆஃப் என்ற முறையின் மூலம், வேலையில்லை என்று காரணம் காட்டி, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும், கம்யூனிஸ்டு கட்சியின் அனுதாபிகளாக இருக்கிற தொழிலாளர்களுக்கும் நாள் தவறாமல் தாற்காலிக ஓய்வு கொடுத்து சம்பளத்தை வெட்டுகிறார்கள். அதே நேரத்தில் இதை எடுத்துக் கொண்டு நீதி மன்றத்திற்குச் சென்றால், லேபர் ஆஃபிஸர் முன் சென்றால், இந்த விவகாரம் தீர ஆண்டுக் கணக்கில் அவகாசம் எடுத்துக்கொள்ளுகிறார்கள். அதற்குள் பல தொழிலாளர்களின் குடும்பங்கள் சின்னாபின்னமாகி, அவர்களுக்கு எந்த ஆதரவும் இல்லாமல் தெருவில் நிற்கக் கூடிய நிலைமை வருகிறது.





என்னுடைய பகுதியில் கிதாஞ்சலி மில் என்ற ஒரு மில் 1½ ஆண்டுகளாக வேலை செய்யாமல், இப்போது அதைத் திறக்க ஏற்பாடுகள் நடக்கின்றன. இந்த 1½ ஆண்டுக் காலத்தில் பல தொழிலாளர்கள் தற்கொலை செய்து கொண்ட சோக சம்பவங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். ஒரு முதலாளி ஒரு தொழிலாளியை வேலையிலிருந்து நீக்கியவுடன் எந்த விசாரணை நடந்தாலும் அந்த முதலாளியாலேயே நடத்தப்படுகிறது.

தொழிலாளி தொழில் கோர்ட்டுக்குப் போகலாம் என்று சொல்கிறார்கள். அங்கிருந்து நீதிமன்றத்திற்குச் சென்று படிப் படியாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து நல்ல முடிவு ஏற்படும் வரையில், எந்தத் தொழிலாளியாலும் தன்னுடைய குடும்பத்தை நல்ல முறையில் காப்பாற்ற முடியாது. நான் குறிப்பிட்ட எங்கள் பகுதியிலுள்ள சிமெண்ட் தொழிற்சாலை முதலாளிக்கு ஏறத்தாழ நான்கு, ஐந்து கோடி ரூபாய் மதிப்புள்ள பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. இந்த ஒரு தொழிற்சாலை தொலைந்தாலும் கவலை இல்லை, வெடி வைத்துத் தகர்த்து எறிகிறேன் என்று ஆணவத்தோடு பேசும் அளவுக்கு அவரிடம் செல்வம் குவிந்திருக்கிறது. தொழிலாளர் தகராறு தொழில் கோர்ட்டுகளுக்குச் சென்று, நாள் கணக்கில் ஆகும்போது, வேலை நீக்கத்திற்கு உரிய பரிகாரம் பின்னால் கிடைத்தாலும், மருத்துவத்திலே சொல்லுவது போல, 'ஆபரேஷன் ஸக்ஸஸ்—ஆனாலும் நோயாளி இறந்துவிட்டான்' என்ற நிலைமையைத்தான் பார்க்கிறோம்.

எங்கள் வட்டாரத்தில் இருக்கிற தொழிற்சாலையில் ஏழு தொழிலாளர்களை நிரந்தரமாக வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். காரணம், சாதாரண காரணம். பாதையில் நின்றுகொண்டு அரசாங்கத்திற்குச் சொந்தமான பொது நெடுஞ்சாலையில் நின்று கொண்டு, ஏதோ தகராறில் ஈடுபட்டார்களாம். அதைச் சுட்டிக் காட்டி, நிர்வாகமே நீதியைக் கையில் எடுத்துக்கொண்டு, நீதி மன்றத்தில் வழக்கு நடக்கும்போது அதைப் பற்றிக் கவலைப் படாமல், 'நீங்கள் ஏழு பேர்களும் கிரிமினல் குற்றவாளிகள்; ஆகவே உங்களை வேலை நீக்கம் செய்கிறோம்' என்று அறிவித்து விட்டார்கள். நாங்கள் எவ்வளவோ முதலாளிகளிடம் கெஞ்சிப் பார்த்தும் எந்தவிதப் பரிகாரமும் கிடைக்கவில்லை. அமைச்சர் அவர்களிடம் இதைச் சுட்டிக்காட்டியிருக்கிறேன், அவர்களும் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால், நடவடிக்கை மிக மிகத் தாமதமாக இருக்கிறது. இதனால் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன் தொழிற்சாலைகளில் ஏதாவது தகராறு ஏற்பட்டால், தொழிலாளர்களை நீக்குகிற உரிமை முதலாளிகளுக்கு இருக்கக் கூடாது, வழக்கு வரும்போது ஸ்டே ஆர்டர் வாங்கும் வாய்ப்பு தொழிலாளர்களுக்கு இருக்க

வேண்டும். அது வரையில் தொழிலாளர்களை வேலையில் வைத்துக் கொள்ள வேண்டும், அவர்கள் தொழிற்சாலைக்குள் இருந்தால் தகராறு ஏற்படும் என்று முதலாளிகள் கருதினால் அவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளாவிட்டாலும் நாள் தவறாமல் சம்பளத்தைக் கொடுக்கவேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

அமைச்சர் அவர்களுடைய அறிக்கையின் கடைசிப் பக்கத்தில் கேரோ பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கேரோ என்று கம்யூனிஸத் தத்துவத்திலும் இல்லை; சோஷலிஸத் தத்துவத்திலும் இல்லை. எந்தத் தொழிற் சங்கத் தலைவரும் வகுத்த கொள்கையில் கேரோ என்ற கொள்கை இல்லை. அது கொள்கையும் அல்ல, தத்துவமும் அல்ல. பாதிக்கப்பட்டவர்கள் வேறு வழியே இல்லை என்று ஆனவுடன், வயிற்றுப் பசி தாங்க முடியாமல், குடும்பத்திலுள்ள குழந்தைகளுடைய கூக்குரலுக்கு பதில் சொல்ல முடியாமல், தொழிலாளர்கள் மூர்க்கத்தனமாகச் செல்லுகிற முதலாளியை அசையவிடாமல் செய்கிற முறைக்கு கேரோ என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். இந்திய துணைக்கண்டத்தில் எதிர்க் கட்சியினர் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கிற சூழ்நிலையைப் பார்த்து காங்கிரஸ் நண்பர்கள், வேண்டுமென்றே இதை ஒரு தத்துவமாகப் பெயர் சூட்டி, ஏதோ பயங்கரமாகச் சீனாவில் நடக்கிற செங்காவல் படை மாதிரி ஒரு பயத்தை ஏற்படுத்த, கேரோ என்று பெயர் சூட்டி, இதற்கு முக்கியத்துவம் கொடுத்து வடக்கே உள்ள அமைச்சர் சொல்லியிருக்கிறார். எங்கள் தொகுதியில் இருக்கிற சிமெண்ட் தொழிற்சாலையில் இம்மாதம் 30-ம் தேதி வேலை நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்யப் போகிறேன். உதாரணத்திற்குச் சொல்லுவதானால், முதலில் தொழிற்சாலையின் வாசலில் உட்கார்ந்து வேலை நிறுத்தம் செய்வார்கள். முதலாளி கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டால், இணங்கி நடப்பதாக இருந்தால் திருப்தி அடைவோம். ஒரு நாள்—இரண்டு நாள், ஒருவாரம்—இரண்டு வாரம் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் நன்கொடைகள் மூலம் சோறு போட முடியும். அதற்கும் பின்னாலே வெளியிலிருந்து ஆட்களை விலைக்கு வாங்கி, கைக்கூலிகளாக இருக்கக் கூடிய சில தொழிலாளர்களை உள்ளே அழைத்துச் செல்ல முதலாளி ஏற்பாடு செய்கிறார். இதை பார்க்கிற தொழிலாளிகளுக்கு, 6–7 வருஷங்களாகத் தாங்கள் பார்த்த வேலை தங்களுக்கு இல்லை, வேலைக்கு கைக்கூலிகள் உள்ளே செல்லுகிறார்கள் என்ற உணர்வு ஏற்பட்டால், அந்த நேரத்தில் தாங்க முடியாத ஆத்திரத்தில், வயிற்றுப் பசி தூண்டிவிட்ட ஆத்திரத்தில், தொழிலாளிகள் கைக்கூலிகள் உள்ளே போகாமல் தடுப்பதோடு முதலாளியை நெருக்குகிற முறையில் அசையவிடாமல் செய்யக் கூடிய முறையே கேரோ என்று பெயர் சூட்டி இதை நாகரிகமாக ஆக்கிவிட்டிருக்கிறார்கள்.

தொழிலாளர்களுக்கு இந்த அரசாங்கத்திடம் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்று தொழிலாளர்களின் உள்ளத்தில் ஏமாற்றம் ஏற்பட்டுவிடக் கூடாது. பரம்பரை பரம்பரையாக, 20



ஆண்டுக் காலமாக இந்த நாட்டின் அரசு, ஆட்சியை அதிகாரத்தை நல்ல முறையில் பயன்படுத்தாததால் தொழிலாளர்களின் வாழ்க்கை இருண்டு இருக்கிறது. புதிய அரசு, அண்ணா அவர்களின் அரசு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு, தொழிலாளர்களுக்கு நன்மை செய்யும் என்று இதயத் துடிப்போடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் தொழிலாளர்கள். அவர்களுக்கு ஏமாற்றம் ஏற்படாத வகையில், தொழிலாளர்களின் கண்ணீரைத் துடைக்கும் வகையில், நாட்டு வளர்ச்சிக்கு முதுகெலும்புபோல இருக்கிற தொழிலாளர்களுக்கு நன்மை செய்யும் வகையில் இந்த அரசு பாடுபடும் என்று என்னுடைய முழு நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. இல. பலராமன்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தொழிலாளர் பிரச்னை ஒரு வாழ்க்கைப் பிரச்னையாக இது வரையில் விளக்கப்பட்டது. நம் நாட்டில் இன்றைக்கு ஆட்சி பீடத்தில் ஏறியுள்ள தி.மு.க.-வினர் இது தொழிலாளர்களுடைய சர்க்கார் என்று ஒரு சில நேரத்தில் சொன்னாலும் தொழிலாளர்கள் எந்த நிலையில் வாழவேண்டும், எப்படி முதலாளிகளிடமிருந்து தங்கள் உரிமையைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற கொள்கையை, திட்டவட்டமான ஒரு கொள்கையை நிர்ணயிக்கவில்லை என்றுதான் நான் குறிப்பிட முடியும்.

தொழிலாளிகளும் முதலாளிகளும் கணவன்–மனைவி நிலையில் இருந்தால் தான் தொழில்கள் நல்ல முறையில் நடக்க முடியும். இருவருக்கும் உள்ள உறவைப் பொறுத்த வரையில் சர்க்கார் பாலம் போன்ற நிலையில் இருக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அன்றி, வேறு விதமாக ஆக்கினால் பல சிக்கல்களுக்கிடையே தொழிலும் பாதிக்கப்படும், தொழிலாளர்களும் பாதிக்கப்படுவார்கள் என்று நான் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இதற்கு இந்த சர்க்கார் விதிவிலக்காக இருக்காது, இதற்கு உறுதுணையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். தொழில் அதிபர்களுக்காக ஒரு ஆய்வாளரையும், சிறு பாக்டரிகளை இன்ஸ்பெக்ட் செய்வதற்காக பாக்டரி இன்ஸ்பெக்டர்களையும் நியமித்திருக்கிறார்கள். இருவரும், வெவ்வேறு துறையினரை அணுகி, ஒருவர் தொழில் அதிபர்களையும், மற்றொருவர் தொழிலாளிகளையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இது இரண்டும் ஒன்றாக இணைந்தால் ஒரு நல்ல சுமுகமான நிலை கூட இருக்கும் என்று அபிப்பிராயப்படுகிறேன். பாக்டரி இன்ஸ்பெக்டர் ஒரு சிறு கிராமத்தில் இருக்கும் சிறு ரைஸ் மில் கூட பாக்டரி ஆக்டின் கீழ் வருகிறது என்று ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவது கண்டிக்கத் தக்கதாகவும், வெறுக்கத்தக்கதாகவும்கூட இருக்க முடியும். ஒரு தொழிலாளி சுமுகமாக தன்னுடைய வீட்டிலேயே, தன்னுடைய பிள்ளை போல இருக்கக்கூடிய ஒரு சிறு தொழிலை நடத்தினால், அது பாக்டரி ஆக்டின் கீழ் வரும் என்ற ஒரு நிபந்தனையைப் போடுவது பொருத்தமற்றது, அவசியமானதல்ல என்பதை நினைவூட்டுகிறேன். இதெல்லாம் ஒரு சுமுகமான நிலையிலே பரிசீலிக்க வேண்டிய

காரியங்கள். அதற்கெல்லாம் ஒரு முக்கியத்துவம் கொடுத்து, மெருகு ஏற்றி, தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே வேறுபாடுகள் இருக்கக்கூடாது என்று பாடுபடுவதற்கு நாம் வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டால், நம்முடைய வளர்ச்சிக்கு அது உறுதுணையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

விவசாயக் கூலியைப் பொறுத்தவரையில் கூட ஏற்கனவே விதித்த ஒரு கூலியைத் தான் இன்றைக்கும் விதித்திருக்கிறார்கள். ஆனால், அந்தக் கூலி யாருக்குமே கொடுக்கப்படுவதில்லை. கொடுத்தாலும் கேலியாக இருக்கும். இதையெல்லாம் பரிசீலித்து ஒரு நியாயமான கூலியை நிர்ணயம் செய்ய வேண்டும். கொத்தனாருக்கு, கொல்லத்து வேலை செய்பவர்களுக்கு சர்க்காரால் கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கூலியைப் போல் 3, 4 மடங்கு அதிகமாக அவர்கள் கூலி வாங்கக்கூடிய அளவுக்குத் தான் பழக்க ரீதியில் இருக்கிறது. இதையெல்லாம் பரிசீலித்து கூலி நிர்ணயம் செய்யவேண்டும். தொழிலாளிகளையும், முதலாளிகளையும் இணைத்து, அவர்கள் நல்ல முறையிலே செயல்பட அவர்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் ஊட்டவேண்டும் என்பது தான் சர்க்காருடைய நோக்கமாக இருக்கவேண்டுமே தவிர, இவர்கள் எங்கள் பக்கம், அவர்கள் எங்கள் பக்கம், இப்படி, அப்படி என்ற ஒரு நிலையை சர்க்கார் உருவாக்கக்கூடாது என்பதை வலியுறுத்தி, நாட்டினுடைய பொருளாதாரம் மேலும் வளர்வதற்கு சர்க்கார் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எம். கோபால்: அவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலம் கருதியும், தொழில் துறைபற்றியும் கொண்டுவரப்பட்ட இந்த மான்யக் கோரிக்கையின் மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்த தங்களைப் பாராட்டிக் கொண்டு, ஒரு சில வார்த்தைகளைக் கூற முன்வருகிறேன். இந்த நாட்டிலே உள்ளவர்கள் 80 சதவிகிதம் இந்த மான்யத்தைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் பெருவாரியாக எல்லா தொழிலாளர்களும் இந்தத் தொழிலாளர் மக்களுக்காக மக்கள் சர்க்கார் என்ன செய்யப்போகிறது என்ன செய்து கொண்டு வரப்போகிறார்கள் என்றெல்லாம் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். சென்ற 20 ஆண்டு காலமாக ஆண்டுகொண்டிருந்த சர்க்கார் மக்களுக்காக நன்மை செய்வதாகச் சொல்லிக் கொண்டு வந்தாலும், தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய மறந்துவிட்டார்கள். அது தான் அவர்களுடைய தோல்விக்கு முதல் காரணம்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்குள்ள தொழிலாளர்களுக்கும், மேல் நாட்டிலுள்ள தொழிலாளர்களுக்கும் வேறுபாடு வித்தியாசம் உண்டு. மேல் நாட்டிலுள்ள தொழிலாளர்கள் அவர்களுக்குக் குறிப்பான வேலையை செய்துவிட்டு, அவர்கள் உல்லாசமாக கார்களில் வீட்டிற்குப் போய் நல்ல முறையில் வாழ்வதற்கு வசதிகள் இருக்கின்றன. ஆனால், இங்குள்ள தொழிலாளர்களுக்கெல்லாம் நாளெல்லாம் பாடுபட்டுவிட்டு, வீட்டிற்குச் செல்கிறபொழுது ஒரு வேளை உணவுக்கே திண்டாடும் நிலைதான்



இருக்கிறது. இதன் அடிப்படைக் காரணம் என்ன? அடிப்படைக் காரணம் சட்டம்தான். சட்டம் ஒழுங்காகக் கொண்டுவராமல் இருந்ததினால்தான், ஏழைத் தொழிலாளிகள் முழு வாழ்வு வாழுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இங்கே தொழிலாளர்கள் வேறு, முதலாளிகள் வேறு என்ற மனப்பான்மை வளர்ந்துகொண்டே இருக்கிறது. அடிப்படை காரணம் முதலாளி வளர்ந்துகொண்டு போகிறான், தொழிலாளி தேய்ந்து கொண்டே போகிறான். அதற்கு சட்டம்தான் காரணம். முன்னால் ஆண்டு கொண்டிருந்த சர்க்கார் தொழிலாளர்களை சரிவர வாழ வைக்கவில்லை. தொழிலாளர்களுக்காக பாடுபடுகிறோம், தொழிலாளிகளை வாழ வைக்கிறோம் என்று சொன்னார்களே தவிர, அவர்கள் அம்மாதிரி செய்ததே கிடையாது. உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். என்னுடைய தொகுதியில் ஸ்டைரக் நடந்து கொண்டு வருகிறது. தொழிலாளிகள் முதலாளிகள் அங்கே ஒன்று சேர்ந்தால்தான் அந்த மக்களை வாழ வைக்க முடியும். தொழிலாளர்களை சாகடிக்கவேண்டும் என்று எண்ணம் இருந்தால், முதலாளிகள் கோர்ட்டுக்குப் போய்விடுவார்கள். பிறகு ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டு காலம் ஒன்றும் செய்ய முடியாது. இதையெல்லாம் மாற்றி அமைக்க வேண்டும். சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும். நாட்டு மக்கள் நன்றாக வாழவேண்டுமென்றால், அதற்கு தொழில்களும், தொழிலாளர்களும்தான் காரணம். தொழிலாளர் மக்கள் நன்றாக இருந்தால் தான், உழைத்துக் கொண்டிருக்கிறார்களே அவர்கள் நன்றாக இருந்தால் தான், சர்க்காரும் நன்றாக வாழ முடியும், வளர முடியும்.

நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன். மேல்நாடுகளை நான் பாக்கவில்லை என்றாலும், பார்த்துவிட்டு வந்த சில பேர்களிடமிருந்து நான் விஷயங்களைக் கேட்டிருக்கிறேன். மேல் நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் ஒழுங்காக வந்து, தங்களுக்குக் கொடுத்த வேலையை முறையாகச் செய்துவிடுவார்கள், அவர்கள் செய்வதை மேற்பார்வையிட ஒருவரும் தேவையில்லை. ஆனால், இங்கே மேற்பார்வைக்கு ஒரு மேஸ்திரி இதற்கு மேல் ஒரு சூபர்வைஸர், அதற்கு மேல் ஒரு என்ஜினியர் என்று இவ்வளவு பேர்கள் இருந்தாலும், கொஞ்சம் நேரம் வேலை செய்துவிட்டு, மேற்பார்வை செய்பவர்களின் கண்ணில் மண்ணைப் போட்டுவிட்டு போய்விடுவான் தொழிலாளி. அதற்கு என்ன அடிப்படைக் காரணம்? கொடுக்கக்கூடிய ஊதியம் போதாது. ஆனால் மேல் நாடுகளில் கொடுக்கப்படக்கூடிய ஊதியம், அவர்கள் சாப்பிட்டுவிட்டு உல்லாசமாக வாழ்க்கை நடத்துவதற்கு போதுமானதாக இருக்கிறது. இங்கே அப்படியில்லை நிலைமை. இங்கு முதலாளிகள் வேறு, தொழிலாளிகள் வேறு என்ற மனப்பான்மைதான் இருக்கிறது. முதலாளிகள் நன்றாக வாழ வேண்டும் உல்லாசமாக கார்களில் செல்லவேண்டும். ஆனால், தொழிலாளிகள் ஆண்டுதோறும் உழைத்துவிட்டு, உடுக்கத் துணியில்லாமல், குந்துவதற்கு குடிசை இல்லாமல் தவிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. சட்டத்தை உடனே மாற்றி அமைக்க வேண்டும்.

[திரு. எம். கோபால்] [1967 ஜூலை 11

மற்றொன்றையும் சொல்ல விரும்புகிறேன். மாநகர ஆட்சிக்கும், மாநில அரசுக்கும் ஒரு சிறிய வேண்டுகோள் விடுக்கிறேன். இன்றைக்கு ரோடு தொழிலாளர்கள் ஒரு நாள் ஒன்றுக்கு ரூ. 2 ஊதியம் பெறுகிறார்கள். நாட்டிலே இருக்கக்கூடிய விலைவாசியையும், அவர்களுடைய ஊதியத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், உண்மையிலேயே ஒன்றுக்கு ஒன்று எட்டவே எட்டாது. சென்னை மாநகராட்சியை ரோடு தொழிலாளிக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 2 கொடுத்தால் போதுமா என்று கேட்டால், 'நாங்கள் என்ன செய்வது, மாநில அரசு அதை மாற்றவேண்டும்' என்று சொல்கிறார்கள். ஆகவே, மாநில அரசு ரோடு தொழிலாளர்களுக்கு ரூ. 2 என்று இருப்பதை மாற்றி, ரூ. 4, 5 என்று உயர்த்த வேண்டும். அப்படி மாற்றினால்தான் அந்தத் தொழிலாளர்களின் வாழ்க்கை வளம் பெறும். இதையெல்லாம் கண்டு ஆராய்ந்து, நான் சொல்வதை ஏனோ தானோ என்று விடாமல், உள்ளபடியே தொழிலாளர்களின் நலமற்ற வாழ்க்கைக்கு அடிப்படை காரணம் என்ன என்பதை ஆராய்ந்து, அதை மாற்றவேண்டும்.

நான் மற்றொன்று சொல்கிறேன். என்னுடைய தொகுதியில் முன்னால் ஆண்டு கொண்டிருந்த அரசு சேம்பர் கல்லுக்கு ஒரு கண்டிரோல் கொண்டுவந்தது. அந்தத் தொழிலாளிகள் 6 மாதம் உழைக்க வேண்டும். ஆறு மாதம் மழை காலத்தில் கஷ்டப்பட வேண்டும். எனது தொகுதியிலுள்ள இந்தத் தொழிலாளி மக்கள் கல் சுட்டுக்கொண்டு, கஷ்டப்பட்டு உழைத்துவிட்டு, அந்தத் தொழிலாளிக்கு வீட்டுக்குப் போகிற நேரத்தில் வசிப்பதற்கு சரியான குடிசை கூட கிடையாது. ஆறு மாதம் உணவு கிடைக்கும். ஆறு மாதத்திற்கு பட்டினி. முன்னால் இருந்த சர்க்கார் சேம்பர் கல்லுக்கு கண்டிரோல் கொண்டு வந்தார்களே தவிர, அந்தத் தொழிலாளர்களுடைய நலனைக் கவனிக்கவில்லை. முதலாளிகளுக்கு என்ன லாபம் வருகிறதோ, அதில் 6-ல் ஒரு பங்கு, 8-ல் ஒரு பங்கு தொழிலாளிகளுக்கு போனஸ் தருவதற்கு முற்படவேண்டும் இந்த மக்கள் சர்க்கார். முன்னால் ஆண்டு வந்த காங்கிரஸ் சர்க்கார் பல தப்புத் தவறுகளை செய்து விட்டது. அதையெல்லாம் மக்கள் சர்க்கார் மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளி நலனுக்காக ஒரு நாள் அல்ல, இரண்டு நாள் அல்ல, நாள் தோறும் பேசிக்கொண்டிருந்தாலும் அதற்கு நேரம் கிடையாது. தொழிலாளர்களுடைய வாழ்க்கை மோசமான வாழ்க்கை. இங்குள்ள முதலாளிகளின் மனப்பான்மை வேறு, மேல் நாடுகளிலுள்ள முதலாளிகளின் மனப்பான்மை வேறு. இங்கு தொழிலாளி வெள்ளை உடை உடுத்திக்கொண்டு வந்துவிட்டால், முதலாளிகள் பொறுக்காது. மேல் நாடுகளில் அப்படியில்லை. நன்றாக உடை உடுத்திக்கொண்டு வந்தால்தான் வேலை தருவார்கள். மனமாற்றம் வேண்டும். நமது நாட்டிலுள்ள மனோபாவத்திற்கும், மேல் நாடுகளிலுள்ள மனோபாவத்திற்கும் வித்தியாசம், வேறுபாடு இருக்கிறது. மனவேற்றுமை இருக்கக் கூடாது. முதலாளிகளுடைய மனம் மாறுவதற்கு முதலாளிகளை மக்கள் சர்க்கார்



1967 ஜூலை 11] [திரு. எம். கோபால்]

அணுகி, கொஞ்சம் கொஞ்சமாக மனதை மாற்றிக்கொள்ளச் சொல்ல வேண்டும். இல்லையேல் சட்டத்தின் மூலம் மாற்றிவிட வேண்டும். எனவே தொழிலாளர்களை நல்ல முறையில் வாழவைப்பதற்கும் அவர்களை ஒழுங்குபடுத்துவதற்கும், முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் நல்ல உறவு ஏற்படுவதற்கும் ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே என்னுடைய தொகுதியில் அம்பத்தூர் தொழில் பேட்டையில் திடீரென்று வேலைநிறுத்தம் செய்கிறார்கள். அவர்கள் சர்க்காரிடமிருந்து கடன்கள் லட்சக்கணக்கில் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் நம் சர்க்காரைக் கேட்பதில்லை இம்மாதிரி கதவடைப்புச் செய்யும்போது, இஷ்டப்பட்டால் தொழிலாளர்களை நிறுத்திவிடுகிறார்கள். அடிமைகளாக நினைத்து தொழிலாளர்களை நடத்துகிறார்கள். அவர்களை நசுக்கி, அடக்கி ஆண்டு வருகிறார்கள். ஆகவே, இதை யெல்லாம் மக்கள் சர்க்கார் மாற்றி நல்ல முறையிலே தொழிலாளர்கள் வாழவைக்க வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சென்னையிலே பி அண்ட் சி மில்லுக்கு மாபெரும் தலைவர் திரு. வி. க. வந்தபிறகுதான் போனஸ் ஆகவும், பஞ்சப்படியாகவும், குடியிருப்பு என்றும் கிடைக்கப்பெற்றார்கள். அந்த மாதிரி பலர் பிறக்க வேண்டும். நம்முடைய சென்னையில் தொழிலாளிகளுக்கு நல்ல காலம் வந்தது என்பதற்கு அடையாளமாக மக்கள் சர்க்கார் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அவர்கள் தொழிலாளர்களுடைய நன்மைகளைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த மானியத்திற்கு ஆதரவு தந்து, நியாயமான முறையில், நேர்மையான முறையில் சட்டத்தை அமைத்து வாழ்க்கை வசதிகளைச் சரிப்படுத்த வேண்டும் என்று கேட்டு, இந்த மானியத்தை மனமார வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். பூபதி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த கோரிக்கையின் மீது பேச அவகாசம் அளித்தமைக்கு நன்றி சொல்லிக்கொள்ளுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சுரேந்திரனும், தோழர் கோவிந்தராஜு அவர்களும் சொன்ன கருத்துக்களை ஏற்றுக் கொண்டு, பேச விரும்புகிறேன். தொழிலாளி வர்க்கத்தின் பல்வேறு கால கட்ட போராட்டங்கள் பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்ற 60 ஆண்டுகாலமாக, பல மணிநேரம் வேலை செய்தவர்கள், படிப்படியாக குறைந்து 8 மணி நேர வேலைக்கு கொண்டு வந்திருக்கிறார்கள், அதே போல், ரூ. 8 சம்பளத்திலிருந்து, இன்றைக்கு 48 அல்லது 50 ரூபாய் அடிப்படை சம்பளம் என்கிற அளவுக்கு வந்திருக்கிறது என்றால், அது தொழிலாளர்களுடைய பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகு ஏற்பட்ட நிலைகள், உரிமைகள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கின்ற கொள்கை விளக்கத்தில் நல்ல கருத்துக்களை கூறியுள்ளார்கள். பல அதில் ஏற்றுக் கொள்ளும் நிலையில் இருந்தாலும், சில கருத்துக்கள்

ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் இல்லை என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். அதே சமயத்தில், இன்றைக்கு அமைச்சர்கள் மத்தியில் இருக்கும் மாற்றம், அந்த லேபர் டிபார்ட்மெண்டிலேயும் அவசியம் வந்தே ஆகவேண்டும். அதுவும் குறிப்பாக அவர்களுடைய இதயத்தில் மாற்றம் ஏற்பட்டால் தான் தொழிலாளர்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

பஞ்சாலையைப் பொருத்தவரையில், தொழிலாளர்கள் நடத்தும் கஷ்டமான நடவடிக்கைகள் பற்றி இந்த அவைக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. பஞ்சாலை முதலாளிகள் லாபம் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. பெற்றிருக்கும் லாபத்தை அந்த பஞ்சாலையிலேயே ஈடுபடுத்துகிறார்களா என்றால், இல்லை. அந்தக் காரணத்தால், பஞ்சாலை மூடப் பெறும் நெருக்கடியான நிலையில் இருக்கிறது. அவர்கள் பல்வேறு பிரிவுகளில் வேலைப்பளுவை திணித்திருக்கிறார்கள். ஆனால் அதற்கேற்றவாறு, சம்பளத்தை தொழிலாளர்களுக்கு உயர்த்தவில்லை. அதைக் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றையதினம், குறிப்பாக அதிகாரிகள் மட்டத்திலும் பஞ்சப்படியை குறைக்கவேண்டும் என்கிற மனப்பான்மை லேசாக ஊடுருவிக் கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. அந்த பஞ்சப்படியை எவ்வளவோ போராட்டங்களுக்குப் பிறகு அடைந்திருக்கிறார்கள் என்பதை மறக்கக் கூடாது. இன்றைக்குக் கொடுக்கப்படும் பஞ்சப்படி போதுமானதா என்பதைச் சிந்திக்க வேண்டும். அந்தப் புள்ளி விவரங்களில் தவறுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதே சமயத்தில் மாநில ரீதியில் பஞ்சப்படிகளை அமைக்காமல், மாவட்ட வாரியாக நிர்ணயம் செய்யும் முறையைக் கையாள இந்த அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஸஸ்பென்ஷன் அல்லது டிஸ்மிசல் போன்ற நிலைகள் வந்தால், தொழிலாளிக்கு பாதுகாப்பு அளிக்க, குறைந்த பட்சம் சம்பளம் மட்டும் கொடுக்கும் நிலையை அவருடைய கேஸ் முடியும் வரை கிடைக்க சட்டத்தை உருவாக்க அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நகர சுத்தித் தொழிலாளர்கள் பல ஆண்டுகாலமாக பல்வேறு கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். நம்முடைய சுகாதாரப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் விஷயத்தில், அவர்களுக்கு சம்பளம், பஞ்சப்படி, வீட்டு அலவன்ஸ் எல்லாம் சக்கவாறு கொடுக்க தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். சட்டத்தை அந்த வகையில் முறைபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



காண்டிராக்ட் தொழிலாளர்கள் என்ற முறையை ரத்து செய்யவேண்டும். டீ, காபி இன்னும் பல்வேறு தோட்ட தொழிலாளிகள் விஷயத்திலும் தக்க ஏற்பாடுகளை இந்த அமைச்சர் எடுத்து பாதுகாப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

1948-லே இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் உருவாக்கப்பட்டது. அதில் காலத்திற்கேற்ற மாற்றங்களை சிபாரிசு செய்ய வேண்டும். நேரிடையாகத் தொழிலாளர்கள் கோர்ட்டுக்குப் போகும் நிலை உருவாக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். லேபர் ஆபிசர்களுக்கு பிரச்சினைகள் வரும்போது அவற்றை குறைந்த பட்சம் மூன்று மாதத்திற்குள்ளாக முடிக்கும் அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக சட்டத்தை செய்யாவிட்டாலும் அப்படிப்பட்ட நிபந்தனை உருவாக்கவேண்டும்.

'லே-ஆப் காம்பன்சேஷன்' கேஸ்கள் வரும்போது, ஒன்றை கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏ.ஐ.டி.யு.சி. தொழிற்சங்க ஊழியர் ஒருவர், அங்காய் அம்மாள் என்பவரின் கேஸ் கோர்ட்டிலே போடப்பட்டது. கோர்ட்டுகளும் நியாயத்தை மறந்து நடக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சி.பி. 96/1966 என்கிற கேசிலே அங்காய் அம்மாள் கேசில் காம்பென்சேஷன் கொடுக்கப்படவில்லை. ஆனால் அதே போல ஐ.என்.டி.யு.சி. கொண்டு போன கேசில் பாப்பாய் அம்மாள், சேலம் ராஜேந்திரா மில் தொழிலாளி, அவர்கள் கேசில் சி.பி. 276/1966 என்ற கேசில் அது ஏற்றுக் கொள்ளப்பட்டு, நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டும் லே-ஆப் காம்பன்சேஷன் கேசுகள் தான். இம்மாதிரி நிலைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். எஞ்ஜினியரிங் தொழிலாளர்கள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சருக்கு சில தினங்களுக்கு முன்னால் ஒரு மெமோராண்டம் அனுப்பியிருக்கிறார்கள். ஆறாயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிற டெக்ஸ்டூல் பகுதி, இரண்டு மூன்று மாதங்களாகவே சம்பளமே கொடுக்காமல், லே-ஆப் காம்பன்சேஷன் பல மாதங்களாகக் கொடுக்காமலும், அந்தத் தொழிலாளர்கள் அவதிப்படுகிறார்கள். டெக்ஸ்டூல் கம்பெனி இப்பொழுது மூடப்படுமோ என்கிற நிலையில் இருக்கிறது. டெக்ஸ்டூல் கம்பெனிக்கு பெரிய அளவில் கஷ்டங்கள் இருக்கின்றன. பஞ்சாலைக்கு உதவிகள் கொடுப்பதுபோல இதற்கும் உதவி கோரின் ஆச்சரியம் இல்லை. ஆகவே அவர்களுக்கு உடனடியாக தக்க பரிகாரம் அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரு சிறிய விஷயத்தைப் பற்றிக் குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன். 'கேரோ', 'காரோ' என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அதைப் பற்றி அன்பர்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. அது நேற்று, முந்தாநாள் வந்ததல்ல. பல ஆண்டு காலமாகவே அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

[திரு. எம். பூபதி] [1967 ஜூலை 11

உதாரணமாக, கோயம்புத்தூர் ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்லில், ஏற்கனவே மூடப்பட்டிருக்கின்ற எட்டு மில்களுக்குமுன் அதுவும் மூடப்பட்ட நிலைக்கு வந்தபோது, அங்கே இருந்த தொழிலாளிகள் போராட்டம் நடத்தினார்கள். அவர்கள் முதலாளிகளிடம், நாங்களும் பட்டினி இருக்கிறோம், நீங்களும் பட்டினி இருங்கள் என்று சொல்லி, இரண்டு நாட்கள் அங்கே வீட்டின் முன்னால் உட்கார்ந்து கொண்டு போராடியதன் காரணமாக, கிட்டத்தட்ட 1,800 தொழிலாளர்கள் வேலை செய்யும் அந்த மில் இன்றைக்கு முறையாக நடந்து கொண்டிருக்கிறது. இன்றைய தினம், என்ன பெயர் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம், கேரோ போராட்டம் புதிது அல்ல. அந்தப் போராட்டம் ஏன் உண்டாகிறது? முதலாளிகள் செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து நழுவிச் செல்லும்போது, வேறு மார்க்கம் இல்லாமல், தொழிலாளர்கள் அவதிப்படும்போது, கேரோ போராட்டம் ஏற்படுகிறது. உறுப்பினர் திரு. சீனிவாசன் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் குறிப்பிட்டது போல, வேறு வழியே இல்லாமல், நிர்ப்பந்தத்தின் மூலமாக உண்டாகக் கூடிய ஒரு சிறிய நடவடிக்கை அது, அதற்கு ஒரு பயங்கர ரூபத்தைக் கொடுக்கக் கூடாது என்று சொல்லிக் கொண்டு, தலைவருக்கு நன்றி தெரிவித்து உரையை முடிக்கிறேன்.

* **திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒரிரு கருத்துக்களைக் கூறுவதற்குக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். முதன் முதலிலே திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றத்திற்கு தொழில் அமைதி எவ்வளவு அவசியம் என்பதை வலியுறுத்திக் காட்டி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கேரோ பற்றி, முற்றுகை பற்றி, பல்வேறு கருத்துக்களும் தெரிவிக்கப் பட்டன. இந்த அரசாங்கத் தரப்பில், நமது மாண்புமிகு தொழில்
பிற்பகல் 6–30 அமைச்சர் அவர்கள், இந்த கேரோ சட்டபூர்வமானது அல்ல என்று ஆணித்தரமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன். தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் என்று சொல்லிக் கொண்டு, கேரோ, முற்றுகை செய்வது உசிதமா, தர்மமா என்று தொழிலாளர்கள் இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய கருத்து என்பதை அவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்திலே தெளிவாக எடுத்துக் கூற கடமைப் பட்டிருக்கிறேன். வங்கத்திலே பிறந்து, கேரளத்திலே வளர்ந்து அது தமிழ் நாட்டிற்கு வராமல் தடை செய்ய வேண்டிய முயற்சியை இந்த அரசாங்கம் மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கிறேன். கேரோ பற்றி வருகின்ற காலத்தில் அது சமாதான முறையில் இருக்காது. சமாதானத்திற்குப் பங்கம் விளைவிக்கக் கூடியது என்பதில் ஐயமில்லை. தொழில் கூடங்களில் இதை அப்புறப்படுத்துவது சாலச் சிறந்தது என்று வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



1967 ஜூலை 11] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அடுத்தபடியாக ஒரு தொழில் ஸ்தாபனத்திற்கு ஒரு யூனியன் என்ற கொள்கையை அரசாங்க அறிக்கையில் பார்த்தேன். சட்ட பூர்வமாக ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் ஒவ்வொரு ஸ்தாபனத்திலும் ஒரு டிரேட் யூனியன் செயல்படுத்துமாறு செய்வது சிறந்ததாகும். அங்கீகாரம் பெற்ற சில ஸ்தாபனங்கள் ஒரு தொழிலுக்கு ஒன்று இருக்கும். பல்வேறு தொழில் ஸ்தாபனங்கள் இயங்கினால் தொழிலாளர்கள் நியாயமான, கிடைக்க வேண்டிய உரிமையைப் பெற வலிவும், வாய்ப்பும் கிடையாது. கூட்டாக அவர்களுக்குப் பேசுவதற்கும், ஸ்டிரைக் போன்ற வேலை நிறுத்தம் கையாள்வதற்கும் சட்ட பூர்வமான உரிமை இருக்கிறது. நோட்டீசைக் கொடுத்து தீர்வு காண அனுமதி அளிக்கிறது. இன்னொரு விஷயத்தைத் தொழிலமைச்சரின் கவனத்திற்கு ஈர்க்க விரும்புகிறேன். கன்னியாகுமரி ஜில்லாவில் ஆரண்வாய்மொழியில் உள்ள நூற்பாலையில் சுமார் 300-க்கும் மேலான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதிலே வருகின்ற 17-ம் தேதியன்று ஒரு வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப் போவதாக தொழிலாளர்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். பத்திரிகைகளிலும் பிரசுரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்று பஞ்சாலை நெருக்கடியைக் கவனிக்கும்பொழுது நலிந்திருக்கக்கூடிய பஞ்சாலையை மூட வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. தொழிலாளர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கிறது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அந்த நிர்வாகத்தில் இருக்கிற ஒரு நபர் என்ற முறையிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன கூட்டுறவு அடிப்படையிலே பல மில்கள் இயங்குகின்றன. எல்லா மில்களுக்கும் வேலைப்பளுவை அரசாங்கத்திலிருந்து நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இரண்டு மில்களில் தான் அதை ஆட்சேபம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆரண்வாய்மொழி மற்றும் மேலூர் கூட்டுறவு மில் ஆகிய இரண்டும் இதை ஆட்சேபணை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த வேலைப் பளுவானது நியாயமா, குறைக்க வேண்டுமா என்று முடிவு செய்ய வேண்டியது அரசாங்கமும், இந்த இலாக்காவும். ஆதலால் அதை என்ன செய்ய வேண்டுமென்பதைத் தொழில் துறையில் இருக்கின்ற அமைச்சரவர்கள், தொழில் துறையில் இருக்கின்ற இரண்டு அமைச்சர்களும் நல்ல முறையிலே ஆய்ந்து முடிவைக் காண வேண்டுமென்று அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து, இன்றிருக்கின்ற பஞ்சாலைகளிலே பல நெருக்கடிகள் இருக்கின்றன என்று முன்பே கூறினேன். அவைகளைப் புனருத்தாரணம் செய்ய அரசாங்கத்திலே தீவிர நடவடிக்கை மேற்கொண்டு டாக்டர் லோகநாதன் அவர்களைக் கொண்டு ஒரு கமிட்டி அமைத்து வேண்டிய பரிகாரங்களைச் செய்ய இருப்பதையறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அந்த அளவிலே கூட்டுறவுத்துறையிலே இருக்கின்ற நலிந்த ஆலைகளுக்குச் சலுகை செய்வதற்கு வேண்டிய காரியங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1967 ஜூலை 11

இன்னும் எங்கள் பகுதியைக் குறித்து ஓரிரு கோரிக்கைகளை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக முந்திரித் தொழில் செய்யும் பல பேக்டரிகள் என்னுடைய தொகுதியில், கோளத்தையடுத்து விளவன்கோட்டு தொகுதியில் இருக்கிறது. அந்த பேக்டரியில் உள்ள தொழிலாளர்களுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. பேக்டரி ஆக்டின்படி எல்லா நிபந்தனைகளுக்கும் உட்பட்டு அந்த பேக்டரி செயல்பட்டு வருகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது கஷ்டமான நிலையில் இருக்கிறது. அந்த பேக்டரியில் பெண்கள் தான் அதிகமாக வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். முந்திரிபருப்பு எடுக்கும் சமயத்தில் பால் வடிந்து கையிலே பட்டு கை சேதம் அடையக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதற்குப் பரிகாரமாக எண்ணெய், சோப்பு போன்ற காரியங்கள் எல்லாம் கொடுப்பதற்கு இந்த நிர்வாகிகள் கடமைப்பட்டவர்கள் ஆகிறார்கள். சிறு குழந்தைகளும் இந்த வேலையில் அமர்ந்திருக்கிறார்கள். சிறு குழந்தைகளை இந்த வேலைக்கு அமர்த்தக்கூடாது என்று சட்டத்தில் இருந்தபோதிலும் சிறு குழந்தைகள் ஈடுபட்டுக்கொண்டு தான் இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிலும் இன்னொரு விஷயம் செய்கிறார்கள். கோளா பக்கங்களிலே உள்ள முந்திரி ஆலைகளில் பகுதி கூலி தான் கொடுக்கிறார்கள். இதை நிஜப்படுத்த அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயத் தொழிலாளர்களுக்கு மினிமம் வேஜஸ் ஆக்டின்படி நிஜப்படுத்தினார்கள். முன்பிருந்த வாழ்க்கைப்புள்ளியின்படி சுமார் 9 அணா நிஜப்படுத்தியிருக்கிறது. ஒன்பது அணா கூலி நித்தியத் தொழிலாளர்களுக்குப் போதுமா, கட்டுப்படியாகுமா என்று நிதானமாகச் சிந்திக்க வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்கள் பல்லாயிரக் கணக்கானவர்கள் எனது தொகுதியிலே இருக்கிறார்கள். அவர்களுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அவர்கள் உணவு தானியங்கள் பெறுவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கேரளாவின் எல்லைப் பகுதிகளில் வாழும் நாங்கள் பாபம் செய்தவர்களோ என்னவோ தெரியவில்லை, எங்கள் பகுதியில் ஒரு படி அரிசி 2 ரூபாயாக விற்கிறது. ஏனைய பகுதிகளில் படி அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. உழைத்து உருக்குலைந்த இந்தத் தோட்ட தொழிலாளர்களுக்காவது உடனடியாக ஒரு படி அரிசி ஒரு ரூபாய்க்குக் கொடுக்க அரசாங்கம் திட்டம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த ஒரு படி அரிசியைக் கொடுக்கும்போது தொழிலாளர் பிரதிநிதிகள் மூலமாகக் கொடுக்க வேண்டும். முதலாளிகள் பிரதிநிதிகளிடம் கொடுத்தால் அதற்கு உற்ற பலன் கிடைக்காது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



1967 ஜூலை 11] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

சமீபத்தில் இடதுசாரி கம்யூனிஸ்டுகள் அந்தத் தாலுகாவிலே ஒரு கிளர்ச்சி செய்தார்கள். அவர்கள் உணவுப் பண்டங்கள், அத்தியாவசியப்பண்டங்கள் ஆகியவைகளின் விலைகள் விஷம் போல் ஏறிவிட்டது என்று பலயிடங்களில் ஊர்வலம் சென்றார்கள். ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி வேண்டுமென்று கோஷமிட்டுக் கொண்டு பலயிடங்களிலும் ஊர்வலம் நடத்தினார்கள். அதை தோழமைக் கட்சியாக இருக்கின்ற இடது சாரிக் கம்யூனிஸ்டுகள் அந்தப் பகுதிகளிலெல்லாம் இந்தக் காரியங்களைச் செய்கிறார்கள், என்பதை மட்டும் சுட்டிக்காட்டத்தான் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகிறேன். அவர்களுக்கு நியாயமான பல காரியங்களைச் செய்ய அரசாங்கம் முன் வரவேண்டும். அதற்காக நாங்கள் எப்பொழுதும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். குறிப்பாக மருத்துவம், சுகாதாரம், கல்வி, வீட்டு வசதி, பொழுது போக்கு வசதி போன்றவைகள் எல்லாம் மறுக்கப்பட்டிருக்கிறது. தோட்டத் தொழிலாளர்களுக்குப் பல சட்டங்கள் இயற்றி 'பிளான்டேஷன் லேபர் ஆக்ட்' என்று 1951-லே ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இதன் விதி முறைகளை அமுலாக்குவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. முதலாளிகள், அதிகாரிகள் ஆகியோர் செயல்படும் காரணமாகத் தொழிலாளர்கள் பல கஷ்டங்களுக்கும், இன்னல்களுக்கும், சங்கடங்களுக்கும் ஆளாகிறார்கள் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அரசாங்கத்திலே ரப்பர் பிளான்டேஷன் இருக்கிறது. தனியார் துறையிலேயும் இருக்கிறது. ஆனால் கவர்ன்மென்ட் பிளேன்டேஷனுக்கும் தனியார் பிளேன்டேஷனுக்கும் கூலி வேறுபாடு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்க நிறுவனத்திலே கூலி மிகவும் குறைவாக இருக்கிறது, வசதி குறைவாக இருக்கிறது, இருப்பதற்கு வசதியும் இல்லை. ஆதலால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கத் தரப்பிலே உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஐயாயிரம் ஏக்கரில் ரப்பர் வைத்திருக்கிறார்கள் அது லாபகரமாக நடக்கிறதா, நஷ்டமாக நடக்கிறதா என்பதுபற்றி நான் இந்தச் சந்தர்ப்பத்தில் விவாதிக்க வரவில்லை. அங்கு 100 ஏக்கருக்கு ஒரு அதிகாரியை மேற்பார்வைக்காக வைத்திருக்கிறார்கள். அதிலே இருக்கின்ற சிலரைப் பார்த்தால் அது ஊதாரித்தனமாக இருக்கும். சிக்கனம் கையாளபட வேண்டிய பல காரியங்கள் இருக்கின்றன. அதை உடனடியாகக் கையாள வேண்டும். தொழிலாளர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஒர்க்மென்ஸ் காம்பென்சேஷன் ஆக்டை அனுசரித்து ஏற்படுகிற க்ளெயம்களையெல்லாம் குறிப்பிட்ட ஒரு கால வரம்பிற்குள்ளே முடிக்க வேண்டும் என்று அரசாங்கத்தி

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1967 ஜூலை 11

விருந்து ஆணை பிறப்பித்து அதிகாரிகள் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இன்னொரு விஷயத்தையும் அரசாங்கத்தின் ஆழ்ந்த ஆலோசனைக்காக நான் சமர்ப்பித்துக் கொள்ளுகிறேன். பனைமரத் தொழிலில் பல ஆயிரக்கணக்கான மக்கள் தென்பகுதியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது, மரத்திலிருந்து தவறி விழுந்து உயிர்சேதம் ஏற்படக்கூடிய இக்கட்டான நிலை இருக்கிறது. பலர் உயிரிழந்திருக்கிறார்கள். பலர், அங்க ஹீனம்களாக வாழ்நாள் முழுவதும் இருக்கிறார்கள். இவர்களுக்குக் காம்பென்ஸேஷன் கொடுப்பதிலே ஒர்க்மென்ஸ் காம்பென்ஸேஷன் ஆக்டைக் கொண்டுவர முடியுமா, அதற்குத்தகுந்தாற்போல் இந்த விதியை மாற்றியமைக்க முடியுமா என்பதைப் பரிசீலித்தால், இந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற பல ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் முதலாளிகள் பல கஷ்டங்களைச் செய்கிறார்கள். போனஸ் உரிய காலத்தில் கொடுப்பதில்லை. ப்ராவிடென்ட் பண்டு காண்ட்ரிப்யூஷன் கொடுப்பது இல்லை. தொழிற்கோர்ட்டில்கூட தொழிலாளிகளுக்குச் சாதகமான தீர்ப்பு ஏற்பட்டாலும், அதை அமல் நடத்த அவர்கள் தயங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் உடனடியாக எடுக்க வேண்டும். ப்ராஸிக்யூஷன் வேண்டுமானால், ப்ராஸிக்யூஷன் நடத்த வேண்டும், அல்லது வேறு சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு அரசாங்கம் முற்படவேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தைப்பற்றி நான் கூறவேண்டும் என்று நினைக்கிறேன். மோட்டார் ட்ரான்ஸ்போர்ட் ஒர்க்கர்ஸ் ஆக்ட் நிறைவேறிப் பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. அதன் விதிகளைத் திருத்தியமைப்பதற்குப் பல கால தாமதங்கள் ஏற்பட்டதன் காரணமாக, இன்று அமலாக்கப்படவில்லை என்று அறிக்கையில் கூட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். துரிதமாக இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தைப்பற்றி (எம்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ச்) நான் ஒரு வார்த்தை கூறவேண்டும். வேலை தேடித் தரும் ஸ்தாபனத்திலே லைவ் ரிஜிஸ்டரில் ஆயிரக்கணக்கானவர்கள் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்துகொண்டு, தங்களுக்கு வேலை கிடைக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், அங்கு பல கஷ்டங்கள் இருந்துகொண்டே இருக்கின்றன. லைவ் ரிஜிஸ்டரில் ஸீனியாரிடி முறைப்படி அவர்களுக்கு வேலை



1967 ஜூலை 11] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

வாய்ப்புத் தேடிக் கொடுப்பதற்கு அரசாங்கம் வேண்டிய உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும். தனியார்த் துறையிலானாலும் சரி, அல்லது பொதுத் துறையிலானாலும் சரி, இருக்கின்ற நிறுவனங்களிலே வேலை ஆட்களை அமர்த்த வேண்டுமானால், வேலைத் தேடித் தரும் ஸ்தாபனங்கள் மூலமாகத்தான் இருக்க வேண்டும் என்ற கண்டிப்பான உத்தரவு இப்பொழுது இருந்தாலும், அது சரியான முறையில் அமல் நடத்தப்படவில்லை என்பதையும் நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம். திருவாங்கூர்–கொச்சியிலிருந்து மாற்றப்பட்ட பகுதியிலே உள்ள உத்தியோகஸ்தர்களுக்குள்ள பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இணைப்பின் காரணமாக, அங்கிருந்து தமிழகத்திற்கு மாற்றப்பட்ட உத்தியோகஸ்தர்கள் பலரும் பாதிக்கப்பட்டார்கள். குறிப்பாக, திருவாங்கூர்-கொச்சியில் லேபர் ஆபீசராகப் பணியாற்றிய நபரை இந்த இராஜ்ஜியத்தோடு இணைந்த பிற்பாடு அஸிஸ்டென்ட் இன்ஸ்பெக்டராகப் போட்டிருக்கிறார்கள். இத்தகைய பாரபட்சமான செயலைப் பரிகரிப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இளமைத் துடிதுடிப்பிலே இருக்கின்ற நல்ல அமைச்சருடைய கையிலே இந்த இலாக்காவானது பொருத்தமாக அமைந்திருக்கிறது. ஆதலால், தொழிலாளர்களுக்குப் பல நன்மைகளைச் செய்ய வேண்டும். பாட்டாளிகளுடைய சர்க்கார் என்று மட்டும் வாயளவில் சொல்லாமல், தொழிலாளர்களுக்கு நல்ல நன்மைகள் ஏற்படக்கூடிய எல்லா நல்ல அம்சங்களையும் செய்ய வேண்டும் என்று கூறிக்கொண்டு, எனது உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, தொழிலாளர் துறை பற்றிய இந்த மானியத்திலே எல்லாத் தரப்பிலிருந்தும் தொழிலாளர்களின் சார்பிலே பேசப்பட்டு, தொழிலாளர்களுக்கு இன்னும் ஏராளமான நன்மைகள் செய்ய வேண்டும், அவர்களுக்காக இயற்றப்பட்டிருக்கக்கூடிய சட்டங்களெல்லாம் நல்ல முறையில் நிறைவேற்றப்படவேண்டும், அவற்றிலே தொழிலாளர்களுக்குப் பாதகமாக இருக்கக்கூடிய இடையூறுகளையெல்லாம் அப்போதைக்கப்போது பரிசீலித்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்ற நல்ல கருத்துக்கள் எல்லாம் எல்லாத் தரப்பிலிருந்தும் சொல்லப்பட்டது ஒரு பெருமைக்குரிய விஷயம் ஆகும். இந்த அரசாங்கம் அதற்காக எல்லாக் கனம் உறுப்பினர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இந்த மன்றத்திலே இருக்கக்கூடிய கருத்துத்தான் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவுக்கு எல்லோருடைய கருத்தாகும் என்பதை நான் உணருகின்றேன். சுதந்திராக் கட்சியின்

சார்பிலே சொல்லப்பட்ட கருத்தும், இங்கே தொழிலாளர்களின் சார்பிலேயே சொல்லப்பட்டது என்பதை உண்மையிலேயே எல்லோரும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். தொழிலாளர்களுக்கு விரோதமாக எந்த முதலாளியாவது நடந்து கொண்டால், சட்டத்தின் பிடிப்பிலிருந்து அவர்கள் தப்பிக்க முடியாது என்று ஆணித்தரமாக நம்முடைய கனம் உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். சுதந்திராக் கட்சியின் சார்பிலே அந்தக் கருத்தை அவர்கள் வலியுறுத்தியது உண்மையிலேயே பாராட்டுதலுக்குரிய செய்தியாகும்.

பொதுவாக, தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைக் குறித்த கருத்துக்கள் எல்லாம் இங்கே சொல்லப்பட்டன. அதற்காகச் சட்டங்கள் போடுகின்றோம். அதற்காகக் கொள்கைப் பிரகடனங்கள் செய்கின்றோம். எல்லோரும் செய்கின்றார்கள். இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறவர்களும் செய்கின்றார்கள். ஆனால், நடைமுறையில் எப்படி இருக்கிறது? அது செயல்படுத்தப்பட முடிகிறதா? அதிலே உள்ள தடைகள் என்ன? அந்தத் தடைகளை நீக்குவதற்கு இந்த அரசாங்கத்திலுள்ள ஆட்சியியந்திரம் எந்த அளவுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதைத்தான் கனம் உறுப்பினர்கள் எல்லோரும் குறிப்பாகச் சொன்னார்கள். அது மிகவும் உண்மை. நான் அதை ஏற்றுக் கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட நிலைமையை மாற்றியமைக்க வேண்டும் என்றால், எல்லோரும் சேர்ந்து பாடுபட வேண்டும் என்பதை நான் இங்கே நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். ஜனநாயக ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. மக்களாட்சி முறையை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த ஆட்சி இயந்திரத்திற்குள்ளாகவே அந்த அரசியலமைப்புக்குள்ளே நாம் செயல்பட்டால், இதுபோன்ற தடங்கல்கள் வரத்தான் செய்யும். அதை அப்போதைக்கப்போது பரிசீலித்து, தொழிலாளர்கள் பக்கத்திலேயிருந்து, அவர்களுடைய கோரிக்கைகளை நாம் பாதுகாத்து எந்த அளவிற்கு உதவி செய்ய வேண்டும் என்பதைத்தான் இந்த அரசாங்கம் இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறது. அதற்காக இந்த அரசு எப்போதும் தயாராக இருக்கிறது. இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்த நண்பர் திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது பாட்டாளி அரசு என்று பேசப்படுகிறது. ஆனால், புதுமையைக் காணோம், புரட்சியைக் காணோம் என்று சொன்னார்கள். இதுதான் புதுமை. இதுதான் புரட்சி. இந்தச் சபையிலுள்ள அத்தனை தரப்பு உறுப்பினர்களும் அரசாங்கத்தினுடைய கொள்கையைப் பாராட்டி, தொழிலாளர்களுக்காகப் பாடுபடவேண்டும் என்று சொல்லக்கூடிய நிலையே ஒரு புதுமைதான். தொழிலாளர்களுக்கு எதிராக இந்தச் சமுதாயத்தில் யாருமே இல்லை, எந்தக் கட்சியும் இல்லை என்பது இங்கே நடந்த விவாதங்களில் காணப்பட்டதே, அதுவே புரட்சிதான், புதுமைதான் என்று இந்த அரசாங்கம் கருதுகிறது. ஆனால், உண்மையிலேயே, தொழிலாளர்களுக்கு நன்மைகளைச்



செய்ய முன்வரும்போது, அப்படிப்பட்ட சட்டங்களை நிறைவேற்றும்போது ஏராளமான தடைகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றை இந்த அரசாங்கம் உணர்ந்து அவற்றைத் தவிர்ப்பதற்கு, உண்மையிலேயே நாம் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய கொள்கையை அமலாக்குவதற்கு நாங்கள் முழு முயற்சி செய்வோம் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்தப் புதிய அரசாங்கத்தினுடைய கொள்கைகளெல்லாம் ஓரளவு தொகுத்து இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலுள்ள குறிப்புகளையெல்லாம் பல தரப்பிலுள்ள உறுப்பினர்களெல்லாம் பாராட்டி வரவேற்றுப் பேசினார்கள். உண்மையிலேயே நான் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

பொதுவாக, தொழிலாளர்கள் சட்டத்தின் மூலம் விமோசனம் பெறுவதற்காக, அதிலிருந்து நன்மைகள் பெறுவதற்காக நீதிமன்றங்களுக்குச் செல்லக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அப்போது அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அதை உணர்ந்துதான் இந்த அரசாங்கம் உயர்நீதி மன்ற அளவில் தொழிலாளர்களுக்காக வாதாடுவதற்கு சட்ட உதவி கொடுக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறது. நண்பர் திரு. ஜேம்ஸ் அவர்கள், அங்கங்கேயுள்ள லேபர் கோர்ட்களிலும், அந்தந்த மாவட்ட அளவில் உள்ள நீதிமன்றங்களிலும் அந்த உதவி கிடைக்கவேண்டும் என்று கேட்டார்கள். அது நல்ல கோரிக்கை. அதை இந்த அரசாங்கம் நிச்சயம் பரிசீலிக்கும். உயர்நீதி மன்ற அளவில், நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் இந்தத் திட்டம் எப்படி செயல்படுகிறது என்று பார்த்து, அதனுடைய விளைவுகளை ஆராய்ந்து, அதற்கு மேலாக அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்று நாங்கள் கருதியிருக்கிறோம். இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். நீதி மன்றங்களில் வழக்கறிஞர்களைவிட தொழிலாளர் தலைவர்கள் மிக அருமையாக, நேர்த்தியாக வாதாடுவதை நானே பார்த்திருக்கிறேன். ஆகவே, அவர்களுடைய உதவி என்றைக்கும் நம்முடைய தொழிலாளர் வர்க்கத்திற்கு இருக்கிறது, அது எப்பொழுதும் இருக்கும் என்ற நம்பிக்கை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது.

தொழிலாளர்கள் வீடு கட்டும் திட்டத்தைப்பற்றி உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்டார்கள். அதுபற்றி மத்திய அரசாங்கம் ஒரு திட்டம் தீட்டி, அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே சில இடங்களில் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், இன்றைக்குக் கொஞ்சம் நிலைமை மாறி இருக்கிறது. மத்திய அரசாங்கம் இதுபற்றிய திட்ட உதவியைக் குறைத்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மத்திய அரசாங்கத்தைக் குறை கூறுவதாகச் சொல்லிவிடக் கூடாது. ஆனால், பொருளாதாரம் இல்லாத காரணத்தினாலேதான் அவர்கள் இதைச்சொல்லியிருக்கிறார்கள்

என்பதை இந்த அரசாங்கம் உணருகிறது. நிச்சயம் அதுபற்றி இரண்டு நாட்களுக்கு முன்னாலே கூட, மத்திய அமைச்சரவையில் தொழிலாளர்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய அமைச்சரவர்களிடம் நான் பேசினேன். சீக்கிரம் இதுபற்றி நீங்கள் எப்படியும் அங்குள்ள அமைச்சரோடு பேச்சு வார்த்தை நடத்தி, திட்டத்திற்கு அதிகத் தொகை வாங்கித்தரவேண்டும் என்று நான் சொல்லிவிட்டு வந்தேன். அது நமக்கு நிச்சயம் கிடைக்குமென்ற நம்பிக்கையில் தொழிலாளர் பிரச்சினையில் பல கட்டங்கள் வருகின்றன. தொழிலாளர் பிரச்சினை என்று எழுப்பப் படுகிறபோது 'அட்ஜூடிகேஷன்' நீதிமன்றங்களுக்குச் செல்லு கின்ற உயர்நீதிமன்றத்திற்குச் செல்லுகின்ற நிலைமை இருக்கிறது. இந்தக் கட்டங்களிலே காலதாமதம் ஏற்படுகிறது. தொழிலாளர் களுடைய நலனுக்கு என்று ஒரு கருத்து வருகின்றபோது, அதுவும் கருத்து பரிசீலிக்கப்பட வேண்டிய கருத்து தொழிலாளர் களுடைய உரிமையைப் பாதுகாக்கின்றபோது முதலாளி கோர்ட் வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு, " எல்லா நீதிமன்றங்களுக்கும் செல்வேன், இந்தியத் தலைமை நீதிமன்றத்திற்கும் செல்வேன் அது வரைக்கும் தொழிலாளி காத்திருக்க வேண்டுமென்று, எந்த முதலாளியாவது சொன்னால், அதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அதை எப்படி மறுப்பது என்பதை இந்த அரசு நிச்சயம் பரிசீலிக்கும். தொழிலாளர்களுடைய பிரச்சினைகளை ஆராய்வதற்காக இந்த அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுக்க ஆலோசித்து வருகிறது. தொழில் துறை அமைச்சர் அவர்கள் முதலாளிகள் அடங்கிய கூட்டத்திலும் சில கருத்துக்களைச் சொன்னார்கள். 'கிரீவன்ஸ் மெஷினரி'-யாக ஒவ்வொரு தொழிற்சாலையிலும் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். அந்த மெஷினரி அவ்வப்பொழுது தொழிலாளர் பிரச்சினைகளை ஆராய வேண்டும். அவ்வப்போதைக்கு பரிசீலிக்கப்பட வேண்டிய நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் கருத்துக்களையெல்லாம் அரசாங்கம் பரிசீலித்து ஆராய்ந்து வருகிறது.

பொதுவாக, தொழிலாளர் பிரச்சினையிலே இரண்டு வகைகள் இருக்கின்றன. தொழிலாளர் இயக்கத்தை பாட்டாளி வர்க்கத்தை இணைத்துச் செயல்படுத்தி அவர்களுக்காகப் பாடுபடுவது; தொழிலாளர் இயக்கங்களை ஆதரிப்பது 'டிரேட் யூனியன் ஆக்டிவிட்டீஸ்' இருக்கின்றன. இதில் எல்லா தரப்பும் வரவேற்கக் கூடியது என்னவென்றால், தொழிலாளர்களுடைய அமைப்புக்களை அரசியல் நோக்கத்திற்காகப் பயன்படுத்தக்கூடாது என்பதாகும். தொழிலாளர் அமைப்புக்கள் கட்சிக்கு அப்பாற்பட்டு அவர்களுடைய பொருளாதார அமைப்பை மாற்றுவதற்கு— பொருளாதாரமுறையில் சமுதாயத்தை உருவாக்குவதில், தங்களுடைய கவனத்தைச் செலுத்த வேண்டும். இதை அரசியல் பிரச்சினைக்கு இழுக்கக்கூடாது. ஆனால் எல்லா கட்சிகளும் தொழிலாளர் பிரச்சினையில் ஈடுபாடு கொண்டு வருகின்றன. உலகத்திலே பல நாடுகளிலே, பல கால கட்டங்களிலே, பல சமுதாயங்கள்



இதைப் பரிசீலித்து வருகின்றன. தொடர்ந்து பரிசீலித்து வருவதில் எங்களுக்கும் ஆட்சேபம் இல்லை. பொதுவாக அரசியல் நோக்கத்திற்காக 'இந்தக் கட்சி அந்தக் கட்சி' என்று நான் சொல்ல மாட்டேன். ஒரு கட்சியை மட்டும் குறை கூறாமல் பொதுவாக, அரசியல் நோக்கத்திற்காகப் பயன்படுத்திக்கொள்வது நல்லது அல்லவென்ற கருத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் வாயினால் சொல்லுகிறோம் ஒரு தொழிற்சாலைக்கு ஒரு யூனியன் என்று, ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் என்று சொல்லுகிறோம். இதை உண்மையாக ஏற்றுக்கொண்ட கட்சி எத்தனை என்று சொல்ல முடியாது. இதற்கான அடிப்படைக் காரணத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவேதான் இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் ஏற்படுகின்றன. இந்த அரசாங்கம் எல்லோரையும் இணைத்துத் தொழிலாளர் பிரச்னையில் இணைத்து ஒரு 'கோட் ஆஃப் டிசிப்ளின்' உருவாக்க இருக்கிறோம். சட்டத்தின் மூலமாக மட்டும் திருத்திவிட முடியும் என்ற கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. 'எக்ஸ்ட்ரா லீகல்' என்ற முறையில் இதைச் செய்ய வேண்டும். முழுக்க மனிதாபிமான உணர்ச்சியுடன் நடந்துகொண்டால்தான் இந்தப்பிரச்சினை தீரும் என்பது என்னுடைய கருத்தாகும். இந்தப் பிரச்சினையில் நமக்குள்ளே ஒரு கோட் ஆஃப் டிசிப்ளின்' ஏற்படுத்தி நடந்துக்கொண்டால் தான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் நல்ல முறையில் நடைபெற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பல அங்கத்தினர்கள், குறிப்பாக ஒவ்வொரு தொழிலைப்பற்றியும், ஆங்காங்கு நடைபெறுகின்ற நிலைமைகளைப்பற்றியும் பேசினார்கள். இதையெல்லாம் அதிகாரிகள் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி பரிசீலித்து சட்டபூர்வமாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ, அதையெல்லாம் இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பீடித் தொழிலாளர்களைப்பற்றி நண்பர் ஆலடி அருணா அவர்கள் மிகவும் உருக்கமாகப் பேசினார்கள். அவருடைய ஆத்திரத்திற்குக் காரணம்' பீடித் தொழிலாளர் நீண்ட நாளாக இப்படிப்பட்ட தொல்லைகளை அனுபவித்து வருகிறார்கள். இவர்களுடைய வாழ்க்கையை இன்னும் சீர்ப்படுத்த முடியாத நிலைமை இருந்து வருகிறது என்பதையே எடுத்துக்காட்டினார். அதற்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டு வருகின்றன. நான் அதையெல்லாம் சொல்ல விரும்பவில்லை. ஒரேயொரு காரணத்தை மட்டும் குறிப்பிடுகிறேன். தென் மாநிலங்களைப் பொறுத்தவரையில் இந்தப் பீடித் தொழில் இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் மட்டும் ஒரு சட்டம் உருவாக்கி, அதனால் தொழில் பாதித்து, மற்ற மாநிலங்களுக்குச் செல்லக் கூடிய நிலைமை உருவாகும். ஆகவே. அதை மத்திய சர்க்காருக்கு கொண்டுவந்து இந்தியா முழுவதற்குமாக சட்டம் செய்திருக்கிறார்கள். தென் மாநிலங்களைப் பொறுத்தவரையில், இந்தத் தொழில் அமைச்சர்கள் எல்லாம் கூடி பீடித் தொழில் சம்பந்தமாக ஒரு முடிவு எடுப்பதாக இருக்கிறார்கள்.

ஆந்திராவில் அந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்வதாக அம்மா நில அமைச்சர் சொல்லியிருக்கிறார். மாராட்டிய மாநில அமைச்சர்களும் வருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள பீடித் தொழிலாளர்களை நிச்சயமாகப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதிலே கூட மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கம் என்று சில பிரச்சினைகள் இருக்கின்றன. எதிர்க்கட்சி தரப்பிலுள்ள அங்கத்தினர்கள் இதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதை 'கன்கரண்ட் சப்ஜெக்ட்டாக' செய்ய வேண்டும். மாநில அரசாங்கமும் சட்டம் இயற்றலாம்; மத்திய அரசாங்கமும் சட்டம் இயற்றலாம். ஆனால் மத்திய அரசாங்கம் சட்டம் இயற்றினால்தான் நிலைத்திருக்கும். ஆகவே மத்திய அரசாங்கம் பீடித் தொழிலாளர் சம்பந்தமாக ஒரு சட்டம் இயற்றி அமல்படுத்தினால் நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவிதுக்கொள்ளுகிறேன். மத்திய அரசாங்கம் சட்டம் போட்டது ஆனால் விதிகள் பிறப்பிக்கவில்லை. அந்த விதிகள் பிறப்பிக்கப் படுமானால், நிச்சயமாக நாம் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும் என்று கூறிக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் 1961-ம் ஆண்டு மத்திய அரசாங்கத்தினுடைய மோட்டார் டிரான்ஸ்போர்ட் ஒர்க்கர்ஸ்' சட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். நீண்ட நாட்களாகக் கொண்டு வரப்பட வேண்டிய சட்டம், கொண்டுவரப்படவில்லையென்று, நாங்கள் அந்தத் தரப்பிலிருந்து சொன்னோம், அவர்களுக்கும் அது புரியும். 1965-ம் ஆண்டு, இதற்கு முன்னுலிருந்த அரசாங்கம் ஒரு விதிமுறைகளைக் கொண்டு வந்தது. அந்த விதியை அமுல்படுத்த இந்த அரசாங்கம் முழு முயற்சி எடுத்துக்கொள்ளும்.

தொழில் நீதிமன்றங்களில் எப்படி எப்படி நீதி இருக்க வேண்டும்; தீர்ப்புகள் வழங்க வேண்டுமென்ற கருத்தை எல்லோரும் சொன்னார்கள். இது எல்லா நீதிமன்றங்களிலும் இருக்கக்கூடிய நிலைமைகள் என்றால், தொழில் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கம் அவ்வப்போது உயர் நீதிமன்றத்தோடு பேச்சு வார்த்தை பேசி, எப்படி இருக்கிறதென்பதை ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கனம் அங்கத்தினர்கள் அவ்வப்போதைய நிலைமைகளையொட்டி தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசாங்கம் தொழிலாளர்களுடைய பிரச்சினையிலே தலையிடும்போது, அரசாங்கமே நடத்தக்கூடிய மத்திய அரசாங்கம்—மாநில அரசாங்கம் தொழிற்சாலைகளில் சட்டங்கள் புறக்கணிக்கப் படுகின்றன. தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் தரப்படவில்லை. அவர்கள் அங்கு அதை அமல்படுத்த முடியாத நிலையில் அரசாங்கம் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அப்படி ஒரு நிலைமை இருக்குமானால், என்ன காரணம் என்பதை அறிந்து தக்க



நடவடிக்கை இந்த அரசு எடுத்துக்கொள்ளும் என்று கூறிக் கொள்ளுகிறேன். சமீபத்தில் தொழிலாளர்கள் தினம் என்று கொண்டாடினார்கள். அங்கு பொறுப்பு ஏற்றிருக்கக்கூடிய அதிகாரி ஒருவர் தொழிலாளர் பக்கமே திரும்பிக்கூடப் பார்க்க வில்லை. தொழிலாளர் என்றால், ஏதோ ஒரு தனி ஜாதி என்று அவர்கள் நினைத்துவிட்டார்கள்போல் இருக்கிறது. அதிகாரிகள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்றால், அரசாங்கத்தினுடைய கொள்கையை ஏற்று அமல் நடத்துபவர்களாக இருக்க வேண்டும். அதிகாரிகள் எல்லாம் இன்றைய அரசாங்கத்தின் கொள்கையை ஏற்று நடக்கின்றார்களா, என்றெல்லாம் கேட்கப்பட்டது. அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது எல்லாம் 20 ஆண்டுக் காலப் பழக்கத்திற்கு ஆளாகாமல், புதிய அரசாங்கத்தினுடைய கொள்கையை ஏற்று நடக்கப் பழகுங்கள் என்றுதான் சொல்லிக் கொள்வேன். எந்த அதிகாரியாக இருந்தாலும். இந்த அரசாங்கத்தினுடைய கொள்கையை நிச்சயமாக அமல்படுத்தாமல் இருந்தால், அம்மாதிரியான அதிகாரி எங்கே இருக்கிறார் என்பதைத் தெரிவித்தால், இந்த அரசு அவர்மேல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆகவே நான் நமது தொழில் அமைச்சர் அவர்கள் இந்த இலாக்காவின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தபோதே, சர்க்கார் துறையில் நடைபெறுகிற நிறுவனங்களில் எல்லாம் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட சட்டங்கள் எந்த முறையில் அமல் நடத்தப் படுகின்றன என்கிற விவரங்களைத் தொகுத்து அளிக்கும்படியாக அந்த இலாக்கா அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்தார்கள். இன்றையதினம் அந்தப் பொறுப்பிலே அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கை கிடைத்தவுடன் அதைப் பரிசீலனை செய்து பார்த்து எப்படி எப்படி சர்க்கார் துறையில் இருக்கிற தொழில் நிறுவனங்களிலும் இந்தச் சட்டங்களை அமல் செய்யலாம் என்பதைப் பற்றி அரசு முடிவு செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இரவு 7.00

சட்டம், ஒழுங்கு பிரச்சினை என்பதாக காவல் துறையினர் தலையிடுவது பற்றிச் சொன்னார்கள். இதில் கருத்துவேறுபாடு இருக்கலாம். ஆனால் சுதந்திராக் கட்சி உறுப்பினரே போலீஸார் முதலாளிகளுக்கு சாதகமாகத் தலையிடக் கூடாது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு வேறு யாரும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை நிச்சயமாக நானும் உறுதி அளிக்கிறேன். சட்டபூர்வமாக டிரேட் யூனியன் ஆக்டின் விதிகளுக்குட்பட்டு தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய்கிறபோது காவல் துறையினரும் தலையிடமாட்டார்கள் என்று தெரிவித்துக் லாளர்களைக் கைது செய்யவோ, அவர்கள் விஷயத்தில் தலையிடவோ மாட்டார்கள். இந்த அரசு இருக்கிற வரைக்கும் எந்தக் காவல்துறையினரும் தலையிடமாட்டார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்). அப்படி எங்காவது முதலாளிகளுக்குப் பரிந்துகொண்டு சட்டபூர்வமாக தொழிலாளர்கள்

[திரு. செ. மாதவன்] [1967 ஜுலை 11

நடக்கிறபோது காவல் துறையினர் குறுக்கிட்டார்கள் என்றால் அவர்கள் பேரில் இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயங்காது. ஆனால் இந்த இடங்களுக்கே போலீசார் செல்லக் கூடாது என்று சொல்வது பழைய அனுபவத்தை வைத்துக் கொண்டு சொல்வதற்காகத்தான் இருக்கும். போலீசார் அங்கே சென்றாலே தொழிலாளர்களைக் கைது செய்ய போனார்கள், யாரோ ஒருவருக்குப் பரிந்துகொண்டு போனார்கள் என்று குற்றஞ்சாட்டு வது பழைய அனுபவத்தை வைத்துக்கொண்டு சாட்டுகிற குற்ற மாகத்தான் இருக்கும். இனி அப்படி நடக்காது என்று உறுதி சொல்கிறேன். நடந்தால் நிச்சயம் பரிசிலனைக்குரியதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பஞ்சாலைத் தொழிலைப் பற்றிச் சொன்னார்கள். தொழில் துறை அமைச்சர் அவர்கள் இதுபற்றி ஒரு குழுவைப் போட்டு அடிக்கடி பரிசீலித்து வருகிறார்கள். மத்திய அரசினிடத்திலும் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார்கள். இது நம் மாநிலத்தைப் பொறுத்த மட்டிலும் அல்ல, இந்திய நாட்டின் பல பகுதிகளைப் பொறுத்ததாக இருக்கிறது. நிச்சயமாக அந்தத் தொழில் துறை யினருக்கு நல்ல உதவி செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக எல்லா அங்கத்தினர்களும் தொழிலாளர்களின் சார்பாகத் தெரிவித்துள்ள நல்ல கருத்துக்கள் எல்லாம் ஆராயப் படும், அவர்களது ஆலோசனைகளின் பேரில் இந்த அரசும் செயல் படும் என்ற உறுதியை அளிக்கிறேன். தொழிலாளர்களுடைய கருத்தை வற்புறுத்தவே வெட்டுத் தீர்மானம் கொடுக்கப்படுகிறது. சரியான முறையில் அவர்களுடைய கருத்து எடுத்து வைக்கப்பட் டிருப்பதால், நிச்சயம் வெட்டுத் தீர்மானங்களைப் பிரேரித்தவர் கள் அவற்றைத் திரும்பப்பெற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக் கையைத் தெரிவித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. கோவிந்தராசன் :** கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை நான் வற்புறுத்தவில்லை.

வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

திரு. க. இராமமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன் உள்ள கேள்வி: "**கோரிக்கை எண் XXIV** தொழிலாளர் நலனும் தொழிற்சாலை களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,32,10,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."



1967 ஜுலை 11] [பேரவைத் தலைவர்]

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவு அடைகின்றன. நாளைக்காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

இரவு 7-07

## 8, பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory Rules and Orders.

§ 231. *Notification issued with Roc. No. 71587/64-F1, Director of Rural Development, dated the 27th June 1966, regarding inclusion of an area specified in the appendix to this notification within jurisdiction of the Alampalayam Panchayat or Thiruchengode taluk. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958)].*

232. *Notification issued with G. O. Ms. No. 864, Revenue, dated the 9th May 1967, making an amendment to the Revenue Department Notification No. II-1 No. 987 of 1966, dated the 14th February 1966, published at pages 355–360 of Part II—Section 1 of the Fort St. George Gazette, dated the 9th March 1966. [Laid on the Table of the House under section 26 (2) of the Madras (Transferred Territory) Ryotwari Settlement Act, 1964 (Madras Act 30 of 1964)].*

### B. Reports, Notifications and other Papers.

* 85. *A review on Irrigation in Madras State, 1966-67 (English and Tamil).*

* 86. *A review on Road Development and Building Programme in Madras State, 1966–67 (Tamil).*

* 87. *A Review on the Working of Minor Ports in Madras State, 1966–67 (Tamil).*

* 88. *Housing in Madras State, 1966–67.*

§ 89. *Speech by Hon. Thiru M. Karunanithi, Minister for Public Works, on Demands for Irrigation Grants, 1967–68 (English and Tamil).*

---

* Laid on the Table of the House on 10th July 1967.

§ Despatched to all Members on 8th July 1967.

## இணைப்பு I.

(643-ம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 166-க்கான விடையைக் காண்க.)

| நிறுவனத்தின் பெயரும் முகவரியும். (1) | தயாரிக்கப்படும் பொருள்கள். (2) |
|---|---|
| **செங்கற்பட்டு மாவட்டம்.** | |
| 1. மெஸர்ஸ் ஓரியண்ட் இண்டஸ்ட்ரீஸ், 37, அஷ்கர்கானு தெரு, ஆலந்தூர். | "ஜனதா" பெருங் கடிகாரங்கள், "ஓரியண்ட்" கடிகாரப் பெட்டிகள். |
| **கோயம்புத்தூர் மாவட்டம்.** | |
| 2. மெஸர்ஸ். கோபால் கிளாக் ஒர்க்ஸ், "கோபால் பாக்", அவினாசி சாலை, கோயம்புத்தூர். | சுவர்க் கடிகாரங்கள், மேசைக் கடிகாரங்கள், மணிகூண்டுக் கடிகாரங்கள். |
| **சென்னை மாவட்டம்.** | |
| 3. மெஸர்ஸ். காரட் வாட்ச் கம்பெனி, 186, மவுண்ட் ரோடு, சென்னை-2. | சுவர்க் கடிகாரங்கள், கைக் கடிகாரங்கள், மேசைக் கடிகாரங்கள். |
| 4. மெஸர்ஸ். ஸீஷோர் டிரேடர்ஸ், 27, ஜி. ஏ. சாலை, சென்னை-21. | சுவர்க் கடிகாரங்கள், மேசைக் கடிகாரங்கள். |
| 5. மெஸர்ஸ், டைம் எய்ட்ஸ் (இந்தியா), லிமிடெட், 3, கதீட்ரல் சாலை, சென்னை-6. | அறிவிப்பு மேசைக் கடிகாரங்கள் (Alarm timepieces). |
| 6. மெஸர்ஸ். அன்ஸர் & சன்ஸ், பாண்டி பஜார், சென்னை-17. | சுவர்க் கடிகாரங்கள். |
| 7. மெஸர்ஸ். செவன் ஸீஸ் டிரேடர்ஸ், 183, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலை, சென்னை-1. | சுவர்க் கடிகாரங்கள், பொருத்து ஆணிகள் (panel pins). |
| 8. மெஸர்ஸ். ராயென்கோ, 24/27, மூக்கர் நல்லமுத்து தெரு, சென்னை-1. | பெருங்கடிகாரக் கருவிகள், முகப்புகள் முதலியன. |
| 9. மெஸர்ஸ். இன்டர்நேஷனல் கமர்ஷியல் கார்ப்பரேஷன், 110-இ, மவுண்ட் சாலை, சென்னை-18 | மின்சார இயக்க, இயந்திர இயக்க மணிக்கூண்டுக் கடிகாரங்கள்; பெரிய கடிகாரங்கள் தயாரித்தல், மின் முலாம் பூசுதல். |
| 10. மெஸர்ஸ். பி. சி. சுப்பிரமணியம், 54 & 54-பி/ஏ2, சிடன் ஹாம்ஸ் ரோடு, பெரியமேடு, சென்னை-3. | சுவர்க் கடிகாரங்கள். |
| 11. மெஸர்ஸ். பேலஸ் வாட்ச் கம்பெனி, 185, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலை, சென்னை-1. | பிளாஸ்டிக் கடிகார கண்ணாடிகள். |



| நிறுவனத்தின் பெயரும் முகவரியும். (1) | தயாரிக்கப்படும் பொருள்கள். (2) |
|---|---|
| **மதுரை மாவட்டம்.** | |
| 12. மெஸர்ஸ். மதுரை நகர் வாட்ச் கம்பெனி, 211, தெற்கு மாசி வீதி, மதுரை. | சுவர்க் கடிகாரங்கள், மேசைக் கடிகார இயக்கச் சுருள் (main spring). |
| **தஞ்சாவூர் மாவட்டம்.** | |
| 13. மெஸர்ஸ். யாசீன் வாட்ச் இண்டஸ்ட்ரீஸ், 37, சாரங்கபாணி கிழக்குத் தெரு, கும்பகோணம். | கைக் கடிகாரங்கள், மேசைக் கடிகாரங்கள். பெருங்கடிகாரங்கள் ஆகியவற்றின் உதிரிப் பாகங்கள், கருவிகள். |
| **திருச்சிராப்பளி மாவட்டம்.** | |
| 14. மெஸர்ஸ். நூர் & சன்ஸ், 496, பெரிய கடைத் தெரு, திருச்சிராப்பள்ளி-8. | கைக் கடிகாரங்கள், சுவர்க் கடிகாரங்கள், மேசைக் கடிகாரங்கள் ஆகியவற்றைத் தயாரித்தல். |

| *Name and address of the firm.* (1) | *Products man[ufactured].* (2) |
|---|---|
| *Chingleput district.* | |
| 1. Messrs. Orient Industries, 37, Ashkerkhana Street, Alandur. | "Janatha" clocks and "Orient" cabinets. |
| *Coimbatore district.* | |
| 2. Messrs. Gopal Clock Works, "Gopal Bagh", Avanashi Road, Coimbatore. | Wall clocks, timepieces and street clocks. |
| *Madras district.* | |
| 3. Messrs. Carat Watch Co., 186, Mount Road, Madras-2. | Wall clocks, watches and timepieces. |
| 4. Messrs. Seashore Traders, 27, G.A. Road, Madras-21. | Wall clocks and time pieces. |
| 5. Messrs. Time Aids (India) Ltd., 3, Cathedral Road, Madras-6. | Alarm timepieces. |
| 6. Messrs. Anser & Sons, Pondy Bazaar, Madras-17. | Wall clocks. |
| 7. Messrs. Seven Seas Traders, 183, N.S.C. Bose Road, Madras-1. | Wall clocks and panel pins. |

| Name and address of the firm. (1) | Products manufactured. (2) |
|---|---|
| *Madras district—cont.* | |
| 8. Messrs. Rhaenko, 24/27, Mooker Nallamuthu Street, Madras-1. | Clock instruments, dials, etc. |
| 9. Messrs. International Commercial Corporation, 110/E, Mount Road, Madras-18. | Electrical and mechanical tower clocks, master clocks and electroplating. |
| 10. Messrs. P.C. Subramaniam, 54 and 54-B/A-2, Sydenhams Road, Periamet, Madras-3. | Wall clocks. |
| 11. Messrs. Palace Watch Company, 185, N.S.C. Bose Road, Madras 1. | Watch glasses in plastic. |
| *Madurai district.* | |
| 12. Messrs. Madura City Watch Co., 211, South Masi Street, Madurai. | Wall clocks and main-spring for timepieces. |
| *Thanjavur district.* | |
| 13. Messrs. Yaseen Watch Industries, 37, Sarangapani East Street, Kumbakonam. | Spare parts and tools for watches, timepieces and clocks. |
| *Tiruchirappalli district.* | |
| 14. Messrs. Noor & Sons, 496, Big Bazaar, Tiruchirappalli-8. | Manufacture of watches, wall clocks and timepieces. |



## இணைப்பு II.

(668-ம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 260-க்கான விடையைக் காண்க.)

(அ) தமிழகத்தில் 1957–58 முதல் 1965–66 வரையில் உள்ள ஆண்டுகளில் உருளைக்கிழங்கு உற்பத்தி அளவு குறித்த விவரங்கள்.

(உற்பத்தி மெட்ரிக் டன்களில்.)

| தொடர் எண். (1) | மாவட்டம். (2) | 1957–58. (3) | 1958–59. (4) | 1959–60. (5) | 1960–61. (6) | 1961–62. (7) | 1962–63. (8) | 1963–64. (9) | 1964–65. (10) | 1965–66 (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நீலகிரி .. .. | 57,022 | 62,230 | 71,700 | 73,920 | 57,110 | 44,980 | 52,620 | 46,860 | 44,110 |
| 2 | மதுரை .. .. | 5,051 | 9,410 | 8,210 | 5,890 | 5,750 | 8,890 | 7,970 | 8,780 | 7,870 |
| 3 | சேலம் .. .. | 1,789 | 870 | 840 | 920 | 1,190 | 1,480 | 1,150 | 1,430 | 1,110 |
| 4 | ராமநாதபுரம் .. | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | 10 | இல்லை | இல்லை | இல்லை |
| | மொத்தம் .. | 63,862 | 72,510 | 80,750 | 80,730 | 64,050 | 55,360 | 61,740 | 57,070 | 53,090 |

(இ) 1957-58 முதல் 1966-67 வரையில் உள்ள ஆண்டுகளில் தமிழ்நாட்டிலிருந்து மற்ற நாடுகளுக்கும் இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு குறித்த விவரங்கள்.

(புள்ளிவிவரம் மெட்ரிக் டன்களில்.)

| தொடர் எண். | ஆண்டுகள். | கடல் வழியே பிற நாடுகளுக்கு. விதை உருளைக்கிழங்குகள். | கடல் வழியே பிற நாடுகளுக்கு. மற்ற உருளைக்கிழங்குகள். | விதை உருளைக்கிழங்கு அல்லாத மற்றவை பிறமாநிலங்களுக்கு கடல் வழி எடுத்துச் செல்லப்பட்டவை. | பொதுக்குறிப்புகள். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | 1957–58 | கிடைக்கவில்லை | கிடைக்கவில்லை | கிடைக்கவில்லை | தமிழ்நாட்டிலிருந்து இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு சாலை வழியாகவும் ரயில் மூலமும் கொண்டு செல்லப்படும் உருளைக்கிழங்கு பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை, எனினும், ஆண்டு தோறும், 25,000 முதல் 30,000 மெட்ரிக் டன் வரையில் வட இந்திய நகரங்களுக்கு அனுப்பப்படுகிறதென்று மதிப்பிட்டு கூறலாம். சராசரியாக மற்ற மாநிலங்களிலிருந்து இறக்குமதியாகும் உருளைக்கிழங்கின் அளவு 17,000 மெட்ரிக் டன் என்று மதிப்பிட்டுக் கூறலாம். |
| 2 | 1958–59 | 2,037 | 287 | 446 | |
| 3 | 1959–60 | 2,519 | 7,649 | 165 | |
| 4 | 1960–61 | 1,690 | 7,435 | 627 | |
| 5 | 1961–62 | 5,698 | 7 | 96 | |
| 6 | 1962–63 | 5,344 | 4,278 | 109 | |
| 7 | 1963–64 | இல்லை | 4,077 | 172 | |
| 8 | 1964–65 | இல்லை | இல்லை | கிடைக்கவில்லை | |
| 9 | 1965–66 | இல்லை | இல்லை | கிடைக்கவில்லை | |

## I. *Particulars about the production of potatoes in Madras State for the years* 1957–58 *to* 1965-66.

(PRODUCTION IN METRIC TONNES.)

| Serial number. | District. | 1957–58. | 1958–59. | 1959–60. | 1960–61. | 1961–62. | 1962–63. | 1963–1964. | 1964–65 | 1965–66 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1 | The Nilgiris .. .. .. | 57,022 | 62,230 | 71,700 | 73,920 | 57,110 | 44,980 | 52,620 | 46,860 | 44,110 |
| 2 | Madurai .. .. .. | 5,051 | 9,410 | 8,210 | 5,890 | 5,750 | 8,890 | 7,970 | 8,780 | 7,870 |
| 3 | Salem .. .. .. | 1,789 | 870 | 840 | 920 | 1,190 | 1,480 | 1,150 | 1,430 | 1,110 |
| 4 | Ramanathapuram .. .. | Nil. | Nil. | Nil. | Nil. | Nil. | 10 | Nil. | Nil. | Nil. |
| | State total .. | 63,862 | 72,510 | 80,750 | 80,730 | 64,050 | 55,360 | 61,740 | 57,070 | 53,090 |

*II. **Particulars** about the export of potatoes from Madras State to other countries and to other States in India during the years* 1957–58 *to* 1966–67.

(FIGURES IN METRIC TONNES.)

| Serial Number. | Years. | Other countries by sea. | | Coast-wise movement to other States other than seed potatoes. | General Remarks. |
|---|---|---|---|---|---|
| | | [illegible] potatoes. | Other than seed potatoes. | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | 1957–58 | N.A. | N.A. | N.A. | Movement particulars from Madras State to other States in India by Road and Rat are not available However it may be estimated that nearly 25,000 to 30,000 tonnes are sent annually to North Indian Cities. Imports from other States can be estimated at 17,000 tonnes at an average. |
| 2 | 195[illegible] | 2,037 | 287 | 446 | |
| 3 | 1959–60 | 2,519 | 7,649 | 165 | |
| 4 | 1960–61 | 1,690 | 7,435 | 627 | |
| 5 | 1961–62 | 5,698 | 7 | 96 | |
| 6 | 1962–63 | 5,344 | 4,278 | 109 | |
| 7 | 1963–64 | Nil. | 4,077 | 172 | |
| 8 | 1964–65 | Nil. | Nil. | N.A. | |
| 9 | 1965–66 | Nil. | Nil. | N.A. | |

N.A.=Not available.

65022.
V211,31 N67
D 1

# LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

## IN MADRAS CITY.

Messrs. ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras-8.
THE CITY BOOK CO., Mylapore, Madras-4.
Messrs HIGGINBOTHAMS, PRIVATE LIMITED Madras-2.
Messrs NEW CENTURY BOOK HOUSE (PRIVATE) LIMITED, Madras-2.
Messrs. P. VARADACHARI & Co., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, Madras-5.
Sri S. S. SRINIVASARAGHAVAN, Royapettah, Madras-14.
THE EDUCATIONAL AGENCIES, BOOK-SELLERS, Madras-1.
THE UNIVERSAL BOOK HOUSE, MOORE MARKET, Madras-3.
Messrs. RUKMANI CORPORATION, Vepery, Madras-7.
Messrs. MOHAN PATHIPAGAM AND BOOK DEPOT, Madras-5.
Messrs. BOOK CORNER, BOOK-SELLERS, No, 2/4. Mount Road, Madras-2.

## IN MUFASSAL OF MADRAS STATE.

Sri E. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs. VIVEKANANDA PRESS, PRINTERS, PUBLISHERS AND BOOK-SELLERS, Madurai.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. NATHAN & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. KRISHNASWAMY & Co., Tiruchirappalli.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs. NELLAI PUTHAGA NILAYAM, BOOK-SELLERS, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. JAGANNATHAN, BOOK-SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district.
Messrs. A. K. CHANDRIAH CHETTIAR & SONS, Salem.
Messrs. MEENAKSHI PATHIPAGAM, Pudukkottai.
Messrs. K. V NARAYANA IYER & SONS, Dindigul, Madurai district.
Messrs. BALAJI BOOK HOUSE, Vellore, North Arcot district.
Messrs. JAYAKUMARI STORES, Nagercoil, Kanyakumari district.
Messrs. BABY STORES, BOOK-SELLERS, Villupuram, South Arcot district.
Messrs. DINAMANI STORES, Coimbatore-18.
Messrs. BHARATHI PUTHAGA NILAYAM, PUBLISHERS AND BOOK-SELLERS, 1-B, Town Hall Road, Madurai-1.

## IN OTHER STATES.

Messrs. JANATHA AGENCIES, BOOK-SELLERS, Gudur.
Messrs. JAIN BOOK AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum.
Messrs. FIRMA K. L. MUKHOPADHYAY, Calcutta-12.
Messrs. BOOK LINKS CORPORATION, Narayanaguda, Hyderabad-29
Messrs. THE BOOKS SYNDICATE, Hyderabad-1.
Messrs. LABOUR LAW PUBLICATIONS, Hyderabad.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE SPEAKER OF THE LEGISLATIVE ASSEMBLY.



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|